


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

by B..Janani

Grade - 9c

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியர் திலகம்

(வரலாற்று நவீனம்)

முல்லைமணி வே. சுப்பிரமணியம். SLEAS.

முத்தமிழ் கலாமன்றம்
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book : | VANNIYAR THILAGAM |
| Subject : | Historical Novel |
| Language : | Tamil |
| Author : | Mullaimani V.Subramaniam SLEAS<br>Rtd. Director of Education, Mullaitivu |
| Copyright : | Mrs. Parameswary Subramaniam<br>Navalar Road,<br>Mulliyawalai (Sri Lanka) |
| First Edition : | June 1998 |
| Cover design : | Gnanakuru |
| Printers : | Suthan Printers,<br>Vavuniya. |
| Publishers : | Muththamil Kalamanram<br>Vavuniya. |

Price in Sri Lanka : Rs. 120.00
Other Countries : 10 American Dollars.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்கத் தலைவர்
## "மக்கள் சேவைமாமணி"
# திருமிகு நா. சேனாதிராசா (சமா.நிதி)
## அவர்களின் வாழ்த்துரை

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளையைச் சேர்ந்த முன்னாள் கல்விப் பணிப்பாளரும் பண்டாரவன்னியன் வரலாற்று நாடக நாலாசிரியரும், பிரபல எழுத்தாளருமாகிய முல்லைமணி ஐயா (வே.சுப்பிரமணியம்) அவர்களால் ஆக்கப் பெற்ற 'வன்னியர் திலகம்' என்ற இந் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

குறுநில மன்னர்களாகிய பண்டாரவன்னியன், கயிலை வன்னியன் போன்ற மன்னர்களின் சரித்திரம் மறைக்கப்பட்டு வெளிக் கொணராது இருந்த வேளையில் இவர்களது வீர வரலாறுகளை வரலாற்று ரீதியாகவும், ஆவண ரீதியாகவும் வெளிக்கொண்டு வந்த பெருமை முல்லைமணி ஐயா அவர்களைச் சாரும்.

இதில் ஏற்கனவே மாவீரன் பண்டாரவன்னியன் அவர்களது சரித்திரம் நாடக நூலாக இவரால் வெளியிடப்பட்டது. வவுனியாவின் வட மேற்கே அமைந்துள்ள பனங்காமம் என்னும் கிராமத்தை இராச தானியாகக் கொண்டு கோலோச்சிய கயிலை வன்னியனது சரித்திரத்தை இன்று 'வன்னியர்திலகம்' நாவலாக முல்லைமணி ஐயா அவர்கள் எழுதித் தந்துள்ளார்கள். ஏற்கனவே 'கரவைக்கிழார்' க.கந்தசாமி அவர்கள் 'தனியாத தாகம்' என்ற பெயரில் 1970ஆம் ஆண்டளவில் நாடக நூலாகத் தந்திருந்தார். அந்தக் காலத்திலே கயிலை வன்னியனுடைய பெயரை விளங்கச் செய்யும் நோக்கத்துடன், பம்பைமடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கயிலை வன்னியன் ப.நோ.கூ.சங்கம் எனப் பெயர்சூட்டியிருந்தோம். அச்சங்கத்தின் தலைவராக இருந்த நான் சங்கத்தில் வைத்து இந்நூலை வெளியீடு செய்தேன். அத்துடன் பம்பைமடுவில் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக் கழகத்திற்கும் கயிலைவன்னியன் விளையாட்டுக் கழகம் எனப் பெயர்சூட்டியிருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அந்த மன்னனுடைய வரலாறு நாவல்வடிவில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறான அரியநூல்களைப் பல சிரமங்களுக்கு மத்தியிலும் எழுதி வெளியீடு செய்கின்ற முல்லைமணி ஐயா அவர்களுக்கு இறைவனின் ஆசிகிடைக்க வேண்டும் என இறைவனை வேண்டி நிறைவு செய்து கொள்கிறேன்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்,
புகையிரத நிலையவீதி,
வவுனியா.
**25.5.1998.**

அன்பன்,
நா. சேனாதிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்

### திரு. சு. வீரசிங்கம் அவர்களின்

# வாழ்த்துரை

வன்னி மண், மக்கள் உழுது பண்பட்ட மண், அந்நியரைத் தொழுது புண்படாத மண். இந்த மண்ணின் வரலாறு தகுந்த ஆராய்ச்சிக் குரியது. இந்த மண்ணை ஆண்ட மன்னர்களின் வீர வரலாறுகள் பற்றியும் இந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை வரலாறுகள் பற்றியும் போதியளவு இலக்கியங்கள் வெளிவரவில்லை என்றே சொல்ல வேண்டும்.

மாற்றானுக்கு அடிபணியாத மாட்சிமையும் தன் சுகத்திற்காக யாரையும் துதி பாடியறியாத உண்மை ஒழுக்கமும், உள்ளதை உள்ளவாறே உறுதிபட எவர் முன்னும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் உள்ளத் துணிவும், எங்கும் எப்பொழுதும் எதிலும் சுதந்திரத்தையே விரும்புகின்ற உயர் இலட்சியமும் ஆகிய இவைகள் எல்லாம் வன்னி மக்களிடம் இன்றும் பொருந்தியிருக்கக் காணலாம்.

இவைகள் எமது மன்னர்களும், எமது மூதாதையர்களும் எமக்கு விட்டுச் சென்ற முதுசங்களாகவே கொள்ளத்தக்கன. இவ்வுயர் நலன்களே வன்னி மக்களின் வளர்ச்சி வேகத்திற்குத் தடையாக இருக்கின்றன என்றும் சொல்லலாம் போல் தெரிகின்றது.

ஏனெனில் இன்றைய உலகின் போக்கிற்கு ஈடு கொடுத்து முன்னேறுகின்ற கீழ்த்தரமான நெளிவு சுழிவுகளுக்கு வன்னிப் பண்பாடு இடந்தரவில்லை.

வன்னியின் மானத்தைக்காத்த மாவீரன் பண்டார வன்னியனை நாடகமாக்கி உலகறியச் செய்த முல்லைமணி அவர்கள் மற்றும் ஒரு மாவீரனான கயிலை வன்னியனை 'வன்னியர் திலகம்' என்ற பெயரில் நாவலாக்கித் தந்துள்ளார்.

மிகச் சிறந்த எழுத்தாளராகிய முல்லைமணி அவர்களின் இந்நாவல், மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் எமக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

அவரும் அவரது படைப்புக்களும் நீண்ட காலம் நிலைத்து வாழ இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இந்நாவல் சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

வவுனியா
**01-06-98**

சு. வீரசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சுதந்திர வீறும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு வீட்டுக் கொடுத்துப் பணியாத பண்பும் கொண்டது வன்னி மண். இங்கு காதலும், வீரமும் தமிழர்களுக்கே உரிய கலாசார பண்பாடுகளும், இன்றும் மக்கள் வாழ்க்கையில் செறிந்து திளைத்துள்ளன. போற்று தலுக்குரிய இந்த விழுமியங்கள் இந்த மண்ணுக்கே உரிய அரசியல், பொருளாதார துறைகளில் பின்னிப்பிணைந்து செழுமையூட்டுகின்றன.

இந்த மண்ணின் வரலாறு, இங்கு கோலோச்சிய பண்டார வன்னியனின் வீர வரலாற்றின் மூலம் உலகத்திற்குத் தெரிய வந்தது. இந்த மண்ணுக்குச் சொந்தமான பெண்கள் உலகத்தின் ஏனைய சரித்திர நாயகிகளுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்களல்ல என்பதை "ஆனைகட்டிய அரியாத்தை" என்ற வன்னியின் வீரப் பெண்மணி உணர்த்தியிருக்கின்றார்.

இந்த வகையில் பல வீரதீர, கலாசார விழுமியங்கள் மிகுந்த எண்ணற்ற வரலாறுகளை உள்ளடக்கிய வன்னி மண்ணின் சரிதத்தை ஆராய்ந்து, வன்னியின் ஏழு அரச பிரிவுகளாகிய வன்னிமைகளில் பெரியதும், முக்கியமானதுமாகிய பனங்காமத்தின் அரசர்களில் ஒருவனாகிய கயிலை வன்னியனது (1644-1678) வீர வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு இந்த வரலாற்று நவீனம் வடிக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கேயர். ஒல்லாந்தர் காலங்களில் அரசோச்சிய இம்மன்னன் அவர்களின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்தவன். இறுதியில் சுதந்திர மன்னனாகத் திகழ்ந்தவன். அவனது விருப்பப்படி, அவனது பேரன் முறையான காசியனார் கயிலை வன்னியனுக்குப்பின் அரசுரிமையை ஏற்கிறான்.

பனங்காமம், முள்ளியவளை ஆகிய வன்னிமைகளைக் களமாகக் கொண்டு, இந்த நாவலின் கதை நகர்ந்து செல்கின்றது.

இந்த நாவலின் ஆசிரியராகிய முல்லைமணி வே.சுப்பிரமணியம் வன்னி மண்ணின் சிறப்பு வாய்ந்த மைந்தர்களில் ஒருவராவார். நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், இலக்கிய விமர்சனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இலக்கியத்தின் பல துறைகளிலும், ஈடுபாடுடையவர்.ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளராகிய இவர், சாகித்திய மண்டல, கலைக்கழகப் பரிசில்களைப் பெற்றவர். கலைஞர் திலகம், தமிழ் மணி என்னும் பட்டங்களைப் பெற்றவர். வடகிழக்கு மாகாண சபையாலும், இலங்கை இலக்கியப் பேரவையாலும் கௌரவிக்கப் பட்டவர். இப்பிரதேசத்தின் வரலாற்று, இலக்கித் துறைகளில் ஆழமான அறிவும், அனுபவமும் கொண்டவர்.

இவரது சிறுகதைத் தொகுதியான 'அரசிகள் அழுவதில்லை' சாகித்தியமண்டலப் பரிசை வென்றுள்ளது. 'மல்லிகைவனம்' என்ற நாவல் இந்தியாவில், சோமு புத்தக நிலையத்தினரால் வெளியிடப் பட்டுள்ளது. இவரின் இன்னுமொருபடைப்பாகிய பண்டார வன்னியன் வரலாற்று நாடகம் இரு பதிப்புக்களைக் கண்டுள்ளது.

காலத்தின் பிரதிபலிப்பாக வெளிவருகின்ற இந்த நாவலை, வவுனியா முத்தமிழ்க் கலாமன்றம் தனது 11வது வெளியீடாக வெளிக் கொணர்வதில் பெருமை கொள்கின்றது. இலக்கியக் கட்டுரைகள், ஆய்விலக்கியம். சிறுவர் இலக்கியம், இலக்கிய நாடகங்கள், கவிதை நூல் என்று பல்வேறுபட்ட இலக்கியத்துறை சார்ந்த நூல்களின் வரிசையில் இந்த வரலாற்று நவீனத்தை தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வழமைபோல, உங்களின் பேராதரவை வழங்கி, எமது இலக்கியப் படைப்பாளிகளை ஊக்குவிப்பீர்கள் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு.

ச. அருளானந்தம்
தலைவர்.

பி. மாணிக்கவாசகம்
செயலாளர்

முத்தமிழ்க் கலாமன்றம், வவுனியா.
15.05.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
கலாகீர்த்தி **சி. தில்லைநாதன்** அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

**'தீதும் நன்றும் பிறர்தர வாரா'** என்றார் சங்கத் தமிழ்ப் புலவரான கணியன்பூங்குன்றனார். வீழ்ச்சிகளுக்கும் அவலங்களுக்கும் இட்டுச் செல்வன யாவற்றுள்ளும் மோசமானது உட்பகை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. புறப்பகைக்கு இடன் ஆக்கிக்கொடுத்து அது வெல்லுந்துணையும் உள்ளாய் நிற்பது உட்பகை என்பது பரிமேலழகர் கருத்து. சரியான உலகவிளக்கமும் ஒற்றுமையும் சுதந்திர விருப்பும் இல்லாத நிலை, நாடுகளினதும் ஸ்தாபனங்களினதும் ஒழுக்க சீலங்களினதும் பண்பாட்டு விழுமியங்களினதும் சிதைவுக்கு வழிகோலு வதாகலாம். தமக்கு உகந்தது எது என்பதைச் செவ்வனே புரிந்து கொள்வதிலும் அதனைப் பேணி மேம்படுத்தவதிலும் ஆர்வம் இல்லாத மக்கட்கூட்டம் இன்னலுற நேரும். முல்லைமணியின் **'வன்னியர் திலகம்'** என்ற வரலாற்று நவீனத்தை வாசிக்கும் போது மேற்கண்ட எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றன. அத்துடன், 'அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்' ஒழிந்து, 'ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்றும்' உடையவர்களாக மனிதர்கள் வாழவேண்டும் என்ற மகாகவி பாரதியின் வேட்கையும் நினைவுக்கு வருகிறது.

நிலவளமும் நீர்வளமும் பொருந்தியதும் பாலும் தேனும் பழமும் மிகுந்ததுமான வன்னிநாட்டில் பனங்காமம், முள்ளியவளை, கருநாவல்பத்து, தென்னமரவடி, மேல்பத்து, கரிக்கட்டுமூலை, செட்டிக்குளம்பத்து ஆகிய வன்னிமைகள் அடங்காப்பற்றாய் விளங்கிய வரலாறு பெருமையுடன் பேசப்படுவதொன்றாகும். சோழராட்சிக் காலத்திலும் அதனைத் தொடர்ந்தும் இலங்கையில் தோன்றிய வன்னிப் பற்றுக்கள் வன்னிநாட்டைச் சுதந்திரமாக ஆட்சி புரிந்ததற்கும் அவ் விடத்து நிர்வாக அதிகாரிகளை நியமித்து அவர்களிடம் மேலாதிக்கம் செலுத்தியமைக்கும் ஆதாரங்கள் உண்டு.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆண்ட காலத்திலும் வன்னிமைகள் அவர்களுக்கு ஒரு சவாலாகவே விளங்கின. வன்னிமைகள் எல்லாவற்றுள்ளும் அளவிலும் பலத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்து விளங்கியது பனங்காமம் ஆகும். பனங்காமத்தை ஆண்டவர்கள் பெருவலிகொண்டவர்களாகவும் ஏனைய வன்னியர்களைத் தம்செல்வாக்குக்கு உட்படுத்தியவர்களாகவும் திகழ்ந்தனர்.

அவ்வாறு பனங்காமத்தை ஆட்சிபுரிந்தவர்களுள் கயிலை வன்னியனார் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அன்னியர்களான போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் அடிபணிய மறுத்து உறுதியாக நின்றவர் அவர். அதற்குப் பக்கபலமாக அப்போது கண்டி அரசனாக விளங்கிய இரண்டாம் இராஜசிங்கனின் நட்பையும் ஆதரவையும் பெற்றுக் கொண்டமை கயிலை வன்னியனாரின் மதியூகத்தைக் காட்டுவதாகும். வேண்டிய நேரத்தில் உட்பகைமைகளை ஒதுக்கி ஏனைய வன்னியர்களின் ஒத்துழைப்பினைப் பெறக்கூடிய திறமையும் அவருக்கு வாய்த்திருந்தது. அவரைக் கதாநாயகனாகக் கொண்டு, அவர் ஆட்சிபுரிந்த காலத்து வரலாற்றுப் பின்னணியில் இந்த நவீனத்தைப் புனைந்துள்ளார் முல்லைமணி.

முள்ளியவளையைச் சேர்ந்த வே.சுப்பிரமணியம் என்பவரே முல்லைமணி ஆவார். எங்கள் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகிய அவர் நாடக, புனைகதை, கவிதை, கட்டுரைத் துறைகளில் ஈடுபாடு மிகுந்தவர். இலங்கைக் கலைக்கழகப் பரிசில் பெற்ற அவரது நாடகம், ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து இறுதிவரை போராடிய பண்டார வன்னியன் பற்றியது. **'மல்லிகை வனம்'** என்ற நாவல் நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட வன்னிக் கிராமமொன்றின் வாழ்க்கையைச் சித்திரிப்பது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, வன்னி வாழ்விலும் வளத்திலும் வரலாற்றுப் பெருமையிலும் திளைத்த முல்லைமணி அவற்றையெல்லாம் இலக்கியத்தில் புனைந்து பேணும் ஆர்வம் மிகுந்தவர் என்பது புலனாகும்.

முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பனையும் கலந்து புனையப்படுபவை வரலாற்று நாவல்கள் என்பர். வரலாற்று நாவலுக்கும் கதையம்சம் முக்கியமானதாகும். வரலாற்று நாவல்களை எழுதுபவர்களும் வாசகர்களின் ஆவலைத் தூண்டிக் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு எதிர்பாராத சம்பவங்கள், திடீர்த்திருப்பங்கள், மர்மநிகழ்வுகள் போன்றவற்றைக் கையாள்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டு. வாசகர்களுக்கும் பரபரப்பூட்டுவதை மட்டும் குறியாகக் கொள்ளாது, அவர்களுக்கு வேண்டப்படும் சில உணர்வுகளையும் சிந்தனைகளையும் தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்ட வரலாற்று நாவல்கள் வரவேற்கப் படத்தக்கவை. தமிழில் பிரசித்தி பெற்ற வரலாற்று நாவல்களைப் புனைந்த கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி மக்களுக்கு அன்று தேவைப்பட்ட தேசப்பற்றினை ஊட்டுவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டார். ஒற்றுமை உணர்வையும் சுதந்திரவேட்கையினையும் தமது மக்கள் மத்தியில் வளர்ப்பது முல்லைமணியின் நோக்கங்களாகத் தோன்றுகின்றன.

வரலாற்று நாவலொன்றினை எழுதும் ஆசிரியர் தாம் வாழும் காலத்துக்கு அவசியமான சில உணர்வுகளையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்கு அதனைப் பயன்படுத்துவதுண்டு. கதைநிகழ்காலத்து வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், மொழிப் பிரயோகங்கள் முதலானவற்றைச் செவ்வனே பதிவு செய்துவைப்பதே முல்லைமணியின் தலையாய குறிக்கோள் என்று கொள்ள முடியாது. தாம் நயந்த ஒருகால கட்டத்துப் பெருமையினை வாசகர் கண்முன் கொண்டு வந்து நிறுத்தவும் தாம் விழைந்த சில விழுமியங்களுக்கு அழுத்தம் தரவும் அவர் முயன்றுள்ளார். அதற்குப் பொருத்தமான களங்களையும் சம்பவங்களையும் பாத்திரங்களையும் அவர் தேர்ந்தும் உருவாக்கியும் உள்ளார்.

பெருமித உணர்வோடு வன்னித் தலைவர்களின் வீரத்தை அவர் சித்திரித்துள்ளார். கயிலை வன்னியனார், வெற்றிக்கடம்பன், சிலம்பன் ஆகியவர்களது வீரத்தை வர்ணிப்பதோடு நின்றுவிடாது ஆனையை அடக்கிய அரியாத்தையின் சாதனையினையும் கொண்டு வந்து சேர்ப்பது அவர் உள்ளக்கிடக்கையினைக் காட்டுவதாகும்.

கயிலை வன்னியனாரை ஓர் இலட்சிய அரசராக முல்லைமணி சித்திரித்துள்ளார். மக்களுடைய தேவைகளை அறிந்து நீதிநெறி வழுவாது நல்லாட்சி புரிந்த ஒருவராக அவர் விளங்கினார். மாறுவேடத்தில் உலாவி மக்களுடன் அளவளாவி அவர்களது குறைகளை அறிந்து கொண்டார். மக்கள் அவரிடத்துப் பெருவிருப்புடையவர்களாய் இருந்தனர். எல்லோரும் தங்கள் தொழில்களைச் சுதந்திரமாகக் கைக்கொள்வதற்கு உவப்பான சூழல் நிலவியது. பல்வேறு தொழில்களும் கலைகளும் செழித்து வளர்ந்தன. சமயப் பணிகள் பக்தி சிரத்தையோடு மேற்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்பட்டன. சுருக்கமாகச் சொல்லப்போனால், ஒரு நாடும் அதன் ஆட்சியும் எப்படி இருக்க வேண்டுமென்று முல்லைமணி விரும்புகிறார் என்பது புலப்படுகிறது.

வீரமும், காதலும் தமிழிலக்கியத்தில் ஆரம்ப காலம் முதல் போற்றப்படுபவை. அவை கதைக்கு விறுவிறுப்பும் சுவாரஸ்யமும் அளிப்பனவுமாகும். வீரமும் தன்மானமும் சுதந்திர உணர்வும் அநீதியை எதிர்க்கும் உறுதியும் கொண்ட தலைவராகக் கயிலை வன்னியனார் விளங்குகிறார். அகத்திணையிலும் அவருக்கிருந்த ஈடுபாட்டினைக் காட்ட விரும்பிய முல்லைமணி இளமைக் காலத்தில் கயிலை வன்னியனார் சுந்தரியுடன் நடாத்திய காதல் லீலைகளை வர்ணித்துள்ளார். காதல் காட்சிகளை அவை இடம் பெற்ற இயற்கைப் பின்னணியில் சிருங்காரச் சுவையுடன் தம் கற்பனைத்திறன் தோன்றும் வண்ணம் ஆசிரியர் சித்திரித்துள்ளார். பாலிநாச்சியாருக்கும் இலங்கை நாராயணனுக்கும் இடைப்பட்ட காதலும் வெற்றிக்கடம்பனிடத்துக் குஞ்சிநாச்சியார் கொண்ட காதலும் சுவைபட வர்ணிக்கப்பட்டுள்ளன. போர்க்களத்தில் வீரத்துடன் போரிட்ட குஞ்சிநாச்சியாரின் உயிர் காதல் தலைவனின் மரணத்தைக் கண்ட அதிர்ச்சியில் பிரிவது, "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என்ற சிலப்பதிகார அடியினை நினைவுபடுத்துவதாகும்.

பனங்காமத்தின் பெருமையையும் சுதந்திரத்தையும் காப்பாற்றத் தன்னையே அர்ப்பணித்தக் கொண்ட சுந்தரி என்ற மான்விழி கைமத்தரை மயக்கி மணமுடித்துக் கொண்டாள். அவள் பேரப்பிள்ளையைக் கண்டபின்பும் கயிலை வன்னியர் அவளிடம் பேரின்பம் கண்டார். பனங்காமத்துக்குச் சாதகமான அரியசாதனைகள் புரிந்த சிலம்பனையும் உல்லாசபுரிக்கு இட்டுச் செல்ல அவள் சித்தமாயிருக்கிறாள்.

இந்நவீனத்தின் கதையமைப்பு எல்லோரும் இலேசில் விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவானதாக அமைந்துள்ளது. வன்னிப் பிரதேசமும் அதன் வரலாறும் சம்பந்தமான பலதகவல்கள், அனேக சந்தர்ப்பங்களில் உரையாடல்கள் மூலமாக, தெளிவுபடுத்தப் பட்டுள்ளன. கதை சம்பந்தமான முக்கிய விபரங்கள் பலவற்றை வெளிக்கொணர்வதற்கும் புதிர்களை விடுவிப்பதற்கும் நாடகபாணியில் அமைந்த உரையாடல்களை ஆசிரியர் இலாவகமாகக் கையாண்டுள்ளார். ஆட்சியாளர் மத்தியிலான உட்பகைகளும் சதிகளும் ஆட்கடத்தல்களும் வீரதீரசாகசங்களும் ஆங்காங்கு கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு விறுவிறுப்பளிக்கின்றன.

பனங்காமத்து ஆட்சிக்கும் அதன் சிறப்புக்கும் குழிபறிக்க எத்தனித்த வில்லன்களான கிராமவிட்டன்,காஞ்சிரங்காயன், கைமத்தர் ஆகியோர் வீழ்ச்சிகாண்கின்றனர். ஒல்லாந்த ஆட்சியின் தலையீடு எதுவுமின்றி வன்னித்தலைவர்கள் ஒன்றுகூடி அவரது பேரனான காசியனாரை ஆட்சியிலமர்த்தக்கூடிய நிலையில் பனங்காமத்தை விட்டுச் சென்றது கயிலை வன்னியனாரின் பெருமைக்கு நிலையான சான்றாகும். அப்பெருமையை உணர்த்தவென எழுதப்பட்ட இந்நவீனத்தில் விடயங்கள், பாத்திர சிருஷ்டிகள், உள்நோக்கங்கள் எல்லாம் தெளிவாக விளங்கத் தக்கனவாக உள்ளன.

இளமைத் துடிப்புமிக்க முல்லைமணி அவர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் தமிழ்கூறு நல்லுலகம் வரவேற்குமென்று நம்புகின்றோம். மேலும் பல ஆக்கங்களால் தமிழிலக்கியப் பரப்பினை அவர் வளம்படுத்த வேண்டுமென்பது எமது வேணவா.

பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

**சி. தில்லைநாதன்**
தமிழ்ப் பேராசிரியர்.

**15-06-1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் வரலாற்றில் வடஇலங்கையில் பரந்து விரிந்திருக்கும் வன்னிப் பிரதேசத்தின் வரலாறு முக்கிய இடத்தை வகிக்கிறது.

"வன்னிப் பிரதேசம், மிகப் பழமையான வரலாறுள்ள பிரதேசம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே இங்கு சிற்றரசுகள் தோன்றியிருந்தன. அநுராதபுர பொலநறுவை அரசுகளின் எழுச்சியினால் இச்சிற்றரசுகள் வீழ்ச்சியடைந்தன. மீண்டும் பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வன்னிச் சிற்றரசுகள் தோற்றம் பெற்றன" எனக் கலாநிதி கா.இந்திரபாலா அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை வன்னி அரசுகள் பிரசித்தி வாய்ந்தவைகளாகத் திகழ்ந்திருக்கின்றன. வன்னித் தலைவர்களில் கயிலைவன்னியன், பண்டாரவன்னியன், இலங்கை நாராயண வன்னியன் ஆகியோர் பலவகையாலும் முக்கியம் பெற்றவர்கள்.

வன்னிநாடு, வன்னியர்கள் பற்றி ஒரு சில குறிப்புக்களே எமக்குக் கிடைத்துள்ளன. இவையும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் பதிவுகளிலிருந்தே பெறப்படுகின்றன. இவைகளை உறுதிப்படுத்தக் கூடிய சாசனச் சான்றுகள் மிகச் சிலவே உள்ளன. ஈழத்தமிழர்களது வரலாறு பூரண மடைய வேண்டுமானால் வன்னியின் வரலாறு பூரணமாக ஆராயப் படவேண்டும். இது வரலாற்றறிஞர்களின் கடனாகும்.

வரலாற்று அறிவு இல்லாதவர்கள் இறந்தகாலத்தை நிலைக்களமாக வைத்து இலக்கியம் படைக்க முடியாது. அதே வேளையில் வரலாற்று அறிவுமட்டும் இலக்கிய ஆக்கத்திற்குப் போதுமானதாகாது. கலையுணர்வும், கற்பனைவளமும், வரலாற்றறிவும் உடையவர்களே வரலாற்று நாவல்களையோ, நாடகங்களையோ ஆக்க முடியும்.

இக்கருத்துக்களை மனத்திற் கொண்டே 1964ஆம் ஆண்டு பண்டாரவன்னியன் வரலாற்று நாடகத்தை எழுதினேன். இந்த நாடகம் 1970இல் நூலுருப் பெற்றது. இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேறியது. இதன் இரண்டாவது பதிப்பு வீரகேசரியால் பிரசுரிக்கப் பட்டது. 1968 இல் 'கரவைக்கிழார்' கந்தசாமி அவர்கள் பனங்காம வன்னிமையின் ஆட்சித் தலைவன் கயிலை வன்னியன் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று நாடகமான 'தணியாத தாகம்' என்னும் நூலை வெளியிட்டார். இந்த நாடகமும் பலமுறை மேடையேற்றப்பட்டது என அறிகிறேன்.

இந்த இரண்டு நாடகங்களும் ஒரு வரலாற்றுத் தேவையை நிறைவு செய்தமையாலேயே தமிழ் மக்களின் இதயத்தைக் கவர்ந்தன என்று சொல்லலாம்.

தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டுக் கீழ்நிலையில் இருக்கும் ஒரு சமுதாயம் தன் கடந்த கால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பதும் அங்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாகத் திகழ்ந்த தலைவர்களின் சாதனைகளை இரைமீட்பதும் வரலாற்று நியதியாகும்.

பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் ஒருமுறை என்னைச் சந்தித்தபோது "பனங்காமந்தான் வன்னிப் பிரதேசத்தின் புகழ்பெற்ற இராச தானியாகும். பண்டாரவன்னியனை விடச் சிறப்புமிக்க, பிரசித்தி பெற்ற மன்னர்கள் பனங்காமத்தை ஆண்டிருக்கிறார்கள். அவர்களின் பக்கம் திரும்பிப் பார்க்கலாந்தானே" என்று கூறினார். அவர் இப்படிக் கூறிய போது "கயிலைவன்னியன் பற்றிக் கரவைக் கிழார் ஏற்கனவே நாடகம் எழுதிவிட்டார்" என்று கூறினேன்.

ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் வன்னி தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் வாசித்துவந்தேன். இதன் பயனாகக் கரவைக் கிழார் தனது நாடகத்தில் கையாளாத பல அரிய தகவல்கள் கயிலை வன்னியனைப் பற்றிச் சேகரிக்க முடிந்தது.

அந்நியரான போர்த்துக்கீசராலும், ஒல்லாந்தராலும் தோற்கடிக்க முடியாத உறுதியும், வீரமும், பலமும் வாய்ந்த கயிலை வன்னியன் தொடர்பான வரலாற்றுக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு 'கயிலைப் பிள்ளை வன்னியனார்' என்னும் கட்டுரை யொன்றை பத்திரிகையில் எழுதினேன். கயிலை வன்னியன் வரலாற்றை மையமாக வைத்து நாவல் ஒன்ற எழுத முனைந்தேன். அதன் விளைவு தான் 'வன்னியர் திலகம்' நாவல்.

இது எனது மூன்றாவது நாவல். பிறந்தமண், மல்லிகைவனம் ஆகிய இருநாவல்களில் 'மல்லிகை வனம்' மட்டுமே நூலுருப் பெற்றிருக்கிறது. இந்நாவல் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முந்திய வன்னிப் பிரதேசக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமம் ஒன்றின் வாழ்க்கை முறையைச் சித்திரிக்கிறது. ஒரு வகையில் பார்த்தால் இதையும் ஒரு வரலாற்று நாவல் என்று கூறுவதில் தவறில்லை. வரலாறு என்பது மன்னருடையது மாத்திரமன்றி மக்களுடையதுந்தான். ஒரு மக்கட் கூட்டத்தின் கடந்த கால வாழ்க்கை அவர்களது சமூக வரலாறு என்று கூறலாம்.

'வன்னியர் திலகம்' வரலாற்று நாவல் எழுத உதவிய ஆதாரக் குறிப்புக்களை 'வரலாற்றுக் குறிப்புக்கள்' என்னும் தலைப்பில் தந்துள்ளேன். கண்டியரசனுடனும் போர்த்துக்கீச ஒல்லாந்த ஆட்சியாளருடனுமான தொடர்புகள் வரலாற்று ரீதியில் உண்மையானவை. எனக்குக் கிடைத்த குறிப்புக்களில் இடம் பெறாத பெண் பாத்திரங்கள் கற்பனையில் உருவானவை.

இது ஒரு பொழுது போக்கு நாவல் மட்டுமல்ல. வன்னிப் பிரதேசம்பற்றி - குறிப்பாகப் பனங்காம அரசுபற்றி அதன் மக்கள் வாழ்க்கைபற்றி - பல தகவல்களைத் தரும் நாவலாகும். ஆனால் சுவாரசியமான பொழுது போக்கு அம்சங்களும் இந்நாவலில் இடம் பெறாமல் இல்லை.

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் நவீன இலக்கிய விமர்சனத் துறையில் பரிச்சயமானவர். தமது பதவிக்குரிய வேலைப் பழுவிற்கு மத்தியிலும் நாவலைப் பொறுமையுடன் படித்துச் சிறந்ததொரு ஆய்வுரீதியான அணிந்துரை அளித்துச் சிறப்பித்துள்ளார். பேராசிரியர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தலைவர் நா.சேனாதிராசா ஜே.பீ அவர்களும், வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சு.வீரசிங்கம் அவர்களும் வாழ்த்துரை வழங்கியுள்ளனர். பிரபல எழுத்தாளர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் நூலுருவாக்கத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியதுடன் அச்சுப் படியைத் திருத்தியும் உதவி புரிந்துள்ளார். எனது துணைவியார் பரமேஸ்வரி அவர்கள் அளித்த ஊக்கமும் உற்சாகமும் இந்நூல் வெளியீட்டுக்கு உந்துவிசையாக அமைகிறது. வவுனியா முத்தமிழ் கலாமன்றம் இந்நாவலை மனமுவந்து வெளியிடுகிறது. இதன் செயலாளரும் பத்திரிகையாளருமாகிய பீ. மாணிக்கவாசகம் அவர்கள் பதிப்புரை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா சுதன் அச்சகத்தினர் நாவலை அழகுற அச்சிட்டு உதவியுள்ளனர்.

அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள். இந்த அளவில் நிறுத்திக் கொண்டு நூலைச் சுவைக்க உங்களை அழைக்கிறேன்.

நாவலர் வீதி,
முள்ளியவளை.
25.06.98

முல்லைமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் குறிப்புக்கள்

01. பனங்காமத்து வன்னிபம் நிச்சிய சேனாதிராய முதலியார் அவர்களும் குலசேகர முதலியார் அவர்களும், கரிக்கட்டு மூலைப் பத்து தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்ல மாப்பாண வன்னிய னாரவர்களும் புண்ணியப்பிள்ளை வன்னியனாரவர்களும் மேல்பத்து வன்னிபம் ரணசூரரணதீரராக வன்னியராய முதலியவர்களும் கந்தை யினா வன்னியனாரவர்களும் மேல்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் அவர்களும் மயிலாத்தை உடையார் அவர்களும் பச்சிலைப்பள்ளி இறைசுவதோர் இலங்கை நாராயண முதலியார் அவர்களும் நீலயினா வன்னியனாரவர்களும் மூத்தர் வன்னியனாரவர்களும் இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரில் குடியானவர்களும் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனாரவர்கள் மடதர்மத்துக்குத் தர்மசாதனங் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு மடதருமத்துக்குச் சந்திராதித்தியவரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமும் குடுத்துவரவோமாகவும்.....

— கயிலைவன்னியனார் மடதர்மசாதனப் பட்டையம் சிதம்பரம் கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் பாகம் I. செ. குணசிங்கம் பேராதனை 1970.

கயிலைப்பிள்ளை வன்னியனார் என்பதன் சுருக்கமாக கயிலை வன்னியனார் என்றே வழங்குவதுண்டு. கலாநிதி. சி. பத்மநாதன் கயிலாய வன்னியன் எனக் குறிப்பிடுகின்றார். கயிலை வன்னியன் மறைவுக்குப் பின்னர் அவரின் நினைவாக அளிக்கப்பட்ட மடதர்மத் தைப்பற்றி இச்செப்பேடு குறிப்பிடுகின்றது.

02. 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் படையெடுத்த போது கயிலை வன்னியன் என்பவனே மிகக்கூடிய அதிகாரம் உடையவனாய் இருந்தான். வன்னி மாகாணங்களில் செல்வ வளமுடையதும் மிகப்பெரியதுமான பனங்காமம் என்ற மாகாணத்துக்கு இவன் பொறுப்பாக இருந்தான். சமகாலத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் சிலர் அவனை ஒரு இளவரசன் எனக் கூறியுள்ளனர். மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தைப் பொறுத்து இவன் அதனுடன் கொண்டிருந்த தொடர்பும் அவன் மத்திய அதிகாரம் பற்றிக் கொண்டிருந்த கருத்தும் தான் ஒரு இளவரசன் என்ற நிலைக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் என நினைக்கவில்லை என்பதைக் காட்டுகின்றன. போர்த்துக்கீசரும் பின்னர் ஒல்லாந்தரும் இவனை யாழ்ப்பாணக் கோட்டைக்கு வரும்படி கட்டளை பிறப்பித்த போது அதனைப் புறக்கணித்தான். ஒல்லாந்தர் ஆரம்பத்திலிருந்தே கயிலை வன்னியனின் அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்று கருதினர்.

குறிப்பாக ஒல்லாந்தர் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களையும், நிலவரிகளையும் ஒழுங்காகவும், தாமதமின்றியும் பெற்றுக்கொள்வதில் அக்கறையுடையோராய் இருந்தனர். தங்களின் அதிகாரத்தை விரிவாக்குவதற்கு ஒல்லாந்தர் மெற்கொண்ட இந்த ஆரம்ப நடவடிக்கைகள் கயிலை வன்னியனுடன் அவர்களை முரண்படச் செய்தன. மத்திய அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பில் கயிலை வன்னியன் வன்னியர்களுக்குத் தலைமை தாங்கினான். ஏனைய வன்னியர் ஒல்லாந்தரின் கட்டளைக்கு அடிபணிந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்றாலும் கயிலை வன்னியன் ஒருவனே அவ்வாறு கீழ்ப்படிந்து செல்லாது விட்டான். அவ்வாறின்றி அவன் பலமாக வருமாறு வற்புறுத்தப்படும்போதெல்லாம் தான் செல்லாது தனக்குப் பதிலாக தன் மாமனை அனுப்புவான். கயிலை வன்னியனைக் கைப்பற்றுவதற்கு ஒல்லாந்தர் பெரிதும் விரும்பியிருத்தல் வேண்டும். ஆனால் அந்நேரத்தில் அவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் படையனுப்ப முடியாது என உணர்ந்தார்கள். இதனால் ஒல்லாந்தர் சிலகாலம் கயிலை வன்னியனுடன் இராஜதந்திர நட்புறவு நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தார்கள்.

**— Arasaratnam "The Vanniyar of North Ceylon. A Study of feudal Power and Central Authority - The Ceylon Journal of Historical and Social Studies. Vol. 9 No.2 (July - December 1916)**

**03.** வன்னியர்களைத் தங்களுக்குக் கீழ்படியச் செய்வதில் போர்த்துக்கீசர் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கினார்கள். போர்த்துக்கீசர் வன்னியர்களை ஒருபோதும் தங்கள் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. அவர்கள், வன்னியர்களை தங்கள் முன் வருமாறு அழைப்பினாலும் வன்னியர் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. இவ்வாறு கயிலை வன்னியன் பன்னிரண்டு அல்லது பதினான்கு ஆண்டுகள் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை.

**- Instruction from the Governer General and Council of India to the Governer of Ceylon 1659, 1665**

04. டச் கவர்ணரான தோமஸ் வான் றி (1692-1697) பின்வருமாறு எழுதுகிறார்: வன்னி ஆட்சியார்கள் ஒருகாலைக் கொம்பனியாரின் மண்ணிலும் மற்றையதை (கண்டி) அரசனின் பிரதேசத்திலும் வைத்திருக்கின்றார்கள். போர்த்துக்கீசருக்குப் போலவே ஒல்லாந்தருக்கும் அவர்களின் நடவடிக்கைகள் சினமூட்டுவனவாக இருக்கின்றன. வன்னித் தலைவர்கள் வருடாந்த திறையான யானைகளையும், நிலவரிகளையும் ஒழுங்காகச் செலுத்துவதில்லை. கவர்ணர்களால் அழைக்கப்பட்டபோதும் வருடந்தோறும் நடைபெறும் தர்பாருக்குச் சமூகமளிப்பதில்லை. விசேடமாக பனங்காமத்துக் கயிலை வன்னியன் தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் டச்சுக் கவர்ணர் முன் சமூகமளிக்கவில்லை.

**- C.S. Navaratnam. Vanni and the Vanniyas**

05. கயிலை வன்னியன் கண்டி அரசன் இரண்டாம் இராஜசிங்கனது (1635-1687) நண்பனாகவும் ஆதரவாளனாகவும் இருந்தான்.

**- S. Thommanuppillai - A true patriot and Freedom Fighter**
**- 4th International Confrence Seminar of Tamil Studies Sri lanka - 1974.**

**06. They have a prince over them called Kayla Vanniyan. Who is independent of king of Kandy on the one hand or the Dutch on the other. The King Rajasinghe II and this prince maintained a friendship**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and correspondence and when the King lately (1675) sent an Army against the Hollanders in the North this prince led them through his Country Vanni Nadu and went himself in person to direct the King's people. when they took one or two forts from them.

- Robert Knox - Historical Relation of Ceylon

07. Tennakooon's (Commander of Kandian Army) bold campaign 0f 1675 when he marched North captured Arippu and roused the Vanni and penetrated fo Jaffna.

- Jrascb 1958

08. டச்சு அறிக்கைகளில் அடிக்கடி குறிப்பிட்டபடி தமக்குள் சச்சர விட்டுக் கொள்ளும் வன்னித் தலைவர்கள் வன்னிப் பிரதேசத்தின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் வரும்போது கயிலை வன்னியனுடன் ஒன்றுபட்டுத் தம் எதிர்ப்பைக் காட்டினர். இவர்களது ஒத்துழைப் புடனேயே கயிலை வன்னியன் டச்சக்காரருக்கு எதிரான எதிர்ப் பினை மேற்கொண்டான். சுதந்திரமும் சுயாட்சியுமே அவர்களது தாரக மந்திரமாக இருந்தது.

- S. Thommanupillai. மு.கு

09. சிங்கள அரசனான இரண்டாம் இராசசிங்கன் கயிலை வன்னிய னுடன் நட்புறவு கொண்டிருந்ததற்குக் காரணம் அவன் வன்னித் தலைவர்களது ஈடினையற்ற தலைவனாக இருந்ததாலேயே.

- Thommanupillai. மு.கு

10. வன்னியர்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்ப குடை, கொடி, கவசம், படைக்கலம் முதலியவற்றையும் சிறப்புச் சின்னங்களையும் வரிசைகளையும் கொண்டிருந்தனர். ஆதிக்கம் செலுத்துவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதுவாக படைபலத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர். அவர்களின் ஆட்சியுரிமை தலைமுறை தலைமுறையாகப் பரம்பரை வழியாகச் சென்றது.

— கலாநிதி. சி. பத்மநாதன். அடங்காப்பற்றின் வன்னிமைகள் **1658-1697**

பண்டாரவன்னியம் விழாமலர் — வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபை **1982**

**11.** ஏழு வன்னிமைகள் பதினேழாம் நூற்றாண்டிலே காணப்பட்டன. பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கருநாவல்பற்று, கரிக்கட்டுமூலை, தென்னமரவாடி, செட்டிகுளம் என்பனவையே அவை. போர்த்துக்கேயர் மன்னாரைக் கைப்பற்றுவதற்கு முன் மாந்தோட்டம் முதலிய இடங்களிலும் வன்னியர் ஆட்சியதி காரம் பெற்றிருந்தனர்.

கலாநிதி. சி. பத்மநாதன் மு.கு

**12.** பதினேழாம் நூற்றாண்டிலே ஆட்சிபுரிந்த வன்னியருள் கயில வன்னியனே அதிக பிரபல்யம் வாய்ந்தவனாக விளங்கினான். அவன் அதிகாரத்தின் கீழிருந்த பனங்காமம் பற்று அடங்காப் பற்றிலே ஏறக்குறைய அரைவாசிப் பகுதியை உள்ளடக்கியிருந்தது. கயில வன்னியன் மிகப் பரந்ததொரு பிரதேசத்தினை ஐரோப்பியரின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்படாது சுதந்திரமான அரசனொருவனுக் குரிய அதிகாரத்தோடு ஆட்சிபுரிந்தமையினாலே அவனை அரசன் என்று ஐரோப்பிய அதிகாரிகளும் வரலாற்றாசிரியர்களும் வர்ணித்தார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்கத்தின் நியமனத்தின் மூலமாகவே வன்னியர்கள் தங்கள் பதவிகளையும் ஆதிக்க உரிமைகளையும் பெற்றார்கள் என்று கருதப்பட்ட போதிலும் பரம்பரை வழியாக ஆட்சி செலுத்தும் முறை வன்னியரிடையே வழமையாகியது. இதனால் வன்னியர்கள் பலமானது வலுப்பெற்று வந்தபோது அவ்வழமையை ஒல்லாந்த அதிகாரிகளினாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைத்துக் கொள்ள முடியவில்லை. ஏக காலத்தில் பல்வேறு வன்னிகளிலும் ஆதிக்கம் செலுத்தியவர்கள் உறவினர்களாய் இருந்தனர். தம்மீது மேலாதிக்கம் செலுத்தும் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி புரியும் காலங்களில் வன்னியர்கள் எல்லோரும் பனங்காமத்து வன்னியரின் தலைமையின் கீழ் நடைவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கமாய் இருந்தது.

— கலாநிதி. சி. பத்மநாதன். மு.கு

13. ஒல்லாந்த பிரதேசங்களிலிருந்து வன்னிக்குள் நுழைந்து கொள்ளும் குற்றவாளிகளையும், கொலையாளிகளையும், அடிமைகளையும் கைதுசெய்து ஒல்லாந்த அதிகாரிகளிடம் வன்னியர்கள் ஒப்படைக்க வேண்டும். அடிமையொருவனைக் கைப்பற்றி அவனது எசமானனிடத்து ஒப்படைக்குமிடத்து வன்னியருக்கு இரண்டு இறைசால் கொடுக்கப்படும். இக்கடமையிற் தவறின் வன்னியர் தமது கவனக் குறைவிற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு டச்சு நிர்வாகத்திற்கு ஐம்பது இறைசால் கொடுத்தல் வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது.

— எஸ். அரசரத்தினம். **CJHSS Vol. 9No.2**

14. தேசாதிபதியின் மகனாகிய இளைய வான் கூன்ஸ் **1671** ஆம் ஆண்டில் பாணமை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியதும் தனது படையுடன் முல்லைத்தீவில் இறங்கி அங்கிருந்து வன்னிக்குள் நுழைந்து ஐயன் பெருமாள் என்னுமிடத்தில் தங்கினான். வன்னியர்கள் அங்கு சென்று அவனிடம் மன்னிப்புக் கோரி சமாதானத்தை ஏற்படுத்தினர்.

கலாநிதி. சி. பத்மநாதன். மு.கு

15. ஒல்லாந்தர் கயில வன்னியனைத் தங்களின் முன்தோன்றுமாறு கேட்ட போது அவன் தனக்கு வருத்தமெனக்கூறி ஓலை அனுப்பினான் என்றும் ஈற்றில் அவன் கடுமையான வருத்தத்தால் பீடிக்கப்பட்டிருந்தான் என்றும் தெரிய வந்துள்ளது. அப்பொழுதிருந்த நீர்கொழும்பு முதலியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையின் படி அவன் குஷ்ட வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தான் என அறிய முடிகிறது.

**- Instruction from the Governer General and Council of India to the Governer of Ceylon.**

16. போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுற்றது 1658இலாகும். ஏறக் குறைய பதினான்கு ஆண்டுகள் கயில வன்னியன் போர்த்துக் கேயரின் கட்டளையைப் புறக்கணித்து யாழ்ப்பாணத்துக்குச் செல்ல வில்லை. இதனைக் கொண்டு கணிப்பீடு செய்கையில் கயில வன்னியன் ஆகக்குறைந்தது (1658-14)1644இல் ஆட்சி ஆரம்பித்திருக்க வேண்டும்.

— செ. குணசிங்கம். கள்ளியங்காட்டுச் செப்பேடுகள். 1970.

17. 1678இல் கயில வன்னியனுக்கு ஏற்பட்ட மரணம் ஒரு அடங்காத் தனமான அதிகாரமுள்ள ஒரு மானியத் தலைவனை - வன்னிப் படைகளை ஒன்றுசேர்த்துத் திரட்டிய ஒருவனை வன்னிநாடு இழக்கச் செய்தது.

— எஸ். அரசரத்தினம். மு.கு

18. கயில வன்னியன் மரணம் கி.பி. 1678 இல் ஏற்பட்டது.

**- Dag Register, Batavia AD. 1678-80 JRASCB Vol. XXVI No. 71**

19. பத்தேவியா டாக் பதிவேடு தரும் தகவல்களிலிருந்து கயில வன்னி யனாரின் மரணத்தைத் தொடர்ந்து நேரடி வாரிசுரிமை யைப் பெற்றுக் கொண்டவர் கயில வன்னியனாரின் பேரன் முறையான காசியனார் என்பவராவார் என அறிந்து கொள்ள முடிகிறது.

— செ. குணசிங்கம். மு.கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. **When this fearless Wealthy chief (Kayla Vanniyan) died in 1678 the Vanniyas appointed a successor without reference to the Dutch Authorities.**

**- C.S. Navratnam. Vanni and the Vanniyas - 1960.**

21. **Rycklof Van Goens, Instruction for the guidance of the Opperkoopman Anthony Pavilioen, Commandeur and Council of Jaffna Patnam. 1658.** -கலாநிதி சி. பத்மநாதன் எழுதிய 'வன்னியர்' என்னும் நூலின் அடிக்குறிப்பின்படி கயில வன்னியன் காலத்தில் **(1644-1678)** றைக்லொவ் வான் கூன்ஸ் தேசாதிபதியாகவும் ஒப்பகூப்மன் அந்தோனி பவிலியன் யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பான கொமாண்டராகவும் இருந்தமை தெரியவருகிறது.

22. **Memoir of Van Goens (1675-79) to Laurence Pyl, Late Commandeur of Jaffna Patnam. Trans Sophia Pieters. Colombo 1910.** கலாநிதி சி. பத்மநாதன் எழுதிய வன்னியர் நூலின் அடிக்குறிப் பின்படி இளைய வான் கூன்ஸ் **1675** இன்பின் தந்தைக்குப் பின் தேசாதிபதியாக பதவியேற்றிருக்கவேண்டும். அந்தோனி பவிலியனுக்குப்பின் லோறன்ஸ் பில் யாழ்ப்பாணக் கொமாண்ட ராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். **1675**இல் கண்டிய வன்னிய படையெடுப்பிற்குப் பின்னரே தேசாதிபதி கொமாண்டர் ஆகியோரின் பதவி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

23. கயில வன்னியனார் மட தர்ம சாதனப் பட்டையத்தின்படி இலங்கை நாராயண முதலியார், முள்ளியவளை வன்னிபம், இலங்கை நாராயண முதலியார் என அழைக்கப்படுகிறார். ஒல்லாந்தக் குறிப்புத்தரும் தகவலிற்கிணங்க கயில வன்னிய னின் பனங்காமத்தின் அதிகாரப் பதவியைப் பெற்ற நல்ல மாப்பாணனின் மகன் நிச்சய சேனாதிராயருக்கு இவர் மைத்துனர் முறையானவர் ஆவார். இத்தகையதொரு உறவுமுறை முள்ளிய வளையின் வன்னிப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி யிருக்கலாம்.

செ. குணசிங்கம். மு.கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கயில வன்னியனாரின் இறப்பின் ஆட்சியுரிமைக்குடையவர் என்ற கருத்தில் காசியனார் பனங்காமப் பகுதிக்கு அதிகாரியாக இருந்தாலும் ஆட்சி செய்வதற்கான வயது முதிர்ச்சியற்றவராக அவர் இருந்திருக்கலாம். காசியனாருக்கு உதவி புரிவதன் மூலம் நல்லமாப்பாணரே பனங்காமப் பகுதியின் அதிகாரத்தை நடைமுறையில் அனுபவித்திருக்கலாம்.

செ. குணசிங்கம். மு.கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# திக்விஜயம்

காலைக் கதிரவன் தன் பொற் கிரகணங்களைப் பூமியிலே பதித்துக் கொண்டிருந்தான். மந்தமாருதம் வீசிக்கொண்டிருந்தது. வவுனிக்குளம் சிவபுரநாதர் ஆலயமணியோசை கேட்கிறது. பனங்காம வன்னிமை ஆவலுடன் எதிர்பார்த்துக் களிகூரவிரும்பிய அந்த நிகழ்ச்சி இன்றுதான் நிகழப்போகிறது.

பனங்காம வன்னிமையின் கிராமங்களின் வீதிகள் தோறும் தோரணங்கள், பூரண கும்பங்கள், அலங்காரங்கள், மக்களின் மகிழ்ச்சி ஆரவாரங்கள்.

அக்கினி குலத்தோன்றல், பனங்காமத்தரசன், பல்லாயுத வல்லபவன், கயிலைப்பிள்ளை வன்னியனார் அரசியார் சகிதம் யானைமீது இவர்ந்து மந்திரி, பிரதானிகள் புடைசூழ வன்னிமை எங்கும் திக்விஜயம் செய்யும் நிகழ்ச்சிதான் அது. பனங்காமப் பிரதேசம் முழுவதும் ஒரே குதூகலம். நீதிவழுவாது செங்கோலோச்சி நாட்டைப் புரக்கும் தம் மன்னரைக் கண்ணாரக் காண வாய்ப்பைக் கொடுத்த அந்த மகோன்னதமான சம்பவம் மக்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது.

வன்னியனார் திக்விஜயத்தை மேற்கொள்வது மிகவும் அரிது, அரிதானது. அரசபாரதத்தைப் பொறுப்பேற்ற ஐந்தாவது ஆட்சியாண்டில் ஒரு திக்விஜயத்தை மேற்கொண்டவன் தற்போது பதினாறாவது ஆட்சியாண்டில் இரண்டாவது திக்விஜயத்தை மேற் கொண்டிருக்கிறான்.

கயிலை வன்னியனாரது முதலாவது திக்விஜயத்தின்போது யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர் ஆட்சி நிலவியிருந்தது. இப்போது யாழ்ப்பாண தீபகற்பத்தின் ஆட்சியதிகாரம் டச்சுக்காரர் என்னும் ஒல்லாந்தர் கைக்கு மாறிவிட்டது.. டச்சுக் கீழைத்தேசக் கொம்பனியாரின் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன.

போர்த்துக்கீசரின் மேலாணையை ஏற்காத கயிலைவன்னியனார் தற்போதைய ஒல்லாந்தர் மேலாணாயையும் ஏறக்கத் தயாராகவில்லை. டச்சுக்காரர் இன்னும் தம் கெடுபிடிகளை ஆரம்பிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியனாரின் இந்த திக்விஜயம் அவரது பெருமையை உயர்த்துவதற்கோ, கேளிக்கைக்காகவோ ஏற்பாடு செய்யப்பட்டதல்ல. பனங்காமப் பிரஜைகளை நேரே சந்தித்து அளவளாவி அவர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள், உணர்வுகள் அனைத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்.

மக்கள் குல, மத பேதமின்றி மன்னரை வரவேற்பதுடன் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கு இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும். விவசாயிகள், அந்தணர், வணிகர், கைவினைஞர், சலவைக் கலைஞர், நாவிதர், கம்மாளர், பணிக்கர், சேணியர் முதலிய பல்வேறு குல மக்களும் அவரவர்க்குரிய தொழிலை மேற்கொள்வதற்கு ஏற்ற விதத்தில் ஆட்சி நிலவுகிறதா?

நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தும் முதலியார்மார், உடையார் மார், தலையாரிகள், கங்காணிமார், பண்டாரப்பிள்ளைகள் ஆகியோர் தத்தம் பணிகளை மக்கள் மனம் நோகாதவாறு ஆற்றுகின்றார்களா? என்பதையெல்லாம் இத் திக்விஜயத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

பனங்காமம் அரச மாளிகையிலிருந்து புறப்பட்ட வன்னியனார் சிவபுரநாதரைத் தரிசித்து மல்லாவி, துணுக்காய், தேராங்கண்டல், வெள்ளாங்குளம், அம்பலப் பெருமாள்குளம் ஆகியவற்றினூடாக முறிகண்டியை அடைந்து திரும்பிப் பனங்காமத்தின் பல்வேறு குக்கிரா மங்களினூடாக அரசமாளிகையை அடைய ஏற்பாடாகி இருந்தது.

பிரஜைகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வன்னியனாரை வரவேற்றனர். தம் வாழ்க்கையிலுள்ள இன்ப துன்பங்களை எடுத்துக் கூறினர். ஆட்சியின் பலங்களையும் பலவீனங்களையும் சுட்டிக் காட்டினர்.

சிவபுரநாதர் ஆலய வீதியிலே மக்கள் திரண்டிருந்தனர். விவசாயிகள் சிதைவடைந்திருக்கும் குளங்களைப் புநருத்தாரணம் செய்தல், வனவிலங்குகளாகிய பன்றி, யானை, குரங்கு ஆகியவற்றால் ஏற்படும் சேதம் ஆகியவற்றை விபரித்தனர். வர்த்தகர்களின் முகத்தில் விசனமும், சோர்வும் படர்ந்திருப்பதை மன்னன் அவதானித்தான். தமது வணிக முயற்சிகளுக்கு புதிய டச்சு நிர்வாகம் இடையூறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

துணிநெய்வோர் தமக்குப் போதிய பருத்திநூல் கிடைப்ப தில்லை என்றும் பருத்திச் செய்கையை விஸ்தரிக்க வேண்டு மென்றும் வலியுறுத்தினர்.

மக்கள் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் கயில வன்னியனாரின் மாமனாரும் ஆட்சிக்கு உறுதுணையாக இருப்பவரு மான நல்லமாப்பணார் ஓலையில் குறித்துக் கொண்டார்.

அம்பலப் பெருமாள் குளத்திலே மூதாட்டி ஒருத்தி மன்னரு க்கு ஆலாத்தி எடுத்துத் திருஷ்டி கழித்து வன்னியனார் நீண்ட காலம் வாழவேண்டும் என்று வாழ்த்தினார்.

ஆங்காங்கு மக்கள் வன்னியனாருக்கும், வன்னிச்சியாருக்கும் மலர்மாலைகள் அணிந்து வரவேற்றனர்.

கூத்து, இசை, கோலாட்டம், கும்மி போன்ற கலைநிகழ்ச்சி கள் ஆங்காங்கு நடைபெற்றன.

சீனடி, சிலம்படி, மற்போர் போன்ற மெய்வன்மை நிகழ்ச்சி கள் அனைவரையும் கவரும் விதத்தில் இருந்தன.

❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑

திக்விஜயம் பூர்த்தியானதும் அரசர், மந்திரி, பிரதானிகள், தளபதிகள், அந்தணர், புலவர் ஆகியோரடங்கிய சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார்.

அரசவைப் புலவரான தீபங்குடியார், 'நெல்லும் உயிர் அன்றே, நீருமுயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் பழைய செய்யுள் பகுதியைக் கூறி மக்களின் உயிரான அக்கினிகுல சத்திரியர், பல்லாயுத வல்லபர், பனங்காம வேந்தர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.

வரி அறவிடுவதற்குப் பொறுப்பான பண்டாரப்பிள்ளைகள் மக்களின் விளைநிலங்கள் சரியான முறையில் அளவீடு செய்யப்படாத தால் வரி அறவிடுவதில் ஏற்படும் சிரமங்களை விளக்கினர்.

வன்னிமையின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டன. இதுவரையில் ஒல்லாந்தர் தமது மேலாண்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தத் தொடங்கவில்லை. இனிமேலும் அப்படி இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை நல்லமாப்பாணர் எடுத்துக் கூறினார். 'வன்னியின் எல்லைப் பிரதேசங்களில் காவல் அரண்கள் பலப்படுத்தப்பட வேண்டும். ஒல்லாந்தரின் நடமாட்டத்தை அவதானித்து அவ்வப்போது தகவல்கள் பெறப்படவேண்டும்' என பிரதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

'வணிகரின் துயர் துடைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்' எனத் தளபதி வெற்றிக் கடம்பன் கூறினான்.

'வன்னிமைகளிலும் டச்சுப் பிரதேசங்களிலும் சென்று நிலைமைகளை அறிந்து வருகின்றேன்' என்று கூறினான் ஒற்றனும் தூதுவனுமான சிலம்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# பாலியாற்றங்கரையில்...

நீலவானம் என்னும் மங்கை மேற்குக் கடலில் சாயும் கதிரவனின் முதுமையான கதிர்களை வாங்கி, விநாடிக் கொரு வர்ண ஆடைகளைப் புனைந்து கொண்டிருந்தாள். ஆதவன் மறையும்வரை ஒளி குன்றியிருந்த சந்திரன் தன்சுயரூபத்தைக் காட்ட தங்கத்தகடாக மாறிக்கொண்டிருந்தான். வானத்து நட்சத்திரங்கள் தம் அரசனை வரவேற்கும் பணியில் மினுக் மினுக்கென்று கண் சிமிட்டின. மாலை நேரத்துத் தென்றல் காற்று மலர்களைக் கொஞ்சி நறுமணத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது.

பாலியாற்றங்கரையிலே அமைந்திருந்த அந்த நந்தவனத்திலே ஒரு மூலையில் ஓங்கிவளர்ந்து கிளைபரப்பி நிற்கும் மருதமர நிழலிலே ஒரு கருங்கல் ஆசனத்தில் வாலிபன் ஒருவன் அமர்ந்திருந்தான். அவன் அருகில் வெண்புரவி ஒன்று கட்டப்பட்டிருந்தது. இந்தப் புரவியிலேதான் இந்த இளைஞன் வந்திருக்க வேண்டும்! இப்போதுதான் அவன் வந்திருக்கிறான் என்பதைக் காட்டுவது போல் புரவியின் கடைவாயில் நுரை தள்ளிக் கொண்டிருந்தது.

பார்வைக்கு ஓர் அரச குமாரனைப் போல் தோற்றமளித்த அவன் நீல வானத்தில் தங்க நிலவைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். பால் நிலவைப் பரப்பிக் கொண்டிருந்த திங்களின் ஒளியால் நந்தவனத்தில் ஆங்காங்கு பிரகாசமேற் பட்டாலும் அவன் இருந்த இடம் கருநிழலின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்தது.

'பாலி, பாலி...' என்று அவன்வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. இதனைக் கேட்பவர்கள் அலைபுரண்டோடும் பாலியாற்றின் நீலப் பிரவாகத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டானென்றே எண்ணத் தோன்றும். இரு மருங்கிலும் குடைபிடித்து நிற்கும் மருதமரங்களும், நாவல் மரங்களும், காயாம் புதர்களும் காவல் புரிய பாலியாறு என்னும் பருவமங்கை ஒய்யார நடையிலே சென்று கொண்டிருந்த அழகை அவ்வாலிபன் அள்ளிப் பருகிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் 'பாலி, பாலி...' என்றழைத்தது பாலியாற்றை மட்டுந்தானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காமம் வன்னிமையின் பருவக்குமரியான இளவன்னிச்சி பாலி நாச்சியாரின் பெயரைத்தான் அவன் உச்சரித்துக் கொண்டிருந்தான்.

பனங்காம வேந்தன் கயிலை வன்னியனின் மாமனான நல்லமாப்பாணனின் அருமைப் புதல்வி அவள். கைதேர்ந்த சிற்பி ஒருவன் சந்தனக் கட்டையிலே கடைந்தெடுத்த சிலைபோல்திகழும் அவளின் மோகன அழகை மனத்திலே சுமந்துகொண்டு வெள்ளிநிலாவையும் விண்மீன்களையும் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்!

இந்த இளைஞன் பனங்காமத்தைச் சேர்ந்தவன் அல்ல. வன்னி நாட்டின் ஏழு பிரிவுகளிலும் ஒன்றான முள்ளியவளையிலே முதலியார் பதவி வகிக்கும் இலங்கை நாராயணனே அவ்விளைஞன்!

நல்லமாப்பாணனின் அக்காள் பெரிய நாயகி வன்னிச்சிக்கும் முள்ளியவளை வன்னிமை இளஞ்சிங்க வன்னியனாருக்கும் மகனாகப் பிறந்தவன் அவன்!

நெருங்கிய உறவு முறையால் இறுகப் பிணைந்திருக்க வேண்டிய பனங்காமம் முள்ளியவளை வன்னிமைகள் ஏதோ ஒரு காரணத்தால் பகைமை பூண்டு விட்டன. இந்தப் பகையை மேலும் பலப்படுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தன.

பிள்ளைப் பருவத்திலே அடித்துப் பிடித்து சிரித்துச் சினந்து அன்பை வளர்த்துக்கொண்ட இலங்கையன்-பாலி என்போர் தம் அன்புப் பிணைப்பை முறித்துக்கொள்ள வேண்டும் என்பது பெருவன்னிச்சியின் கருத்து. அதற்கு ஒத்தூதுவது போல் இளஞ்சிங்க வன்னியனாரும் நடந்து கொண்டார்.

அன்னையும் பிதாவுமாகிய முன்னறி தெய்வங்களின் உள்ளம் நொந்துவிடக் கூடாதே என்பதற்காக அவர்கள் கருத்தினை மதிப்பவன்போல் நடித்துவந்தான் இலங்கையன்.

பாலி நாச்சியார் பருவத்தின் வாசலிலே காலடி எடுத்து வைத்த காலத்திலே பனங்காமமே பெருவிழாக் கொண்டாடியது. அப்பொழுது கூட பெருவன்னிச்சியாரோ, இளஞ்சிங்க வன்னியனாரோ அவ்விழாவில் கலந்துகொள்ளவில்லையென்றால் அவர்களின் வைரம் பாய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையின் பரிணாமத்தைக் கண்டு கொள்ளலாம்.

இலங்கையனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. முப்புரி நூலணிந்து பஞ்சகச்ச உடையிலே வந்த வழுக்கைத் தலை ஊசிக்குடுமிப் பிராமணன் ஒருவன் முள்ளியவளை வன்னிமையில் தங்கியிருந்தான். வேதாகமப் பயிற்சி மிக்கவனாம். மன்னர்க்கும் மக்களுக்கும் நல்வாழ்வு தரும் யாகங்களைச் செய்ய வல்லவனாம்! கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தைக் கரைத்துக் குடித்தவனாம்! சைவசித்தாந்தத்தில் பாண்டித்தியம் உடையவனாம்! யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வாள் வேல் பயிற்சிகள் மிக்கவனாம் –அவனுக்குத் தெரியாத கலை எதுவுமில்லை என்கின்ற பாணியிலே அவன் பேச்சு இருந்தது.

அவன் வரவுக்குப் பின்னர்தான் பனங்காமம்–முள்ளியவளை உறவு படிப்படியாக முறியத் தொடங்கியது.

எவ்வளவு நேரம்தான் நீலவானையும், வெண்ணிலாவையும், விண்மீன்களையும் பார்த்துக் கொண்டிருப்பது? அவன்தன் நயனங்களைச் சுழற்றி நாலாதிக்கிலும் தன் பார்வையைச் செலுத்தினான். சுழன்று திரும்பிய விழிகள் திரும்பவந்து நிலைகொண்டன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை மனித வாடையே காணோம். சில வேளை பாலி நாச்சியாருக்குச் செய்தி எட்டாமலும் இருக்கலாம்!

கண்ணை மூடியபடியே 'பாலி பாலி... நீ எங்கே இருக்கிறாய்' அவனை அறியாமலேயே அவன் கூவி விட்டான்.

'இங்கேதான் இருக்கிறேன்' என்று முல்லைப் புதரை நீவிக்கொண்டே வெளிப்போந்தாள் பாலி நாச்சியார். பறந்து வரும் சிட்டைப்போல வந்த அவள் இலங்கையன் மடியிலே சிறு குழந்தையைப்போல் துவண்டு படுத்தாள். தன்னை மறந்து ஊர் உலகையெல்லாம் மறந்து மடியில் கிடந்த பாலியின் சுருள் கூந்தலை ஆதரவாக நீவிவிட்டான் இலங்கையன். அவளின் பட்டுக் கன்னத்திலே உதடுகளைப் பதித்து முத்தமழை பொழிந்தான் அவன்.

சிலவிநாடிகள் ஏற்பட்ட மயக்கமும் கிறக்கமும் தணிந்து சுய உணர்வைப் பெற்றிருக்க வேண்டும் அவர்கள்.

'பாலி, நான் எவ்வளவு நேரமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தான், நான் உங்களுக்காக எத்தனை யுகங்களாகப் பனங்காமம் அரசமாளிகையில் காத்திருந்தேன் தெரியுமா?" இசை யெழுப்பினாள் பாலி. இலங்கையன் காதில் தேன்மாரி பொழிந்தது.

'அந்தப் பாழாய்ப்போன ஊசிக்குடுமி அந்தணன் வந்துபோன பின் எத்தனை கட்டுப்பாடு எனக்கு? உன் ஓலை கிடைத்ததுமே துடியாய்த் துடித்துப் போனேன். முள்ளியவளை எல்லைப் புறத்தைச் சுற்றிப் பார்வை இட்டுவிட்டு அப்படியே மேல்பற்று வன்னிமைக்குப் போய்வருவதாகச் சாட்டுச் சொல்லிவிட்டல்லவா இங்கு வந்தேன்!'

"உங்களுக்காக நானும் எனக்காக நீங்களும் என்று ஆகி விட்ட பிறகும் எம் அன்புப் பிணைப்பை உடைப்பதற்கு அந்த பிராமணன் ஏதோ சதி செய்கிறான் போல் இருக்கிறது" சதங்கையின் மெல்லிய நாதம்போன்ற அவள் பேச்சு இலங்கையன் காதில் இசையாய் விழுந்தது. எல்லையில்லா மகிழ்ச்சிக்கு இடையூறு செய்வதுபோல் அவன் உள்ளத்திலே துயரத்தின் மெல்லிய இழை ஊடுருவிப் படர்ந்தது.

"அந்தணன்தான் சொன்னானென்றால் அன்னையும் தந்தையும் அப்படியே நம்பிவிட வேண்டுமா? எல்லாம் எம் போதாத காலம்தான்" சலிப்புடன் சொன்னான் அவன்.

"போதாத வேளையிலே இன்று ஒரு சுபநேரம் முகிழ்ந்திருக்கிறது; இன்றைக்கே நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்."

"இப்படியே உன்னைத் தூக்கிக் குதிரையில் ஏற்றி முள்ளிய வளைக்குக் கொண்டுபோக வேண்டும் என்று கூறப்போகிறாயாக்கும்'

"ஏன் அப்படிச் செய்யக் கூடாதா?"

"நானும் ஒரு சாதாரண குடிமகனாக இருந்து நீயும் அரச குலத்தில் பிறக்காதிருந்தால் சுலபமாக இதனை நிறைவேற்றியிருக்கலாம்" தயங்கித் தயங்கிப் பேசினான் அவன்.

"அத்தான், அரச குலத்தில் பிறந்துவிட்ட குற்றத்திற்காக அன்பை வளர்த்துக் கொள்ளும் அருகதை அற்றுப்போய்விடுமா?"

"பாரதக் கதை தங்களுக்குத் தெரியாதா? அருச்சுனன், சுபத்திரையைத் தேரில் ஏற்றிக்கொண்டு செல்லவில்லையா?"

"அருச்சுனன் அப்படித்தான் செய்தான்! அதுபோல நானும் செய்யவேண்டுமென்று தான் கூறுகின்றாய். அப்படியொரு நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தால் அதைப்பற்றி யோசிப்போம். எம் அன்பைச் சிதைக்க இந்த உலகிலே யாராலும் முடியாது. அவசரப்படுவான் ஏன் என்றுதான் கேட்கிறேன்"

"அவசரமும் அவசியமும் வந்துவிட்டது. அரசமாளிகையில் நான் செவியுறும் செய்திகளை நோக்கினால் எனக்கும் தளபதி வெற்றிக் கடம்பனுக்கும் விரைவில் திருமணம் நிறைவேறிவிடும்போல் இருக்கிறது"

"என்ன? மாமா அப்படிக் கூறினாரா?"

"அப்பாவுக்கு இதைப்பற்றியெல்லாம் சிந்திக்க நேரமேது? வன்னிமைக்கும் கண்டிக்கும் அவர் ஓட்டமும் நடையுமாகச் சென்று ராஜ்ய விவகாரங்களைக் கவனித்து வருகிறார். பனங்காம வன்னிமைக்கும் ஏனைய இராச்சியத்திற்குமிடையே உயர் ஸ்தானிகராகப் பணியாற்றுகின்றார். பனங்காமத்தரசியார் என் திருமண விஷயத்தில் மும்முரமாக அக்கறை கொண்டிருக்கிறார். எப்படியும் தளபதிக்கு என்னைத் தாரைவார்த்துக் கொடுத்துவிட வேண்டும் என்பதே அவரது ஆசை"

"சபாஷ்! சபாஷ்!!" என்ற குரல் இலங்கையன் காதிலே ஒலிக்கவே இடுப்பிலே சொருகியிருந்த குத்துவாளைச் சரேலென உருவித் தன் வலக்கரத்தில் இறுகப் பற்றிக்கொண்டு குரல்வந்த திக்கை கூர்ந்து நோக்கினான். அருகில் இருந்த நாவல் மரமொன்றிலிருந்து இருவர் பாலியாற்றிற் குதித்து அங்கிருந்த படகொன்றில் விரைந்து தாவித் துடுப்பசைத்துச் செல்வதைக் கண்ணுற்றான் இலங்கையன்.

குத்துவாளைச் சுழற்றி எறிவதா வேண்டாமா என யோசித்த இலங்கையனைப் பாலி தடுத்துவிட்டாள்.

"யாரோ எம்மை வேவு பார்த்திருக்கிறார்கள். முதல் ஜாமம் கழிந்த இந்த நேரத்திலேகூட இவர்கள் இந்த நாவல் மரத்திலே இருந்திருக்கிறார்கள். இவ்விடத்திலே நாம் இருப்பது சரியல்ல" என்று கூறிப் பாலியின் மென்கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு பாலியாற்றம் கரையிலே நடந்து சென்றான் இலங்கையன்.

எங்கிருந்தோ வந்த கருமுகில் ஒருகணம் வெண்ணிலாவை விழுங்கிக் கக்கியது.

பாலியை ஆதரவாக அணைத்துக் கொண்டு அரசமாளிகை வரை சென்று அவளை அங்கே விட்டுவிட்டுத் திரும்பினான் இலங்கையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்வார்க் கயிற்றாலான குதிரையின் சேணத்தைப் பிடித்துக் கொண்டே அதன்மேல் ஏறி முள்ளியவளையை நோக்கிப் புறப்பட்டான் இலங்கையன்.

தம்மை வேவு பார்த்தவர்கள் யாராக இருக்கலாம்? இதனால் முள்ளியவளை அரண்மனையிலே புயல் வீசப்போகிறதா? பனங்காமம் முள்ளியவளை உறவைப் பிளவுபடுத்தி நிரந்தரமாகப் பிரிக்கும் சதிகாரரின் வேலைதான் இது. வருவது வரட்டும். சூழ்ச்சி வலையை அறுத்தெறிந்து உண்மையை உணர்த்த வேண்டும் என்றெல்லாம் அவன் உள்ளம் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03
# கிரமவிட்டன்

படகு அலைமோதும் வவுனிக்குளத்திலே மிதந்து சென்றது. படகிலிருந்த கிரமவிட்டன் என்னும் பஞ்ச கச்சமணிந்த ஊசிக் குடுமி வேதியன் தலையிலிருந்த வெண்தலைப்பாகையை அவிழ்த்து மேனியெங்கும் படர்ந்திருந்த நீர்த்துளிகளைத் துவட்டிக்கொண்டு அருகில் இருந்தவனைப் பார்த்துச் சொன்னான்.

"காஞ்சிரங்காயா, இன்று நான் தப்பிப் பிழைப்பேன் என்று நினைக்க வில்லை. காதலர்களின் சரச வார்த்தைகளினூடே, எனது திட்டத்திற்குச் சாதகமான நிலைமை வெளிப்பட்டபோது உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். நாவல் மரக் கொம்பரில் பிடித்த கையைவிட்டு 'சபாஷ்' என்று கைதட்டி விட்டேன். தவறிப் பாலியாற்றில் விழுந்த என்னை நீயும் பின்தொடர்ந்தாய். அங்கே அந்தப் படகு மாத்திரம் இல்லையென்றால் இலங்கையனின் குத்துவாளுக்கு இரையாகி இருப்பேன். நான் மட்டுமல்ல நீயுந்தான்!" நீரில் நனைந்துவிட்டதாலோ அல்லது அச்சத்தாலோ அவர் நடுக்கம் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

"பிரிந்திருக்கும் ஏழு வன்னிமைகளும் ஒற்றுமையாகிவிடக்கூடாது என்பதற்காக நான் எவ்வளவு பாடுபடுகிறேன் தெரியுமா? அதிலும் பலம் வாய்ந்த பனங்காம வன்னிமையும் வளம்பொழியும் முள்ளியவளை வன்னிமையும் இணைந்துவிட்டால்... நான் இதுவரை வகுத்திருந்த திட்டமெல்லாம் தவிடு பொடியாகிவிடும்" என்று சொல்லிய கிரம விட்டன் தன்குடுமியைத் தட்டி முடிந்து கொண்டு மடியிலிருந்து தாம்பூலப் பையை எடுத்து விரித்து சில பாக்குச் சீவல்களை வாயில் போட்டுக் கொண்டான்.

"வன்னிமைகளின் ஒற்றுமையை எப்படி உங்களால் சிதைக்க முடியும்" வினா எழுப்பினான் காஞ்சிரங்காயன்.

'காஞ்சிரங்காயா, இந்த அர்த்த சாத்திரத்தில் நிபுணனான கிரமவிட்டனால் முடியாதது ஒன்றில்லை. நல்லமாப்பாணன் முள்ளியவளை வன்னியனை ஏளனஞ் செய்தான் என நம்பச் செய்துவிட்டேன். முள்ளயவளை இளஞ்சிங்க வன்னியனுக்கும் அரச பதவிக்கும் ஆறுகாத தூரமென்றும், மக்கள் இளஞ்சிங்கனுக் கெதிராகக் கிளர்ந்தெழப் போகிறார்கள் என நல்ல மாப்பாணன் பகிரங்கமாகச் சொன்னதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொய்யை அவிழ்த்துவிட்டேன். இதேபோல் பனங்காம வன்னியனாரின் தயவிலே வாழுகின்ற நல்லமாப்பாணனுக்கு அரச மாளிகையில் எந்தவித மதிப்புமில்லையென்று முள்ளியவளை வன்னியன் கூறியதாக இன்னொரு அபாண்டமான பொய்யைக் கூறிவிட்டேன். நல்லமாப்பாணன் கொதித்தெழுந்து விட்டான். இதன் பலன்தான் இலங்கையன்-பாலி காதலில் ஏற்பட்ட முனைப்பான முட்டுக்கட்டை. இதனைச் சீர்செய்ய இலங்கையன் பனங்காமம் வந்துவிட்டான் என்று அறிந்ததும் பதறிப் போனேன். பாலி நாச்சியாரைப் பனங்காமத் தளபதி வெற்றிக்கடம்பனுக்குக் கட்டிக் கொடுக்க அரசியார் திட்டமிட்டிருப்பதைக் காதலர் உரையாடல் தெளிவுபடுத்தி விட்டது. மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப்போட எனக்கு இவ்வளவும் போதாதா? இனிமேல் பாலி - கடம்பன் திருமணத்தை நிறைவேற்றி முடித்தால்தான் என்னால் துயில் கொள்ள முடியும். இப்பொழுதே அரசியைச் சந்தித்துப் பேசப்போகிறேன். முள்ளியவளையில் நான் போட்ட தூபம் தொடரவேண்டியதையும் செய்தாக வேண்டும்"

"தங்களின் திட்டம் நிறைவேற இந்த ஏழை ஒற்றனின் நல்வாழ்த்துக்கள்! மறையவரே, நாங்கள் இருவரும் எவ்வளவோ நாள் பழகிவிட்டோம். இருவரின் நோக்கமும் இலட்சியமும் ஒன்று தான்! பனங்காமத்தை டச்சுக் கொம்பனிக்காரருக்குக் காட்டிக் கொடுப்பதே பணியாக இரவும் பகலும் அயராது உழைக்கின்றேன் நான். வன்னிமைகளின் ஒற்றுமையைச் சிதைத்துப் பலவீனப் படுத்தி அவர்களை ஒல்லாந்தர்களுக்கு அடிபணிய வைப்பதுதான் தங்களின் அபிலாசை. இலட்சியத்தால் ஒன்றுபட்ட நாம் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள வேண்டாமா? இது நாள்வரை நானும் தங்களைப் பற்றி விசாரிக்கவில்லை; தாங்களும் அறிமுகப்படுத்தவில்லை. பால் நிலவு பொழியும் இந்த ரம்மியமான வேளையிலே நீலத்திரை எறியும் வவுனிக்குளத்தில் படகிலே உல்லாசமாக இருக்கும்போது நான் தங்களின் வரலாற்றை அறியலாமா?"

"வரலாறா? ஹூக்... ஹூக்... ஹூக்... ஹூா..." வாய்விட்டுச் சிரித்துக் கொண்ட கிரம விட்டன் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிச் சிறு சுராம்பையும் சேர்த்து வாயிலிட்டு அதக்கிக் கொண்டே கூறத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கென்னப்பா வரலாறு? நான் என்ன பாராளும் பார்த்திபனா? நூல் தரித்த ஏழை அந்தணன்! வரலாறு எழுதுபவர்கள் மக்களின் வரலாற்றையா எழுதுகிறார்கள். தாம் ஆளும் பிரதேசம் சிறிதாக இருக்கிறது என எண்ணி அதனை விஸ்தரிக்க அயல்நாடுகளை ஆக்கிரமித்துப் போர்க்களத்தில் பிணக்குவியலையும் குருதிச் சேற்றையும் கண்டு ஆனந்தம் கொள்கின்ற மன்னர்களைப் பற்றித்தானே எழுதுகின்றார்கள்! போர்க்களத்தில் உயிரைத் திரணமாக மதித்து அஞ்சாது போர்புரிந்து மரணத்தைத் தழுவிக் கொண்ட சாதாரண போர்வீரர்களைப் பற்றியோ, வாழ்விலே ஒளி குன்றி ஆதரவற்றவர்களாகத் தவிக்கும் வீரர்களின் மனைவி பிள்ளைகளைப் பற்றியோ, மன்னரின் பொக்கிஷத்தை நிரப்ப நிலத்திலே வியர்வை சிந்தி அல்லும் பகலும் கழனிகளிலும் காடுகளிலும் பாடுபடும் குடிமக்களைப் பற்றியோ வரலாறு எழுதுகின்றார்களா? நாட்டின் நன்மைக்காக, மன்னரின் மேன்மைக்காக மகத்தான யாகஞ் செய்த எந்த அந்தணனைப் பற்றியாவது வரலாறு கூறுகின்றதா? அப்படி இருக்க எனது வரலாற்றை அறிய ஏன் துடிக்கின்றாய்?"

"கிரம விட்டரே, தங்களைப் பஞ்ச கச்சமும், முப்புரி நூலும் அணிந்த சாதாரண மறைபோதும் பிராமணராக மட்டும் நான் கருதவில்லை. சாம்ராஜ்யங்களை உருவாக்கியும், சிதைத்தும் மன்னாதி மன்னர்களையெல்லாம் தம் மதிவலையில் சிக்கவைத்து வேடிக்கை பார்த்த சந்திரகுப்த மௌரியரின் மதி மந்திரியான சாணக்கியனின் வாரிசு என்றுதான் எண்ணுகின்றேன்"

வெற்றிலைப் பையிலிருந்து சில்லுப்போன்ற விதை ஒன்றை எடுத்துச் சிறுகத்தியால் சீவி அதில் ஒரு துண்டை வாயிற் போட்டுக் கொண்டே கிரம விட்டர் மீண்டும் கடகடவென்று சிரித்துக் கொண்டே கூறத் தொடங்கினார்.

"காஞ்சிரங்காயா, என்னைப் பற்றிச் சரியாகத்தான் கணக்குப் போட்டிருக்கிறாய். நீ ஆவலுடன் கேட்பதால் என்னைப் பற்றி உனக்குச் சொல்லியே ஆகவேண்டியிருக்கிறது. ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாண அரசை ஆண்ட வரலாற்றை நான் உனக்கு விரித்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை. பரராசசேகரன், செகராசசேகரன் என்று மாறிமாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியணை நாமங்களைச் சூட்டிக்கொண்டு நீதிநெறி தவறாது கோலோச்சினார்களே! அவர்களை ஆரியர்கள் என்றா நினைக்கிறாய். அல்லது அவர்கள் சுத்தமான அரச பரம்பரையில் வந்தவர்களா? அவர்கள் வெறும் போர்வீரர்கள். அவர்களுக்கென வரலாற்றைப் படைத்து மூக்கும் விழியும் வைத்து அவர்களை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆக்கியவர்கள் எனது மூதாதையர்கள்தான்! எதற்காக அப்படி ஆக்கினார்கள்? அவர்களில் பிராமணக் கலப்பு இருக்கிறது" கூதல் காற்று விட்டரை நடுநடுங்கச் செய்தது. வெண்ணிற மேலாடையால் போர்த்துக்கொண்டு தொடர்ந்து கூறினார்.

"அந்தப்புர விவகாரங்களை அலசுவது அசிங்கம். அந்தணன் ஒருவனுக்கும் சத்திரியப் பெண் ஒருத்திக்கும் பிறந்தவன்தான் சிங்கையாரியன். இவன் மரபினர்தான் ஆரியச் சக்கரவர்த்திகள். இராமேஸ்வரப் பிராமணன் ஒருவனின் விந்திலிருந்து தோன்றியவர்கள் இவர்கள். இந்த மரபில் வந்த யாழ்ப்பாண அரசின் இறுதி மன்னன் சங்கிலியனின் ஆஸ்தான ஆலோசகராய் இருந்தவர் என் தந்தை. யாழ்ப்பாண அரசைப் போர்த்துக்கீசர் கைப்பற்றியபோது என்தந்தையார், தாயாரையும் என்னையும் கூட்டிக்கொண்டு வன்னிக்கு வந்துவிட்டார். கரிக்கட்டு மூலை வன்னிமையில் நாங்கள் வசித்தோம். அப்போது எனக்குப் பன்னிரண்டு வயதுகூட ஆகவில்லை. என்றாலும் வேதங்களையும் ஆகமங்களையும் துறைபோகக் கற்றுவிட்டேன். என் தந்தையாரின் கெம்பீரமான தோற்றம், அணிஞ்சிற்பழுப் புழுப்போன்ற சந்தனமேனி, முகவசீகரம், வேதாகமங்களில் அவருக்கிருந்த ஆழமான ஞானம் ~ இவை எல்லாம் என்மனத்திரையில் உறுதியாகப் பதிந்திருக்கின்றன. வேதத்தை அட்சர சுத்தமாக, சுருதிபேதமின்றி உச்சரிக்கக் கூடியவர்கள் இந்த உலகிலேயே இருவர் மட்டுந்தான் இருந்தார்களாம். ஒருவர் பரதகண்டத்தில் இருந்தார். மற்றையவர் என் தந்தையார்தான் என்றால் நம்புவது கடினமாகத்தான் இருக்கும்! காஞ்சிரங்காயா, என்ன கதைகேட்கிறாயா? கண்ணயர்கிறாயா?"

"மறை வேதியரே, தாங்கள் கூறுவதை ஒன்றும் விடாமல் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்; தொடருங்கள் கதையை' திடுக்கிட்டு விழித்த காஞ்சிரங்காயன் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெறுமனே வேதத்தை அட்சர சுத்தமாக ஓதத் தெரிந்தால் மட்டும் அரசவையில் மதியூக மந்திரி ஆகிவிட முடியும் என்று நினைக்கிறாயா? அதுதான் இல்லை, என் தந்தையார் கௌடில்யரின் அர்த்தசாத்திரத்தையும் திருட்குறள் பொருட்பாலில் உள்ள அரசியல், அமைச்சியல், அங்கவியல் அனைத்திலுமுள்ள ஐம்பத்தேழு அதிகாரங்களையும் ஐயம் திரிபறக் கற்றிருந்தார். சின்ன வயதிலேயே இவற்றை யெல்லாம் ஊட்டி வளர்த்தவர் என் தந்தை. குலவித்தை கல்லாமல் பாதிபெறும் என்று நீயறிவாய். மீதியையும் என் விடாமுயற்சியால் ஈட்டிக்கொண்டேன். இவற்றிக்கு மேலாக சைவ சித்தாந்தத்திலும் நான் பாண்டித்தியம் அடைந்திருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நான் கற்ற கல்வியையும் பெற்ற அனுபவங்களையும் வன்னிமைகளைப் பிரித்து அழித்துவிட எப்படியெல்லாம் பயன்படுத்துகிறேன் என்று இப்பொழுது கூறிவிட மாட்டேன். காலம் வரும்போது நீயே அறிந்து கொள்வாய். இப்போதைக்கு இவ்வளவும் போதும்" வாயெல்லாம் சிவக்க வெற்றிலையைக் குதப்பிக கொண்டு அவிழ்ந்து கொண்டிருக்கும் பஞ்ச கச்சத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டார் கிரம விட்டர்.

"கிரம விட்டரே, தங்கள் பெருமையை இதுவரை காலமும் சரியாகப் புரியாது விட்டேன். நான் இதுவரை வைத்த மதிப்பிலும் பார்க்கப் பன்மடங்கு தாங்கள் உயர்ந்து நிற்கிறீர்கள். ஒரு விஷயந்தான் எனக்குப் புரியவில்லை!" அடைத்த குரலில் சொன்னான் காஞ்சிரங்காயன்.

"தயங்காதே கேள்"

"நான் யாழ்ப்பாணத்திலுள்ள ஒல்லாந்த நிர்வாகத்தின் ஒற்றன் என்பதை தாங்கள் அறிவீர்கள். பெயர் கணநாதன் என்பது தெரிந்தும் காஞ்சிரங்காயன் என்று ஏன் என்னை அழைக்கிறீர்கள் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை" தன் குரலைத் தாழ்த்திக் கொண்டே கேட்டான் அவன்.

"இதையா கேட்கிறாய்? நீ ஏதோ பெரிய ராஜ்ய விஷயத்தைக் கேட்கப் போகிறாயாக்கும் என்று நினைத்தேன். நீ எனக்கு மிகவும் பிரிய மானவன். இதோ இருக்கிறதே இதைப்போல" எனக்கூறி தாம்பூலப் பையி லிருந்து அர்த்த சந்திரன் வடிவிலான விதையொன்றை எடுத்துக்காட்டி 'இது என்ன விதையென்று தெரியுமா? இதன் உண்மையான வடிவம் தேர்ச்சில்லுப்போல் வட்டமாக இருக்கும். இதனைச் சீவிச் சீவி வாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டதால் இந்த வடிவிற்கு வந்துவிட்டது"

மலங்க மலங்க விழிக்கும் காஞ்சிரங்காயனின் நாசிக்கு நேரே அந்த விதையை கொண்டுபோய் 'இப்பொழுதேனும் தெரிகிறதா?' எனக் கேட்டார் தணிவான தொனியில்.

"தெரிகிறது. இது காஞ்சிரம் விதையல்லவா?"

"அதுதான்; காஞ்சிரங்காயைக் கண்டிருக்கிறாயா? அதனைப் போல அழகான பொருள் இந்த அகிலத்தில் எதுவும் இல்லை. இதனை நான் மிகவும் விரும்புகிறேன்! 'கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கு முற்பவ வினையால் கொடிய நச்சுத் தன்மை வாய்ந்த காஞ்சிரங்காய் கிடைத்ததாம்' என இதன் மகிமை அறியாத புலவன் ஒருவன் பாடியிருக்கிறான். முற்பவ வினையால் காஞ்சிரங்காயும் விதையும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. இதனால் எனக்கு நன்மையேயன்றித் தீமையில்லை. நான் மிகவிரும்பும் பொருளைக் கொண்டுதான் 'காஞ்சிரங்காயன்' என்று உன்னை அழைக்கின்றேன். பெற்றோர் தம் அருமைக் குழந்தைகளை 'முத்தே, முழுநிலவே, பவளமே, கண்ணே, கற்கண்டே' என தமக்குப் பிரியமான பொருட்களைக் கொண்டு அழைப்பதில்லையா? அதேபோலத்தான்!"

"காஞ்சிரம் விதையை சிறிது சிறிதாக என் குருதியில் சேர்த்து வருகிறேன் ஏன் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு மௌனமானார் கிரம விட்டர்.

இரண்டொரு விநாடி நிசப்தம் நிலவியது. காஞ்சிரங்காயனின் முகத்தை ஊடுருவி நோக்கினார். அவன் வதனம் இதற்கான விளக்கத்தை யாசித்து நின்றது. கிரம விட்டர் தொடர்ந்தார்.

"நான் காடு மேடென்றில்லாமல் இரவு பகலென்றில்லாமல் திரிகிறேன் அல்லவா? பேய்கள் கூடக் கண்ணுறங்கும் நேரத்திலே நான் கண்விழித்துக் கருமம் பார்ப்பவன்! பிரதான பாதைகளை விடக் கல்லும் முள்ளும் புதரும் நிறைந்த குறுக்குப் பாதைகளைத் தேர்ந்தெடுப்பவன். ஒருநாள் இரவு மேற்பற்று வன்னிமைக்குச் சென்றிருந்தேன். ஏன் என்று கேட்கிறாயா? எல்லாம் பிரித்தாளுவதற்குதான். மேற்பற்றுக் கந்தையினார் வன்னியனாரை என் வலையில் சிக்கவைத்துவிட்டேன். ஒல்லாந்தருக்குத் திறை செலுத்துவதுதான் சிறந்த வழி. தவறின் ஒல்லாந்த நிர்வாகம் வன்னியர் களைப் பூண்டோடு அழித்துவிடும் என்று அச்சுறுத்தினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலைவன்னியனுடன் சேர்வது முட்டாள்தனம் என்று ஆலோசனை கூறினேன். வன்னியன் என் ஆலோசனைகளை ஏற்றுவிட்டான். அன்றிரவு பேராற்றங்கரையிலுள்ள ஒரு ஏழைக் குடியானவன் வீட்டில் தங்க வேண்டி ஏற்பட்டது. என்னை நாகசர்ப்பம் தீண்டிவிட்டது. குடியானவன் அலறித் துடித்துவிட்டான். நான் பயப்படவோ, பதறவோ இல்லை. பாம்பைச் சற்றுக் கவனிக்குமாறு கூறினேன். என்னைத் தீண்டிய அரை நாழிகையில் நாகம் மயங்கிவிட்டது. பின்னர் சிறிது துடித்தது; தலையைத் தூக்க முனைந்தது; ஆனால் முடியவில்லை. சற்று நேரத்தில் அந்த நாகசர்ப்பம் உயிர் நீத்து விட்டது. என் உடலில் எதுவித மாற்றமுமில்லை. இப்பொழுது தெறிகிறதா? காஞ்சிரம் விதையின் மகத்துவத்தை" என்று கூறிப் புன்னகைத்தார் விட்டர்.

அவரின் சுவாரசியமான கதையைக் கேட்ட காஞ்சிரங்காயன் வியப்பும் அச்சமும் அடைந்தான்.

இன்னும் துருவித் துருவி அவர் வரலாற்றின் இருண்ட இரகசியங்களை அறிய காஞ்சிரங்காயன் ஆசைப்பட்டாலும் அவன் கேட்கத் துணியவில்லை. 'இப்போதைக்கு இவ்வளவு போதும்' என்று அவர் சொன்ன பின்பும் அவர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் பல தகவல்களைக் கூறிவிட்டார். அவருடைய சுழலும் விழிகள் சிவந்திருப்பதைப் பார்க்க அவனுக்கு அச்சமாகவே இருந்தது. இதனால் மேலே எதுவும் கேட்கவில்லை.

இரவு மூன்றாஞ் சாமத்தை அடைந்துவிட்டது. சீதளக்காற்று அவர்களை இடைவிடாது வருடிக்கொண்டிருந்தது. காஞ்சிரங்காயன் பலத்தொரு கொட்டாவி விட்டான்.

"காஞ்சிரங்காயா, பசிக்கிறதா? நித்திரை வருகிறதா? என்னுடன் சேர்ந்தால் ஊண் ஏது? உறக்கம் ஏது?" என்று கம்மிய குரலில் கூறினார் விட்டர்.

படகை வவுனிக்குளக் கலிங்குக்கு கிட்டக் கொண்டு சென்றவர் துள்ளிக் குதித்து நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டிலே தாவி ஏறினார். காஞ்சிரங்காயனும் அவரைத் தொடர்ந்தான்.

ஒற்றையடிப் பாதைவழியாக இருவரும் சென்றனர். கரியை அரைத்துப் பூசிவிட்டது போன்ற கும்மிருட்டு. திக்குத் தெரியாமல் காஞ்சிரங்காயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்து நிற்கத் தன்னைப் பின் தொடருமாறு விட்டர் கட்டளையிட்டார். பற்றையும் முள்ளும் நிறைந்த அந்தப் பாதையிலே அவர் மிகவும் லாவகமாகச் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கும் போது காஞ்சிரங்காய னுக்கு வியப்பாகவே இருந்தது.

"இன்னும் ஒரு காததூரம் தான் இருக்கிறது; பொழுது விடியுமுன் பனங்காமத்திலுள்ள எனது இல்லத்தை அடைந்துவிடலாம்; பயப்படாமல் என் பின்னால் வா" கணீர் என்றொலித்தது விட்டரின் குரல். அங்கு நிலவிய அமைதியைக் குலைப்பதுபோல் இருந்தது அவரின் பேச்சு. தூரத்திலே கோட்டான் கூவும் ஒலி இருளைப் பிளந்து இருவரின் செவிகளை யும் துளைத்தது. விட்டரின் குரலைக் கேட்டதாலோ என்னவோ நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த நாய்கள் ஊளையிடத் தொடங்கின. ஒருவாறு பிரதான வீதியை அடைந்த இருவரும் சிறிதுதூரம் நடந்தபின் இடதுபுறம் உள்ள குச்சொழுங்கையில் இறங்கினர். அந்தணர் வீதியில் அமைந்திருக்கும் விட்டரின் வீட்டை அடைந்துவிட்டனர். ஒண்டிக்கட்டை யான விட்டரின் இல்லம் தூசு படிந்திருந்ததை அந்த இருளில் கூட உணரக் கூடியதாக இருந்தது. இருவரும் நிம்மதியாகத் தூங்கினர்.

❑ ❑ ❑ ❑ ❑ ❑ ❑

அடிவானமாகிய அன்னை காலைக் கதிரவனைப் பிரசவித்துவிட்டு குருதி சோர நின்றாள். அவசரம் அவசரமாக கிரம விட்டர் எழுந்து கொண்டார்.

காஞ்சிரங்காயன் எழுந்திருக்கவேயில்லை. விட்டர் எழுப்பியபோதும் அவன் எழவில்லை.

'மடையன், இப்படித் தூங்குபவன் எப்படித்தான் ஒற்றன் வேலை பார்க்கிறானோ தெரியிவில்லை' அலுத்துக் கொண்டார் அவர். 'எப்படியும் இவனை யாழ்ப்பாணம் அனுப்பியே ஆக வேண்டும். ஒல்லாந்தக் கொமாண் டரும் நிர்வாகிகளும் ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்கள்' என்று எண்ணிய வாறே அவன் தோள் பட்டையைப் பிடித்து உலுப்பி எழுப்பினார்.

அந்தக் கணத்தில் 'டக் டக்' என்று யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. பதறிப்போன கிரம விட்டர், காஞ்சிரங்காயனைப் பிடித்து இழுத்துப் பின்கதவால் கொல்லைப்புறம் அனுப்பிவிட்டுக் கதவைத் திறந்தார். கயிலை வன்னியனாரின் தூதுவன் வாயிலில் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

# ஆலயமும் அரசமாளிகையும்

கயிலை வன்னியனார், அரசமாளிகையிலே அமைச்சர்கள், பிரதானிகள், தளபதிகள், அந்தணர் புடைசூழ வீற்றிருந்தார். கிரமவிட்டர் அவ்விடம் போனதும் அவரை மரியாதையாக வரவேற்றார் மன்னர். தென்னிந்திய சிற்பிகள் இருபத்தொரு பேர் அங்கிருந்தனர்.

பிரதம சிற்பியார் இரண்டு படங்களை விரித்து அங்கிருந்தோருக்கு விளக்கினார். அதில் ஒன்று வவுனிக்குளம் சிவபுரநாதர் ஆலய மாதிரிப்படம்; மற்றையது புதிதாக நிர்மாணிக்கப்பட விருக்கும் அரசமாளிகையின் படம்.

கிரமவிட்டர் ஆலயத்தின் மாதிரிப்படத்தை மிகநுட்பமாக ஆராய்ந்தார். ஆலயத்தின் கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், வித்தியா மண்டபம் ஆகியவற்றின் அளவுப் பிரமாணங்களை ஆகம விதிப்படி கணித்து வேண்டிய திருத்தங்களைச் செய்தார். தூபிகள், இராஜ கோபுரம், மணிக் கோபுரம் ஆகியவற்றின் அமைப்பினைப் பரிசீலனை செய்தார். இவைகளில் அமைக்க வேண்டிய உருவச் சிலைகளைப் பற்றி ஆலோசனை கூறினார். ஆகம விதிப்படி மணிக்கோபுரம் இன்னும் இரண்டரைச் சாண் உயர்ந்திருக்க வேண்டும். பரிவார மூர்த்திகளாகப் பிள்ளையார், மகாவிஷ்ணு, வைரவர், கண்ணகை அம்மன், சண்டேஸ்வரர் நவக்கிரகங்கள் ஆகியவை அமைய வேண்டிய இடங்களைச் சுட்டிக் காட்டினார். யாகசாலை, வாகனசாலை, மடைப்பளி பற்றி எடுத்துக் கூறினார். ஆலயம் மூன்று வீதிகளை உடையதாக இருத்தல் வேண்டும். தேரோடும் வீதி விசாலமாக இருக்க வேண்டும் என ஆலோசனை வழங்கினார். கிரமவிட்டரின் அதிகப் பிரசங்கித்தனம் தலைமைச் சிற்பியாருக்கு எரிச்சலை ஊட்டியிருக்க வேண்டும். சிற்பியார் சற்று முகஞ்சுழிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

தலைமைச் சிற்பியைப் பார்த்து 'வன்னிநாட்டின் கீர்த்தியும், வலியும், வளமும் பொருந்தியது பனங்காம வன்னிமை. இதன் வேந்தன் கயிலை வன்னிய பூபதியின் புகழைப் பல மடங்கு உயர்த்துவதாக இந்த ஆலயம் திகழ வேண்டும். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலை நிர்மாணித்ததன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜராஜ சோழனின் புகழும் கீர்த்தியும் அகில உலகமும் பரவியது போல சிவபுரநாதர் ஆலயம் கயிலை வன்னியனாரின் புகழைத் திக்கெட்டும் பறை சாற்ற வேண்டும்' எனக் கிரமவிட்டர் குட்டிப்பிரசங்கம் ஒன்றைச் செய்து முடித்தார்.

அரண்மனையின் மாதிரிப்படம் விரிவாக ஆராயப்பட்டது. கயிலை வன்னியனாரும், நல்லமாப்பாணரும், வன்னிச்சியாரும் இதனைப் பார்வையிட்டனர். மனோரம்மியமான நந்தவனத்தின் மத்தியிலே அழகிய ஓவியங்கள் செதுக்கிய கருங்காலித் தீராந்தி கொண்டு மாளிகையின் சுவர்களும் கூரையும் அமையும் விதத்தில் அரண்மனை அமைக்கப்பட விருந்தது. பனங்காம வன்னிபத்தின் சின்னமாகிய வில் தூண்களில் செதுக்கப்படவிருந்தது. நாற்சார வடிவில் மூன்றடுக்கு மாடிகள் கொண்ட அரண்மனையின் தோற்றத்தை மாதிரிப்படம் காட்டியது. மன்னரின் சபா மண்டபம், சயனக் கிருகம், விருந்தினர் அறை, அந்தப்புரம், அட்டிற்சாலை முதலியன சரியாக அமைந்துள்ளனவா என வன்னியனார் பரிசீலனை செய்தார். அந்தப்புரத்தின் அமைப்பை அரசியார் ஆராய்ந்து அபிப்பிராயம் தெரிவித்தார்.

இறுதியாக கிரம விட்டர் சொன்னார்;

"ஒரு நாட்டு மன்னனை, மக்களும் வேற்றுநாட்டு மன்னர்களும் எதைக் கொண்டு மதிக்கிறார்கள்? மன்னரின் வீரம், ஆட்சிச்சிறப்பு, கொடை என்பவற்றைக் கொண்டு மதிக்கின்றனர் என்று கூறுவீர்கள்.இவை எல்லாம் உண்மைதான்! இவற்றுடன் மன்னரின் அரண்மனையின் கெம்பீரமான அமைப்பு, அதன் கலையழகு, தூய்மை, வசீகரத் தோற்றம் ஆகியவை மன்னரின் மதிப்பை உயர்த்தும் சின்னங்களாகும்.

வன்னி நாட்டிலே ஏழு வன்னிமைகள் இருக்கின்றன. இவையனைத்திற்கும் தலைமையாகத் திகழ்வது பனங்காமம். ஏனைய வன்னிமைகள் இரண்டு அல்லது மூன்று யானைகள் திறையாகச் செலுத்தவேண்டும் என்றும் பனங்காமம் மட்டும் 16 யானைகள் திறையாகச் செலுத்தவேண்டும் என்றும் டச்சு நிர்வாகம் கணக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு வைத்திருப்பதிலிருந்து பனங்காமத்தின் வளமும் மேன்மையும் தெரிகின்றதல்லவா?" என்று பேசி முடித்தார் விட்டர்.

"அரண்மனையைக் கோயில் என்றும் அழைப்பர்; அழகான வேலைப்பாடுகளும் ஓவியங்களும் அமைந்த கோபுரத்தை உடையதாக அது இருக்கவேண்டும்" என நல்லமாப்பாணர் கூறினார்.

"அரண்மனையின் அமைப்பைப் பற்றி இன்னும் ஒருமுறை கூடி ஆராய்வோம். முதலில் ஆலய வேலைகள் தொடங்கவேண்டும்" எனச் சிற்பிகளைப் பார்த்த வன்னியனார் கூறினார்.

மன்னர் சைகைசெய்ய சிற்பிகள் அவ்விடத்தை விட்டகன்றனர்.

கயிலை வன்னியன் அங்கிருந்த அவையோரை நோக்கினான். மந்திரிகள், பிரதானிகள், தளபதிகள், ஒற்றர்கள் ஆகியோரைப் பார்த்துக் கூறினான்.

"அவையோர்களே, இன்று இலங்கையில் சுதந்திர இறைமையுடன் திகழும் ஒரு தமிழ் இராச்சியம் உண்டென்றால் அது பனங்காமம்தான்! இதன் சுதந்திரத்தைக் கட்டிக்காப்பது எம் அனைவரினதும் புனிதமான கடமையாகும். இதற்காகப் பனங்காமத்தின் நிலைமைகளை மட்டுமன்றி ஏனைய வன்னிமைகளின் நிலைமைகளையும், கண்டி இராச்சியத்தின் நிலைமைகளையும் நன்கு அறிய வேண்டும். கோட்டையையும், யாழ்ப்பாணத்தையும் அடிமைப்படுத்தியிருக்கும் ஒல்லாந்தரின் பலங்களையும், பலவீனங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பனங்காம வன்னிமை தனியொரு இராச்சியமாக வலுவுடன், வளமுடன், தன்மானத்துடன் சுதந்திர பூமியாக இயங்க வேண்டுமானால் நீங்கள் அனைவருமே உங்கள் பங்களிப்பைச் செய்ய வேண்டும். மக்கள் அனைவரும் பசியும் பிணியும் நீங்கி வசியும், வளமும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்கின்றார்களா? என்பதை அவ்வப்போது அறிந்து கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் கண்காணிப்பதற்காக நூற்றுக் கணக்கான ஒற்றர்கள் இருக்கிறார்கள். ஒற்றர்களைக் கண்காணிக்கும் ஒற்றர்களுக்கு ஒற்றர்களும் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மேற்பார்வை செய்ய எனது மாமனார் நல்ல மாப்பாணரை நியமித்துள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே, தாங்கள் ஒப்படைத்த பணியை செவ்வனவே செய்து வருகிறேன். நாட்டுமக்களின் குறைபாடுகளை அவ்வப்போது தெரிவிப்பேன். மக்கள் அரசில் விசுவாசமுடையவர்களாக இருக்கிறார்கள். அந்தணர்கள் முறையாக வேதம் ஓதுகின்றார்கள். நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறது. காடுபடு திரவியங்களான யானைத் தந்தம், சாயவேர், மரம் ஆகியவற்றுக்குக் குறைவேயில்லை.

"கம்மாளர் நாட்டின் பாதுகாப்பிற்கேற்ப ஆயுதங்களையும், விவசாய உபகரணங்கயையும் செய்கிறார்கள். ஏனைய வன்னிமைகளுடனான உறவு திருப்தி கரமாக இருக்கிறது. செட்டிகுள வன்னியன் மட்டும் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்துகிறான். கண்டியரசன் தன் கொள்கையில் உறுதியாக இருக்கிறான்; எமக்கு வேண்டிய நேரத்தில் படையுதவியளிக்க ஆயத்தமாக இருக்கிறான்" என நல்ல மாப்பாணர் கூறினார்.

இவற்றையெல்லாம் செவிமடுத்த கயிலை வன்னியனார், "வன்னிமைகளை ஒற்றுமைப்படுத்துவதுடன் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்தாமல் தடுப்பதே எமது முதல் வேலையாக இருக்க வேண்டும்" என உறுதியாகக் கூறினார்.

கிரம விட்டர் இவற்றையெல்லாம் ஓலையொன்றில் குறிப்பெடுத்துக் கொண்டார்.

"அரசே, வன்னி நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றவும், அதன் வலிமைக்கும் வளத்திற்கும் உத்தரவாதம் அளிக்கவும் இந்த மறையோதும் அந்தணன் தன்னாலான பணிகளை ஆற்றுவான் என்பது உறுதி" கணீரென்ற குரலில் கூறினார் கிரம விட்டர்.

இப்படியெல்லாம் ஆலோசனைகள் நடந்து கொண்டிருக்கும் போது அவசரம் அவசரமாக தூதுவன் ஒருவன் வந்து கூறினான்;

"மகாராஜா, யாரோ ஒல்லாந்தர் தூதுவனாம்; வாயிலில் நிற்கிறான்; தங்களைக் காண வேண்டுமாம்"

"உள்ளே வரச்சொல்" கயிலை வன்னியனார் மிக நிதானமாகக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

# மஹா நவமி

அரச மாளிகையின் வித்தியா மண்டபம் கலையழகுடனும், தெய்வீக மணத்துடனும் பூரணமாக பொலிந்து விளங்கியது. மஹா நவமியைச் சித்திரிக்கும் ஓவியங்கள் மண்டபச் சுவர்களிலே அழகொளி பரப்பிக் கொண்டிருந்தன. மண்டபத்தின் எல்லாத் திசைகளிலும் பலவிதமான அலங்கார தீபங்கள், சித்திரங்கள் அழகிற்கு ஒளியூட்டிக் கொண்டிருந்தன. ஆங்காங்கு பெரியவும் சிறியவுமாகிய பூரண கும்பங்கள், குத்து விளக்குகள், அகல் விளக்குகள், பாவை விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன.

ஏட்டுப்பிரதிகளின் குவியல்கள், வாள், வேல், ஈட்டி, கேடயம், கவசம் என்பவற்றின் குவியல்கள், பலவிதமான அழகுப் பாவைகள் ஆங்காங்கு தென்பட்டன.

புலவர்கள் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தனர். தாரகை நடுவே தண்மதியென தீபங்குடிப் புலவர் திகழ்ந்தார். அவரது சடா முடியும், நரைத்த குறுந்தாடியும், ஒளி வீசும் தீட்சண்யமான நயனங்களும் அவரின் தேஜசை மேலும் பிரகாசிக்கச் செய்தன.

ஏவலர்கள் அங்கும் இங்குமாக ஓடி மண்டப ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தனர். தீபங்குடியார் மண்டப வாயிலை அடிக்கடி நோக்கிய வண்ணம் இருந்தார். வெற்றித் திருநாளாம் விஜயதசமியும், நவராத்திரி விழாவும் வன்னிமையிலே ஆண்டுதோறும் நடைபெறுபவை தான்.

சிவனுக்கு ஒரு இராத்திரி என்றால் சக்திக்கு ஒன்பது இராத்திரிகள். ஒன்பது தினங்களும் வன்னிப் பிரதேசம் எங்கும் கோலாகாலமாகக் கொண்டாடப்பட்டது.

கலைஞர்கள், வீரர்கள், புலவர்கள் அனைவருமே தத்தம் திறமைகளைப் பகிரங்கமாக எடுத்துக் காட்டும் திருநாள்கள் இவை. வீதியெங்கும் மற்போர், ஈட்டியெறியும் போட்டி, சொற்போர், சிலம்படி, காவடி, கரகம், கூத்து, கும்மி, கோலாட்டம் என்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன.

பல்வேறு வன்னிமைகளிலிருந்தும் பரிசுப் பொருள்கள் வந்து குவிந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தமிழ் மக்கள் சக்தி மீது பெரும் பக்தியுள்ளவர்கள். தேவி வழிபாட்டில் ஆர்வமும், ஈடுபாடும் உள்ளவர்கள். விஜயநகரப் பேரரசு ஆந்திர மாநிலத்தில் ஆட்சிபுரிந்த காலத்தில் நவராத்திரி விழா முன்னைய காலத்தைவிடப் பிரபலமடைந்தது. பாரத நாட்டின் பலபகுதிகளிலும் இந்துக்கள் அல்லாத பிறநாட்டினரின் பண்பாட்டுச் சக்திகளால் இந்துக்கள் அல்லல்உற்றபோது, இந்துப் பண்பாட்டைக் காக்கவும், வளர்க்கவும் விஜயநகர மன்னர்கள் முயன்றார்கள். இதனால் மஹா நவமி என்னும் நவராத்திரி விழாவை தேசிய விழாவாகக் கொண்டாடினார்கள். முடிமன்னர் தொடக்கம் குடிமக்கள் வரையும் எல்லோரும் கலந்து கொள்ளும் பெருவிழாவாக இது விளங்கியது. சிற்றரசுகள் மஹா நவமியின்போது விஜய நகர மன்னருக்குத் திறைப் பொருள்களைச் செலுத்தினர். இப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. நவராத்திரி காலத்தில் கொலு வைக்கும் முறை இதிலிருந்தே ஆரம்பமாகியது எனலாம்.

இப்பெருவிழாவை வீர உணர்ச்சியை ஊட்டும் கருவியாகவும், இந்து மதப்பிரிவுகளை இணைத்து ஒற்றுமையை வளர்க்கும் வழியாகவும், கலைகளைப் போற்றும் சாதனமாகவும், அரசர்களுக்கும் குடிமக்களுக்குமிடையே நல்லுறவைப் பிணைக்கும் சங்கிலியாகவும், மாற்றாரின் ஆதிக்க வெறியை ஒடுக்கும் மக்கள் சக்தியின் வெளிப்பாடாகவும் கருதினார்கள்' தீபங்குடிப்புலவர் மஹாநவமி விழாவின் சிறப்பையும், மேன்மையையும், உன்னத நோக்கங்களையும் தனக்குள்ளே சிந்தித்துப் பார்த்தார்.

'ஆம். கயிலை வன்னியனாரின் இராச்சியத்திலேயும் ஏறக்குறைய இத்தகைய நோக்கத்துடனேயே இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அரசர், வன்னிமைகள் அனைத்துக்கும் சக்கரவர்த்தியாக இல்லாத விடத்தும் ஏனைய வன்னியர்கள் ஏராளமான பரிசுப் பொருள்களைக் கொண்டுவந்து குவித்திருக்கின்றார்கள். இவைகள் சிநேக பூர்வம், நல்லெண்ணம் என்பவற்றின் அடிப்படையில் பனங்காம வன்னிமைக்குச் செய்யும் உபசாரங்கள்' தீபங்குடியார் இப்படியெல்லாம் சிந்தனையில் மூழ்கியிருந்த சமயம் வாயிலிலே 'வன்னி மன்னர் வாழ்க! அடங்காப்பற்றின் அதிபதி வாழ்க! இளவரசர் காசியனார் வாழ்க!' என்னும் ஒலிகள் சப்திக்க கயிலை வன்னியனார், வன்னிச்சியார், இளவரசர் காசியனார் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரி பிரதானிகள், வன்னியர்கள் புடைசூழ மண்டபத்தை நோக்கி வந்தனர். அவர்களைத் தொடர்ந்து மக்கள் மண்டபத்தினுள் நுழைந்தனர்.

தீபங்குடியாரும் ஏனைய புலவர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

"இந்த மஹா நவமி விழாவிலே விசேட நிகழ்ச்சியாக இளவரசர் காசியனாருக்கு அட்சாரப்பியாசம் தொடங்கும் நிகழ்ச்சி நடைபெறும்" எனத் தீபங்குடியார் பிரகடனம் செய்தார்.

இளவரசருக்குரிய அத்தனை சிறப்புக்களும் பொலிய நான்கு வயது நிரம்பிய காசியனார், வன்னிச்சியார் அருகே காணப்பட்டார்.

தீபங்குடிப் புலவருக்கருகிலே வன்னிச்சியாரின் மடியிலே அந்தப் பால்மணம் மாறாத பாலகன் அமர்ந்திருந்து அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தான்.

காசியனார் கயிலை வன்னியனாருக்குப் பேரன் முறையானவர். இளவரசரைப் பார்த்தவுடனேயே வன்னியனாரின் கண்கள் கலங்கிவிட்டன. வன்னியனாருக்கு ஒரு தமக்கை இருந்தார். தமக்கையின் மகனுக்கு மைந்தனாகப் பிறந்தவன்தான் காசியன். பனங்காமத்தில் ஏற்பட்ட கொள்ளைநோய் அவரின் சகோதரியையும் மகனையும் கொள்ளைகொண்டு விட்டது. பதியை இழந்த துயரத்தினால் காசியனாரின் தாயும் மரணத்தை அரவணைத்து விட்டார்.

காசியனார் அனாதையாகி விடாமல் பாட்டியாரின் மடியிலே வளர்ந்துவந்தார்.

கயிலை வன்னியனாருக்கு ஒரேயொருமகள் இருந்தாள். ஆண்மகவு இல்லாத குறையைப் பேரன் காசியனார் நிவர்த்தி செய்தார் என்றுதான் கூறவேண்டும். அரசமாளிகையிலே குறுகுறு நடந்து விளையாடிய இளவரசர் அரசகுடும்பத்தின் செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தார். இளவரசி குஞ்சிநாச்சியார் – கயிலைவன்னியனாரின் மகள் – இந்தக் குழந்தையிலே உயிரையே வைத்திருந்தார். கயிலை வன்னியனாரதும் வன்னிச்சியாரினதும் கண்ணின் மணிபோல காசியனார் வளர்ந்து வந்தார். இந்தக் குழந்தையின் அட்சர அப்பியாச ஆங்குரார்ப்பணத்திலே வன்னி நாட்டுப் பிரஜைகள் அத்தனை பேருமே அகமகிழ்வெய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம்பாளத்தில் பரப்பப்பட்ட வெண்சம்பா அரிசியிலே குழந்தையின் கையைப் பிடித்துத் தீபங்குடிப் புலவர் 'அ' எனும் முதல் எழுத்தை எழுதுவித்தார். ஏட்டிலே இருந்த எழுத்துக்களைச் சொல்லிக் கொடுத்தார். குழந்தை தன் மழலை மொழியிலே சொல்லியது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவரின் குறளைச் சொல்லிக் கொடுக்க குழந்தை மிக அநாயாசமாகவே கணீரென்ற குரலில் அதனைத் திருப்பிச் சொன்னது.

போட்டிகளில் வெற்றியீட்டிய அனைவர்க்கும் வன்னியனார் தன் கையாலே பரிசில்கள் வழங்கினார்.

மேற்பற்று வன்னிமையைச் சேர்ந்த புலவர் புவியழகன் சொற்போருக்கான பரிசினைத் தட்டிக் கொண்டார்.

சமயக் கணக்கர் தத்துவ விசாரப் போட்டியிலே கிரம விட்டரின் சீடரான இராஜாராமனார் வெற்றியீட்டினார்.

கும்மியிலும் கூத்திலும் தம் திறமையைக் காட்டிய கயற்கண்ணி நாச்சியாருக்கு முதற்பரிசு கிடைத்தது.

அரசரும், அமைச்சர்களும், குடிமக்களும் களிகூரக் கோலாகலமாக நடைபெற்ற விழா இனிதே நிறைவேறிய மகிழ்ச்சியுடன் கூட்டம் கலைந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

# இளமை நினைவுகள்

ஒல்லாந்த தூதுவன் கொண்டுவந்த ஓலையை வாசித்தவுடனேயே கயிலை வன்னியனாரது கண் சிவந்தது, மீசை துடித்தது. தூதுவன், அக்கினிக் கோளம் போன்ற அரசரின் நயனத்தைக் கண்ணுற்றதும் கலங்கிப் போனான். வன்னியனாரின் முகத்தைப் பார்த்தவுடனேயே ஓலையில் எழுதியிருக்கும் வாசகம் என்னவாயிருக்கும் என்பதை அமைச்சர் ஊகித்துக் கொண்டார். அரசரின் காதில் அமைச்சர் ஏதோ குசுகுசுத்தார். அரசரின் சீற்றம் சற்றுத் தணிந்தது போலிருந்தது.

'தூதரே, ஓலை கிடைத்தது என்று உன் துரையிடம் சொல்' என்று கூறியபின் தளபதியைப் பார்த்து 'இவனை பனங்காமத்தின் எல்லைவரை பத்திரமாக அழைத்துச் செல், எமது படைவீரரின் கண்ணில் இவன் தென்பட்டால் இவன் உயிருக்கே ஆபத்து' என்று ஏளனம் தொனிக்கக் கூறினார்.

அரச சபையைவிட்டு நீங்கியபின்னும் அவர் வதனத்தில் கோபத்தின் சாயல் முற்றாக அகன்றுவிடவில்லை.

"கறுவா வாங்கவந்த கயவர்களுக்கு கப்பம் கட்ட வேண்டுமாம்! யானையாம், மரமாம், மான்தோலாம்! திறை செலுத்தும் முறை எப்படி வந்தது? வன்னி மன்னர்கள் யார் யாருக்கெல்லாம் திறை செலுத்தினார்கள்? எந்தக் காலத்திலாவது வன்னி நாடு அடிமையாக இருந்ததா?" இப்படியெல்லாம் மன்னரின் உள்ளத்திலே எழுந்த வினாக்கள் அநாதையாக நின்றன.

அப்பொழுதுதான் அங்குவந்த தீபங்குடிப் பலவரைக் கேட்டார். "தமிழ் மண்ணிலே கால் வைத்த போர்த்துக் கேயரும், ஒல்லாந்தரும் வன்னி மன்னர் தமக்கு திறை செலுத்த வேண்டுமென்கிறார்களே. போர்த்துக் கேயர் திறை கேட்டுக்கேட்டு களைத்து நாட்டைவிட்டே ஓடிவிட்டனர். இப்பொழுது டச்சு நிர்வாகம் கப்பம் கேட்கிறது. இவர்களுக்கு இந்த அதிகாரத்தை யார் வழங்கினார்கள்? அடங்காப்பற்றின் வரலாற்றிலே வன்னி நாடு அடிமையாக இருந்ததா?"

தீபங்குடியார் காற்றிலே அலையும் தாடியை வருடிக் கொண்டே கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசே, தங்களுக்குத் தெரியாத வரலாறா? ஏதோ தாங்கள் கேட்பதால் எனக்குத் தெரிந்த சில விசயங்களைக் கூறுகின்றேன். அடங்காப்பற்று என அழைக்கப்படும் இவ்வன்னிப் பிரதேசம் இலங்கையை ஆண்ட வலசிங்க மன்னனால் அறுபது வாட்படை வன்னியருக்கு பரிசாக அளிக்கப்பட்டது. தனது மகள் சமதூதி தேவியை வலசிங்கனுக்குத் திருமணஞ் செய்ய அனுப்பியபோது வன்னியர்கள் மதுரையிலிருந்து வந்தனர். இவர்கள் தமக்குள் ஏழு தலைவர்களைத் தெரிந்து கொண்டனர். ஏழு தலைவர்களும் வன்னியின் ஏழு பிரிவுகளை ஆட்சி செலுத்தினர். யாழ்ப்பாணத்திலே மிகப்பிந்திய காலத்தில் தோன்றிய யாழ்ப்பாண அரசின் ஆரியச் சக்கரவர்த்திகள் வன்னி நாடும் தம்மேலாண்மைக்கு உட்பட்ட பிரதேசம் எனப் பிரகடனப் படுத்தினர். எனினும் வன்னிமைகளை என்றுமே அடிப்படுத்த முடியவில்லை."

"அப்படியென்றால் வன்னிநாடு எப்போதுமே சுதந்திர நாடாக இருந்தது என்று சொல்கிறீர்கள்!"

"ஆம்அரசே சுதந்திர நாடாகத் தான் இருந்தது. ஆனால்........."

"என்ன? ஆனால் என்கிறீர்?"

"ஆரியச் சக்கரவர்த்திகள் வலிமையுடையவர்களாகத் திகழ்ந்த காலத்தில், வன்னி அரசர்கள் திறை செலுத்தவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறனர். இரண்டொரு வன்னியனார்மார் சில திறைப் பொருட்களை அனுப்பியதும் உண்டு"

"அப்படியா? பனங்காம வன்னியனார்கள் எப்போதாவது திறை செலுத்தினார்களா?"

"பெரும்பாலும் திறை செலுத்தவில்லை... ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி புரிந்த காலத்தில் யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றினர். பின்னர் ஒல்லாந்தர் கைக்கு ஆட்சியதிகாரம் மாறியது"

"ஏன் இவர்கள் திறை கேட்கிறார்கள்?"

"வன்னிப் பிரதேசமும் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதி என அவர்கள் கருதுகின்றார்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேட்ட கயிலை வன்னியனார் கடகடவெனச் சிரித்தார். பின்னர் புலவரைப் பார்த்து "தீபங்குடியாரே, இவர்கள் எப்பொழுதாவது படையெடுத்துவந்து வன்னியர்களுடன் யுத்தம் செய்து நாட்டைக் கைப்பற்றினார்களா?"

"இல்லவே இல்லை; எனினும் மறைமுகமாக வன்னிப்பிரதேச ஆட்சியிலே தலையிட்டுக் கொண்டு வந்தார்கள். தங்களுக்குச் சாதகமான அரசர்களை வன்னிமைகளில் நியமிப்பதற்காகப் பல சூழ்ச்சிகள் செய்தார்கள்" புலவர் மிகவும் ஆறுதலாகக் கூறினார்.

"ஆமாம் நான் இளவரசனாக இருக்கும்போது எனக்கெதிராக சதிவலைகள் பின்னப்பட்டிருந்ததை யான் அறிவேன்" இளமைக்கால நினைவுகள் மனத்திரையில் பளிச்சிட்டன.

பனங்காம வன்னிமையின் வீதிகள் இன்றுவரை என்றும் கண்டிராத அல்லோல கல்லோலமாக இருந்தன. இராஜமாளிகை இருந்த பகுதியை நோக்கி வன்னிமக்கள் திரள் திரளாகப் போய்க் கொண்டிருந்தனர். ஆண்களும், பெண்களும், வயோதிபர்களும், வாலிபர்களும், சிறுவர்களும், சிறுமியரும் கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தனர்.

"இது ஏதோ சதிதான்!" எனச் சிலர் வாய்விட்டுப் புலம்பினர்.

"பறங்கியரின் சூழ்ச்சியிது" என்றனர் வயோதிபரிற் சிலர்.

வாலிபர்களில் சிலர் கையிலே பெரிய தடிகளுடன் காணப்பட்டனர். அவர்கள் அவ்வப்போது ஒருவர் மற்றவரின் தடியில் மோதி ஓசையெழுப்பினர்.

'அந்தக் கிழவரின் தலையில் இடிவிழட்டும்' என்று பெண்கள் ஆரவாரித்தனர்.

திரள் திரளாக வந்துகொண்டிருந்த மக்கள் கூட்டம் அரசமாளிகையின் நிலா முற்றத்தில் வந்து சேர்ந்து விட்டது. கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது.

"கைமத்தர் ஒழிக! கைமத்தர் ஒழிக!!" அங்கிருந்த பெருங் கூட்டம் ஆர்ப்பரித்தது.

"இளவரசர் எங்கே? அவருக்கு என்ன நடந்தது? இதனை அறியாமல் நாங்கள் இந்த இடத்தைவிட்டுப் போக மாட்டோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் குரல் வானைப் பிளந்தது.

பூபால வன்னியனார் பனங்காமத்தை ஆண்ட காலம், பட்டத்திற்குரிய இளவரசராக கயிலையர் நியமிக்கப்பட்டிருந்தார். அரசமாளிகையில் மாத்திரமின்றி வன்னிமை முழுவதிலுமே உள்ள அனைவரும் இளவரசர் மீது உயிரையே வைத்திருந்தனர்.

அந்தி சாயும் நேரம்; பாலியாற்றங் கரையில் குதிரையில் வந்த இளவரசரை யாரோ பல்லக்கில் கடத்திச் சென்று விட்டனர்.

புதர் ஒன்றில் பதுங்கிக் கொண்டிருந்த கூட்டம் காவலுக்கு வந்த வீரர்களை அடித்து வீழ்த்திவிட்டு கண்மூடி விழிக்குமுன் கடத்தல் நாடகம் நடைபெற்று விட்டது.

அரசருக்குச் செய்தி எட்டி; அங்கிருந்து வீரர்கள் தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்டது பயனற்றுப் போய் விட்டது. எங்கு தேடியும் இளவரசரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பாவிகள் இந்நேரம் இளவரசரின் உயிருக்கு ஊறு செய்திருப்பார்களோ?' பூபால வன்னியனார் நெஞ்சம் பதறியது.

கயிலையருக்கு அப்போது இருபது வயதுதானிருக்கும். விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதைப் போல அரசருக்கு வேண்டிய ஆயுதப் பயிற்சியின் போது அவர் காட்டிய திறமை அனைவரையும் திகைக்க வைத்தது. எதிர் காலத்தில் வன்னிப் பிரதேசம் அனைத்திற்கும் சக்கரவர்த்தியாக வரக்கூடிய அறிவாற்றல் மிகுந்தவராக அப்போது இளவரசர் இருந்தார்.

கைமத்தர் என்னும் வயோதிபர் ஒருவர் அரச மாளிகையிலே இருந்தார். இவரும் வன்னியர் பரம்பரையைச் சேர்ந்தவர். நெடுங் காலமாகப் பனங்காம அரச மாளிகையில் இருந்தார். மன்னரின் அன்புக்கும் மாரியாதைக்கும் உரியவராக இவர் இருந்திருக்கிறார். பூபால வன்னியனாரின் விசுவாசத்திற்குரியவராக இவர் இருந்தபடியால் அரச மாளிகையில் இவருக்கு நிரம்பிய செல்வாக்கிருந்தது.

இளவரசர் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் இவரை அரச மாளிகையில் காணவில்லை. இதனாலேயே இவர்மீது மக்களுக்கு சந்தேகம் எழ ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசரைக் கடத்திச் சென்ற பல்லக்கின் அருகிலேயே இவரும் இருந்திருக்கிறார் என்னும் செய்தியும் எட்டியுள்ளது.

திரண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து அமைச்சர் கூறினார்.

"இளவரசரைத் தேட அட்டதிக்கும் ஆட்களை அனுப்பியுள்ளோம். அவருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. உங்கள் அனைவரதும் அன்புக்குரிய இளவரசரை எப்படியும் மீட்கமுடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தயை கூர்ந்து இவ்விடத்தை விட்டு அகலுங்கள்".

அமைச்சரின் வார்த்தைகளால் சற்று ஆறுதல் அடைந்த வன்னிப் பிரஜைகள் அவ்விடத்தை விட்டகன்றனர்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

# மர்மக் குகையில் ...

காலும் கையும் கட்டப்பட்ட நிலையில் இளவரசர் பல்லக்கில் கடத்திச் செல்லப்பட்ட போது அவர் எந்தவித பதட்டமும் அடைய வில்லை. பல்லக்கில் இருந்து குதித்துத் தப்பிவிடலாம் என்று அவர் எண்ணினார். அது ஒன்றும் சாத்தியமற்ற வேலையல்ல. காவல்புரிந்து வந்த அத்தனை பேருடனும் சண்டை புரிந்து அவர்களை வீழ்த்திவிட அவரால் முடியும். அந்த எண்ணத்தை அவர் கைவிட ஒரு காரணம் இருந்தது. பல்லக்கில் என்றுமில்லாத நறுமணம் ஒன்று வீசியது. அந்த நறுமணம் அவருக்குத் தூக்கத்தைக் கொடுத்தது. இப்போதைக் குச் சுகமான நித்திரையை சுகிக்கவே அவர் விரும்பினார். "இவர்கள் என்னதான் செய்யப்போகிறார்களோ பார்ப்போமே" என்று சிந்தனை யில் ஆழ்ந்த போதே அவரை நித்திராதேவி அரவணைத்து விட்டாள்.

உறக்கத்திலிருந்து விழித்தபோது மீண்டும் "பல்லக்கிலிருந்து குதித்துவிடவேண்டும்" என்று எண்ணினார். அப்பொழுதுதான் அவர் பல்லக்கில் இல்லை என்பதும் வேறோர் இடத்தில் பஞ்சணை மெத்தை யில் படுத்திருப்பதையும் உணர்ந்தார். படுத்திருந்த இடத்தில் நாலா பக்கமும் நயனங்களைச் சுழலவிட்டார். நல்ல வசதிகள் செய்யப்பட்ட குகையொன்றில் தான் இருப்பதை உணர்ந்தார்.

"நான் எங்கே இருக்கிறேன்" அவர் குரல் கிணற்றிலிருந்து வருவது போல் இருந்தது.

"இளவரசே தாங்கள் இருக்கவேண்டிய இடத்தில்தான் இருக்கிறீர்கள்" குயிலிசையை வென்ற குரலில் பதில் வந்தது.

தலையை உயர்த்தி குரல்வந்த திசையை நோக்கினார் இளவரசர். என்றுமே காணாத அழகு சுந்தரி ஒருத்தி அவர் முன்னிலையில் நின்றாள். இளவரசர் அவளின் மயக்கும் அழகில் கிறங்கிப் போனார்.

"பெண்ணே, நீ யார்? என்னை ஏன் இங்கு கொண்டு வந்தீர்கள்?"

"நானா கொண்டு வந்தேன்? கொண்டுவந்தவர்களைக் கேட்பதுதானே!" கலகலவென்று சிரித்துக்கொண்டே கூறினாள். அவளின் பேச்சு வீணையின் நாதம் போன்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்றால் நீ?"

"இளவரசருக்குப் பணிவிடை செய்வதற்காக நியமிக்கப்பட்டவள். உங்களுக்கு என்ன வேண்டும்? அறுசுவை உண்டியா? அமுதபானமா? பாலும் பழமுமா? தயங்காமல் கேளுங்கள்"

"நான் கேளாமல் விட்டால் என்னைப் பட்டினி போட்டுவிடுவாய் போலிருக்கிறது" சிரித்துக் கொண்டு கூறினார் இளவரசர்.

"பனங்காமத்தின் உயிராக விளங்கும் பட்டத்து இளவரசரைப் பட்டினி போட்டால் கிடைக்கக் கூடிய தண்டனைக்குப் பயந்தாவது நான் உங்களுக்கு உணவளித்தேயாக வேண்டும்!"

"தண்டனையா? யாருன்னைத் தண்டிக்க இருக்கிறார்கள்!" நாலு பக்கமும் திரும்பிப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் கேட்டார்.

"ஒரு முரட்டுக் கிழவர்தான்! அவர் கட்டளையை உதாசீனம் செய்தால் என் தலையையே சீவி விடுவார்!"

"அந்தக் கிழவர் எங்கே? நான் அவரைப் பார்க்கலாமா?" அவசரமாக இருந்தது அவர் கேள்வி.

"எதற்கும் தாங்கள் அவசரப்படக் கூடாது. நீங்கள் அவரைப் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்று கூறிய அவள் தங்கக் கிண்ணம் ஒன்றிலே பால் கொண்டுவந்து கொடுத்தாள்.

"நன்றாகக் களைத்து விட்டீர்கள்; இதனை அருந்துங்கள்" என்றாள்.

"என்ன இது? பால்தானா அல்லது மயக்க மருந்தா?" இளவரசரின் கேள்வியில் சந்தேகம் இழையோடியது.

"பல்லக்கிலே தங்களை மயக்கித்தான் கொண்டு வந்தார்களாம்; இனிமேல் அத்தகைய தேவை இல்லை" மயக்கும் மொழியிலே அந்தச் சுந்தரி செப்பினாள்

இளவரசர் பாலைச் சுவைத்துப் பருகினார். சுந்தரியின் கை பட்டதாலோ என்னவோ அமிர்தம் போலிருந்தது.

"பெண்ணே, என்னை ஏன் இங்கு கொண்டுவந்தார் அந்தக் கிழவர் என்றாவது சொல்லமாட்டாயா?"

"அந்தரங்கமான விடயங்களையெல்லாம் பணிப் பெண்ணாகிய எனக்குச் சொல்வாரா? ஒன்று மட்டும் கூறுவேன். இந்த இடத்திலிருந்து தப்பிப் போக நினைத்தால் பதினாறு திசைகளிலிருந்தும் தங்கள் உடலில் வேல்கள் பாயும். உங்களைச் சுற்றி வேல்களுடன் நிற்கும் இவர்களைப் பாருங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசர், எல்லாத் திசைகளிலும் வேலுடன் நிற்கும் குண்டர்களைப் பார்த்தார். அவர்களது முகங்கள் மிகவும் பயங்கரமாக இருந்தன.

"பெண்ணே, இவர்களை வீழ்த்திவிட்டு தப்பியோட என்னால் முடியாது என்று சொல்கிறாயா?"

"நீங்கள் உயிரோடு இருக்க ஆசைப்படாவிட்டால் முயன்று பார்க்கலாம்!" இனிமையான குரலில் எச்சரிக்கை செய்தாள் அந்தச் சுந்தரவதனி.

"இவனோடு உனக்கென்ன பேச்சு? நீ இவன் பேச்சினால் மயங்கி விடுவாய் போலிருக்கிறது" இடியோசை போன்றிருந்த குரலுக்குரிய அந்த முரட்டுக் கிழவரைப் பார்த்தார் இளவரசர்.

அடர்த்தியான புதர் போன்ற நரைத்த மீசையும், நரையோடிய நீண்ட தாடியுமுடைய கிழவர் வயதிற்கு மீறிய கெம்பீரம் உடையவராகக் காணப்பட்டார். கொடுமையின் மொத்த உருவமாக இருந்த அவரை நோக்கி இளவரசர் கேட்டார்:

"பெரியவரே, நீங்கள் யார்? என்னை இங்கு ஏன் கொண்டு வந்தீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்?"

வாய்விட்டு அகோரமான சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு சற்றுத் தணிந்த குரலில், "நான் யார் என்று கேட்கிறாயா? எனது பெயரைச் சொன்னால் மட்டும் நீ அறிந்து கொள்ளமாட்டாய். நீ செய்த தவறு பனங்காம அரச குலத்தில் பிறந்ததுதான்! இதை மட்டும் அறிந்து கொள்"

"என்னை என்ன செய்யப் போகிறீர்கள்? அதையாவத சொல்லுங்களேன்"

"புலியின் குகையில் சிக்கிய புள்ளிமான் குட்டியின் வினா இது. உன்னுடைய அன்னை எத்தனையோ கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கிறாள். உனக்குச் சோதிட சாத்திரத்தில் நம்பிக்கை உண்டா?" உறுமினார் கிழவர்.

இளவரசர் பதில் ஏதும் அளிக்கத் தவறியதைக் கண்ட கிழவர், "சோதிட சாத்திரம் என்றால் என்ன என்று உனக்குத் தெரியாது. உன் தாயார் சோதிடத்தில் நம்பிக்கை உடையவர். உனது பிறந்த நட்சத்திரத்தையும் லக்கினத்தையும் வைத்துக் கொண்டு நீ ஏதோ மூவுலகத்தையும் ஆளப் பிறந்தவன் என்று கருதுகிறார்!" அவர் குரலில் ஏளனம் தொனித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதில் என்ன தவறு?" உறுதியாக இருந்தது இளவரசரின் வினா.

"இளவரசரே, கிரக நிலைகளையே மாற்றி அமைக்கக் கூடிய மந்திர சக்தி படைத்தவன் நான்! ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்தால் போதும்; அட்டமத்திலே புகுந்து சனி பகவான் ஆட்சி செய்வான்"

"உங்கள் மந்திரத்தைப் பிரயோகிப்பது தானே!"

"கேலியா செய்கிறாய்? சந்தர்ப்பம் வரும்போது செய்து காட்டுகிறேன். அதுவரை பொறுமையாக இரு"

"நாதா, தங்களுக்குப் பசிக்கவில்லையா? வாருங்கள் உணவருந்த" கிள்ளை மொழியில் அந்தச் சுந்தரி அழைக்கவே கிழவர், இளவரசரைப் பாதாதி கேசமாய்ப் பார்த்துவிட்டுப் அகன்றார்.

"என்ன? இவள் இந்தக் கிழவரின் மனைவியா? பணிப்பெண் என்றல்லவா கூறினாள். இந்தக் குகையில் எல்லாம் மர்மமாகவே இருக்கின்றன. நான் அரச குலத்தில் பிறந்த குற்றத்திற்காகவே என்னை இங்கு கொண்டு வந்ததாகக் கிழவர் கூறினார். அப்படியானால் பனங் காமத்து அதிபதியாக நான் வரக்கூடாது என்பதற்காகப் பின்னப்பட்ட சதி வலையில் சிக்கி விட்டேன். பொறுத்திருந்து பார்ப்போம். இந்த மோகன சுந்தரி என் பக்கத்தில் இருக்கும் பட்சத்தில் எத்தனை யுகமானாலும் இங்கு தங்கலாம் போலிருக்கிறது" என்று பலவாறு சிந்தித்தார் இளவரசர்.

தன்னைச் சுற்றி நிற்கும் குண்டர்களை ஒரு முறை நோட்டம் விட்டார் அவர். குண்டர்களில் சற்று மெலிவான குண்டன் அவரைப் பார்த்து மென்னகை புரிந்தான்.

"இவனை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே? விசாரித்தால் ஏனைய குண்டர்கள் சந்தேகிப்பார்கள்" என்று நினைத்தவரின் அருகிலே சுந்தரி வந்து நின்றாள். அவள் மலர்க் கரத்திலே அன்னமும் அறுசுவைக் கறிகளும் அடங்கிய வெள்ளித் தட்டு இருந்தது. இளவரசரின் முன்னி லையில் வைத்துவிட்டு, அன்பொழுகும் வார்த்தையில் "இளவரசே, உண வருந்துங்கள்" என்றாள்.

இந்தக் காதகனின் குகையிலே எதுவும் அருந்தக் கூடாது என்று முன்பு நினைத்த இளவரசர் அவளின் கனிமொழியில் மயங்கியதால் ஆவலுடன் உணவருந்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மயக்கு மொழியாளின் வார்த்தையிலே கட்டுண்டு தன் வைராக்கியத்தையே விட்டுவிட்டதை நினைத்துச் சிறிது வெட்கம் கூட வந்தது.

"பெண்ணே, அதோ நிற்கும் குண்டன் பனங்காமத்தைச் சேர்ந்தவன் அல்லவா?"

மோகனசுந்தரி நாலாபுறமும் பார்த்து கிழவர் இல்லையென்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு இளவரசரின் முகத்துக்குக் கிட்டத் தன் செம்பவள உதடுகளை விரித்து, "ஆம், உங்கள் ஊகம் சரியானது தான்" என்று மெல்லச் சொன்னாள். அவள் உதடுகள் மட்டுமன்றி கயல் விழிகளும் ஆயிரம் கதை பேசின.

"இவனுக்கு அதிகம் இடங் கொடாதே, இரண்டு நாளேனும் இவனைப் பட்டினி போடவேண்டும். ஜாக்கிரதை..." என உரப்பிய கிழவர் தொங்கிக் கிடந்த சடையை எடுத்து உச்சியிலே முடிந்து கொண்டு அவ்விடத்தை விட்டகன்றார்.

கிழவர் சென்றதும் மோகன சுந்தரியின் முகத்தில் கோடி சூரியப் பிரகாசம் தோன்றியது. "இவள் என்னை மயக்கி விட்டாள்; அதே போல இவளும் என்னில் மயங்கி விட்டாள்; இதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று நினைத்துக் கொண்டார் இளவரசர்.

"இளவரசே, தாங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம்!" என்றாள் சுந்தரி.

"பெண்ணே, நீ மிகவும் அன்பாகப் பேசிகின்றாய். அதோடு அபாண்டமான பொய்யும் பேசுகின்றாய்"

"பொய்யா? நானா?"

"பணிப்பெண் என்று அறிமுகப்படுத்தினாய்; ஆனால் நீ அந்த வயோதிபரின் மனைவியாக இருக்கிறாயே!"

"உங்களுக்குப் பணிப்பெண்; கிழவருக்கு மனைவி"

"ஒரு சிறைக்கைதியாகிய எனக்கு அவர் தம் மனைவியைப் பணிப்பெண்ணாக விடுவாரா? இது என்ன கதை? எல்லாம் ஒரே மர்மமாக இருக்கிறது பெண்ணே, உனது பெயரையாவது எனக்குச் சொல்லக் கூடாதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களே ஒரு பெயரைச் சூட்டுவது தானே!"

"மோகன சுந்தரி! எப்படிப் பெயர் உனக்குப் பிடித்ததா?"

"நீங்கள் எப்படி அழைத்தாலும் எனக்குப் பிடிக்கும்"

"சுந்தரி, இந்தக் கிழவரை நீ விரும்பித் தான் திருமணம் செய்தாயா!"

"சந்தேகமேன்?"

"எதற்காக என்று சொல்ல மாட்டாயா?"

"எல்லாம் ஒரு காரணத்திற்காகத்தான்!"

"அதைத்தான் கேட்கிறேன்..."

"இளவரசே, நான் உண்மை பேசுவதென்று சபதம் செய்திருக் கிறேன். தங்கள் வினாவுக்கு விடையிறுப்பதாக இருந்தால் பொய் பேச வேண்டி ஏற்படலாம்; அத்தகைய நிலைக்கு என்னைத் தள்ளி விடாதீர்கள்" இளவரசர் அவளின் பேச்சுச் சாதுரியத்தை வியந்து கொண்டு அவளது கண்களை உற்று நோக்கினார்.

அவளின் கண்கள் எதையெதையோ பேசின.

"இந்தப் பொல்லாத குண்டர்கள் இருக்கிறார்களே! இவர்கள் நான், உங்களுடன் அன்புடன் நடந்து கொள்வதைக் கவனிக்கிறார்கள். கிழவர் அறிந்தால்...!"

சிறிது சிறிதாக தூறத் தொடங்கிய மழை பேரிசைச்சலுடன் பொழியத் தொடங்கியது. போதாததற்குப் புயற் காற்றும் வீசத் தொடங் கியது. அந்த அடர்த்தியான காட்டிலேயும் இரண்டொரு மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

"இளவரசே சற்று உட்புறமாகச் செல்லுங்கள் மழையில் நனைந்தீர் களானால் சளி சுரம் ஏற்படும்" என்று கூறியபடியே அவரின் படுக்கை யைச் சற்று உள்ளே தள்ளி அவரது தோள்களைப் பிடித்து அதனில் படுக்க வைத்தாள்.

சுந்தரியின் ஸ்பரிசம் மின்னலைப் போல் அவரைத் தாக்கியது. உடலெங்கும் பரவிய இன்ப லாகிரியின் போதையினால் அவர் கிறங்கிப் போனார்.

✦✦✦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

# சோதிட சாஸ்திரம்

பனங்காமத்து அரசி கோதை நாச்சியார் படுத்த படுக்கையாகி விட்டார். அரசரின் உடல் நிலையும் குன்றியிருந்தது. வன்னிமை முழுவதும் ஒரே சோகம். மக்கள் வீதியோரங்களில் கூடிக்கூடி இளவரசரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

அட்ட திக்குகள் எங்கும் தேடியும் இளவரசரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

"பனங்காமத்து அரசுக்குப் பேரிடி விழுந்துவிட்டது. இதையெல்லாம் சீதன நாச்சியாரும் சிவபுரநாதரும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்" பிராமண வாலிபன் ஒருவன் கூறினான்.

"இது எல்லாம் தெய்வ சோதனைதான். இளவரசருக்கு இப்படியொரு நிலை வருமென்று யார் கண்டார்கள்?" இப்படிக் கூறினார் கைமத்தர்.

"பாவம் அரசியார்தான் ஆறாத் துயரத்தில் மூழ்கியிருக்கின்றார். இளவரசரின் எதிர்காலம் பற்றி எப்படி எப்படியெல்லாம் கற்பனை பண்ணியிருந்தார்" பிராமணர் கூறினார்.

கிரமவிட்டர் என்ற பிராமணர் முள்ளியவளை வன்னிமையிலிருந்து வந்தவர். இவரின் மூதாதையர் யாழ்ப்பாண இராச்சியத்தைச் சேர்ந்தவர்களாம்.

"இளவரசரின் கையிலே சங்கு சக்கர ரேகைகள் இருக்கின்றன. இதன்படி இவர் ஒரு மாமன்னர் ஆகவேண்டியவர். இவரது உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாதென்றே கருதுகின்றேன்" கைமத்தர் நிதானமாக கூறினார்.

"கைமத்தரே, தாங்கள் பனங்காமத்திலே நெடுங்காலம் வாழ்ந்து வருகின்றீர்கள். நானோ இளைஞன்; இங்கு சிறிது காலமே வாழ்கிறேன். என்னைவிட தாங்களே இங்குள்ள நிலைமைகளை நன்கு அறிவீர்கள். இளவரசரைக் கடத்தியவர்களின் நோக்கம் என்னவாக இருக்கும் என்று தங்களால் ஊகிக்க முடிகிறதா?" தயங்கித் தயங்கிக் கேட்டார் பிராமண வாலிபர்.

இதற்கு நேரடியாக கைமத்தர் பதில் அளிக்கவில்லை.

"அந்தணரே, யாழ்ப்பாணத்தைப் போர்த்துக் கேயர் என்னும் பறங்கியர் கைப்பற்றியது உங்களுக்குத் தெரியுமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம், தெரியும்"

"அவர்கள் வன்னி ராச்சியங்களையும் தம் காலடியில் கொண்டு வரத்திட்டம் வகுத்திருக்கிறார்கள்."

"வன்னி நாட்டின் மீது படையெடுத்துவந்து வன்னியர்களை வென்று அடிமைப் படுத்தலாம் தானே!"

"போர்த்துக்கேய நிர்வாகத்திற்கு வன்னியைப் பிடித்தாலும் அதனை நிர்வகிக்க முடியாது. அந்த அளவிற்கு அவர்களிடம் நிர்வாக ஆட்பலம் இல்லை. வன்னி அரசர்களிடம் திறை பெறுவதன் மூலம் மேலாணை செலுத்தவே விரும்புகின்றனர்"

"இதற்கும் இளவரசரைக் கடத்தியதற்கும் ஏதும் தொடர்பு இருக்கிறதா?"

"நிச்சயமாக; ஏனைய வன்னியர்கள் இடைக்கிடையேனும் சில யானைகளைத் திறையாகச் செலுத்துகின்றனர். பனங்காமத்திலிருந்து மட்டும் யானையல்ல, ஒரு பூனைகூட திறையாகச் செலுத்தவில்லை. இளவரசர் கயிலையர் பதவிக்கு வந்தால் பனங்காமத்தில் மட்டுமல்ல ஏனைய வன்னிமைகளிலும் கப்பம் பெற முடியாது போகலாம் என அஞ்சுகின்றனர்."

"பெரியவரே, இளவரசரின் உயிருக்கு ஏதாவது ஆபத்து...?"

"அப்படியெல்லாம் நடைபெறாது. இளவரசர் திறைகொடுத்து ஆட்சிபுரியச் சம்மதித்துச் சாசனம் ஒன்றில் கையொப்பமிட்டால் அவர் பனங்காமத்து அதிபதியாகலாம். இல்லையேல்..."

"இளவரசருக்கு என்ன நடக்கும்...?"

"நிரந்தர சிறைக் கைதியாக இருக்க வேண்டியதுதான்!"

"கைமத்தரே, நான் கூறுகின்றேன் என்று என்மீது கோபங் கொள்ள வேண்டாம். இளவரசரின் கடத்தலுக்கும் தங்களுக்கும் தொடர்பு இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்களே! இது உண்மையா?"

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் கைமத்தர் திடுக்கிடவில்லை. "உண்மை எது? பொய் எது? என்பதற்குக் காலம் தான் பதில் சொல்லும். இப்போதைக்கு ஒன்று மட்டும் கூறுகின்றேன். இளவரசரை உயிருடன் மீட்பதற்கு என்னாலான பணிகளைச் செய்துவருகிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைமத்தரே, இளசரசரின் நிலைபற்றி மறைமுகமாகவேனும் சில தகவல்கள் தந்தமைக்கு எனது மனப்பூர்வமான நன்றி. பறங்கியரின் கருத்துக்கு இளவரசர் இசைந்துவிட்டால் எல்லாம் சுபமாகவே முடியும்; அதுவே எனது பிரார்த்தனை"

"கிரம விட்டரே, இளவரசர் விஷயத்தில் தாங்கள் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறீர்கள் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை"

"நான் முள்ளியவளை வன்னிமையிலிருந்து வந்து பனங்காமத்தில் சில காலம் வாழ்கிறேன். இப்பொழுது பனங்காமம் முழுவதுமே இளவரசர் மீது அக்கறை கொண்டிருக்கிறது. அதுபோலவே நானும் அக்கறை கொள்கிறேன்; அவ்வளவுதான்!"

இப்படிக் கிரமவிட்டர் கூறிக் கொண்டிருக்கும் போதே மக்கள் கூட்டம் ஒன்று ஆரவாரம் செய்துகொண்டே வந்தது. அவர்கள் கைகளிலே நீண்ட தடிகள் இருந்தன.

"அதோ, அதோ அவர்தான் கைமத்தர்... இளவரசரைக் கடத்தியவர்... பிடியுங்கள், அவரைப் பிடியுங்கள்..."

ஒலி கேட்டதுதான் தாமதம். விறுக்கென அங்கு நின்ற குதிரையில் ஏறி மாயமாய் மறைந்தார் கைமத்தர்.

எவ்வளவு துரத்தியும் அவரைப் பிடிக்க முடியவில்லை. குதிரை சென்ற திசையை மட்டும் பார்க்க முடிந்தது. குதிரை மேற்பற்று வன்னிமையை நோக்கிப் போய்க்கொண்டிருந்ததை பின்னால் துரத்திச் சென்ற இளைஞன் ஒருவன் கண்டான்.

***

அரச மாளிகையிலே அமைச்சர்கள், பிரதானிகள், புலவர்கள் கூடி இளவரசரின் நிலை என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்தனர். சோதிடர்களும், நிமித்திகர்களும் அழைக்கப்பட்டனர். இளவரசரின் சாதகப்படி அவருக்குத் தற்போது ஒரு கண்டம் இருப்பதாகவும் இதிலிருந்து எப்படியும் உயிர்தப்பிப் பிழைக்கக் கூடியதாக கிரக நிலைகள் இருக்கின்றன என்றும், பனங்காமத்தை ஆளும் கீர்த்தியும் வலிமையும் வாய்ந்தவராக இளவரசர் விளங்குவார் என்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காமத்திற்குக் கிழக்கே வனத்தின் மத்தியிலேயுள்ள ஒரு தனி இடத்தில் இளவரசர் இருக்கிறார் என்றும், ஒரு யௌவனப் பெண்ணும் வாலிபனும் அவரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் நிமித்திகர் கூறினார்.

"யௌவன மங்கையும், வாலிபனும் யாராயிருக்கலாம்?" அமைச்சர் கேட்டார்.

"அதனை நிச்சயமாக சொல்ல முடியாது. இன்னும் ஒரு மாத காலத்தில் இளவரசரை விடுவிக்கும் முயற்சி வெற்றியளிக்கலாம்" என்றார் நிமித்திகர்.

"இளவரசருடன் சிலம்பன் என்னும் சிலம்படி வீரனும் சென்றதாகக் கூறினார்களே. இப்பொழுது சிலம்பன் எங்கே?" அமைச்சர் பிரதானிகளைப் பார்த்துக் கேட்டார்.

"சிலம்பனும் மாயமாக மறைந்து விட்டான்; ஒரு வேளை இளவரசரைக் கடத்தியவர்கள் அவனையும் சிறைப்படுத்தியிருக்கலாம்" பிரதானி ஒருவர் விடையிறுத்தார்.

சிலம்பன் வாட்டசாட்டமான உடற்கட்டு வாய்ந்தவன். மற்போரிலும் சீனடி சிலம்படியிலும் விற்பன்னன். பனங்காம வன்னிமையின் விசுவாசமான தொண்டன். பல சமயங்களில் ஒற்றனாகவும், தூதுவனாகவும், சேவகனாகவும் பணியாற்றியவன். இளவரசரின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கியவன்.

"இளவரசரை மீட்கும் பணியில் சிலம்பன் ஈடுபட்டிருக்கலாம். தனியொருவன் என்ன செய்ய முடியும்? படு பாதகர்கள் அவனையும் கொன்றிருக்கலாம் அல்லவா?" அமைச்சரின் வார்த்தையில் சோகம் கலந்திருந்தது.

"நிமித்திகரே, அரச மாளிகையிலே கைமத்தர் என்னும் தாடிக்காரக் கிழவர் இருந்தார். இவருக்கும் இளவரசர் கடத்தலுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமென்று நினைக்கலாமா?"

"மைபோட்டுப் பார்த்தால் சிலவேளை வெளியாகலாம்" அவநம்பிக்கையுடன் கூறினார் நிமித்திகர்.

"சிலவேளை என்று ஏன் கூறுகின்றீர்கள்? அஞ்சனத்தின் மூலம் அறியலாம் என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மந்திரம் வல்லவர்கள் அஞ்சனத்தில் தோன்றுவதை மறைத்து விடலாம் அல்லவா?" என நிமித்திகர் கூறினார்.

"அந்நிய தேசத்து ஆக்கிரமிப்பாளர்களின வேலையாக இது இருக்குமென்று கருதலாமா?"

"விதேசத்தவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம்..." எனச் சோதிடர் கூறினார்.

"மன்னரின் உடல் நிலையும் வரவரக் குன்றிக் கொண்டு வருகின்றது. தற்செயலாக அவருக்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டால் பனங்காம அரசின் கதியென்ன? பறங்கியரின் அபிலாசை நிறைவேறி விடுமோ என்று தான் அஞ்சுகிறேன்" என்றார் அமைச்சர்.

"அப்படியெல்லாம் நிகழச் சிவபுரநாதரும், தான்தோன்றி ஈஸ்வரரும் விடமாட்டார்கள். மன்னர் இன்னும் குறைந்தது ஆறு ஆண்டுகளேனும் ஆட்சி புரிவார் என்று அவரின் சாதகம் கூறுகின்றது." உறுதியாகச் சொன்னார் சோதிடர்.

❑❑❑

# 09
# அடிமையோலை

**மோ**கன சுந்தரியின் மயக்கு மொழியிலும் மோகனப் புன்னகையிலும் தன்னையே இழந்துவிட்ட இளவரசருக்குக் கொடுமையான குகை வாழ்க்கைகூட இனிமையாகத் தான் இருந்தது. இடையிடையே அந்த முரட்டுக் கிழவரின் அதட்டலும் உறுமலும் அகோரச் சிரிப்பும் அவரைப் பயமுறுத்துவதாக இல்லை. அதற்கு அவர் பழக்கப்பட்டிருந்தார். இதனால் கிழவரின் அட்டகாசங்கள் அனைத்தையும் அவர் அலட்சியம் செய்தார்.

ஒரு நாள் ஆஜானுபாகுவான தோற்றமுடைய நடுத்தர வயது மனிதர் ஒருவர் வந்தார். தூய்மையான வெள்ளைக் கஞ்சுகியும் தலைப்பாகையும் அணிந்திருந்தார். பளபளக்கும் சரிகை உத்தரீகம் அவர் மேனியை அலங்கரித்தது. இளவரசருடன் சினேக பூர்வமாக உரையாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளவரசே, ஏதோ கஷ்ட காலத்தினால் தாங்கள் இங்கே கொண்டுவரப்பட்டுள்ளீர்கள். செல்வமும் செல்வாக்குமுள்ள பனங்காமத் தரசின் வாரிசான தாங்கள் இப்படி நடுக்காட்டிலே துன்பப்படுவதைக் காண வருத்தமாக இருக்கிறது." தயங்கித் தயங்கிப் பேசினார் அவர்.

"வருத்தம் தெரிவித்தமைக்கு நன்றி. நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்? அதைச் சொல்லுங்கள்."

"இளவரசே, உங்கள் நன்மை கருதி நான் சொல்வதைக் கேளுங் கள். நீங்கள் உங்கள் பனங்காமத்து அரசை ஆள வழிவகுக்கவே நான் இங்கு வந்தேன். இந்தக் குகை வாசத்தை விட்டுவிட்டு அரச மாளிகையிலே சுக போகங்களைச் சுகிக்கலாம்..."

"அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?"

பனங்காம இராச்சியம் யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாக இருக்கிறது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் அதிபதியாகிவிட்டனர். அவர்களோடு சிநேகமாக இருக்க நீங்கள் ஆசைப்படவில்லையா? கொஞ்சம் பணிந்து போனால் பெருநன்மை கிடைக்கும்"

"பெரியவரே, எனது நன்மையின் பொருட்டுத் தாங்கள் இவ்வளவு தூரம் பாடுபடுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. பறங்கியர் சிநேகம் கொள்வதாக இருந்தால் எனது தந்தை பனக்காமத்தரசருடன் பேச்சுவார்த்தை நடத்தலாம். நான் ஒரு இளவரசன்; ஆட்சிப் பொறுப்பு என்னிடம் இல்லையே, அப்படியிருக்க என்னிடம் எதையும் பேசிப் பயனில்லை என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?"

"நீங்கள் உங்கள் தந்தைக்குச் சொன்னால், இங்கிருந்தே ஒரு ஓலை அனுப்பினால் சில யானைகளையேனும் போர்த்துக்கேய நிர்வாகத் திற்குத் திறையாக இல்லாவிடினும் பரிசாகவேனும் கொடுத்தால், போர்த்துக் கேய நிர்வாகத்தின் நட்பைப் பெறலாந்தானே!"

"அப்படியொரு ஓலை அனுப்பினால் என்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்ய முடியும் என்று கூறாமல் கூறுகின்றீரகள் அப்படித் தானே?"

"ஆமாம், விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். நீங்களும் அரசு கட்டில் ஏறும்போது தொடர்ந்து சில யானைகளையும், மான் தோல்களையும் பரிசாகக் கொடுப்பதாக ஒரு சிறு ஒப்பந்தம் செய்து கொண்டால் போதும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதற்கு...?"

"இந்த ஓலையிலே சிறு கையொப்பம்... அவ்வளவுதான்!" பெரியவர் சுருட்டி வைத்திருந்த ஓலையை விரித்துக் காட்டினார்.

"நன்றி, என்மீது நீங்கள் அதிக அக்கறை காட்ட வேண்டாம். இந்தக் குகை வாசத்தையே நான் விரும்புகின்றேன். எனது தந்தையோ நானோ போர்த்துக்கேயருக்குத் திறை கொடுப்போம் என்று கனவு கூடக் காணவேண்டாம். பரிசளிப்பது நமது விருப்பத்தின் பேரிலன்றி ஒப்பந்தம் வாயிலாக அல்ல என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறவும்"

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே முரட்டுக் கிழவர், அகோரமாகச் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடுமா? மயிலை வேட்டையாட வேண்டும்; சிறகைப் பிடுங்கியெடுக்க வேண்டும்"

"சரிசரி, உங்கள் கைவரிசையைக் காட்டுங்களேன்!" ஏளனமாகக் கூறினார் இளவரசர்.

"இளவரசே, தங்கள் முடிவைக் கூறினால்..."

"முடிவை முன்பே சொல்லிவிட்டேன். அயலார் மண்ணிலே ஆட்சியைப் பரப்ப வந்திருக்கும் கேடுகெட்ட எவருடனும் ஒப்பந்தம் செய்ய முடியாது."

"அப்படியானால் தாங்கள் உயிர் வாழ விரும்பவில்லையா?"

"சுதந்திரம் உயிரினும் மேலானது. எனது தோள் வலியிலும் தாள் வலியிலும் நம்பிக்கை கொண்டவன் நான். இந்த அற்பமான உயிரைக் காப்பாற்ற முடியாவிடில் சாவை அணைப்பதில் சந்தோஷம் அடைவேன். தயவுசெய்து இவ்விடத்தை விட்டுப் போய்விடுங்கள்"

"யாரங்கே, இவனது காலையும், கையையும் கட்டிப் போடுங்கள்" உறுமினார் கிழவர்.

சிலர் இளவரசரைக் கட்டுவதற்குக் கிட்ட வந்தார்கள். கிட்ட வந்தவர்களை உதைத்து விட்டு அங்கிருந்த மரக்கொம்பர் ஒன்றை எடுத்துச் சுழற்றத் தொடங்கினார் இளவரசர். குண்டர்கள் எறிந்த ஈட்டிகள் இளவரசரைத் தாக்க முடியாமல் திரும்பின. ஒரு குண்டன்மட்டும் ஏனைய குண்டர்கள்மீது ஈட்டியை எறியத் தொடங்கினான். சிலர் குற்றுயிராகி நிலத்தில் விழுந்தனர். ஏதோ ஒரு சமிக்கை செய்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி. குண்டனொருவன் குதிரையொன்றைக் கொண்டுவந்து நிறுத்தினான். சுந்தரியைக் குதிரையில் ஏற்றிக்கொண்டு இளவரசர் காற்றிலும் வேகமாகப் பறந்தார். உதவி செய்த குண்டனும் இன்னொரு குதிரையில் ஏறி அவர்களைப் பின் தொடர்ந்தான்.

கண்மூடி விழிக்குமுன் மூவரும் மறைந்து விட்டனர். கிழவரும், வந்தவரும் திகைத்து நின்றனர்.

"நான் முன்னமே சொன்னேன், இவனைக் கொன்றுவிடுவோம் என்று; நீங்கள் கேட்கவில்லை?" எனக் கிழவர் கூறினார்.

"இளவரசரைக் கொல்வதால் எதுவும் சாதிக்க முடியாது. நயமாகவும் பயமாகவும் அடிபணிய வைக்கலாம் என்று நினைத்தேன்

"புலியின் குகையை விட்டுப் புள்ளிமான் பறந்து விட்டது. எல்லாம் அந்த மயக்கு மோகினியின் வேலைதான்! அவளை நம்பி உன் மனைவியாக வைத்திருந்ததன் கேடு இது."

"அதுமட்டுமல்ல,எமது படையில் பனங்காமத்துக் குண்டன் ஒருவன் புகுந்துவிட்டதை அறியாமற் போய்விட்டோம்."

"கைமத்தரே, இந்தச் சம்பவம் எவருக்கும் தெரியக் கூடாது நான் வருகிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# மானும் மயிலும்

குதிரையில் பறந்து சென்ற இளவரசரும் சுந்தரியும் காடுமேடெல்லாம் தாண்டி முள்ளியவளையை நோக்கி விரைந்தனர். கடும் மழையினால் குருவிச்சை ஆற்றில் பெருவெள்ளம் பாய்ந்து பாதையையே மறைத்திருந்தது. அந்த ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்வதே பெரும்பாடாகிவிட்டது.

சிலம்பனும் அவர்களைப் பின் தொடர்ந்தான். அவனை உற்று நோக்கினார் இளவரசர்.

"இளவரசே என்னை இன்னும் அடையாளம் காண வில்லையா? இப்போது பாருங்கள்" எனக்கூறித் தலையிலிருந்த டோபாவையும் மீசையையும் அகற்றினான்.

"யார்? சிலம்பனா?" குதிரையில் இறங்கி அவனை கட்டித்தழுவினார் இளவரசர்.

எப்படியப்பா இந்தக் குண்டர்களுடன் சேர்ந்தாய்? இந்த வேஷம் எப்படிக் கிடைத்தது?."

"பாலியாற்றம் கரையிலே தாங்கள் வரும்போது குண்டர்கள் தங்களைத் தாக்கியதைக்கண்டதும் ஒரு குண்டனை விழுத்திவிட்டு அவனுடைய டோபாவையும் மீசையையும் நான் சூட்டிக் கொண்டேன்" என விபரித்தான் சிலம்பன்.

சற்றுத்தூரம் சென்றதும் ஒரு வயல்வெளிக் குடிசையில் மூவரும் தங்கினர்.

இளவரசருக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

"சிலம்பா காட்டில் சென்று ஏதாவது காய்கனிகளைப் பறித்துவர முடியுமா?"

'என்ன பசிக்கிறதா?' எனக் கேட்ட சுந்தரி தன் பையிலிருந்த பொரி விளாங்காய்களை அன்புடன் பரிமாறினாள்.

அதனைச் சுவைத்துக் கொண்டே இளவரசர் கேட்டார். "என்ன? முன்கூட்டியே உணவு ஆயத்தம் செய்திருக்கிறாயா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம் இன்று தங்களைச் சிறையிலிருந்து தப்பவைக்க நானும் சிலம்பனும் திட்டம் தீட்டியிருந்தோம். குணடர்களுக்கு மயக்க மருந்து ஊட்டிவிட்டு கிழவரை அடித்து வீழ்த்திவிட்டு உங்களுடன் புறப்படுவது தான் எமது திட்டம். அதற்கிடையில் நீங்களே சண்டையைத் தொடங்கி விட்டீர்கள். அவசரக்காரர். சிலம்பன்மட்டும் இல்லை யென்றால்" செல்ல மாகக் கடிந்து கொண்டாள் அவள்.

"உண்மைதான் சிலம்பன் பனங்காம அரசுக்கு விசுவாசமானவன் முன்பின் தெரியாத பெண்ணாகிய நீ ஏன் என்னைக் காப்பாற்றமுனைந்தாய் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை"

"இளவரசரே, நான் அந்தக் கைமத்தர் என்ற கிழவரை மணந்து கொண்டதற்கு ஒரு காரணம் இருக்கிறது என்று கூறியது நினைவிருக்கிறதா?"

'ஆமாம், இப்பொழுதாவது அதைச் சொல்லிவிடேன்"

"கைமத்தர் என்ற இந்தக் கிழவர் அரசமாளிகைச் சுற்றாடலில் பல ஆண்டுகள் வாழ்ந்து கொண்டிருந்ததைத் தாங்கள் அறிவீர்கள்"

"கைமத்தரா?.. இந்தக் கிழவர்தான் கைமத்தரா? ஒரு முறைதான் இவரை நான் பாத்திருக்கின்றேன். ஆனால் இவரை மறந்துவிட்டேன்"

"பனங்காம அரசிற்கெதிராகக் கைமத்தர் சதிவலை பின்னுவதை நான் அவதானித்தேன்.

வீரதீரபராக்கிரமத்துடன் வளர்ந்துவரும் இளவரசராகிய தங்களிடம் கிழவருக்கு ஒரு கண் இருந்ததையும் அறிந்து கொண்டேன்.

இந்தக் கிழவரால் தங்களுக்குக் கேடு நிகழப் போகின்றது என்பதை நான் உணர்ந்தேன். இதிலிருந்து உங்களை எங்ஙனம் காப்பாற்றலாம் என்பதைப் பற்றிப் பலநாளாகச் சிந்தித்தேன்."

"சிந்தனையின் முடிவு?"

"பெண்பித்துக் கொண்டவரான கைமத்தரை என் மோகவலையிலே அகப்படுத்த எண்ணி அதில் வெற்றியும் கண்டேன். வன்னித் தமிழகத்துப் பெண்ணொருத்தி இப்படி யெல்லாம் செய்தது சற்று அருவருப்பாகத் தோன்றலாம். பனங்காம இளவரசரைக் காப்பாற்ற அதன் மூலம் பனங்காம அரசைக் காப்பாற்றி நிலைநிறுத்த ஒரு பேதைப்பெண் செய்ய வேண்டியதைச் செய்தேன். அதுதான் கைமத்தருக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம். இதனால் இன்று இளவரசரை மாத்திரமல்லப் பனங்காம அரசையே காப்பாற்ற முடிந்தது"

திறந்தவாய் மூடாமல் வியப்புடன் இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார் இளவரசர்.

அளவில்லாத ஆனந்தமும் வியப்புடனுமிருந்த இளவரசர் சுந்தரியை ஆரத்தழுவி முத்தமிட்டார்.

பக்கத்தில் சிலம்பன் நிற்பதைக்கூட மறந்து அவளைக்கட்டித் தழுவியதற்காக வெட்கமடைந்தார்.

"மான் ஒன்று மயிலைத் தழுவிக் கொண்டால் இப்படித்தான் இருக்கும்" எனச் சிலம்பன் எண்ணிக் கொண்டான்.

"சுந்தரி இனியென்றாலும் நீயார்? உன் உண்மைப் பெயர் என்ன என்பதைக் கூறமாட்டாயா?"

"நான் யார் என்று விபரித்துக் கூறுவதற்கு நான் ஏதோ பிரசித்திவாய்ந்த குடியில் பிறந்தவள் அல்ல. பனங்காமத்தரசிற்கு விசுவாசமுள்ள எளிமையான குடும்பத்திலே பிறந்த ஏழைப் பெண். எனது பெயர் மான்விழி"

"மான்விழி... மான்விழி... பொருத்தமான பெயர்தான்!" என்று கூறி அவளது கன்னத்திலே உதடுகளைப் பதித்தார் இளவரசர்.

"எப்போதும் போல் சுந்தரி என்றே அழையுங்கள்." மென்சிரிப்புடன் செப்பினாள் அவள்.

"சுந்தரி நாம் நெடுநேரம் இவ்விடத்தில் இருப்பது சரியல்ல. பகைவர்கள் எம்மைத் திரும்பவும் தாக்கக்கூடும். பாவம். கைமத்தர் என்ற கிழவர் உன்னை இழந்ததாலேயே ஆத்திரம் அடைந்திருப்பார்"

"எதற்கும் பயப்பட வேண்டாம். இதோ இந்தப் பையிலே வேண்டிய வாள், வேல், குத்துவாள், எறிகணை முதலியன நிறைய உண்டு. எத்தனை குண்டர்கள் வந்தாலும் அவர்களுக்கு வகை சொல்ல என்னால் முடியும்." உறுதியாகக் கூறினான் சிலம்பன்.

"சிலம்பா!" ஆச்சரியத்தால் அகலவிரித்த கண்களால் ஆயுதங்களைப் பார்த்த இளவரசர் அழைத்தார்.

"இளவரசே தங்களைக் காப்பதற்காக எனது உயிரைத் திரணமாக மதித்துப் போராடுவேன்" ஆவேசமாகக் கூறினான் சிலம்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளவரசே"

"சுந்தரி, இனிமேலும் என்னை இளவரசே என்று அழைக்காதே"

"அரசே என்று அழைக்கலாமா?"

"வேடிக்கை வேண்டாம்; என் உயிருக்கு நிகரான காதலி நீ. காதலியொருத்தி தன் காதலனை எப்படி அழைப்பாள்?"

"அத்தான்...!"

"அன்பே, நீயெனக்கு உயிர் கொடுத்தவள். நாங்கள் தாமதமின்றிப் பனங்காமத்திற்குப் போகவேண்டும். அங்கே என் அன்னையும், தந்தையும், நாட்டு மக்களும் துயரக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள்."

"அத்தான், இப்படிச் சொல்வதால் நான் தங்களின் வீரத்தையோ சிலம்பனின் தீரத்தையோ குறைத்து எடைபோடுகிறேன் என்று நினைக்க வேண்டாம். முள்ளியவளை வன்னிமையிலிருந்து பாதுகாப்பு படையொன்றைப் பெற்றுக்கொண்டு செல்வதுதான் நல்லது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்"

"சரி, அப்படியே செய்வோம்."

"இன்னுமொன்று சொல்கிறேன்: பனங்காம அரசமாளிகைக்கு என்னை அழைத்துச்செல்ல வேண்டாம். இப்போதைக்கு என் அன்னை யுடன் என்னைச் சேர்த்து விடுங்கள்"

"சுந்தரி, என்ன இது?"

"பனங்காமத்தரசை ஏற்கப் போகின்றவர்கள் தாங்கள்; தங்களைக் காப்பாற்ற வேண்டும் என இந்தப் பேதைப் பெண் விரும்பினாள். எனது இலட்சியம் நிறைவேறிவிட்டது."

சுந்தரியின் முன்யோசனையான வார்த்தைகள் இளவரசருக்குப் பிடித்துப் போய்விட்டது. அதனால் அவர் மறுத்துரைக்கவில்லை. "பகிரங்கமாகத் திருமணம் நடைபெறாவிட்டாலும்என் இதயத்தைக் கவர்ந்த எழிலரசி சுந்தரியே" என்று அவரது உள்ளம் பேசியது.

முள்ளியவளை வன்னியனாரின் படையுதவி பெற்று பனங்காமத்தை நோக்கிப் புறப்பட்டார் இளவரசர்.

இளவரசர் வருகிறார் என்று அறிந்த பனங்காம அரசனும், அரசியும் கண்ணை இழந்து திரும்பவும் கண்ணைப் பெற்ற குருடர்கள் போல் குதூகலித்தனர். மக்கள் வெள்ளம் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இளவரசரை வரவேற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி என்னும் மான்விழி தன் குடிசைக்குச் சென்று தன் வயதான தாயாருடன் தங்கினாள். கணவனுக்கும் தனக்குமிடையே ஏற்பட்ட தகராறினால் பிரிந்து வந்துவிட்டதாக கதை பின்னினாள்.

கைமத்தர் மீண்டும் பனங்காமத்திற்கு வரத்துணிய மாட்டார் என அவளுக்குத் தெரியும்.

□□□

# 11
# கொமாண்டரின் அறிக்கை

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்த கொமாண்டர் ஒப்பகூப்மன் அன்ரனி பவிலியன் தலைமையில் டச்சு நிர்வாகம் தம் எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆலோசனை செய்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் கடந்த மூன்று ஆண்டுகளாக எடுத்த நடவடிக்கைகள் பற்றி கொழும்பில் இருக்கும் தேசாதிபதி றைக்லொவ் வான் கூன்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் நிர்வாகம், வன்னி இராச்சியங்களை – குறிப்பாக பனங்காம வன்னிமையை அடிபணியச் செய்தல் முதலிய முக்கிய விடயங்கள் அறிக்கையில் இடம்பெற வேண்டும்.

'குறைந்த செலவுடன் கூடிய வருமானம் பெறக்கூடிய வகையில் நிர்வாகம் நடைபெற வேண்டும்.' என்பது தேசாதிபதியின் உத்தரவு.

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதை அண்மிய தீவுப் பகுதிகளையும் நிர்வகிப்பதில் அதிக பிரச்சனை இருக்கவில்லை. வன்னிப்பிரதேசம்தான் பெருந்தலையிடியாக இருந்தது. இதுவரை வன்னி பற்றி எதுவுமே அறியாதவராக இருந்தார் அன்ரனி. வன்னிமையைப் பொறுத்த எல்லாத் தகவலுக்கும் காஞ்சிரங்காயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கணநாதனையே நம்பியிருந்தார். இவன் கடந்த ஆறுமாதங்களாக மாறுவேடத்தில் வன்னி நாட்டின் எல்லாப் பிரதேச ங்களுக்கும் சென்று வந்துள்ளான். அவன் தனது விரிவான அறிக்கையை ஆலோசனைச் சபைக்கு சமர்ப்பித்தான்.

"வன்னிநாடு வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும் தெற்கே அருவி ஆற்றையும் கிழக்கே திருகோணமலையையும் மேற்கே மன்னாரையும் எல்லையாக உடைய பெருநிலப் பரப்பாகும். பாரிய நீர்த்தேக்கங்களும், சிறிய குளங்களும் மலிந்த இப்பிரதேசத்தை வடக்கின் நெற்களஞ்சியம் என்று கூறலாம். பாலும் தேனும் பாய்ந்தோடும் நாடு என இலங்கையில் ஒரு பிரதேசம் இருக்குமானால் அது வன்னி நாடுதான்! இப்பிரதேசத்தின் செல்வமாக ஆயிரக்கணக்கான எருமை மாடுகளும் பசுமாடுகளும் உண்டு. இவை இப்பிரதேச மக்களின் விவசாய முயற்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன. வன்னி மக்கள் நீருக்குப் பதிலாக பாலையே அருந்துகின்றனர். கட்டித்தயிரை வெட்டிப்போட்டு சம்பா அரிசிச் சோற்றுடன் பிசைந்து உண்கின்றனர் மக்கள். வன்னிக்காட்டிலே எந்நேரமும் தேனுக்குப் பஞ்சமில்லை. நிர்வாக உத்தியோகத்தர்களான முதலியார்மாரும் உடையார்மாரும் சுண்ணாம்புடன் தேனைக் கலந்து அந்தச் சாந்திலே வீடுகளை அமைக்கிறார்கள். அடர்த்தியான காடுகளில் கருங்காலி, பாலை, முதிரை, யாவறணை, இயவாகை போன்ற சாதிமரங்கள் ஏராளமாக உள்ளன. பெருவாரியான யானைகளும் சிறுத்தைகளும், மான்களும் மரைகளும் காட்டுப்பன்றிகளும் கானகத்திலே உலவுகின்றன. விலைமதிப்பற்ற யானைத் தந்தங்களை வன்னிக்காட்டிலே சர்வசாதாரணமாக காணலாம். பாலி ஆறு, பறங்கியாறு, கனகராயன் ஆறு, குருவிச்சையாறு, பேராறு என்னும் சலசலத்தோடும் ஆறுகள் வன்னிமையை வளம்படுத்துகின்றன. ஆற்றங்கரையோரங்களிலும், சதுப்பு நிலங்களிலும் ஏராளமான பாக்கு மரங்கள் வளர்கின்றன. மேட்டு நிலங்களில் பருத்தி பயிரிடப்படுகிறது. ஆடைகளுக்குச் சாயமூட்டும் சாயவேர் அங்கு மலிந்து கிடக்கிறது. குளங்களில் முதலைகளை வேட்டையாடி அதன் தோலை விற்கிறார்கள். மான்தோல், மரைத்தோல் ஆகியவை வார்க்கயிறு திரிக்கவும் குதிரைகளுக்குச் சேணம் அமைக்கவும் உதவுகின்றன. கரடித்தோலைக் கொண்டு கேடயங்கள் செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கருநாவல்பற்று, கரிக்கட்டு மூலை, தென்னன்மரபடி, செட்டிக்குளம் என்னும் ஏழு வன்னிப் பிரிவுகளை இந்து வன்னித் தலைவர்கள் ஆட்சி புரிகின்றனர். அவர்கள் அரசர் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் பனங்காமத்துக் கயிலை வன்னியன் தீவிரமாக ஈடுபட்டு வருகிறான். வன்னித் தலைவர்கள் மத்தியில் சிறுசிறு நெரிசல்கள் இருந்தபோதும் ஒல்லாந்த எதிர்ப்பு என்று வரும்போது அவர்கள் ஒன்றிணைந்து விடுகின்றனர். கண்டி மன்னனுக்கும் கயிலை வன்னியனுக்குமிடையே நெருங்கிய நட்புறவுண்டு. அவர்கள் பரஸ்பரம் படையுதவி செய்யச் சித்தமாக இருக்கிறார்கள்."

கணநாதனின் அறிக்கையை செவியுற்ற கொமாண்டர் சிறிது சிந்தித்துவிட்டு,

"வன்னித் தலைலர்கள் எவருக்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாக ஆட்சி செய்கிறார்கள் என்று சொல்கிறாய். அப்படித்தானே?"

"ஆம், நிச்சயமாக அவர்கள் சுதந்திர ஆட்சியாளர்கள்தான்!"

"இவர்கள் ஒருபோதும் போர்த்துக்கீசருக்குத் திறை செலுத்தவில்லையா?"

"கொள்கையளவில் திறை செலுத்துவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் இடைக்கிடை இரண்டொரு யானை திறையாக அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் கயிலை வன்னியன் ஒரு போதுமே திறை செலுத்தவில்லை"

"வன்னி, யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒருபகுதி என்பது அவர்களுக்குத் தெரியாதா?"

"அவை, சுதந்திரமான இராச்சியங்கள் என்பதே அவர்களின் அசையாத நம்பிக்கை"

ஒல்லாந்தக் கொமாண்டர் அன்ரனி போர்த்துக்கீச கொமாண்டர்களின் அறிக்கையையும் ஒல்லாந்த தேசாதிபதியின் அறிக்கையையும் தட்டிப்பார்க்கிறார்.

"வன்னிமையைப் பொறுத்தமட்டில் அவர்களைத் தங்களுக்குக் கீழ்ப்படியச் செய்வதில் போர்த்துக்கீசர் பெருங்கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீசரால் ஒருபோதும் தங்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர முடியவில்லை. அதுவுமல்லாமல் போர்த்துக்கீசர் வன்னியர் களைத் தங்கள் முன் அழைப்பதற்குக் கட்டளை அனுப்பினாலும் வன்னியர் அவற்றைப் பொருட்படுத்த வில்லை. இவ்வண்ணம் கயிலை வன்னியன் பன்னிரண்டு அல்லது பதினான்கு வருடங்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை." இவ் வாறு ஒல்லாந்த தேசாதிபதி றைக்கிளவ் வான் கூன்ஸ் 1661ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி எழுதிய அறிக்கையை வாசித்ததும் கொமாண்டர் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தார். அவருடைய வெள்ளை முகங்கூட கறுத்துச் சிறுத்தது. நெற்றியில் ஏற்பட்ட சுருக்கங்கள் அவர் ஏதோ தீவிர சிந்தனையில் இருப்பதை தெளிவு படுத்தின.

"முதலிலே பனங்காமத்தின் மீது படையெடுக்க வேண்டும்-கயிலை வன்னியனின் கொட்டத்தை அடக்கினால்தான் ஏனைய வன்னியரும் எம் கட்டுப்பாட்டில் வருவர்" என்னும் துணைத் தளபதியின் வார்த்தையால் கொமாண்டரின் சிந்தனை அறுபட்டது.

தளபதியை நிமிர்ந்து பார்த்தார் அன்ரனி.

"படையெடுக்க வேண்டுமென்று சுலபமாக கூறிவிட்டாய். எமது படைகள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் கைப்பற்றிய பிரதேசங்களை ஸ்திரப் படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றன. கண்டியும் பனங்காமமும் பரஸ்பரம் படையுதவி அளிக்கத் திட்டமிட்டிருக் கின்றன. இருநாட்டுப் படைகளையும் ஒரே நேரத்தில் எதிர்க்க வேண்டி ஏற்படும். இந்நேரத்தில் படையெடுக்க முன் நாம் நன்றாகச் சிந்திக்க வேண்டும்"

"வேறு என்னதான் செய்யவேண்டும் என்கிறீர்கள்?" தலைமைத் தளபதியின் கேள்வி அசுவாரஸ்யமாயிருந்தது.

"இராஜதந்திரம் என்று ஒன்று இருக்கிறதே – அதனைப் பயன்படுத்த வேண்டும். வன்னியர்களை ஒரேயடியாகப் பகைக்காமல் நயமாகவும் பயமாகவும் வற்புறுத்தித் திறைபெற முயற்சிக்க வேண்டும். எங்கள் பீரங்கிகளுக்கும், துப்பாக்கிகளுக்கும் வன்னியர் அச்சமடைந்திருக்கும் இந்த நேரத்தில் முன்யோசனையின்றி படையெடுத்து தோல்வி கண்டால் கொஞ்ச நஞ்சமிருந்த பயமும் நீங்கிவிடும் அல்லவா?"

"திறையென்ற வார்த்தைக்கே இடமில்லை; 'பனங்காமம் சுதந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமையுடைய இராச்சியம்; அதனிடம் திறைகேட்க உங்களிற்கென்ன அதிகாரமிருக்கிறது?' என்று கயிலை வன்னியன் ஆணவமாகப் பதில் அனுப்பியிருக்கிறான். வேறெப்படி வற்புறுத்துவது?"

"பனங்காமத்தின் மீது படையெடுக்க வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை. நம்மவர் சிலர் பனங்காம அரசைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். எமது இராஜதந்திரமும் சூழ்ச்சியும் நிச்சயம் பயன்தரும். முடியாத பட்சத்தில் படையெடுக்க வேண்டியதுதான்!" இப்படியெல்லாம் அன்ரனி நிறுத்தி நிறுத்திக் கூறிக்கொண்டிருக்கும் போது எல்லைப் பிரதேசத்துக்குச் சென்ற ஒற்றன் ஒருவன் திடுக்கிடும் செய்தி ஒன்றைக் கொண்டு வந்தான்.

"கள்ளக் கடத்தலில் ஈடுபட்ட வன்னி வர்த்தகரைத் தடுத்து நிறுத்திய ஒல்லாந்த சிப்பாய்கள் பத்துப் பேர்களின் தலைகளை வெட்டிச் சிதைத்துள்ளான் வெற்றிக் கடம்பன் என்ற பனங்காமத் தளபதி. ஒல்லாந்தப்படை பின்வாங்கி ஓடிவிட்டது." என்பதுதான் அந்தச் செய்தி.

இதனைக் கேட்ட கொமாண்டரின் கண்கள் அக்கினிப் பிளம்பாயின. மீசை துடித்தது. ஏற்கனவே மதுபோதையிலிருந்த அவர் இன்னொரு கிண்ணம் மதுவை அருந்தியபின் "நற நற" எனப் பல்லைக் கடித்து அட்டகாசமாகச் சிரித்தார். இந்தச் சிரிப்பு 'கயிலை வன்னியனை என்ன செய்கிறேன் பார்' என்ற ரீதியில் அமைந்தது.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

# பிரிந்தவர் கூடினால்

கும்மிருட்டு; இரவு இரண்டாம் சாமத்தை கடந்துவிட்டது. சதுர்வேதி மங்கலத்தின் வாசஸ்தலத்தில் கிரமவிட்டர் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்திருந்தார். என்னதான் முயன்றபோதும் நித்திராதேவி அவரை அணைக்க மறுத்துவிட்டாள். பலவிதமான சூழ்ச்சித் திட்டங்களை அவர் மனதில் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார். கயிலை வன்னியனின் இளமைக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களும் அவர் நினைவுத் திரையில் நிழலாடின. கைமத்தரின் அந்தத்திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் இன்று பனங்காமம் அந்நியரின் காலடியில் மிதிபட்டிருக்கும். மாயமோகினிமேல் கொண்ட சபலம் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கிவிட்டது, இது பழங்கதை.

அந்த ஜாமவேளையில் ஒரு உருவம்வந்து கதவைத் தட்டியது. கதவைத் திறந்த அவர் தலையை மூடியிருந்த முக்காட்டை விலக்கி யவனைப் பார்த்தார்.

"காஞ்சிரங்காயா, ஏது இந்த நேரத்தில்? நான் மட்டும் தான் விழித்திருக்கிறேன் என்று நினைத்தேன் நீயுமா? வா. வா... இப்படி உட்கார்"

காஞ்சிரங்காயன் சற்றுத் தள்ளாடினான். அவனது வார்த்தைகள் தெளிவற்றிருந்தன. டச்சுக் கொம்பனியாரின் இறக்குமதி செய்யப்பட்ட மதுவை அவன் உட்கொண்டிருந்தது சொல்லாமலே விளங்கியது.

"அந்தண சிரேட்டரே, என்னை மன்னிக்க வேண்டும். மதுபோதையில் தங்கள் இல்லத்திற்கு வந்ததற்கு. மதுவையும் புலாலையும் தள்ளிவைத்து ஆசார சீலராக வாழும் தங்கள் மனையை மாசுபடுத்தி விட்டேனோ என்று அஞ்சுகின்றேன்"

"காஞ்சிரங்காயா, இவ்வளவுதான் நீ அறிந்தது. புராணங்களையும் வேதங்களையும் நீ கற்றிருந்தால் இப்படிக் கூறியிருக்க மாட்டாய். கண்ணப்ப நாயனார் கடவுளுக்கே இறைச்சியைப் படைத்தார். தேவர்கள் சோமபானம் என்னும் மதுவை அருந்தி வெறியாடியிருக்கிறார்கள். ஏன்? நான் கூட ஆண்பனைக் கள்ளைச் சுவைபார்த்திருக்கிறேன்... சரி போகட்டும்; இந்நேரத்தில் நீ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரே இலட்சியத்திற்காகப் பாடுபடும் இருவர் சந்திப்பதற்கு இன்ன நேரந்தான் என்ற விதிமுறையுண்டா? என்னை அந்தப் பறங்கிப் பட்டாளம் ஆறுதலாக இருக்க விட்டால்தானே. ஐந்தாறு மதுப்புட்டிகளைத் தந்து என்னை இங்கு துரத்தியிருக்கிறார்கள். இந்தக் குளிருக்கு உற்சாகமாகத் தான் இருக்கும். இதில் நீங்களும் கொஞ்சம்..." என்று கூறி கிண்ணத்தில் மதுவை ஊற்றிக் கிரம விட்டருக்கு நீட்டினார்.

"இதுவெல்லாம் எதற்கு?" என்று கூறிக்கொண்டே அவசரமாக வாங்கி 'மடமட' வென்று குடித்தார் விட்டர்.

"சரி, நன்றாகக் களைத்து விட்டாய்; இந்த வேப்பம் பலகைக் கட்டிலிலே படுத்துக் கொள்" என்று கட்டிலைக் காட்டினார். பாயோ தலையணையோ இல்லாத இந்தக் கட்டிலிலே தான் கிரமவிட்டரும் படுத்துத் துயில்வார். எத்தனையோ பிரச்சினைகள் அவரின் மூளையைக் குடையும்போது அவருக்குத்தான் உறக்கமேது?

"கிரமவிட்டரே சௌகரியமாக தூங்குவதற்கு இந்த நேரத்தில் நான் இங்கு வரவில்லை..." தற்போது காஞ்சிரங்காயனின் மதுபோதை சற்றுத் தணிந்திருந்தது.

விட்டர் சற்றுத் தள்ளாடினார். "பின் எதற்காக இங்கு வந்தாய்? அதையாவது சொல்லித் தொலையேன்" விட்டரின் தொனியில் சற்றுக் கோபம் தலைகாட்டியது.

"ஆறுவது சினம்; என்று நீங்கள் படித்த வேதங்களில் இல்லையா? பரவாயில்லை... வன்னி நிலமைகள் அனைத்தையும் அறிக்கை செய்தேன். கொமாண்டர் வாயைப் பிளந்து கொண்டே கேட்டுக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் சௌகரியமாக பங்களாவில் வாசஞ்செய்யும் அவருக்கு நான் இங்கே மழையால் நனைந்து வெயிலால் உலர்ந்து காடும் மேடும் அலைந்து திரட்டிய தகவல்கள் முற்றிலும் புதுமையாகவே இருந்தன. மேலும் பல இரகசிய தகவல்கள் வேண்டுமாம். அதுசரி பனங்காமத்தையும் முள்ளியவளையையும் பிரிக்கும் திட்டம் நிறைவேறாது போலிருக்கிறது"

"இதை சொல்லவா இந்த நேரத்தில் வந்தாய்? இந்த ஆரியன் சுடச் சுடச் செய்திகள் சேகரிப்பவன். அக்காளும் தபியும் தங்கள் பகைமையை மறந்து ஒன்றுபட்டுவிட்டார்கள். எல்லாம் அந்த பாலிநாச்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகசத்தால் வந்த வினை. அந்தக் தழுக்குக்காரி இலங்கையனைச் சந்தித்தால் மட்டும் தன் எண்ணம் நிறைவேறாது என்று கண்டு மாமியாரைச் சந்தித்து அவள் பிடிவாதத்தைக் கண்ணீரால் கரைத்துவிட்டாளாம்."

"இது நடக்க நீங்கள் கண்மூடி மௌனியாக இருந்து விட்டீர்கள்." கேலியாகச் சொன்னான் காஞ்சிரங்காயன்.

"அப்படித்தான் நீ நினைக்கிறாய்! வன்னிராச்சியங்கள் வலிகுன்றி சிதைந்து அழிந்து போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை!" படபடத்தார் விட்டர்.

"விட்டரே, எனக்கு ஒன்றுமட்டும் விளங்கவில்லை நான் டச்சுக்காரரின் உப்பைத் தின்று உடம்பை வளர்ப்பவன்; அவர்களுக்கு விசுவாசமாக உழைப்பதில் நியாயமுண்டு. தாங்களோ கயிலை வன்னியரின் மதியூக மந்திரியாக இருக்கிறீர்கள். பனங்காம அரசிற்கு எதிரியாக ஏன்தான் இயங்கு கிறீர்களோ விளங்கவில்லை" தயங்கித் தயங்கிக் கேட்டான் காஞ்சிரங்காயன்.

"ஹக்... ஹக் ...ஹா... கயிலை வன்னியன் ஏனைய வன்னிமைகளில் தலையிடாது விட்டிருந்தால் நான் அவனை எதிர்த்திருக்க மாட்டேன். இப்போதிருக்கும் நிலையில் யாழ்ப்பாணப் பரவைக் கடலுக்கும் அருவி யாற்றுக் குமிடையே பரந்து விரிந்து கிடக்கும் வன்னிமைகள் அனைத்தும் சிதைந்து அழிந்துவிடவேண்டும் என்பது தான் எனது இலட்சியம்" உறுதியாக இருந்ததுவிட்டரின் தொனி.

"நதிமூலம் ரிஷிமூலம் விசாரிக்கக் கூடாது என்று சொல்வார்கள். டச்சுக்காரரின் ஏழை ஒற்றனாகிய நான் தங்களின் தீர்மானத்துக்குரிய மூலகாரணத்தை அறியக்கூடிய அருகதை இருக்குமானால்.........." என இழுத்தான் காஞ்சிரங்காயன்.

"சொல்லத்தான் போகிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து முள்ளியவளைக்கு வந்தகதையை முன்பே கூறினேன் அல்லவா? அன்று என் தந்தையைப் பற்றித்தான் கூறினேன்:அன்னையைப் பற்றிக் கூறவில்லை, நினைத்தாலே நெஞ்சம் பகீரென்கிறது.

அந்தக் கொடுமையை எப்படிக் கூறலாம் என்பதுதான் தெரியவில்லை. என் அன்னை இளமையும் அழகும் வாய்ந்த காரிகையாக இருந்தாள். என்னை நீ உற்றுப்பார். அன்றெல்லாம் கூறுவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்னையை உரித்துப் படைத்தது போல் இருந்தேனென்று. ஐம்பது வயதில் என் தோற்றத்தைக் கொண்டு முப்பது வயதாயிருந்த என் அன்னையின் தோற்றத்தை கற்பனை செய்ய முடியாதுதான்!

அந்த நாளில் என் அன்னை இரவிவர்மா வரைந்த இலக்குமியைப் போல இருந்தார். அழகி என்றாள் அழகிதான்!

" குமர வன்னியன் என்னும் கொடியவன் கரிக்கட்டு மூலையை ஆண்டு கொண்டிருந்தான். அவன் கொடியவன் மாத்திரமில்லை; காமுகனும் கூட. நாளுக்கொரு வனிதையைப் பள்ளியறை பதுமை யாக்கி ருசித்து மகிழ்வான் அந்தக் காதகன்.

"ஒருநாள் குமாரபுரம் சித்திரவேலாயுதர் கோயிலுக்குச் சென்று திரும்பிய அன்னையை வன்னியனின் ஏவலர் துணியால் வளைத்துச் சிறைப்பிடித்துச் சென்றனர். அதன்பின் நடந்ததை நீயே ஊகித்திருப்பாய். ஆம், என் அன்னையின் கற்பைச் சூறையாடி விட்டான் குமரவன்னியன். மானம் போனபின் உயிர்தரிக்க விரும்பவில்லை என் அன்னை. நச்சுக் கிழங்கை அரைத்துச் சாப்பிட்டு உயிர் நீத்துவிட்டாள். உயிர் பிரியுமுன் அவள் கூறிய வார்த்தைகள்: மகனே இன்னும் சில வினாடியில் என் உயிர் பிரிந்துவிடும்: இந்தப் பாதகச் செயலுக்கு நீ பழிவாங்க வேண்டும்' என்று கூறிவிட்டு மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். அன்னையின் பிரிவு தந்தைக்குச் சித்தப் பிரமையை ஏற்படுத்தி விட்டது. அவர் ஊர் ஊராக அலைந்து திரிந்து இறுதியில் தன் உயிரையே முடித்துக் கொண்டார்.

"அப்பொழுது எனக்குப் பன்னிரண்டு வயதென்று கூறினேன் அல்லவா? அந்த வயதில் பழிக்குப் பழி என்றால் என்னவென்றே எனக்குத் தெரியாது. என்றாலும் என் இதயத்தில் அன்னையின் வார்த்தையைப் பொறித்துக் கொண்டேன். நான் வளர வளர அதன் தாற்பரியம் எனக்குப் புரியத் தொடங்கியது. அதற்கு முன் அந்தப் படுபாதகன் செத்தே போனான். அவனைப் பழிவாங்க முடியாத நிலையில் கரிக்கட்டுமூலை அந்தப்புரத்திலே என் கைவரிசையைக் காட்டினேன். சத்திரியன் ஒருவன் பிராமணப் பெண்ணைக் கற்பழித்ததற்குப் பழிக்குப் பழியாக, பிராமணன் ஆகிய நான் அரசிளங் குமாரி யொருத்தியின் கற்பைச் சூறையாடினேன். அதன்பின்பும் என் ஆத்திரம் அடங்க வில்லை. கரிக்கட்டுமூலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிபத்தைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டேன். கயிலை வன்னியன் அதற்குக் குறுக்கே நிற்கிறான். அதனால் நான் ஒரு சபதம் செய்திருக்கிறேன். பனங்காம வன்னிமையைப் பலவீனப்படுத்திச் சிதைக்க வேண்டும் என்பதே அந்தச் சபதம்" நீண்ட நேரம் பேசியதால் கிரமவிட்டருக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

வியப்படைந்த காஞ்சிரங்காயன் தயங்கித் தயங்கி இன்னொரு வினாவைத் தொடுத்தான்.

"பனங்காமத்தை எப்படி நீங்கள் பலவீனப்படுத்த முடியும்?"

"அப்படிக்கேள், ஆரியன் ஒருவன் தன் காரியங்களை மற்றவர்களைக் கொண்டே நிறைவேற்றுவான் என்பதை நீ அறியமாட்டாய். புஜபல பராக்கிரமத்தில் சிறந்தவனான கயிலைவன்னியன் தீபங்குடிப் புலவரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறான். புலவரிடம் கூறியுள்ளேன்: எக்காரணம் கொண்டும் புறநானூற்று ஏட்டை அவன் கண்ணிலே காட்டவேண்டாம் என்று. அகநானூறு நற்றிணை குறுந்தொகை என்னும் காதல் இலக்கியங்களை சுவை சொட்டச் சொட்டக் கற்பிக்குமாறும் கூறினேன். திருக்குறளில் அறத்துப் பாலையும் காமத்துப் பாலையும் கற்பிக்க வேண்டும் என்றும் பொருட் பாலைத் தனியாகப் பிரித்தெடுத்து மறைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளேன். ஏன் தெரியுமா? பொருட்பாலில் ஒரு அரசனுக்கு வேண்டிய அத்தனை ஞானமும் பொதிந்திருக்கிறது. அறத்துப்பால் வன்னியனைத் துறவியாக்கும். காமத்துப்பாலோ அவனைச் சிற்றின்பப் பிரியனாக்கும். இதனால் இராட்சிய விவரங்களில் அக்கறை குறையும்.

"விட்டரே, இப்பொழுதுதான் தங்கள் மேதைமையை முற்று முழுதாக உணர்கிறேன்" காஞ்சிரங்காயனின் புகழுரையால் கிரமவிட்டரின் உச்சி குளிர்ந்து வதனம் மகிழ்ச்சியால் விகசித்தது. "வேதியருக்கு ஆட்சேபனை இல்லை யென்றால் இன்னொன்று கேட்கலாமா?" காஞ்சிரங்காயனின் கேள்விக்கு விட்டர் தலையசைவினால் சம்மதம் தெரிவித்தார்.

"வன்னிமைகளைப் பலவீனப்படுத்த முனையும் தாங்கள் பனங் காமத்தில் சிவபுரநாதர் ஆலயத்தையும், புதிய அரச மாளிகையையும் ஆடம்பரமான முறையில் நிர்மாணிப்பதற்கு ஊக்கமளித்தது ஏன் என்று தான் புரியவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் மரமண்டைக்கு எது தான் புரியப்போகிறது உன்னைப் போன்ற ஒருவனைத்தான் ஏமாந்த டச்சுக்காரர் ஒற்றனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்" என்று கேலியாகக் கூறிய விட்டர் காஞ்சிரங் காயனின் தலையில் செல்லமாகக் குட்டினார்.

விட்டரின் வார்த்தைகளால் சற்றும் சினமடையாத காஞ்சிரங்காயன் "ஹி...ஹி...ஹி..." என அசடுவழியச் சிரித்துக் கொண்டே "வேதியரே தங்களுக்குரிய அனுபவ ஞானம் அறிவு மேதை எனக்கிருக்கும் என்று எதிர்பாக்கிறீர்களா?"

"அப்படிச் சொல். சிவபுரநாதர் ஆலயத்தையும், புதிய அரச மாளிகையையும் ஆடம்பரமாகக் கட்டுவதன் மூலம் பனங்காம வன்னிமையின் செல்வம் முழுவதுமே செலவாகிவிடும் ஆயுதங்களைச் செய்யவோ போர்த்தளவாடங்களைச் சிருட்டிக்கவோ அரச கஜானாவில் செப்புக் காசுகூட மிச்சம் இருக்காது. இதற்காக மக்களிடம் கூடுதலாக வரி அறவிடவேண்டி வரும். இதனால் மக்களின் பெருவெறுப்பைச் சம்பாதிக்க நேரிடும். வெறுப்பும் விரக்தியும் அடைந்த மக்களில் பெரும் பாலாரை என்பக்கம்-ஏன்? ஒல்லாந்தர் பக்கமே-சேர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். இப்பொழுது புரிகின்றதா?"

காஞ்சிரங்காயன் அவரின் கருத்தினை ஆமோதிப்பதுபோலத் தலையசைத்தான்.

கிரமவிட்டர் தொடர்ந்தார்; "மன்னன் ஒரு கலைப்பிரியன், அவனைக் கலைத்துறையிலும், ஆத்மீகத்துறையிலும் ஈடுபடுத்தியுள்ளேன் அரசமாளிகையிலும் ஆலயத்திலும் அமையப்போகும் சிற்பங்கள் ஓவியங்கள் அனைத்தும் மன்னரின் நேரடி மேற்பார்வையிலேயே உருவாக்கப் படுகின்றன.

இதைவிட, சைவசித்தாந்தத்தை நானே மன்னனுக்குப் போதித்து வருகிறேன். சதுர்மறை வேதியனான எனக்குச் சைவசித்தாந்தம் உடன் பாடான தத்துவம் அன்று. ஆனால், இதனால் என் இலட்சியம் நிறைவேறும் என்றால் ஏன் நான் அதைப் பிரயோகிக்கக் கூடாது? சைவசித்தாந்த தத்துவத்தை நான் ஏன் போதிக்கிறேன் தெரியுமா? இந்த உலக இன்பங்கள் அனைத்தையும் பொய்யானவை என்று சைவ சித்தாந்தம் போதிக்கிறது. இறைவன், ஆன்மா, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை விளக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களிலிருந்து ஆன்மா விடுபட்டு இறைவனை அடைய வேண்டும் என்று போதிக்கிறது. ஆணவத்தில் இருந்து விடுபட்ட அரசன் ஆட்சி செலுத்தும் அருகதையற்றவன் ஆகிவிடுவான். நடப்பவை எல்லாம் கன்ம வினைப்படிதான் நடக்கும் என்று ஏற்றுக் கொண்டால் மன்னனின் ஊக்கம் அனைத்தும் குன்றிவிடும். மண், பெண்,பொன் அனைத்தும் சைவ சித்தாந்தத்தின் படி வெறும் மாயைப் பொருட்கள். மண்ணைக் காக்கவும் பொன்னைச் சேர்க்கவும் எழுகின்ற ஆசையை வேரோடு பறித்தெறியும் நோக்குடனேயே சைவசித்தாந்தத்தை கயிலை வன்னியனுக்கு போதித்து வருகிறேன்.

"பாரதத்தில் கீர்த்தி வாய்ந்த மௌரியப் பேரரசு சிதைந்து மறைந்து இருந்த இடமே தெரியாமற் போனதற்கு காரணம் என்ன தெரியுமா? இதையெல்லாம் அறிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு உனக்கு வரலாற்று ஞானம் ஏது? கலிங்கப் போரில் ஆயிரக் கணக்கான எதிர்ப் படை வீரர்களைக் கொன்று குவித்து வெற்றிக் கொடி நாட்டிய மாமன்னன் அசோகன் பௌத்த தர்மத்தால் ஈர்க்கப்பட்டு மனமாற்றம் அடைந்தான். இராச்சியங்களைப் பிடிப்பதற்குப் பதிலாக பலதேசத்தின் மக்களின் இதயங்களைப் பௌத்த தர்மங்களின் மூலம் பிடிக்க ஆசைப்பட்டான். படை வீரர்களை வேற்று நாட்டுக்கு அனுப்புவதற்குப் பதிலாக மதபோதனையாளர்களை அனுப்பினான். அவனுடைய படைபலம் மாபெரும் மௌரியப் பேரரசைக் கட்டியாள போதவில்லை. இவை அரசின் வீழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டது. இப்படியொரு நிலையை வன்னிமைகளில், குறிப்பாகப் பனங்காம வன்னிமையில் உருவாக்கவே நான் காலாதி காலமாகப் பாடுபட்டுவருகிறேன்." அதிக நேரம் பேசியதாலோ என்னவோ கிரமவிட்டர் களைத்துப் போனார்.

இரவு நான்காம் ஜாமம் ஆகிவிட்டதை சேவல்கள் குரல் ஒலி எழுப்பியதன் மூலம் அறிய முடிந்தது.

விட்டரின் இல்லத்தில் சுவர்ப் பகுதியிலே சரசரவென்று சத்தம் ஒன்று கேட்டது. கிரமவிட்டர் தன் செவியைக் கூர்மையாக்கினார். ஆளரவமாகத்தான் இருக்கவேண்டும் என ஊகிக்க நெடுநேரம் பிடிக்கவில்லை அறையின் கதவைத் திறந்து வெளியே பார்த்தார். தலையில் முக்காடிட்ட உருவம் ஒன்று தூரத்தில் அசைந்து போவதை அவரால் அவதானிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தது.

யாரோ ஒருவன் – கயிலை வன்னியனின் ஒற்றனாக இருக்கலாம் தான் பேசிய அத்தனையையும் ஒட்டுக் கேட்டிருப்பானோ என்ற சந்தேகம் விட்டருக்கு உண்டாகியது.

□□□

# 13
# வெற்றிக்கடம்பன்

பனங்காம வன்னிபத்தின் எல்லைப் புறத்திலே மாந்தைத் துறைமுகத்தின் அண்மையிலுள்ள பாலாவியின் கரையில் யானைத் தந்தமும், பாக்கும் ஏற்றுமதி செய்வதற்குச் சென்ற வணிகர் குழுமீது ஒல்லாந்தப் படைகள் தாக்கியதை அறிந்த பனங்காமத் தளபதி வெற்றிக் கடம்பன் பத்து ஒல்லாந்த வீரரை வெட்டிச் சாய்த்த போது ஒல்லாந்தப் படை பின் வாங்கிய செய்தி பனங்காம வன்னிபத்துக்கு வந்து சேர்ந்து இருபது விநாடிக்கு முன் வெற்றிக் கடம்பன் பனங்காமம் வந்து சேர்ந்துவிட்டான். பெரிய யுத்தமாக இல்லாதவிடத்தும் ஆக்கிரமிப் பாளருக்கு வன்னியர் கொடுத்த முதல் அடி என்பதால் பனங்காமம் முழுவதுமே குதூகலமடைந்தது. எதுவித அரச ஏற்பாடுமின்றியே பனங்காம மக்கள் பெருவிழாக் கொண்டாடத் தொடங்கிவிட்டனர்.

அரச மாளிகையிலும் இச்செய்தியால் அளவிலாக் குதூகலம் அடைந்தவள் கயிலை வன்னியனின் ஒரேமகள் குஞ்சிநாச்சியார்.

வெற்றிக் கடம்பனின் முறுக்கேறிய உடற்கட்டும் உருண்டு திரண்ட புஜங்களும் எந்தக் கன்னிப பெண்ணையும் சுண்டி இழுக்கக்கூடிய ஆண்மை தோய்ந்த வசீகர வதனமும் படைத்தவன் வெற்றிக் கடம்பன். வன்னி ராச்சியம் எதனையும் கட்டியாளக்கூடிய புஜபலம் மிக்க இந்தத் தளபதி பார்வைக்கு ஓர் இளவரசனைப் போலவே தோற்றமளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி என்ற ரீதியிலே இவனின் வீரச் செயல்கள் அனைத்தையும் வியந்து நோக்கிய குஞ்சிநாச்சியார் இதயத்திலே அந்தக் கட்டழகுக் காளைமீது அவளை யறிமாலே அன்பு சுரக்கத் தொடங்கியிருந்தது. தன் இதய தாகத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் எதுவுமே அவளுக்கு கிடைக்காமல் போனது துர்லபந்தான்! படைப்பலத்தைப் பெருக்குவதிலும், ஒழுங்கு படுத்துவதிலும், பயிற்சி அளிப்பதிலும் தளபதி வெற்றிக் கடம்பனின் பொழு தெல்லாம் போய்க்கொண்டிருந்தது. போத்துக்கீசரும் ஒல்லாந்தரும் மதிப் பார்ந்த அச்சத்துடன் அணுகப் பயந்திருந்த கயிலை வன்னியனின் மாட்சிக்கும், திக்கெட்டும் புகழ்ந்தேத்தும் வீரத்திற்கும் வாரிசாகவே தளபதி கடம்பன் மிளிர்ந்தான். வன்னி அரச குலத்திலே பிறக்காது சாதாரண வேளாண்குலத்திலே பிறந்து தன் பராக்கிர மத்தையும் போர் ஞானத்தையும் வெளிப்படுத்தி வந்தான் வெற்றிக் கடம்பன். இவனது வீரதீரசாதனைகள் இவனைத் தளபதி என்னும் உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தியிருந்தன. எனினும் அரசிளங்குமாரியைக் கைப்பிடித்து இராச்சிய பரிபாலனஞ் செய்யும் வாய்ப்பு எதுவும் தனக்குக் கிட்டும் என்று எப்பொழுதேனும் நினைத்துப் பார்க்கக் கூட இல்லை.

கோட்டையையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிய ஒல்லாந்தர் பனங்காம வன்னிமைமீது படையெடுக்க ஏன் அஞ்சுகின்றனர்? பதினான்கு ஆண்டுகள் தேசாதிபதியின் தர்பாருக்குப் போகாதிருந்த கயிலை வன்னியனை எதிர்த்துப் போரிட்டு வன்னி நாட்டை அடிமைப் படுத்தப் போத்துக்கீசர் ஏன் முனையவில்லை? இவை யெல்லாம் வன்னிநாட்டின் வரலாற்றிலே எழுப்பப் படவேண்டிய வினாக்கள். சாதாரண வன்னித் தலைவன் என எண்ணாது முடிசூட்டி ஆளும் வேந்தனுக்குச் சமதையாக ஐரோப்பிய ஆட்சியாளரும், வரலாற்று ஆசிரியர்களும் கயிலை வன்னியனை ஏன் வர்ணிக்கிறார்கள்? கயிலை வன்னியனின் தனிப்பட்ட புஜபல பராக்கிரமம் மட்டுமன்றி

இதனை இதனால் இவன்முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்கப் பொருத்தமான படைவீரர்களையும் தளபதிகளையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சியும் ஆலோசனையும் வழங்கி நெறிப்படுத்தி வன்னிச் சேனையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக் குலையாது வைத்திருக்கும் கயிலை வன்னியனுக்கு ஒல்லாந்தர் அஞ்சுவதில் நியாயம் இருக்கிறது.

தீபங்குடிப் புலவர் புறநானூற்றையும், திருக்குறள் பொருட் பாலையும் கயிலை வன்னியரிடமிருந்து மறைப்பதற்கு முயன்று தோல்வி கண்டுவிட்டார் என்று தான் கூறவேண்டும். ஒரு நல்ல படையின் இலட்சணங்களை வள்ளுவன் தெள்ளுரையில் இருந்தும் அனுபவ ஞானத்திலிருந்தும் அறிந்து கொண்டார் வன்னியனார். ஒரு மன்னனின் செல்வம் ஏது? எதிரியின் படைக்கலத்தால் தமக்கு வீழ்ப்புண் ஏற்படுமே என்ற அச்சமற்ற படையே மன்னனின் செல்வமாகும்

உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாந் தலை

சேனையிலே பல்லாயிரக் கணக்கான வீரர்கள் இருந்தால்மட்டும் போதாது இவர்களை வழிநடத்த ஆற்றலும் தகுதியும் வாய்ந்த சேனைத் தலைவர்கள் வேண்டும். இத்தகைய தளபதிகளில் ஒருவனே வெற்றிக் கடம்பன்.

தளபதியை வரவேற்று வாழ்த்துக் கூறினார் இளவரசி குஞ்சிநாச்சியார் வெறும் வாழ்த்து மட்டுந்தான் கூறினாளா? கண்ணொடு கண்ணிணைகள் சந்தித்தன. வாய்ச் சொற்கள் பயனற்றுப் போக நாணிக் கோணி நின்றாள் நங்கை நல்லாள். அவளின் வேல் விழியின் தாக்கத்தினால் கிறங்கிப் போனான் வெற்றிக் கடம்பன். டச்சுப்படையின் துப்பாக்கிகளை வெறும் கைவாளால் வென்றுவிட்ட கடம்பன் குஞ்சியின் விழி வீச்சினால் பரிபூரண சரணாகதி அடைந்து விட்டான்.

உணர்வின் உந்தலால் ஏற்பட்டுவிட்ட இந்தக் காதலை அறிவின் துணை கொண்டு அலசிப் பார்த்தான் கடம்பன்.

வன்னிமைகளில் வளமும் வலியும் கொண்ட பனங்காம வன்னிமையின் அதிபதி கயிலை வன்னியனாரின் அரும்பெறற் புதல்வியைக் காதலியாக ஏற்பதன் சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்தான்.

"இந்த விஷயத்தை கயிலை வன்னியனார் அறிந்தால்........ இதுவரை காலமும் அவன்மீது வைத்திருந்த அன்பு கலந்த மதிப்பு, பதவி அனைத்தும் வெறும் தூசாகி மறைந்துவிட மாட்டாதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கவன்றான்.

எதற்கும் ஆற அமர ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்று நினைத்தானோ என்னவோ இளவரசிக்கு நன்றி கூறிவிட்டு வேறொன்றும் சொல்லாமலேயே அவ்விடத்தைவிட்டுச் சென்றான் கடம்பன்.

வெற்றிக்களிப்பில் நடந்து சென்ற கடம்பனை எதிர்கொண்டு வாழ்த்தினார் கிரமவிட்டர். தளபதி வெற்றிக் கடம்பன் ஒருவன் மட்டுமே வன்னி மண்ணின் சுதந்திரத்தைக் காக்கப் போதுமானவன் என வாழ்த்துத் தெரிவித்தார்.

நன்றி தெரிவித்த கடம்பன், "பாலாவி வரை பரந்திருந்த பனங்காம வன்னிபத்தின் மன்னார் கரையை ஒல்லாந்தர் ஆக்கிரமித்து விட்டது மட்டுமன்றி எங்கள் வணிகர்களைக் கள்ளக் கடத்தல்காரர் என்று வந்தவர்கள் வர்ணிப்பதுதான் மன்னருக்குப் பெரும் வேதனை" எனத் தன் கவலையைத் தெரிவித்தான்.

"ஆமாம், முல்லையும், மருதமும், நெய்தலும் சேர்ந்த வயல்படு செந்நெல், காடுபடு திரவியம், கடல்படு திரவியம் அனைத்தும் பாதிக்கப் பட்டுள்ளன" தன் கவலையை வெளிப்படுத்துவது போன்றிருந்தது விட்டரின் வார்த்தைகள்.

"வேதிய சிரேட்டரே, வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரும், தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரமும் இன்று அந்நியரின் காலடியில் மிதிபடுகின்றது. சிவநெறி மறவாச் சிந்தையரான மன்னார்ப் பெருங்குடி மக்கள் தென்னாடுடைய சிவனை மறந்து பரசமயம் புகுந்திருக்கும் பரிதாப நிலையை நாம் காண்கிறோம். அரிப்பிலே ஆழ மூழ்கி முத்தெடுக்க வன்னிமக்களுக்கு உரிமையே இல்லையாம், இப்படியெல்லாம் எண்ணி எண்ணி மனத்தைப் புண்ணாக்கிக் கொண்டிருக்கிறார் வேந்தர்"

"உண்மைதான் பனங்காம வன்னிபம் சுருங்கிப் போய்விட்டதைக் கவலையோடு மன்னர் எனக்கும் தெரிவித்தார். நாட்டு விஷயம் போகட்டும் தங்கள் சொந்த வாழ்க்கைபற்றி யான் தங்களோடு உரையாடலாமா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் வாழ்க்கையில் அப்படி என்ன உரையாட இருக்கிறது?"

"ஒன்றுமில்லை, கட்டிளங் காளையாகிய தாங்கள் இன்னும் வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொள்ளவில்லையே!" வெற்றிக் கடம்பன் மென்னகை புரிந்து "ஏன் எங்கேயோ பெண்பார்த்திருக்கிறீர்களோ?"

"நான்பார்க்கவில்லை பார்க்கவேண்டுமென்றால் எத்தனையோ இளவரசிகள் இந்த வன்னிமையிலே இருக்கிறார்கள். நல்லமாப்பாணரின் மகள்–அதாவது கயிலை வன்னியனாரின் அரசியாரின் தங்கை பாலிநாச்சியாருக்கும் தங்களுக்கும் திருமணம் நடைபெறப் போவதாக ஒரு கதை அடிபட்டதே அதில் எந்த அளவு உண்மையென்று......"

"கிரமவிட்டரே, இதுவரை என் காதிலே இந்தக் கதை எட்டவில்லை. நீங்கள் வலிந்து கேட்பதால் சொல்கிறேன். இதோ இந்த வாளும் கட்டாரியுந்தான் என் வாழ்க்கைத்துணைகள். பனங்காம வன்னிமை அந்நியரின் காலடியில் மிதிபட விடக்கூடாது என்பதுதான் என் வாழ்க்கையின் இலட்சியம்"

பிடிபடாமல் நழுவிச் செல்லும் கடம்பனுடன் இனிக்கதைத்துப் பிரயோசனம் இல்லை என்று கண்ட விட்டர் மீண்டும் அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு அவ்விடத்தை விட்டகன்று சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# வணிகர்வேஷம்

அந்தி மயங்கும் நேரம்; நாள் முழுவதும் கழனியிலே வியர்வைசிந்தி உழைத்த விவசாயிகள் தம் இல்லக் கிழத்தியரை நினைவில் சுமந்து கொண்டே வீடுநோக்கிச் செல்லும் நேரம், எருமைகளும் பசுக்களும் தத்தம் பட்டிகளை நோக்கிச் செல்லும் மாலைப் பொழுது. யாரோ ஒருவர் பனங்காம அரச மாளிகையை நோக்கிச் சிவந்த கொழுத்த புரவியின் மீது ஆரோகணித்து வந்து கொண்டிருந்தார். அரசமாளிகைக் காவலரும் ஏவலரும் புரவியில் வரும் அந்த ஆஜானுபாகுவான தோற்றமுடைய அவரை நோக்கியே வண்ணம் இருக்கின்றனர். கருஞ்சிவப்புத் துணியை முறுக்கி அவர் தலைப் பாகை அணிந்திருந்தார். அடர்த்தியான புதர்போன்ற் மீசை, குறுந்தாடி அவர் அணிந்திருந்த ஆடை அவரை ஒரு வணிகர் என இனங்காட்டுகின்றது. மன்னரைப் பார்க்க வருகின்றார் போலும் எனக் காவலர் எண்ணிக் கொண்டனர்.

இப்படி ஒருவரைக் காலையில் துணுக்காய் பகுதியில் கண்டதாக ஒருவன் கூறினான். வவுனிக் குளக் கட்டிலே குதிரையிலே செல்வதை பார்த்ததாக இன்னொருவன் கூறினான். பாலியாற்றங் கரையிலும், நந்தவனத்திலும் சிவபுரநாதர் கோயிலிலும் கண்டதாகப் பலரும் பலவாறாகப் பேசிக் கொண்டனர்.

குதிரையின் சேணத்மைப் பிடித்தபடியே குதிரையால் இறங்கிய கெம்பீரம் அவர் ஒரு அரசகுமாரராக இருக்கலாம் என்ற சந்தேகத்தைக் காவலருக்கு உணர்த்தியது. புரவியால் இறங்கியவர் காவலரைப் பார்த்து கரகரத்த குரலில் " நான் மன்னரைப் பார்க்க வேண்டும்" என்று கூறினார்.

"மன்னரைப் பார்க்கும் நேரம் இதுவல்ல" வெகு அலட்சியமாகப் பதிலிறுத்தான் காவலன்.

"அப்படி யென்றாள் எப்போது பார்க்களாம்?"

"மன்னர் அரசமாளிகையிலேயே இல்லை; அதிகாலையிலேயே அரண்மனையை விட்டுப் புறப்பட்டவர் ஏதோ ராஜ்ய விஷயமாகப் போயிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே போயிருக்கிறார்?"

"பனங்காமத்தரசர் வாயிற் காவலனாகிய எனக்கு இவற்றை யெல்லாம் கூறிவிட்டா செல்வார்? நாடு இருக்கிற நிலைமையில் இப்பொழு தெல்லாம் அரசரின் நடமாட்டம் அனைத்தும் அந்தரங்கமானவை. இதை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்"

"நீங்கள் கூறுவது சுத்தப் பொய்: மன்னர் இங்கேதான் இருக்கிறார்; அவரை நான் பார்த்தேயாகவேணும்" என்று குரலை மாற்றிக் கூறி தன் தாடியையும் மீசையையும் எடுத்துவிடுகின்றார்.

"மகாராசா, மன்னிக்கவேண்டும்; தாங்கள் யாரென்று தெரியாமல் ஏதேதோ பேசிவிட்டேன்" என்று கூறி அவரின் காலடியிலே சாஷ்டாங்கமாக விழுந்தான் வாயில் காப்போன்.

"எழுந்திரு; உன்மேல் குற்றமில்லை. எனது வேஷத்தைச் சோதித்துப் பார்க்கவே நினைத்தேன்; இதில் எனக்குப் பெருவெற்றி" என்று கூறிச் சிரித்தார் கயிலை வன்னியனார்.

காலையில் அரண்மனையை விட்டுச் சென்ற கயிலைவன்னியனார் வாணிபவேஷந் தரித்துக் கொண்டு பனங்காமம் முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டார். பனங்காமப் பிரஜைகளுடன் ஒட்டி உறவாடி நாட்டு நடப்புக்கள் ராஜ்ய பரிபாலனத்தில் நிறை குறைகள் அனைத்தையும் அறிந்து கொண்டார். அவருடைய முழுக்கவனமும் விவசாயப் பெருமகக்கள் மீதே இருந்தது. எல்லோருமே கயிலை வன்னியனாரது இராச்சிய பரிபாலனத்தை மெச்சுகின்றார்கள். தங்கள் வாழ்க்கையில் எதுவித குறைபாடும் இல்லை என்கிறார்கள். மன்னர் அறவிடுகின்ற அடை, ஆயம், தீர்வை ஆகிய நிலவரி, வாணிபவரி தானியவரி ஆகியவற்றை மனமுவந்தே தாங்கள் வழங்குவதாக கூறுகின்றார்கள். வரிசேகரிக்கும் பண்டாரப் பிள்ளைகள் நியாயமான முறையிலேயே நடந்து கொள்கிறார்கள்.

"அந்நியரான ஒல்லாந்தர், வன்னிமீது படையெடுக்கப் போகிறாராமே! அப்படிச் செய்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது ஒரு முதியவர் கொதித் தொழுந்தார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்நியப் படையினால் பனங்காமத்தை அடிமையாக்க முடியுமா? எங்கள் அரசரின் புஜபல பராக்கிரமத்தின் முன் எந்த அந்நியரும் வாலாட்ட முடியாது. நாங்கள் எல்லோருமே வாளும், வேலும், ஈட்டியும், கட்டாரியும், கதையும், குத்துவாளும், கவணும் கொண்டு ஆக்கிரமிப்பாளருடன் சமர்புரிவோம்."

"எங்கள் செல்வமாகிய மாடுகள் அனைத்தையும் போர்ச் செலவுக்காக அர்ப்பணிப்போம்" என்று இன்னொருவர் ஆர்ப்பரித்தார்.

"நாங்கள் வன்னித் தமிழர்; எவருக்கும் அடிபணிய மாட்டோம். எங்கள் மன்னன் அக்கினி குலச் சத்திரியன்" கொதித்துக் குமுறினான் இளைஞன் ஒருவன்.

"எங்களுக்குச் சோற்றைவிடச் சுதந்திரம் பெரிது; இந்தநாட்டின் பெண்குலம் குமுறி எழுமானால் அந்நியர் படை அடியோடு அழிந்துவிடும்" என்று ஆவேசத்துடன் கூறினாள் பேரிளம் பெண்ணொருத்தி.

வணிகர் வேஷத்திலிருந்த அரசர் கூறினார்: "சொந்தமண், சுதந்திரம் என்று பெயரில் வீணாக வலிமை மிக்க அந்நியரை எதிர்த்து இரத்தம் சிந்தாது பணிந்து போவது நல்லதுதானே. சில யானைகளும், மரங்களும், மான்தோலும், சாயவேரும் திறையாகத் தந்தால் போதும். மற்றும்படி வன்னிராச்சியம் சுதந்திரமாக இருக்கலாம் என டச்சு நிர்வாகம் மன்னருக்கு ஓலை அனுப்பியிருக்கிறதாமே"

"அதற்கு எம்மன்னர் என்ன பதில் அனுப்பியிருப்பார் என்பது எங்களுக்குத் தெரியும். போத்துக்கீசரும் ஓலைக்கு மேல் ஓலை அனுப்பிப் பார்த்தார்கள்; மிரட்டிப் பார்த்தார்கள்"

"இப்பொழுதும் இரந்து கேட்டால் ஏதாவது கொடுக்கலாமே ஒல்லாந்தருக்கு"

"வன்னிநாடு வந்தாரை வரவேற்பது; இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்று உரைக்காத வள்ளண்மை மிக்கவன் எம்மன்னன்"

கண்ணுக்கெட்டிய தூரம்வரை பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கும் வயல் பரப்பினை மன்னர் பார்வையிட்டுக் கொண்டு இராஜபாட்டை வழியாகச் சென்றார் மன்னர். தங்க நிறக் கதிர்களைத் தாங்கித் தலைகுனிந்து அழகு காட்டும் விளை நிலங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டுநிலத்தில் வளர்ந்து சடைபரப்பி நின்ற பருத்திச் செடிகள் கண்ணுக்கு விருந்தாக இருந்தன.

பாலியாற்றங் கரைக்குச் சென்ற அவர் அதன் அழகைக் கண்ணாரப் பருகினார். ஆற்றங்கரையின் இருமருங்கிலும் தோன்றும் தாழம்புதர்களின் அழகிலே சொக்கி நின்றார்.

ஆநிரைகள் ஆயிரக் கணக்கில் சாரி சாரியாக வந்து பாலியாற்றில் நீர் அருந்தும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட பின்னர் நீர்த் தேக்கங்களைப் பார்வையிட்டார். அவரை யறியாமலேயே ஒரு நெடுமூச்சு வெளிவந்தது. தனது மூதாதையர்கள் அருவி ஆற்றிலே ஓடம் விட்டு விளையாடியதையும், பூதக்குளத்தில்படகோட்டி நீரினில் ஆடி நிலவினில் பாடியதையும், சிலாபக்கடலில் மூச்சடக்கி முத்துக் குளித்ததையும் எண்ணி எண்ணிப் பெருமூச்சுவிட்டார்.

இப்பொழுது பாலி ஆற்றுடனும், பறங்கியாற்றுடனும், வவுனிக் குளத்துடனும், பனங்காமக் குளத்துடனும் திருப்திப்படவேண்டி இருக்கிறது.

வவுனிக்குளக் கட்டில் நின்று திரும்பிப் பார்த்தார். பக்கத்தில் இருந்த சோலையிலே மயில் கூட்டங்கள் தோகைவிருத்தாடின. அருகிலே புள்ளி மான்களின் மருண்ட பார்வை கட்டிளம் கன்னியரை அவருக்கு நினைவுறுத்தியது.

நெசவாளர், கைவினைஞர், அந்தணர் குடியிருப்புக்களுக்குச் சென்று விசாரித்தார். எல்லோருந்தான் ஆட்சியைப் பாராட்டிப் பேசினர். அந்தண வயோதிபர் ஒருவர்மட்டும் மாறுவேடத்திலிருந்த அரசரை நெருங்கிச் சென்று இரகசியமாக கூறினார்: "இந்த வீதியிலே கிரமவிட்டர் என்னும் அந்தணர் இருக்கிறார்.
இவர் வன்னியனாரின் மதியூக மந்திரியாம். காஞ்சிரங்காயன் என்னும் பெயர் படைத்த யாரோ ஒருவனுடன் இரவிரவாக சதியாலோசனை செய்கிறார். பனங்காமத்தரசுக்கு ஏதாவது கெடுதல் வருமாக இருந்தால் அதற்கு விட்டர்தான் காரணமாக இருப்பார் என்று என்மனம் கூறுகின்றது. மன்னரைச் சந்திக்கும் வாய்ப்பு மட்டும் எனக்குக் கிட்டினால் எல்லாவற்றையும் விரிவாகக் கூறக் கூடியதாக இருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா சங்கதி?" என்று கூறிச் சிரத்தையின்றித் தலை ஆட்டினார் வணிகர்.

கம்மாளர் தெருவிலே மும்முரமாக வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. வாள், வேல், ஈட்டி, குத்துவாள், மழு, தோமாரம், வளைவிற் பொறி, கைபெயர் ஊசி முதலியன தயாராகிக் கொண்டிருந்தன.

வணிகர் வீதியிலே சென்றவருக்கு மிகுந்த மகிழ்ச்சியான செய்தி கிட்டியது. இப்பொழுதெல்லாம் தம் வணிக முயற்சிகளைத் தடையின்றிச் செய்யக் கூடியதாக இருப்பதாக அவர்கள் கூறினர்.

காட்டு வழியாகத் தன் குதிரையைச் செலுத்தியவர் ஆங்காங்கு யானைத் தந்தங்கள் தேடுவார் அற்றுக் கிடப்பதைக் கண்டார். சிறுத்தைப்புலி ஒன்று ஓடியது. காட்டுப் பன்றிகள் கூட்டமாகக் காணப்பட்டன. கரடிகள் புற்றுச் சோற்றைச் சுவைத்துக் கொண்டு நின்றன.

முதிரை, கருங்காலி, பாலை, யாவறணை, இயவாகை, காட்டா மணக்கு, தேக்கு போன்ற வைர மரங்கள் காட்டிலே நிறைந்திருந்தன.

தேன்வதைகளைச் சுரைக் குடுவில் நிரப்பிக் கொண்டு செல்பவர்களையும், வேட்டைநாய்கள் புடைசூழ மான் இறைச்சியை காவிக் கொண்டு செல்பவர்களையும் அவர் பார்த்தார்.

மான், மரைத் தோல்களை முளையில் இறுக்கி வெயிலில் காயவிட்டுக் கொண்டிருந்தனர் சிலர்.

அரசமாளிகை சென்ற வன்னியனார் சிந்தனையில் ஆழ்ந்தார். பிரஜைகளது நாட்டுப்பற்று அவருக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்தது. வயோதிப அந்தணர் கூறியது அவரின் சிந்தனையை ஆக்கிரமித்தது.

மதியூக மந்திரியாக இருக்கும் கிரமவிட்டன் உடனிருந்து குழிபறிக்கும் காதகனா? காஞ்சிரங்காயன் என்பவன் யார்? இவற்றிற்கான விடையை விரைவிலே அறிந்து கொள்ளவேண்டும். இது அவ்வளவு கஷ்டமான வேலையல்ல. கைதேர்ந்த ஒற்றர் படை இருக்கும் போது இதனை மட்டும் கண்டுபிடிக்க முடியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையில் ஆழ்ந்திருந்த மன்னரின் முன்னிலையில் தூதுவன் ஒருவன் தோன்றினான். மஹாநுவர என்னும் கண்டிராச்சிய மன்னனான இரண்டாம் இராஜசிங்கனின் தூதுவனாம். ஓலை கொண்டு வந்திருந் தான். ஓலையைப் படித்துவிட்டு அதனைப் பத்திரப்படுத்திக் கொண்டார் மன்னர்.

ஓலையின் விபரம் எதுவும் எவருக்கும் அறிவிக்கப் படவில்லை. மாளிகைச் சுவருக்குக் கூடச் செவி உண்டு என்று கருதினாரோ என்னவோ.

மாளிகையில் தூதுவனுக்கு உரிய உபசாரங்கள் செய்யப்பட்டன. மறு ஓலை அனுப்பிவைக்கப்படும் என்பதைக் கண்டி மன்னருக்குத் தெரிவிக்குமாறு மட்டும் கூறித் தூதுவனை அனுப்பி வைத்தார் வன்னியனார்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# ஆணை கட்டிய அரியாத்தை.

உச்சி வெய்யில் தகித்துக் கொண்டிருந்தது; பங்குனிமாதப் புழுக்கம். பனையோலையால் விசிறிக் கொண்டிருந்தான் நீலப்பணிக்கன். கடந்த சிலமாதங்களாக அவன் மனச்சாட்சி அவனைக் குத்திக் குதறிக் கொண்டிருந்தது. உணர்வுக்கு அடிமைப்பட்டு, பழிவாங்க வேண்டும் என்ற உந்துதலால் அவன் நிறைவேற்றி முடித்த படுபாதகச் செயலை எண்ணி எண்ணி வருந்திக் கொண்டே நாட்களைக் கடத்தினான். அவன் வாழ்ந்துவந்த குமாரபுரம் அவனுக்குக் கசப்பை ஊட்டியிருக்க வேண்டும். அங்கே அவன் பார்த்த இடமெல்லாம் அந்த வீராங்கனையின் நினைவையே ஊட்டின.

பனங்காம வன்னியன் யானை பிடிப்பதற்கென அழைப்பு விடுத்த போது அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்றான். இடமாற்றம் சற்று வேதனையைக் குறைக்கலாம் என்று எண்ணினான். அவன் எதிர்பார்த்தற்கு மாறாக அவன் துயரம் தணியவில்லை. வந்து இரண்டு மாதமாகியும் எத்தனை யானைகள் பிடிக்க முடிந்தது? ஐந்து யானைகள் கூட இல்லையே! யானை பிடிப்பதில் வேலப்பணிக்கனைப் போன்ற திறமசாலியாக இல்லா விட்டாலும் இரண்டு மாதங்களில் குறைந்தது பத்துப் பன்னிரண்டு யானைகளாவது பிடித்திருக்க வேண்டும்!.

முன்பெல்லாம் கயிலை வன்னியனார் யானைகளை மாந்தைத் துறைமுகத்தில் வியாபாரிகளுக்கு விற்பதன் மூலம் அரச பொக்கிஷத்தை நிரப்பிவந்தார். இப்பொழுது அவருக்கொரு ஆசை ... இல்லை இல்லை தேவை ஏற்பட்டிருக்கிறது. யானைப் படையொன்றை உருவாக்க வேண்டும் என்பதே அவரின் ஆசை.

ஏழு ஊர்ப் பணிக்கர்களுக்கு அழைப்பு விடுத்தார். நீலப்பணிக்கன் செல்லப்பணிக்கன்,காக்கைப்பணிக்கன் என்று பலர் வந்திருந்தார்கள். வேலப்பணிக்கன் மட்டும் வரவில்லை என்ற கவலை அவருக்கு. வேலப் பணிக்கனுக்கு நடந்ததை அவர் அறிவாரா? உண்மையை மன்னருக்கு எப்படி உரைப்பது?

இப்படி யெல்லாம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த நீலப்பணிக்கனை நோக்கி மேற்பற்று வன்னிமையைச் சேர்ந்த காக்கைப்பணிக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கொண்டிருந்தான்.

"என்னப்பா நீலா எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்காக சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாய் கரகரத்த குரலில் காக்கைப் பணிக்கன் கேட்டதும் திடுக்கிட்டு விழித்தான் நீலப்பணிக்கன்.

"வா வா இப்படி இரு" என்று மரக்குற்றியொன்றைக் காட்டிய "நீலப்பணிகன் அவனைப் பார்த்து" என்னப்பா இந்த வேகாத வெய்யிலில் வந்திருக்கிறாய் என்ன விஷயம்" என்று கேட்டான்

"விஷயத்துடன் தான் வந்தேன்" மன்னர் அவசரப்படுத்துகின்றார் இன்னும் இரண்டு வாரங்களில் நூறு யானைகளாவது பிடித்துவிட வேண்டுமாம். இதுவரை ஐம்பது கூடத் தேறவில்லை"

"ஆமாம், என்னால் ஐந்து யானைகளைக் கூடப் பிடிக்க முடியவில்லையே. எந்த யானையைப் பார்த்தாலும் அரியாத்தைதான் என்கண்முன் வந்து நிற்கிறாள்!" அவனின் பேச்சில் கவலையே பிரதிபலித்து

"என்ன நீலா, அவள்தானே உன் காதலை உதறிவிட்டு வேலப் பணிக்கனை மணந்து கொண்டவள்.

"உண்மைதான் அதன்பின்பு அவளுக்கு நடந்த கதை தெரியாதா?"

"கதையொன்றும் இருக்கிறதா? சுவையாக இருக்கும் போல் இருக்கிறது. என்ன கதை? அதனைச் சொல்லமாட்டாயா?"

"சொல்லத்தான் போகிறேன் இதுவரை யாருக்கும் சொல்லாமல் மனதில் அடக்கி வைத்திருந்ததால் என் இதயமே வெடித்து விடும் போல் இருக்கிறது . நீ அரை குறையாகக் கேள்விப்பட்டிருப்பாய். அரியாத்தை எப்படி செத்தாள் என்று தெரியுமா?" நீலப் பணிக்கன் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்வதைக் காட்டிக் கொள்ளாமல் மறுபக்கம் திரும்பித் துடைத்துக் கொண்டான்.

"யாரோ பெல்லி சூனியம் விட்டுவிட்டார்கள் என்றுதான் கேள்விப்பட்டேன்"

"அது சரியான தகவல் அல்ல; சின்னவன்னியன் கண்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டில் மதங்கொண்டு திரியும் யானையை மடக்கிப் பிடிப்பதற்காக பணிக்கர்களை அழைத்து ஆலோசனை நடத்தினான். வேலப்பணிக்கனால் தான் இது சாத்தியமாகும் என்று அமைச்சர் ஒருவர் கூறினார். என் உள்ளத்தில் புதைந்திருந்த வெப்பிசாரம், பொறாமைத் தீ கனன்று எரியத் தொடங்கியது. என்காதலை உதாசீனம் செய்த அரியாத்தையின் செயல் எனக்குப் பெருத்த அவமானத்தை ஊட்டியிருந்தது. பெருவீரன் என்று எண்ணி வேலப்பணிக்கனைக் கைப்பிடித்தாளே அரியாத்தை அவளை அரச சபையிலே அவமானப்படுத்த எண்ணினேன்.

"வேலப்பணிக்கனால்; முடியாது அவன் மனைவி அந்த ஆணவரக்கார அரியாத்தை ஒருவேளை மதங்கொண்ட யானையை மடக்கிப் பிடிக்கலாம்" என்றேன். சபையோர் குபீர் என்று சிரித்துவிட்டனர். கவலையுடன் வீடுசென்ற வேலப்பணிக்கன் சபையில் நடந்ததை மனைவிக்குக் கூறியிருக்கிறான். அவளும் யாரும் பிடிக்க முடியாத அந்த மதயானையை பிடித்து அதன்மீது ஆரோகணித்து குமாரபுரம் நோக்கி வந்தாள். யானையைப் புளிய மரமொன்றில் கட்டினாள். அப்பப்பா! அரச சபையில் அவளுக்கு நடந்த உபசாரம் கொஞ்ச நஞ்சமா? இந்த நிகழ்ச்சி எனக்குப் பெரிய ஏமாற்றத்தையும் சொல்ல வொண்ணா வேதனையையும் தந்தது. அந்த ஆணவக்காரியைச் சும்மா விடக் கூடாது என்று எண்ணினேன். என் மனைவியை அவளுடன் சிநேகம் கொள்ளச் செய்தேன். தந்திரமாக என் மனைவியாள், அரியாத்தைக்கு நஞ்சை ஊட்டிவிட்டாள். அந்த மாதரசி வீரசுவர்க்கம் அடைந்துவிட்டாள். கணவன் இறந்துவிட்டால் துயரந் தாங்காத மனைவி அவன் சிதையிலே வீழ்ந்து இறப்பது தான் வழக்கம். மனைவியின் மறைவால் துயரந்தாங்காது உடன் கட்டை ஏறிய ஆண்மகனை எங்காவது பார்த்திருக்கிறாயா? என்று ஒரு வினாவைத் தொடுத்தான் நீலப்பணிக்கன்.

இல்லை யென்பதற்கு அற்குறியாகத் தலையசைத்தான் காக்கைப் பணிக்கன்

"வேலப்பணிக்கன் என்ற அந்த மாவீரன் மனைவியின் சிதையில் வீழ்ந்து உடன்கட்டை ஏறி மரணத்தைத் தழுவிக் கொண்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் நடந்த கதை. முன்பின் யோசியாமல் நான் செய்த அந்தப்பாபச் செயல் என்னைத் தொடர்ந்து வருத்திக் கொண்டே இருக்கின்றது. இப்பொழுது சொல்; என்னால் நிம்மதியாக எந்த வேலையையும் செய்ய முடியுமா?" ஆவேசப்பட்டான் நீலப்பணிக்கன்,

காக்கைப்பணிக்கன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவசர புத்தியினால் எழுந்த அடங்காதசினத்தினால் செய்யக் கூடாததைச் செய்து தற்போது கழிவிரக்கப்படுத்துகின்ற அந்த நீலனை ஆரத் தழுவினான். சற்று அவனை ஆசுவாசப்படுத்தி விட்டுக் கூறினான்:

"நண்ப, உன்னைப் பார்த்தாலே கவலையாக இருக்கின்றது. நீ செய்த பாபத்திற்காகத் தற்போது கவலைப்படுகின்றாய். நீவணங்கும் தெய்வமான குமாரபுரம் சித்திரவேலாயுதப் பெருமானிடம் முறையிடு அவர் உனக்குச் சாந்தியைத் தருவார். உன் கவலை தீரும்."

"நன்றி, இப்போதுதான் எனக்கு ஆறுதலரக இருக்கிறது." என்றான் நீலப்பணிக்கன்.

"கடவுள் நம் செயல்களை யெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். இறைவனிடம் சரணாகதி அடைந்துவிட்டால் துன்பம் எல்லாம் பறந்து போய்விடும். துரியோதனன் சபையிலே துகிலுரியப்பட்ட பாஞ்சாலி முதலில் தன் கணவர்களை நம்பினாள்; ஆனால் அவர்கள் அவளைக் காப்பாற்ற வில்லை. தன்கையை நம்பினாள்; தன்கையினால் மானத்தைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்தாள் . அதுவும் முடியாமல் போகவே இரு கைகளையும் உயர்த்திய படியே 'கோவிந்தா,கோவிந்தா' என்று கடவுளிடமே சரணடைந்தாள். அவள் துகில் வளர்ந்தது. மானம் காப்பாற்றப்பட்டது." காக்கைப் பணிக்கன் சற்று நிறுத்திவிட்டு நீலனைப் பார்த்தான்.

"உண்மை, உண்மை; இறைவன் தான் மனக்கவலை மாற்றும் மருந்து" என்றான் அவன்.

"எனக்குக் கவலை ஏற்படும் போதெல்லாம் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரனையே சரணடைவேன். அவர் என்கவலைகளைத் தீர்த்து வைப்பார். இப்படித்தான் ஒருமுறை மேற்பற்று வன்னியனார் குறிப்பிட்ட அவகாசத்திலுள் யானைகள் பிடித்துத் தருமாறு கட்டளையிட்டார். அரச கட்டளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றாவிட்டால் என்ன தண்டனை தெரியுமா? மன்னன் சற்று இரக்கம் காட்டினால் பாதாளச் சிறை! காட்டாவிட்டால் சிரச்சேதம்.! எனது போதாத காலமோ என்னவோ எங்கு தேடியும் யானை கிடைக்கவில்லை. தான் தோன்றி ஈஸ்வரப் பெருமானிடம் முறையிட்டேன். அவர் எனக்கு யானை நிற்கும் இடத்தைக் காட்டினார். அந்தப் பெருமான் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் சிறிய கோயிலைப் பெருப்பித்துக் கட்டிய பாக்கியம் எனக்குக் கிட்டியது." என்று பக்திப் பரவசத்துடன் கூறிமுடித்தான் காக்கைப் பணிக்கன்.

"ஆமாம், இப்படி ஒருவருக்கொருவர் கதை கூறிக் கொண்டிருந்தால் எப்படி யானை பிடிப்பது? இனிமேல் கொஞ்சம் உசாராகத் தொழிற்பட வேண்டும்." என்று கூறினான் நீலப் பணிக்கன்.

"எப்படியும் மன்னவன் கட்டளையை நிறைவேற்றி வைப்போம். நீலா, நான் மேற்பற்றிலிருந்து யானை பிடிக்க ஏன் வந்தேன் தெரியுமா? ஏதோ மன்னவன் தரும் ஊதியத்தைப் பெறுவதற்காகவா? அப்படி யெல்லாம் செல்வத்தைப் பெருக்கவேண்டும் என்ற ஆசை எனக்கில்லை. தேவையும் இல்லை. எனது சேவையை மெச்சி மேற்பற்று வன்னியனார் மூன்று போகம் விளையும் வயல் வெளியையும் தனிக் குளத்தையும் மானியமாகத் தந்துள்ளார். போன போகத்து நெல்லே என்வீட்டுக் கொம்பரையை நிறைத்துவிட்டது. இந்தப் போகம் விளையும் நெல்லை என்ன செய்ய வேண்டும் என்பதுதான் தெரியவில்லை. என் மனையாள் இல்லை யென்றிரப்போர்க்கு இல்லை யென்றுரையாது அள்ளிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறாள். இப்பொழுது அங்கே ஆனை பிடிக்கும் வேலையும் இல்லை. இந்த வைரம் பாய்ந்த முறுக்கேறிய தேகத்தைச் சும்மா வைத்திருக்கக் கூடாது என்று எண்ணத்தாலே ஒரு பொழுது போக்காகவே யானை பிடிக்க வந்தேன். வன்னிமண்ணைக் காக்கும் மன்னன் பணியிலே இந்தச் சிறுசேவை யென்றாலும் செய்யலாம் என்பது தான் என் எண்ணம்."

"எனக்குத் தெரியும்; காக்கைப் பணிக்கன் குளம், காக்கைப் பணிக்கன் வயல் என்றெல்லாம் மேற்பற்று மக்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். நீ சேவைக்காக வந்தாய், நான் நிம்மதியைத் தேடிவந்தேன். இருவர் எண்ணமும் நிறைவேறத்தான் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

# பாலும் கசந்தது

காதலன் முன் கன்னிப பெண்ணின் முகம் நாணத்தால் சிவப்பது போல அந்திவானம் சிவந்திருந்தது. சீதளக் காற்று நந்தவனத்தின் நானாவித மலர்களின் வாசனையை எங்கும் சிந்திக் கொண்டிருந்தது நறுஞ்சோலையின் முல்லைப் புதருக்குப் பக்கத்தில் போடப்பட்ட பளிங்காலான இருக்கையில் அமர்ந்திருந்தாள் இளவரசி குஞ்சி நாச்சியார். இந்த இருள் கவ்வும் வேளையில் இவள் யாரையோ எதிர்பாத்திருக்கிறாள் போல் இருக்கிறது. அந்த யாரோ இன்னும் வரவில்லைப் போலிருக்கிறது. அவர் வருவாரோ மாட்டாரோ என்கின்ற நிச்சயமற்ற நிலையிலும் அளுக்கொரு நம்பிக்கை இருந்தது.

பாலாவியில் வெற்றிக் கொடிநாட்டிய வெற்றிக் கடம்பனை வாழ்த்திய நாள் முதல் அவளுக்குப் பாலும் கசந்தது, படுக்கை நொந்தது. வழக்கமான குதூகலம் அடியோடு மறைந்துவிட நினைவிலும் கனவிலும் அவள் நெஞ்சில் சுமந்துவரும் அந்த மோகன வீரத் திருவுருவமே தோன்றித் தோன்றி அலைக்களிக்கும். அரசகுமாரியாகிய அவள் ஒரு சாதாரண குலத் தளபதியைக் காதலிப்பது பொருத்தமான செயல்தானா என அறிவு அவளைக் கேட்டுக் கொண்டே இருந்தது. அறிவாராய்ச்சியை காதல் உணர்வு துரத்தி அடித்துவிட்டது. அந்த வெற்றித் திருமகன் மேல் அவள் கொண்டிருந்த பிரேமையை அவன் தான் எப்படி அறிவான்? வாய்ச் செல்லால் சென்னால்தான் தெரியுமா? அன்று எங்கள் கண்கள் பேசிக் கொண்டனவே! சூசகமாகவேனும் அவருக்குத் தெரிவித்திருக்கலாம். ஆயிரக் கணக்கான படைவீரர் இருந்தும் நாட்டைக் கோட்டைவிடும் மன்னனைப் போல அவருக்காக ஏங்கி ஏங்கித் தவித்தவள் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியிருக்கலாம்!

"நான் மட்டும் இப்படி உருகுவது போல அவரும் என்னை நினைப்பாரோ அல்லது போர்ப்பயிற்சி, படைப்பயிற்சி, எல்லைக் காவல், ஒற்றர்பணி இப்படி எல்லாம் அலைந்து திரிவாரோ? பாவம் பனங்காம வன்னிமையின் சுதந்திரத்தைக் காப்பதற்காக இரவும் பகலும் பஞ்சாகப் பறக்கிறார்! கடமை கடமை என்று காலமெல்லாம் உலைகின்றார். காதல் என்ற புனித உணர்வு அவர் இதயத்தில் என்றும் ஊற்றெடுக்காதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் அறிவார்? 'வெற்றிக் கடம்பன் என் உள்ளம் கவர் கள்வர்" கண்ணை மூடிக்கொண்டே கடம்பனின் நாமத்தை உச்சரித்தக் கொண்டிருந்தாள் இளவரசி.

"இளவரசியாரே" என வெற்றிக் கடம்பன் அழைத்ததுமே திடுக்கிட்டுக் கண்விழித்த இளவரசி காதல் பொங்கக் கடம்பனை விழுங்குவது போல் பார்த்துவிட்டு "என் பிராத்தனை கைகூடிவிட்டது" எனத் தேனிலும் இனிய மொழியில் ரீங்காரம் செய்தாள்.

"இளவரசியாரே நாட்டின் சுதந்திரத்துக்காகப் பிராத்தனை செய்கிறீர்களா?"

"ஆமாம், ஒரு சிறு திருத்தம்; நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அல்லும் பகலும் பாடுபடும் ஒருவருக்காக, அவரின் அன்புக்காக, வெட்கத்தை விட்டுச் சொல்வதானால் அரவணைப்பிற்காகப் பிராத்தனை செய்கிறேன்."

"இளவரசி!"

" 'குஞ்சி ' என்று என்னை அழைக்க மாட்டீர்களா?"

"மாட்டேன், அது அரசகுலத்தை அவமதித்ததாகும்"

"வேண்டாம் இந்த வரட்டு மரியாதை; குஞ்சி என அழைக்க முடியாவிட்டால் நீங்கள் இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள். தளபதி ஒருவனுக்காகப் பனங்காமத்தின் இளவரசி ஏங்கித் துடித்து தன் உயிரையே முடித்துக் கொண்டாள் என்று சரித்திரம் பொறித்து வைக்கட்டும்."

"கோபத்தைப் பார், என் கோமளமே உன் இதயத்துதித்துப் பிரவாகித்தோடும் காதல் என்னும் புனித ஊற்றில் நீராடிப் பாடவேண்டும் என்ற ஆசை எனக்கு இல்லாமல் இல்லை என்றாலும் ......"

"என்ன என்றாலும்........"

"காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு படும் இன்பத்திலும் மேலான தொரு இன்பத்தை அனுபவிக்கத்தான் என் உள்ளம் துடிக்கிறது"

"மேலான இன்பமா? "

"ஆம், அந்நியருடன் அருஞ்சமர் புரிந்து பிறந்த பொன்னாட்டைக் காக்கும் போது அகத்திலே சுடர்விடும் இன்ப லாகிரி இருக்கிறதே அதுதான் பேரின்பம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படி யென்றால்....."

"உன் தூயகாதலைப் புறக்கணிக்கிறேன் என்பது அர்த்தமல்ல எப்பொழுதாவது நான் ஒருத்தியை மணம் புரிவதாக இருந்தால் அந்தப் பெண் குஞ்சியாகத்தான் இருக்கும்"

"அதுவரையும் ..........? "

"நீ பொறுத்திருக்க வேண்டும்; அதுமட்டுமல்ல போர்க் களத்திலே புலியெனப் பாயவேண்டும்; மாற்றாரைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ய வேண்டும். "

"சுவாமி "

"அரசர் தங்களுக்கு இளவயது தொடக்கமே இராச்சிய விவகாரங்கள் மட்டுமல்ல படைக்கலப் பயிற்சியும் அளித்திருக்கிறாரே அதெல்லாம் எதற்காக? "

"சுவாமி, தாங்கள் எமது கடமையை உணர்த்திக் கண்ணைத் திறந்திருக்கிறீர்கள். தங்களுடன் களத்தில் புகுந்து போராடத் தயாராகி விட்டேன் "

" அன்பே, கடமை என்னை அழைக்கிறது: கணநேரமும் தாமதிக்க முடியாது. சென்று வருகிறேன் விடைகொடு."

"சுவாமி, தங்கள் இலட்சியத்திற்காக நானும் உழைப்பேன் சென்று வாருங்கள் " கடம்பனின் கையில் முத்தமிட்டு வழியனுப்பி வைக்கிறாள்.

□□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

# சதியாலோசனை

கொழும்பிலிருந்து ஒல்லாந்த தேசாதிபதி றைக்லொவ் வான் கூன்ஸ் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு யாழ்ப்பாண நிர்வாகம் தடல்புடல் ஏற்பாடுகளை மேற்கொண்டது. டச்சுக் கொமாண்டர் அன்ரனியும், அரச அலுவலரும், ஆலோசனைச் சபையினரும் பம்பரம் போன்று சுழன்று எல்லா ஏற்பாடுகளையும் குறைவற நிறைவேற்ற முன்வந்தனர். தேசாதிபதி தங்குவதற்கான பிரத்தியேக மாளிகை புதுக்கோலம் பூணத் தொடங்கியது. அவரது வரவேற்பறை, சயன அறை, ஆலோசனை மண்டபம், விருந்து மண்டபம் அனைத்தும் வேண்டிய தேக்கு, கருங்காலி தளபாடங்களால் கலையழகுடன் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது. தேசாதிபதி மாலை வேளையில் உலாவரும் நந்தவனம் புதுப்பொலிவுடன் சீரமைக்கப்பட்டது. வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடிந்த பின்னர் தான் கொமாண்டருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

தேசாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்திற்கு இன்னும் ஐந்து நாட்கள் தான் இருந்தன. இதற்கிடையில் வன்னிமைகள் உட்பட யாழ்ப்பாண இராச்சியம் முழுவதினதும் பத்து ஆண்டு காலப்பகுதிக்குரிய விரிவான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.கொமாண்டர் தமது வழக்கமான மது, மாது சுகபோகங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு கடுமையாக உழைக்கவேண்டி இருந்தது. இடையிடையே உற்சாகப் படுத்திக் கொள்ள சிறிதளவு பியர்மட்டும் அருந்துவதைத் தவிர்க்க முடியவில்லை.

அரச அதிகாரிகள், ஆலோசனைச் சபையினர், ஒற்றர்,தூதுவர் ஆகியோர் அடங்கிய சபையைக் கொமாண்டர் அவசரமாகக் கூட்டினார். யாழ்ப்பாணத்திலும் வன்னிமைகளிலும் நிலவும் நிலைமைகள், பெற்றுக் கொண்ட அரசிறை வருமானம், வன்னியர் செலுத்திய திறைப்பொருள்கள், ஒல்லாந்த நிர்வாகத்திற்கு மக்களும் வன்னித் தலைவர்களும் காட்டும் விசுவாசம், மக்களதும் குறுநில ஆட்சியாளர்களதும் மனப்பாங்குகளும் மனஉணர்வுகளும், யாழ்ப்பாணத்திலும் பூநகரி, ஆனையிறவு ஆகிய இடங்களிலும் கட்டப்பட்டிருக்கும் கோட்டைகளும் அவற்றின் செயற்பாடுகளும் விரிவாக ஆராயப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரித்திறைப் பொருட்களுக்குப் பொறுப்பான அதிகாரி அறிவழகன் தன்பதிவுகளில் இருந்து வேண்டிய தகவல்களைக் கொடுத்தான். அறிவழகன் என்னும் பெயரை உச்சரிக்கும் போது கொமாண்டர் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டார். 'இவனிடம் அறிவும் இல்லை அழகும் இல்லை' இதனால் இவனை அறிவழகன் என்று அழைக்கும் போது இரண்டுபொய் சொல்லவேண்டி இருக்கிறது! என வேடிக்கையாகக் குறிப்பிடுவார். ஒல்லாந்த நிர்வாகத்துக்கு விசுவாசமாகக் கடந்த பத்து ஆண்டுகள் உழைத்து வருவதால் அவன் பதவியில் நிலைக்க முடிந்தது. யாழ்ப்பாணத்திலே எத்தனை கற்றறிந்த மேதைகள் இருக்கிறார்கள் ஆனால் அவர்கள் எல்லோரையும் நம்பிவிட முடியுமா?

அடங்காப்பற்றிவுள்ள ஏழுவன்னிமைகளில் செட்டிகுளம் ஒன்று தான் ஒல்லாந்த அரசிற்கு விசுவாசமாக ஆண்டு தோறும் திறைசெலுத்தி வருகிறது. ஏனைய ஆறு வன்னியர்களும் ஒருவருக் கொருவர் உறவு முறையால் பிணிக்கப்பட்டவர்கள். கடந்த பத்து ஆண்டுகளில் தென்னன் மரபடி வன்னியன் நான்கு ஆண்டுகளும் கரிக்கட்டு மூலை வன்னியன் ஐந்து ஆண்டுகளும், கருநாவல் பற்றுவன்னியன் இரண்டு ஆண்டுகளும் முள்ளியவளை, மேற்பற்று வன்னியர்கள் ஒரு ஆண்டும் டச்சு நிர்வாகம் விதித்த திறைப் பொருட்களாகிய யானை, மரம், மான்தோல் அகியவற்றை அரை குறையாகச் செலுத்தியுள்ளனர். பனங்காமத்து கயிலை வன்னியன் ஒரு முறை கூடத் திறை செலுத்தவில்லை. நயமாகவும் பயமாகவும் அவனுக்குப் பலமுறை ஓலை அனுப்பப்பட்டது. இதனையெல்லாம் செருக்கு மிகுந்த கயிலை வன்னியன் உதாசீனம் செய்திருக்கிறான்.ஒரு வன்னித் தலைவன் என்பதை விட சுதந்திரமான இறைமையுடைய அரசன் என்றே தன்னைக் கருதுகின்றான். அக்கினி குலத்தைச் சேர்ந்த சத்திரியன் எனக் கூறிக் கொள்ளும் இவன் ஆடம்பரமான புதிய அரண்மனை ஒன்றை நிர்மாணிப்பதில் ஈடுபட்டிருக்கிறான். பனங்காம வன்னிமைக்கு மாத்திரமன்றி வன்னிமைகள் அனைத்திற்கும் சக்கரவத்தியாக முடிசூடி அரசோச்சுவதற்கு விரிவாகத் திட்ட மிட்டிருக்கிறான். இதனைச் செவிமடுத்த கொமாண்டரின் முகத்திலே கோபக் கனல் பறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிகளை உருட்டிய படியே "என்ன ? கயிலை வன்னியன் முடிசூட்டுவிழா நடத்தத்தான் போகிறானா? யார் சொன்னது?"

"எமது ஒற்றர் படைத்தலைவன் காஞ்சிரங்காயன் என்னும் கணநாதன் கூறினான்"

"இந்தப் பத்து ஆண்டுகளில் ஒரு முறை கூட அவன் தன் விசுவாசத்தைத் தெரிவிக்க யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தர்பாருக்குச் சமுகமளிக்க வில்லை. மிகவும் வற்புறுத்தி ஓலை அனுப்பியபோது ஒருமுறை மட்டும் தான் வராமல் தனது மாமன் நல்ல மாப்பாணனை அனுப்பினான். தன்படை பலத்தைப் பெருக்குவதிலும், ஏனைய வன்னியர்களைத் தன்பக்கம் ஈர்த்து ஒல்லாந்த நிர்வாகத்திற்கு எதிராளிகளாய் ஆக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றான். அடங்காப்பற்றின் அரைவாசி நிலப்பரப்பு இவ்வன்னியனின் ஆட்சியில் இருக்கிறது. கயிலைவன்னியனின் வாலை ஒட்ட நறுக்க வேண்டும்" ஆர்ப்பரித்தார் கொம்மாண்டர்.

குற்றப்பிரிவு, போக்குவரத்திற்குப் பொறுப்பான அதிகாரி மருதையினார் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார். "யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தப்பியோடிய குற்றவாளிகள் இருபத்தொருபேர் கயிலை வன்னியனிடம் சரணடைந்துள்ளனர். இக்குற்றவாளிகளைக் கயிலை வன்னியன் எம்மிடம் ஒப்டைக்கவேண்டும். அதற்கு ஒரு குற்ற வாளிக்கு இரண்டு இறைசால் வீதம் சன்மானம் வழங்கப்படும். எனினும் இவர்களை அவன் எம்மிடம் ஒப்படைக்கவில்லை. நமது வியாபாரிகள் வன்னிப் பிரதேசத்திற்கூடாகப் பிரயாணம் செய்வதற்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு வன்னியரைச் சார்ந்த போதும் கயிலை வன்னியன் இவர்களுக்கு உதவி செய்யாது விட்டதுமன்றி இவர்களைத் துன்புறுத்தியுள்ளான்."

"அப்படியா? இந்த விடயங்கள் இதுவரை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அதிகாரிகளின் அசட்டையும் கையாலாகாத் தனமும் ஒல்லாந்த நிர்வாகத்தைச்சிதைத்தவிடும் போல் இருக்கிறது. எங்களின் இராஜதந்திரமும் சூழ்ச்சிகளும் கயிலை வன்னியனைப் பொறுத்த அளவில் புறக்குடத்தில் வார்த்த நீராகிவிட்டன. சாம, பேத, தான,தண்டத்தில் இனிக் கடைசி மார்க்கத்தைத்தான் கடைப்பிடிக்க வேண்டும்." கொமாண்டரின் முகம் விகாரமடைந்து கறுத்துச் சிறுத்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ சிந்தித்தவர், "இவற்றை யெல்லாம் தேசாதிபதிக்குத் தெரிவித்தால் என்னை நிர்வாகத் திறமையும் இராஜதந்திரமும் அற்றவன் எனக் கருதக் கூடும். இதனால் எனது பதவிக்கே ஆபத்து வரலாம். எப்படியும் கயிலை வன்னியனின் கொட்டத்தை அடக்கி பனங்காமத்தை அடிமைப்படுத்தினாலன்றி அடங்காப்பற்றை நம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முடியாது. இதனைத் தேசாதிபதிக்கு வலியுறுத்திக் கூறவேண்டும்" எனத் தனக்குள்ளே நினைத்துக் கொண்டார்.

# 18
# அதிர்ச்சிதரும் செய்தி.

முள்ளியவளை வன்னிமையிலே தாமரைக்குளத்தை அண்டிய புன்னைமரச் சோலையிலே தன்காதலி பாலிநாச்சியாருடன் கொஞ்சிக்குலவி மகிழ்ந்து கொண்டிருந்தார் இலங்கை நாராயண முதலியார்.

கடந்த சில நாட்களாக பாலிநாச்சியார் முள்ளியவளை அரச மாளிகையிலே தங்கியிருந்தார். தந்தையாருடன் வந்த பாலிநாச்சியாரை முள்ளியவளையில் விட்டுவிட்டு தந்தை நல்லமாப்பாணர் ஏனைய வன்னிமைகளுக்குத் திக்விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

வன்னிமையின் பல்வேறு பகுதிகளுக்கும் வெண்புரவியிலே தன் காதலியைக் கூட்டிச் சென்று இயற்கையழகையும் வளத்தையும் காட்டி மகிழ்ந்தார் இலங்கையர். வற்றாத நீரூற்றுக்களால் ஆனதாய் வருடம் முழுவதும் நீர் நிறைந்த குளங்கள், சலசலத்தோடும் அருவிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்கு மூன்று முறை விளைவை நல்கும் வளம் பொருந்திய செந்நெற் கழனிகள் - இத்தனையையும் பார்த்துக் குதூகலித்தார் பாலிநாச்சியார். கள்ளிக்காட்டினூடாகச் செல்லும்போது கிளை யானைகளுடன் மோத வேண்டியேற்பட்டது. கொஞ்சம் அசிரத்தையாக இருந்திருந்தால் உயிரே போயிருக்கும். இவர்வளுக்குப் பாதுகாப்பாகச் சென்ற சிலம்பன் காட்டு வாழ்க்கையில் பரிச்சய மானவன். கட்டாரியை எடுத்து யானைமீது எறியப்போன இலங்கையரைத் தடுத்து நிறுத்திவிட்டு ஏதோ மந்திரத்தை உச்சாடனம் செய்து 'காட்டு விநாயகா, என்று உரத்துச் சத்தமிட்டான். யானைகள் பிளிறிக் கொண்டே ஓட்டமெடுத்தன. 'அப்பாடா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் பாலி நாச்சியார்.

"கவனமாகச் சொல்லவேண்டும்; கரடிகள் எதிர்ப்பட்டால் கண்களைத் தோண்டி வாயிலிட்டுச் சுவைத்துவிடும்" என்று எச்சரித்தான் சிலம்பன்.

நல்ல காலமாகக் கரடிகள் எதிர்ப்படவில்லை. பாதையின் ஒருபக்கத்திலிருந்து மற்றப்பக்கத்திற்குப் பறந்து செல்லும் காட்டுக் கோழிச் சேவல்களைக் கண்டு வியப்படைந்தார் பாலியார்.

ஓரிடத்தில் மரைக்கூட்டம் நிம்மதியாகப் புல்மேய்ந்து கொண்டு நின்ற காட்சியைக் கண் கொள்ளாமல் பார்த்து மகிழ்ந்தனர்.

களிக்காட்டிலிருந்து வந்து மூத்தநயினார் ஆலய வாசலால் பெருந்தெருவுக்கு இறங்கியபோது செழித்து வளர்ந்திருந்த சம்மளங் கூடலை உன்னிப்பாகக் கவனித்தார் பாலியார். "இந்த மரங்கள் பனங்காமத்தில் இல்லையே இதன் பெயரென்ன?" எனக் குழந்தை போலக் கேட்டாள் இளவரசி.

"சமண்டலை மரங்கள்; நேராக வளரும் மரம் இது. தளபாடம் செய்யப் பயன்படும். இதன் இலைகள் உண்கலங்களாக பாவிக்கலாம்" என விளக்கினான் சிலம்பன்.

அருகிலிருந்த புற்றிலிருந்து நாகபாம்பு சீறிப்படமெடுத்தது. பாலிநாச்சியார் நடுநடுங்கிப் போனார். "பாம்பென்றால் படையும் நடுங்கும்" என அவர் வாய் முணுமுணுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலவெனச் சிரித்த இலங்கையன், "ஏன் நடுங்கவேண்டும் தடியால் அடித்துக் கொல்லலாம். அல்லது இந்த வாள் எதற்கு கையில் இருக்கிறது?" என்று கூறினான்.

"இது நல்லபாம்பு சாமி, இன்றைக்கு வெள்ளிக்கிழமை, இதனைக் கொல்லக் கூடாது. புதூர் நாகதம்பிரானே வழிவிடு" என்று கூறவே பாம்பு படத்தைச் சுருக்கி புற்றினுள் நுழைந்து விட்டது.

"இந்த அரவம் தீண்டிவிட்டால் என்ன செய்வது?" என்று பயத்துடன் கேட்டார் பாலியார்.

"இருக்கவே இருக்குது புதூர் மருந்து; அதனைக் கரைத்துக் குடித்துவிட்டுக் கடிவாயில் அதனைப் பூசிவிட்டால் போதும், விஷம் தானாகவே இறங்கும்."

ஏதோ சித்த வைத்திய மருந்தாக இருக்கலாம் என் எண்ணி அதைப்பற்றிக் கேட்டார் பாலிநாச்சியார்.

"இது புதூர் நாகதம்பிரான் கோயில் புற்றிலிருந்து எடுக்கப்படும் மண்தான், வேறொன்றும் இல்லை" விளக்கம் தந்தான் சிலம்பன்.

திறந்தவாய் மூடாமல் கேட்டுக் கொண்டே வந்தாள். தெருவிலே பாலைப்பழங்களை உண்டதால் அவள் வாயில் பால் ஒட்டிக் கொண்டது.

பனங்காமத்திலே இரண்டொருமுறை பாலியாற்றங்கரைக்கும் சிவபுரநாதர் கோயிலுக்கும் போயிருக்கிறார் இளவரசியார். வன்னிநாட்டின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு அனுபவிக்கும் வாய்ப்பு இப்பொழுதுதான் பாலி நாச்சியாருக்கும் கிடைத்தது.

நெருக்கமாக வளர்ந்திருக்கும் பனந்தோப்பைத் தாண்டிச் சென்றார்கள் "பனை மரங்களா? பனங்காமத்தில் மட்டும் தான் பனை உண்டு என நினைத்தேன்"

முள்ளியவளை வன்னிமையின் எல்லையில் செழிப்புடன் வளர்ந்து நிற்கும் தென்னஞ் சோலையைக் காணமுடிந்தது. அதையடுத்து வயல் நிலங்கள் அதனைத் தாண்டினால் நந்திக் கடல், நந்திக்கடலைப் பார்த்தபடியே வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் அருளாட்சி செய்து கொண்டிருக்கிறாள்.

"வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் பொங்கல் வைகாசி மாதத்தில் நடை பெறும். இதனால் இப்பொங்கலை வைகாசிப் பொங்கல் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவர். ஆயிரக்கணக்கான மக்கள் எல்லா வன்னிமைகளிலிருந்தும் வந்து கூடுவர். யாழ்ப்பாணத்திலிருந்தும் கால்நடையாகவும் வத்தைகள் மூலம் கடல்வழியாகவும் பக்தர்கள் வருவார்கள்." விளக்கினார் இலங்கையர்.

"தெரியும், சிறுவயதாக இருக்கும் போது நானும் வைகாசிப் பொங்கலுக்கு வந்திருக்கிறேன். ஆயிரம் கண் பானையில் கர்ப்பூரம் கொழுத்தி வழிபட்டிருக்கிறேன்". என்றாள் பாலி.

"முள்ளியவளை, பலாப்பழத்திற்குப் பெயர் போனது, இதன் சுவையே அலாதிதான்!" என்று இலங்கையன் கூற "இதனைப் பலமுறை சுவைத்திருக்கிறேன்" என்று கூறினாள் பாலிநாச்சியார்.

தாமரைக் குளத்தருகே புன்னைமரச் சேலையையிலே இருந்த காதலரை நோக்கி அவசரம் அவசரமாகத் தூதுவன் ஒருவன் வந்தான்.

தூதுவன் கூறிய செய்தியைக் கேட்ட இலங்கையர் முகம் கவலைச் சாயை கப்பிக் கறுத்துவிட்டிருந்தது. கண்ணின் கடைவழி ஓரம் நீர்த் திவலைகள் கசிந்தன. எங்கிருந்தோ ஓடிவந்த கருமுகில் கூட்டம் பாலொளி பொழிந்து கொண்டிருந்த பனி நிலவைக் கௌவி விழுங்கும் காட்சிளைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு கற்சிலைபோல் நின்றிருந்தான் இலங்கையன்.

பாலிநாச்சியார் அவன் முன்பு வந்து நின்றதைக் கூட இலங்கையன் கவனிக்கவில்லை.

"அத்தான்" என அன்பொழுக அவள் அழைத்தது கூட அவன் செவிப்புலனுக்கு எட்டவில்லை.

"அத்தான், ஏன் இப்படி விறைத்துச் சிலையாக நிற்கிறீர்கள் அரசமாளிகைத் தூதுவன் கொண்டுவந்த செய்திதான் என்ன?" என்று உரத்த தொனியில் பாலிகேட்ட போதுதான் இலங்கையன் சுய உணர்வுக்கு வந்தான்!

"கண்ணே பாலி, அப்பா மரணப்படுக்கையில் இருக்கிறார். அரண்மனை வைத்தியரே நம்பிக்கை இழந்துவிட்டாராம். உடனே அரச மாளிகைக்குப் புறப்பட வேண்டும். முள்ளியவளை மூத்தநயினார் அருளாலும் வற்றாப்பளைக் கண்ணகைத் தாயின் பெருங்கருணையாலும் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பிழைத்தால் உண்டு, இல்லையேல் என்மீது அரச பாரம் என்னும் பெரும் சுமை ஏற்றப்பட்டுவிடும். இனிமேல் நான் முன்பு போல் விளையாட்டுப் பிள்ளையில்லை"

"எதற்கும் நாம் சீக்கிரம் அரசமாளிகைக்குப் போவோம். மாமா உயிர் பிழைத்து இந்த வன்னிமையின் அதிபதியாக நீண்டகாலம் வாழ்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு." என்று கூறிய பாலிநாச்சி யார், அவனது கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு அரச மாளிகையை நோக்கி விரைந்தார்.

அரசமாளிகையைச் சுற்றி ஒரே கூட்டம்! அவர்களை யெல்லாம் விலக்கிவிட்டு இருவரும் அரசரைப் பார்க்கச் சென்றனர். முள்ளியவளை வன்னிமையின் அதிபதியாம் இளஞ்சிங்க வன்னியனார் மயக்க நிலையில் படுத்திருந்தார். இலங்கையர் தந்தையை உற்று நோக்கியபடி கண்ணில் நீர்மல்கச் சிலையாக நின்றார்.

"அத்தை, மாமா நல்ல சுகமாகத்தானே இருந்தார்; திடீரென்று என்ன நடந்தது?"

பெருவன்னிச்சியார் மருமகனை ஆரத் தழுவிக்கொண்டே கண்ணீர் வடியக் கூறினார்: "சுகமாகத்தான் இருந்தார்; திடீரென்று நெஞ்சில் வலி என்று சொன்னதுதான் தாமதம் அப்படியே கட்டிலில் சாய்ந்தவர் மயக்கமடைந்து விட்டார்"

"அரசவைத்தியர் என்ன சொல்கிறார்?"

"இன்னும் பதினைந்து நாழிகை கடந்தபின்புதான் நிச்சயமாக எதனையும் சொல்லமுடியும் என்று கூறுகின்றார். அவர் முகத்திலிருந்து அவருக்கே நம்பிக்கை இல்லைப்போல் இருக்கிறது"

"அத்தை அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள். மாமா உயிர்பிழைத்து நீண்டகாலம் இந்த இராச்சிய பாரத்தைச் சுமப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அம்மாளாச்சியும், காட்டுவினாயகரும் கைவிடமாட்டார்கள்" என்று ஆறுதல் கூறினார் பாலிநாச்சியார்.

பாலிநாச்சியாரின் நம்பிக்கையும் பிரார்த்தனையும் வீண்போக வில்லை. இளஞ்சிங்கவன்னியருக்குச் சற்றுப் பிரக்ஞைவரத் தொடங்கியது. அங்குமிங்கும் புரண்டு கொண்டே "இலங்கையன் எங்கே?" என்று மெல்லக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதோ உங்கள் முன்னிலையில் நிற்கிறார்." பாலியார்தான் கூறினார்.

இலங்கையனின் கையைப்பிடித்து ஆதரவாக வருடிக் கொண்டே "மகனே, நான் நெடுநேரம் உயிர் வாழ்வேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை, இந்த இராச்சியத்தை அந்நியர் கவர்ந்துவிடாமல் அவர்களுக்கு அடிபணியாமல் இத்தனை காலம் வாழ்ந்துவிட்டேன்..."

பேச்சைத் தொடர முடியாமல் இளைத்து இளைத்து இருமத் தொடங்கினார். இலங்கையன் அவர் நெஞ்சைத் தடவிக் கொடுத்தான். மீண்டும் பேசத் தொடங்கினார்;

".... இனி நீதான் முள்ளியவளை வன்னிமையைக் கட்டிக் காக்க வேண்டும் ... எங்கே மருமகள்... மருமகளே கிட்டவா... உங்களை மணப்பந்தலில் கண்டு களிக்க எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. உங்கள் திருமணம் பலம்வாய்ந்த பனங்காமத்தையும், முள்ளியவளையையும் இணைக்கும் பாலமாக அமையப் போகிறது.... இவன், என் மகன் இப்பொழுதும் விளையாட்டுப் பிள்ளைதான்! அவன் அரச பொறுப்புக்களை ஏற்று நடத்தும் பக்குவத்தை நீதான் உண்டாக்க வேண்டும்"

" அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் மாமா, உங்களுக்கு அவ்வளவு சீக்கிரம் ஒன்றும் நடந்துவிடாது"

இளஞ்சிங்க வன்னியனார் சிறிது புன்னகை பூத்தார், எல்லாப் பக்கமும் சுற்றிப் பார்த்தார்.... அரசியாரைத் தன்பக்கம் அழைத்து ஏதோ சொல்ல முனைந்தார்.... ஆனால் அவர் வாயசைந்ததே தவிரப் பேச்சொலி வெளிவரவில்லை. திடீரென்று நிமிர்த்திய தலை சரிந்தது வைத்தியர் நாடியைப் பிடித்துப் பார்த்து வாயைப் பிதுக்கிக் கொண்டார்.

அரசமாளிகை அதிரும் விதத்தில் மரண ஓலம்! முள்ளியவளை வன்னிமையே நீங்காத சோகக் கடலில் நீந்தியது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# கண்டி விஜயம்

பனங்காம வன்னிமையின் அதிபதி கயிலை வன்னியனார் கண்டியைச் சென்றடைந்ததுமே அவருக்குப் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. வீதியெங்கும் தோரணங்களும் அலங்கார வளைவுகளும் காட்சியளித்தன. ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் கண்டிப் பிரஜைகள் களிகூர வெற்றிலைச் சுருளைக் கொடுத்து வரவேற்புச் செய்தனர். 'கயிலைவன்னிய மன்னரே வருக! வன்னியர் திலகமே வருக!! வன்னிநாட்டின் சக்கரவத்தியே வருக!!! அந்நியர்க்கடிபணியா அரசகுல திலகமே வருக!' என்று ஆங்காங்கு சிங்களத்திலும் தமிழிலும் வரவேற்பு வாசகங்கள் பொறிக்கப்பட்ட அலங்கார வளைவுகள் காட்சியளித்தன.

கண்டி நடனக்காரரான ஆடவரும் அரிவையரும் முன்செல்ல, அதனையடுத்துப் பிரதானிகளும் திசாவைகளும் அணிவகுத்துச் செல்ல, கொடி குடை ஆலவட்டம் பிடித்துக் கொண்டு ஏவலர் செல்ல அவர்களுக்குப்பின்னே கண்டியரசன் இரண்டாம் இராஜசிங்கனும் பனங்காமத்ததுக் கயிலை வன்னியனாரும் யானைமீது ஆரோகணித்துச் செல்லும் அதியற்புதக் காட்சியை கண்டிப் பிரஜைகள் கண்ணாரக் கண்டு களிகூர்ந்தார்கள்.

மஞ்சளாவிய மாடங்கள் தோறும் மயில்கள் போல் மடவார்கணம் சூழ்ந்து நின்று ஊர்வலத்தை நோக்கியது. சாளரங்கள் தோறும் சந்திர விம்பங்களாக அரிவையர் தோன்றினர்.

பத்துக்காத தூரம் நீண்டிருந்த வரவேற்பு ஊர்வலம், பசுந்தளிர்கள் ஏந்தி பருத்துச் சடைத்திருக்கும் மஞ்சள் மூங்கில்கள் காவல்புரியச் சலசலத்தோடும் மாவலிகங்கைக் கரை யோரமாகச் சென்று கொண்டிருந்தது.

வெண்பஞ்சு மேகங்களைப் போர்த்துக் கொண்டு வெள்ளிப் பனிமலையெனக் கெம்பீரமாக நிற்கும் மலை வளத்தைப் பார்த்துக் கொண்டே கயிலை வன்னியனார் சென்றார். அடர்த்தியான காடுகள், மலைகள், பள்ளத் தாக்குகள், கணவாய்கள் மலிந்து இயற்கை யரண் வாய்ந்த கண்டி இராச்சியத்தை முதன் முறையாகப் பார்த்துக் களிக்கும் வாய்ப்பு கயிலை வன்னியனுக்கு இப்பொழுதுதான் கிட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் இராசசிங்கனும் கயிலை வன்னியனாரும் நீண்டகால நண்பர்கள். இருவரும் பரஸ்பரம் செய்தி மடல்களை அனுப்பித் தம் நட்பினை இறுக்கமாக்கிக் கொண்டனர். இதைவிட இவர்கள் இலட்சியத்தாலும் ஒன்றுபட்டவர்கள். இரண்டாம் இராசசிங்கன் ஆட்சியின் ஆரம்ப காலத்திலே போர்த்துக் கீசரை இலங்கையிலிருந்து துரத்துவதற்காக ஒல்லாந்தரின் நட்பை நாடியவன்; பின்னர் ஒல்லாந்தரின் கபட நாடகத்தால் மனம் நொந்திருந்தான் 'மிளகாயைக் கொடுத்து இஞ்சியைப் பெற்றுக் கொண்டது' போன்ற தன் நிலையை நன்கு உணர்ந்து கொண்டபின்பு தான் டச்சுக் காரரின் பரம வைரியானான். கறுவாவும் கராம்பும் வாங்க வந்த கயவர்கள் இலங்கையின் கரையோரத்தைப் பிடித்து ஆளத் தொடங்கிவிட்டனர். இலங்கைத் தீவின் எல்லாத் திசைகளிலும் கரையோரங்களை ஆக்கிரமித்து அடிபணிய வைத்த டச்சுக் கொம்பனியால் கண்டியையும் வன்னியையும் மட்டும் அடிபணியவைக்க முடிய வில்லை. கண்டியரசனைப் பொறுத்த அளவில் இலங்கையில் நட்புறவு கொள்ளக் கூடிய ஒரேயொரு சுதந்திர இராச்சியம் அடங்காப்பற்று வன்னிதான். அடங்காப்பற்றின் அரைவாசிப் பிரதேசத்தைத் தன்னகத்தே கொண்ட பனங்காம வன்னிமையின் ஆட்சியாளன் அடலேறு கயிலை வன்னியனாரின் நட்புறவை இரண்டாம் இராசசிங்கன் பெற்றுக் கொண்டது ஒரு வரலாற்றுத் தேவையும் நியதியுமாகும்.

நண்பனான இராசசிங்கனை ஓவியத்திலே கண்டு உளம் பூரித்தவர் வன்னியனார். சிங்கத்தையொத்த முகமும் தீட்சண்யமான கண்களும், பரந்த மார்பும், திரண்ட தோளும் கொண்ட நண்பரின் தோற்றம் வன்னியனாரை மிகவும் கவர்ந்தது. அணிந்திருந்த அழகான பூமுடி, உடம்போடொட்டிய கஞ்சுகி, வேலைப்பாடமைந்த உத்தரியம், அழகூட்டும் உடையும், உடைவாளும், செங்கோலும் கண்டி மன்னரின் கெம்பீர தோற்றத்தைக் காட்டி நின்றன. அந்தமாமன்னரை நேரே கண்டு நட்பைப் பலப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பம் இதுவேயாகும்.

கயிலை வன்னியனாரின் கண்டி விஜயம் கனகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தொன்றாகும். கண்டிமன்னன் மாத்திரமல்ல அமைச்சர்களும் அதிகாரிகளும் பொது மக்களும் ஆவலோடு கயிலைவன்னியன் வரவை எதிர்பாத்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை இருளாம் அந்தகாரத்தில் மூழ்காது சுதந்திர இறைமையுடைய ஒரு பிரதேசத்தின் ஆட்சித் தலைவனைத் தரிசிப்பது பெறற்கரிய பேறென்றே அவர்கள் கருதினர்.

வரவேற்பு ஊர்வலம் அரண்மனை வாயிலை அடைந்ததும் கலைந்து செல்ல இராசசிங்கன் தன்நண்பனை ஆரத்தழுவி அரண்மனையின் வரவேற்பு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பதித்த அழகுமிகு அலங்கார ஆசனத்தில் கயிலை வன்னியனை இருக்கச் செய்தான்.

அவர்களுடைய உரையாடல் ஆரம்பத்தில் குசலம் விசாரிப்பதில் தொடங்கி இராச்சிய விடயங்களுக்குத் தாவிச் சென்றது. ஒல்லாந்தர் இலங்கையில் மத்திய, வட பகுதிகளில் சுதந்திர இராச்சியங்கள் இருப்பது ஏனைய பகுதிகளில் தம் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு இடையூறாக இருப்பதாகக் கருதுகின்றனர். ஒல்லாந்த ஆட்சிக்குட்பட்ட சிங்களமக்கள் கண்டியரசனையே தம் அரசனாக மானசிகமாகக் கருதுகின்றனர். அதுபோலத் தமிழ்மக்கள் எங்கு வாழ்ந்தாலும் கயிலை வன்னியனாரையே தம் அரசன் எனக் கருதுகின்றனர். மக்களின் விசுவாசத்தைப் பெறமுடியாத அவலநிலை ஒல்லாந்தருக்கிருந்தது. இதனாலேயே கண்டியையும் வன்னியையும் அடிமைப்படுத்த எண்ணுகின்றனர். கண்டிமீத படையெடுத்துப் படுதோல்வி அடைந்து மண் கவ்வியிருக்கின்றனர்.

ஒல்லாந்தர் வன்னிமீது, குறிப்பாகப் பனங்காம வன்னிமீது படை நடத்திச் செல்ல அஞ்சுகின்றனர். பொருளாவிற்கேனும் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். ஆண்டுதோறும் சிலயானைகளும் மரமும், மான்தோலும், தந்தால் போதும் என்பதே அவர்களின் ஆட்சிக் கொள்கையாக இருந்தது.

சுதந்திரக் காற்றைச் சுவாசித்துப் பழகிய மக்களையும் வைரம் பாய்ந்த திண்தோள் வலிமையும் யுத்தகளத்திலே தேர்ச்சியும் மிக்க கயிலை வன்னியனையும் படுகளத்தில் சந்தித்து வெற்றி பெறுவதென்பது முடியாத காரியம் என்பதைப் போர்த்துக்கீசர் அன்று அறிந்திருந்தனர். இன்று ஒல்லாந்தர் அறிந்துவிட்டனர். போதாக்குறைக்கு கண்டிமன்னனின் நட்பும் படைத்துணையும் இருக்கும் போது வன்னியை அடிமைப்படுத்துவது பகற்கனவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரதும் உரையாடல்களில் இக்கருத்துக்களே உள்ளடக்கமாக இருந்தன.

"ஒல்லாந்த நிர்வாகம் யாழ்ப்பாணத்திலே கோட்டைகள் கட்டு கிறார்களாமே!" எனக் கேட்டான் கண்டிமன்னன்.

"ஆம், யாழ்ப்பானத்தில் பாரிய கோட்டையொன்றைக் கட்டி முடித்துவிட்டனர். பூநகரியில் ஒரு கோட்டையும், ஆனையிறவில் இரு கோட்டைகளையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாண தீபகற் பத்தின் நுழைவாயில்கள் இவை இரண்டுந் தான். யாழ்ப்பானத்தையாவது பாதுகாத்துத் தமது ஆட்சியில் வைத்திருக்க வேண்டும் என எண்ணுகிறார்கள் போல் இருக்கிறது."

"அவர்களின் நோக்கம் நன்கு விளங்குகின்றது. தேசாதிபதி றைக்லொவ் வான்கூன்ஸ் சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததாக அறிந்தேன்."

"ஆமாம், கோட்டை ராச்சியமும், யாழ்ப்பாணமும் புத்தளமும், திருகோணமலையும் மட்டக்களப்பும் ஒல்லாந்தர் ஆட்சிக்கு அடிபணியும் போது சின்னஞ்சிறு வன்னியை மட்டும் அடிபணியவைக்க முடியாத கொமாண்டரின் கையாலாகாத் தனத்தைக் கண்டு சீறினாராம்."

"அப்படியென்றால் வன்னிமீது படையெடுத்து வருவார்கள் என்று நினைக்கிறீர்களா?"

"நிச்சயமாக, ஏற்ற ஆயத்தத்துடன் தான் இருக்கிறோம்; தேவை யேற்படும் போது தங்கள் படைத் துணையை நாடுவோம்."

"அதற்கு முன்பு எனக்கொரு யோசனை தோன்றுகின்றது" கண்டிமன்னர் தணிந்த குரலில் கூறினார்.

கண்டியின் காவலர் நாலா பக்கமும் தன் கண்களைச் சுழலவிட்டார். வாயிற் காவலனைத் தவிர வேறு யாரும் இல்லை.

"பகைமேகங்கள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கும் இந்த நேரத்தில் யாரையுமே நம்ப முடிவதில்லை. நாம் பேசிக் கொண்டிருக்கும் விஷயங்கள் அத்தனையும் ஒல்லாந்த நிர்வாகத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுகிறது. அத்தனை சக்தி வாய்ந்த உளவுப்படையை டச்சுக்காரர் வைத்திருக்கின்றனர். ஏன் எங்கள் இராச்சியங்களில் கூட உடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தே கொல்லும் வியாதியைப் போன்றவர்களும் இருக்கிறார்கள்"

"உண்மைதான், காஞ்சிரங் காயன் என்னும் ஒரு டச்சு உளவாளி பனங்காமப் பகுதியில் உலாவுகிறானாம்."

"பார்த்தீர்களா? எனது இரகசியத் திட்டம் இந்த ஓலையில் இருக்கிறது. இதனை மிகவும் அந்தரங்கமாக வாசித்த பின்னர் தீயிலிட்டுப் பொசுக்கிவிட வேண்டும்; கடைசி நேரம்வரை எவருக்கும், தங்கள் அரசியாருக்குக் கூட-தெரியக்கூடாது"

வன்னியனார் ஓலையை வாங்கி வாசித்து அதில் பொதிந்திருந்த விடயங்களைக் கிரகித்துக் கொண்டார். ஓலையைக் கண்டியரசனிடமே கொடுத்து, "இதை நீங்களே எரித்து விடுங்கள்" என்று கூறினார்.

வன்னியனார் கண்டியில் இரண்டு வாரங்கள் கண்டி மன்னரின் விருந்தினராக இருந்தார். அங்கிருக்கும் போது கண்டியின் ஆட்சிமுறைகளையும், திசாவைகள், அதிகாரிகள் ஆகியோரின் நிர்வாகக் கடமைகளையும் நன்கு அறிந்து கொண்டார். அரண்மனையின் அமைப்பு அரண்மனை உத்தியோகத்தர், பணியாளர் ஆகியோரின் பொறுப்புக்கள் ஆகியவற்றை யெல்லாம் அறிந்து கொண்டார். அரசருக்கும் மக்களுக்குமிடையேயுள்ள அன்னியோன்ய உறவு ஆகியவற்றை யெல்லாம் கூர்ந்து நோக்கினார்.

நண்பன் இராசசிங்கனைப் பிரிய முடியாமல் பிரிந்து சென்ற போது தான் வன்னியில் பேரதிர்ச்சி தரும் செய்தியொன்று அவருக்காகக் காத்திருந்தது.

# 20

# இளைய வான் கூன்ஸ்

கயிலைவன்னியன் பனங்காமத்தில் இல்லாத நேரத்திலே எவரும் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நடைபெற்றுவிட்டது. இந்த நிகழ்ச்சி தேசாதி பதியின் யாழ்ப்பாண விஜயத்தின் பின் நடைபெற்றிருக்கிறது. இதுவரை வன்னிமீது படை நடத்திச் செல்லத் துணியாத ஒல்லாந்தர் எதிர்பாராத விதமாகப் படையுடன் வன்னிப் பிரதேசத்தில் புகுந்துள்ளனர்.

தேசாதிபதியின் மகனான இளைய வான்கூன்ஸ் தனது படையுடன் முல்லைத் தீவில் இறங்கி அங்கிருந்து வன்னிக்குள் நுழைந்து ஐயன் பெருமாள் என்னும் இடத்தில் தங்கினான். வன்னியர்கள் எல்லோரும் அவனிடம் சென்று சமாதானம் செய்து ஒல்லாந்தரின் மேலாண்மையை ஏற்றத்துடன் அவர்கள் விதித்த திறைப் பொருட் களைத் தருவதாக ஒப்புக் கொண்டனர். பனங்காம அரசின் பிரதி நிதியாக நல்லமாப் பாணன் சென்றிருந்தான்.

இந்தச் செய்தியைக் கேட்ட கயிலை வன்னியனது கண்கள் கோபத்தால் சிவந்தன. மீசை துடித்தது. முறுக்கேறிய தன் வைரம் பாய்ந்த புஜங்களை நிமிர்த்திய படி உடை வாளை உருவிக்கொண்டு அரச மாளிகையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான். கயிலை வன்னியனுக்குக் கிட்டப்போக அனைவரும் அஞ்சினர்.

அரசரின் சினம் சற்றுத் தணிந்திருப்பதைக் கண்ட நல்லமாப்பாணன் கிட்டச் சென்று, " வான் கூன்ஸ் சண்டைசெய்ய வன்னிக்கு வரவில்லையென்றும் சமாதானம் செய்யவே வந்திருப்பதாகவும் ஓலை அனுப்பியிருந்தான். அதனாலேயே நான் சென்றேன்." என்று தயங்கித் தயங்கிக் கூறினார்.

கயிலை வன்னியனார் சிறிது மௌனம் சாதித்த பின்னர் "நீங்கள் சென்றதும் ஒருவகைக்கு நல்லதுதான்; நான் இங்கு இருந்திருந்தால் பெரிய போரொன்று மூண்டிருக்கும். ஒல்லாந்தருக்கு ஒரு பாடம் படிப்பித்திருப்பேன். தேசாதிபதியும் மிகுந்த புத்திசாலி நான் இல்லாத நேரத்தில் மகனைப் படையுடன் அனுப்பி சமாதான ஏற்பாட்டைச் செய்துள்ளார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் யோசித்துக்கொண்டிருக்கும் போதே வாயிற் காவலன் வந்து வன்னி அரசர்கள் கையிலை வன்னியனாரைச் சந்திக்க வந்திருப்பதாகக் கூறினான். அவர்களை உள்ளே வரும்படி அவர் பணித்தார்.

முள்ளியவளை, கரிக்கட்டுமுலை, மேற்பற்று, கருநாவல்பற்று தென்னன்மரமடி வன்னியரசர்கள் வந்து கயிலை வன்னியனாரை வணங்கினர். அவரும் வன்னியர்களை வரவேற்று உபசரித்தார். நல்ல மாப்பாணர் கூறியவாறே இவர்களும் இளைய வான் கூன்ஸின் படையெடுப்பைப் பற்றிக் கூறினர். "ஒல்லாந்தர் படையுடன் வந்தார்களேயன்றி வன்னியருக் கெதிராகப் போர்தொடுக்க வரவில்லை. போர்தொடுப்பது அவர்களின் நோக்கமல்ல. தமது மேலாண்மையை ஏற்கச் செய்வதே அவர்கள் நோக்கமாகும்" எனத் தென்னன் மரபடி வன்னியனார் புண்ணியப்பிள்ளை கூறினார்.

"ஒல்லாந்தர் தமது மேலாண்மையை வலியுறுத்துவதும் அதனை ஏற்பது போல் நாம் நடிப்பதும் எமது வழக்கம். நாம் அதனையே செய்தோம்" மேற்பற்று வன்னியரான கந்தையினார் வன்னியனார் கூறினார்.

"எதிர்த்துப் போரிட்டு ரத்தஞ்சிந்த வான் கூன்ஸ் எமக்கொரு சந்தர்ப்பம் தரவில்லையே! வீணாக ஏன் போரிடவேண்டும்?" எனக் கருநாவற்பற்று நீலயினார் சொன்னார்.

இவற்றையெல்லாம் ஆமோதிப்பது போல கயிலை வன்னியனார் தலையசைத்தார்.

"நண்பர்களே, நடந்தவைகள் நடந்தவைகளாகட்டும். இனி நாம் நடக்கவிருப்பதைச் சிந்திப்போம். ஒருவகையில் பார்த்தால் நீங்கள் மிகவும் சாதுரியமாகவும்இராஜதந்திரத்துடனும் நடந்து கொண்டிருக்கிறீர்கள். மேலாண்மையை ஏற்பதாக நடிப்பதும் பின்னர் அவர்கள் கட்டளையை உதாசீனம் செய்வதும் எங்களது வெளியுறவுக் கொள்ளைதான்! எதிர் காலத்திலும் நாம் அப்படித்தான் செய்யவேண்டும்.

"நாங்கள் எல்லாம் டச்சு நிர்வாகத்திற்கு பயந்து நடுங்கி ஒழுங்காகத் திறை செலுத்துவோம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வந்திருக்கிறது. நாம் அனைவரும் ஒற்றுமையாக அவர்களின் நம்பிக்கையைச் சிதறடிக்க வேண்டும். இலங்கையிலே இன்று வன்னி இராச்சியங்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி ராச்சியமும் தான் சுதந்தரமாகவும் பூரண இறைமையுடனும் திகழ்கின்றன.எமது நண்பரான இராசசிங்கன் எப்போதும் படையுதவி நல்கச் சித்தமாக இருக்கின்றான். இதனால் நாம் எக்காரணம் கொண்டும் யானையல்ல ஒரு பூனையையேனும் திறையாகச் செலுத்தக் கூடாது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தேசாதிபதியின் தார்பாருக்குப் பிரசன்னமாகக் கூடாது.

"ஒல்லாந்தப் படைகளைப் போர்முனையில் சந்திக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். கறுவா வாங்க வந்தவர்களுக்குக் கப்பஞ் செலுத்தக் கூடாது நம் சொந்தமண்ணை ஆக்கிரமிக்க வந்தவர்களுக்கு ஆலவட்டம் வீசக் கூடாது.

" இப்பொழுதே நாம் அனைவரும் வீரசபதம் செய்வோம் அந்நியருக்கு அடிபணியோம் 'போர்முனையில் புலியெனப் பாய்வோம்' சோற்றைவிடச் சுதந்திரமே மேல்' சுதந்திரம் எமது உயிர் மூச்சு' தாய்மண்ணைக் காக்கத் தளராது போரிடுவோம்' பெற்றதாயை விடப் பிறந்த பொன்னாட்டை நேசிப்போம். எம் நாட்டின் தொழிற்சாலைகள் இனி உற்பத்தி செய்யவேண்டியவை அலங்காரப் பொருட்கள் அல்ல. சங்கலி, சரப்பளி, முத்தாரம், சூடகம், பொன்வளை, மகரவாய்மோதிரம், சிலம்பு, தண்டை, கிண்கிணி ஆகியவற்றின் உற்பத்தியை நிறுத்துவோம். கத்தி. கேடயம், ஈட்டி, வாள், கட்டாரி, இரும்புக்கவசம், வேல், கதை, கல்லுமிழ்கவண், சூழல்படைச் சக்கரம், என்பவற்றை உற்பத்தி செய்வோம். நிலையான படை, நிறைவான படைக்கலங்கள் ஆகியவைதான் எமக்குத் தேவை.

யானைப்படையணி யொன்றை ஒவ்வொரு வன்னிமையிலும் உருவாக்க வேண்டும்.விரைந்து தாக்கும் பயிற்சியை வீரர்களுக்குக் கொடுப்போம். புரவிகளுக்கும் போர்ப்பயிற்சி யளிக்க வேண்டும்."

எல்லா வன்னியர்களும் கயிலை வன்னியனாரின் ஆலோசனையை ஏற்று நடக்க ஒப்புக்கொண்டனர்.

அரசமாளிகையிலே அனைவரும் விருந்துண்டு களித்தனர்.

தளபதி வெற்றிக் கடம்பன் அவசரமாக அரண்மனைக்கு வந்தான். "அரசே ஒல்லந்த ஒற்றர் படைத்தலைவன் காஞ்சிரங்காயனைக் கைதுசெய்து விட்டோம்" என்று கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கே அவன்?" மன்னர் கேட்டார்.

" எமது வீரர்கள் அவனைச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டு வருகிறார்கள்." மன்னர் அவனை உற்று நோக்கினார்

"அடே, நீ தானே ஒல்லாந்தரின் ஒற்றர்படைத் தலைவன் காஞ்சிரங்காயன்"

"ஆம் அரசே"

"நீயும் ஒரு தமிழன்தானே! ஏன் இந்த வேலைக்கு உடன்பட்டாய்

"எல்லாம் வயிற்றுச் சோற்றுக்காகத்தான் அரசே!"

" வயிற்றுச் சோத்துக்காக தமிழ் இராச்சியம் ஒன்றைக் காட்டிக் கொடுக்கிறாயே இது உனக்குச் சரியானது என்று படுகிறதா?"

"அரசே, என்பாட்டன் ஆரியச்சக்கரவர்த்தியின் அரசில் வேலைபார்த்தார். என்தந்தை போர்த்துக்கீசரின் எடுபிடியாளாய் இருந்தார். நான் இப்போது இந்த வேலை பார்க்கிறேன். எனக்கு வேறு வழியில்லை. மனச்சாட்சிக்கு விரோதமாகவே இதனைச் செய்கிறேன்".

"தளபதி, இவனைச் சிறையிலே அடைக்க ஏற்பாடு செய். வேண்டிய உணவு வகைகளும் குடிவகைகளும் கொடுக்க ஏற்பாடுசெய் எவ் விதத்திலும் இவனைத் துன்புறுத்தக்கூடாது. இவனும் ஒரு தமிழன் தானே! இவனை விரிவாக விசாரணை செய்யவேண்டும்."

"உத்தரவு அரசே"

காஞ்சிரங்காயனைப் பாதாளச் சிறைக்கு இழுத்துச் செல்லுமாறு தளபதி சைகை செய்யப் படைவீரர் அவனைக் கொண்டு செல்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# கைமத்தர்

இரவு நாயகி உலகநாயகனைப் பிரியும் நேரம்; தயக்கத்துடன் தான் அவள் பிரிந்து கொண்டிருந்தாள். கைமத்தருக்கு மூன்றாம் சாமம் முடிவடையும் நேரத்திலேயே நித்திரை குழம்பிவிட்டது. முப்பது ஆண்டுகளுக்கு முந்திய சம்பவங்களை அவர் மனம் அசைபோட்டுக் கொண்டிருந்தது.

"இந்திரன் கெட்டதும் பெண்ணாலே சந்திரன் கெட்டதும் பெண்ணாலே என்று சும்மாவா சொன்னார்கள்? அந்த மயக்கு மொழி மோகனப் பிசாசை நம்பியதால் வந்த வினை! நினைக்க நினைக்க நெஞ்சம் பகீரென்கிறது. பெண்பித்துக் கொண்டு அவளை மணந்திருக்காவிட்டால் எனது திட்டம் ஒருவேளை நிறைவேறியிருக்கலாம். அப்படி நிறைவேறி இருந்தால் ஒல்லாந்தரின் நம்பிக்கைக்குரிய வன்னியனாகி ஏதோ ஒரு வன்னிமைக்கு வன்னியனாகியிருக்கலாம்! அமைச்சர்கள், பிரதானிகள், சேவகர், தூதுவர் என்று எல்லோருமே கைகட்டிச் சேவகம் செய்யக் கெம்பீரமாக அரியணையில் ஆரோகணித்து ஆட்சி புரிந்திருக்கலாம்!

"எல்லாவற்றையும் அந்த அரக்கி, நச்சவரம் உடனிருந்து குழிபறித்த காதகி கெடுத்தது மட்டுமின்றி என்னை உதறித் தள்ளிவிட்டு அந்தக் கயிலையன் பின் ஓடினாளே! அது என ஆண்மைக்கு விடப்பட்ட சவால் 'நீயும் ஒரு ஆண்பிள்ளையா?' என்று கூறாமல் கூறியது போலிருந்தது அவளின் அந்தச் செயல். பாம்புக்கு பாலை வார்த்தேன். அது விசத்தைக் கக்கிவிட்டு ஓடிவிட்டது" இப்படி எண்ணி எண்ணி மனதைப் புண்ணாக்கினார் கைமத்தர்.

தென்னன் மரபடி வன்னியர் மரபைச் சேர்ந்தவர் அவர். வன்னி மையின் நேரடி வாரிசாக இல்லாதவிடத்தும் வன்னிப் பதவி தனக்குக் கிடைக்கும் என மனப்பால் குடித்து வந்தார். பதவி கிடைக்காததால் விரக்தியடைந்த கைமத்தர் இதற்குக் காரணமாக பனங்காம வன்னியர் இருந்தார் என எண்ணினார். அன்று தொடக்கம் பனங்காம அரசைப் பலவீனப்படுத்தி சிதைப்பதற்கு எத்தனையோ திட்டங்களைத் தீட்டினார்.

பனங்காமத்திலே வலிமையற்ற வன்னியன் ஒருவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அவன் டச்சு நிர்வாகத்திற்கு அடிபணிய வைக்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே அவரின் அபிலாசையாக இருந்தது. இதற்காக ஒல்லாதருக்கு விசுவாசமாக உழைக்கும் தனக்கு ஒரு வன்னிபப் பதவி கிடைக்குமென்றே நம்பினார்.

கயிலைவன்னியன் இளவரசனாக இருந்தபோது வெளிப்படுத்திய வீரதீரப் பிரபாவங்களைக் கண்ணுற்ற கைமத்தர் அவனைச் சிறைப்படுத்தி அடிபணிய வைக்கத் தீட்டிய திட்டம் நிறைவேறிக் கொண்டிருந்த சமயம் கணப் பொழுதிலே தவிடுபொடியாக்கிவிட்டதை நினைக்க நினைக்க அவர் உள்ளம் கொதித்தது.

"மான்விழியின் மயக்கும் அழகிலே உள்ளத்தைப் பறிகொடுத்ததால் வந்தவினை! அழகுதான் அழகு! நச்சு நாகங் கூடப் படம் விரித்தாடும் போது அழகாகத்தான் இருக்கிறது! இந்த முப்பது ஆண்டுகளில் அன்னந்தண்ணி இல்லாமல் இருந்த நாட்கள் நித்திரையின்றித் தவித்த இரவுகள் எத்தனை எத்தனை"

காலைக் கதிரவன் தன்பொற்கிரணங்களால் பூமியைத் தழுவிக் கொண்டிருந்தான். பறவைகளின் ஓசை, தேன்வண்டுகளின் ரீங்காரம் குளுகுளுவென்று அசைந்துவரும் தென்றல், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலய மணியோசை - இவை எதுவும் அவருக்கு மகிழ்வைத்தரவில்லை. மாறாக எரிச்சலையே தந்தன.

மேற்பற்று வன்னிமையிலே ஒரு சிறிய வீட்டிலே வசிக்கும் தனிக் கட்டை அவர். பிள்ளையா? குட்டியா? உற்றார் உறவினரா? எவருமே இல்லாத நிலை! காலா காலத்தில் கல்யாணம் செய்திருந்தால் அவர் பிள்ளைகளாவது அருகில் இருந்திருப்பார்கள். கிழட்டு வயதில் அந்தக் கேடுகெட்டவளை மனைவியாகக் கொண்டு கண்ட சுகம் என்ன?

"முன்பெல்லாம் கிரமவிட்டன் அடிக்கடி வந்து போவான்; இப்பொழுது அவனும் வருவதில்லை" என்று எண்ணியவர் யாரோதன் இல்லத்தை நோக்கிவருவதைக் கண்டார்.

"கைமத்தரே, சௌக்கியமா?" என்றார் வந்தவர்

"யார்? கிரமவிட்டரா? உனக்கு ஆயுசு நூறு; இப்பொழுதுதான் உன்னைப்பற்றி நினைத்தேன் எப்படிச் சுகசேமங்கள் ?"

"சுகசேமத்திற்கு குறைவில்லை. இந்த வயதில் ஒண்டிக்கட்டையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டி இருக்கிறது" சலிப்புடன் பதிலிறுத்தார் கைமத்தர்.

"நானும் நீங்களும் எத்தனை ஆண்டுகளாகப் பறங்கியருக்காகப் பாடுபட்டோம். எடுபிடிவேலைகள் செய்தோம். கடைசியிலே கண்ட பலன் பூச்சியந்தான்!" என்று கூறினார் விட்டர்.

"பனங்காம நிலைமைகள் எப்படி? அந்த மயக்கு மொழி அரக்கி என்ன செய்கிறாள்? என்னை விட்டுவிட்டு அந்தக் கைலையன் பின் ஓடினாளே! பனங்காமத்து அரசியாகலாம் என்று நினைத்தாளாக்கும். அவள் வயிற்றில் கயிலையனுக்குப் பிறந்த பெண்ணொருத்தி இருக்கிறாளாம். அவள் திருமணம் செய்து பிள்ளையும் பெற்றிருக்கிறாளாம். இவற்றை யெல்லாம் எனக்கு முன்பு கூறவில்லையே" ஆவலுடன் கேட்டார் கைமத்தர்.

"தங்களின் பழைய நினைவுகளைக் கிளற விருப்பமில்லாததால் நான் எதுவும் கூறவில்லை. தங்களின் மாஜி மனைவி கயிலைவன்னியனின் ஆசைநாயகியாக அரசமாளிகையின் அந்தப்புறத்திலேயே இருக்கிறாள், அவளின் பெண்ணும் அவளைப் போலவே ஒரு சுந்தர மோகினிதான்! அழகென்றால் அழகுதான்!" மிகவும் உற்சாகமாக இருந்தது விட்டரின் பேச்சு.

"அழகு, அழகு, அழகு, இந்த அழகிலே மயங்கித்தான் நான் எடுத்த காரியத்தைக் கோட்டைவிட்டேன் " பட பட வெனக் குமுறினர் கைமத்தர்.

"பாத்தீர்களா? இப்படி நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு வருந்துவீர்கள் என்பதற்காகத்தான் நான் எதுவும் கூறவில்லை. இனியென்ன தாங்கள் ஆவலுடன் கேட்டதால் மிகுதியையும் நான் கூறியே ஆக வேண்டும்."

கைமத்தர் ஒன்றுமே பேசவில்லை ˙ விட்டர் தொடர்ந்தார்.

"அந்தப் பெண்ணைக் கயிலைவன்னியன் அரசிளங்குமரன் ஒருவனுக்கு திருமணம் செய்துவிட்டான்"

"அரசிளங் குமரனா? யார் அந்த இளவரசன்? அரச மாளிகையிலே அதற்கு எதிர்ப்பு வரவில்லையா?"

"கயிலையனின் தமக்கையின் புத்திரன் அவன். இந்தத் திருமணத்தை நிச்சயப்படுத்தும் போது அரண்மனையிலே சிறு சலசலப்பு ஏற்பட்டது உண்மைதான்! ஆனால் அது நீடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை வன்னியனின் உறுதியான தீர்மானத்திற்கு முன்னால் எதிர்ப்புக் காட்ட எவரும் துணியவில்லை. திருமணம் ஜாம் ஜாம் என்று நடைபெற்றது. இதன் பேறாக அவள் வயிற்றில் உதித்தவன்தான் காசியனார்"

"கயிலை வன்னியனுக்கு இராணி வயிற்றில் பிறந்த பெண்ணொருத்தி இருக்கிறாளாமே!"

"ஆமாம், அவள் பெயர் குஞ்சிநாச்சியார்! அவள் போர்ப்பயிற்சி பெற்றிருக்கிறாள். அந்நியரை எதிர்த்துப் போர்க்களம் புகப் போகிறாளாம். வாள் வீச்சிலே அவளுக்கிணையானவர்கள் பனங்காமத்தில் இல்லை. எந்த முரட்டுக் குதிரையானாலும் அதனை அடக்கி அதன்மீது சவாரி செய்கிறாள்"

"அவளுக்குத் திருமணமாகவில்லையா?"

"இன்னும் ஆகவில்லை' அரசகுல ஆடவர் எவரையும் திருமணம் செய்ய அவள் விரும்பவில்லையாம். சாதாரண குலத்தில் பிறந்த தளபதி வெற்றிக் கடம்பனின் பின்னால் சுற்றித் திரிகிறாள். எல்லாம் தலை கீழாகத்தான் நடக்கிறது"

"அரசனின் ஆதரவு இருக்கிறதா?"

"அரசனும் அரசியும் இக்காதலை ழ்ற்றாக எதிர்க்கிறார்கள்"

"அப்படியானால் பேரன் காசியனாருக்குத்தான் யோகம் அடித்திருக்கிறது போலிருக்கிறது. பனங்காமத்தின் வாரிசு காசியனார் என்று சொல்கிறாயா? " அடைத்த குரலில் கேட்டார் கைமத்தர். அவர் முகத்திலே இனந்தெரியாத உவகை நெளிந்தது.

"மாஜி மனைவியின் பேரனுக்கு இராச்சியம் வரப்போகின்ற தென்ற மகிழ்ச்சி போலும்!" விட்டரின் பேச்சில் கேலியின் சாயல் இழையோடியது.

"செச் செச் சேய் ...... அப்படியெல்லாம் இல்லை"

"வாரிசு யார் என்று இன்னும் நிச்சயமாகவில்லை. காலங்கள் மாறும்போது கருத்துக்கள் மாறலாம். இப்போதைய கேள்வி குஞ்சிநாச்சியா? காசியனாரா? அல்லது நல்லமாப்பணரா? என்பது தான்!"

"நல்லமாப்பணரா? அவருக்கு எப்படி உரிமை வரும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பொழுது இராச்சிய பரிபாலனத்தில் பெரும்பகுதி நல்லமாப்பாணர் கையிலேயே இருக்கிறது. கயிலை வன்னியன் டச்சுக்காரரின் தர்பாருக்குப் போகாத போதும் ஒருமுறை நல்லமாப்பாணரே சென்றிருந்தார். டச்சுக் கொமாண்டருக்கு நல்லமாப்பணரில் நல்ல அபிப்பிராயம் இருக்கிறது."

"கிரமவிட்டரே, தாங்கள் தற்போது இராஜ்ய விவகாரங்களில் ஈடுபடவதில்லையப?"

"கயிலை வன்னியனுக்கு ஆயிரம் கண்களும் இரண்டாயிரம் காதுகளும் இருக்கின்றன. இதனால் எனது சூழ்ச்சித் திட்டங்கள் அனைத்தும் அம்பலமாகிவிட்டன. இப்போது தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்றிருக்கிறேன். கயிலை வன்னியன் நினைத்திருந்தால் என்னைப் பாதாளச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்திருக்கலாம்"

"என்னைப் போலத்தான் நீரும் விரக்தியின் விளிம்பில் இருக்கிறீர்கள் இல்லையா?"

"அதுமட்டுமல்ல எந்த நேரமும் என்தலை சீவப்படலாம் என்று கணந்தோறும் தலையைத் தடவிப் பார்த்துக் கொண்டே பீதியுடன் சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறேன்!"

"பற்றின் வருவது துன்பம்"

"ஆமாம், இதனையுணர இத்தனை ஆண்டுகள் சென்றுவிட்டன"?

"இனி உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?"

"என்னிடமிருக்கும் கௌடில்யரின் அர்த்த சாத்திரம், வேதாகமங்கள், திருக்குறள் ஏட்டுப் பிரதிகள் அனைத்தையும் தீயிலிட்டு எரித்தபின் தற்கொலை செய்யலாம் என எண்ணுகிறேன். வலிமையான வார்க்கயிறு, ஆழமான குளம், உயிரைக்குடிக்கும் கொடிய நஞ்சு - இவற்றில் எதனைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சிந்தித்துச் சிந்தித்து எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. எப்பொழுது ஒரு முடிவுக்கு வருகிறேனோ அப்பொழுது இந்தப் பிராமணனின் பூதவுடலை காக்கைகளும், கழுகுகளும் ருசி பார்க்கும்."

"தற்கொலை செய்பவர்களின் ஆவி, பேயாகப் பிசாசாக அந்தரித்துத் திரியும் என்று நீர் கேள்விப்பட தில்லையா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுவும் ஒரு வகைக்கு நல்லதுதான்! ஆவியுருவில் சென்று நன்றிகெட்ட டச்சுக் கொமாண்டரின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்று விடலாம்." என்று ஆவேசமாகக் கூறிய விட்டர் அவ்விடத்தை விட்டு எழுந்தார்.

"நீ தான் டச்சுக்காரருக்கு விசுவாசமாக இருந்தாயே"

"ஆமாம் யார்யாருக்கோ எல்லாம் விசுவாசமாக இருந்து, அவர்களுக்காக அல்லும் பகலும் உழைத்து அவர்களது அதிகாரத்தையும் புகழையும் உயர்த்த ஆசைப்பட்ட காலமெல்லாம் போய்விட்டது" என்று கூறியவாறே நெடுமூச்சு விட்டார். கொல்லன் பட்டறைத் துருத்தியைப் போன்றிருந்தது அவரது பெருமூச்சு.

"உண்மைதான், நானும்தான் ஒல்லாந்த கொம்பனியாரின் மேன்மைக்காகப் படாத பாடுபட்டேன். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது போல அந்த நச்சுப் பாம்பினால், நயவஞ்சகப் பேயினால் என் திட்டமெல்லாம் தவிடு பொடியாகிவிட்டது உண்மைதான். என்றாலும் என் உயிரைத் திரணமாக மதித்து வலிமை வாய்ந்த வன்னிச் சைனியத்துக்குத் தப்பி இளவரசனைக் கடத்திச் சென்றேனே! இதையறிந்து கூட டச்சு நிர்வாகம் நன்றி பாராட்டவில்லை. அந்த நன்றிகெட்ட கொமாண்டர் அன்ரனியைச் சந்திக்க யாழ்ப்பாணம் சென்றபோது அந்தக் கயவன் என்னைப் பார்க்க மறுத்துவிட்டான். அவனுக்குத் தேவையான போது உதவியைப் பெற்று தேவையற்றபோது நீக்கிவிடும் கறிவேப்பிலை ஆகிவிட்டேன்" சோகமே உருவான கைமத்தரின் நாக் குளறியது.

"இதே கதி எனக்கும் நேர்ந்ததை நீங்கள் அறியமாட்டீர்கள். ஒரு நாள் காலை அவனைச் சந்திக்கப் போயிருந்தேன். இரவு முழுவதும் மதுவையும் மங்கையையும் ருசிபார்த்துக் களைத்துப் போனதாலோ என்னவோ பகலவன் உதித்துப் பல நாழிகைக்குப் பின்னும் அவன் நித்திரைவிட்டெழவில்லை. என்னை அறிமுகப்படுத்தி சேவகன் மூலம் செய்தியனுப்பினேன். என்ன பதில் வந்தது தெரியுமா?"

"சொல்லுங்கள் உங்கள் சோகக் கதையை."

"காலையில் ஒற்றைப் பிராமணனில் விழிக்க விரும்பவில்லையாம் அவன். யாழ்ப்பாணத்திற்கு வந்தபின்னர் சகுன சாஸ்திரமும் கற்றுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பறங்கி........ சரி சரி எனக்குப் போகவிடை கொடுங்கள்" என்று கூறிய வாறே எழுந்தார் கிராமவிட்டர்.

"சரி போய் வாருங்கள். அடிக்கடி இந்தக் கிழவரையும் வந்து பாருங்கள்" என்று விடைகொடத்தார் கைமத்தர்.

❄❄❄

# 22
# பறங்கியாற்றங் கரையிலே

பனங்காம வன்னிமையிலேயுள்ள பறங்கியாற்றிலே நீராடிய கிராமவிட்டர் தலைப்பாகையைக் கழற்றி, நீரில் தோய்ந்த தன் உடம்பைத் துவட்டிக் கொண்டார். அவர் நெஞ்சிற்குக் குறுக்கே இருந்த முப்புரிநூலைச் சரிசெய்து கொண்டு ஈரமான பஞ்சகச்சத்தைப் பிழிந்து கரையிலே காயவிட்டார். ஆற்றங்கரை வேப்பமரத்திலிருந்த காகமொன்று அவரின் தலையின் வழுக்கைப் பிரதேசத்தில் எச்சமிட்டது தலைப்பாகைத் துணியால் எச்சத்தைத் துடைக்கும்போதே எச்சமிட்ட பட்சியைச் சுட்டெரிப்பது போலப் பார்த்துத் திட்டினார். குடுமியைத் தட்டி முடிந்து கொண்டார்.

அவர் உள்ளத்திலே கவலையின் சாயல் கப்பிக் கொண்டது. சமீப காலத்தில் பனங்காமத்தில் நடைபெறுகின்ற சம்பவங்கள் அவருக்கு எரிச்சலை ஊட்டின. மதியூக மந்திரியாக இருந்த தன்னை மன்னர் வேண்டுமென்றே புறக்கணிப்பது தெளிவாகத் தெரிந்தது. புறக்கணிப்பது மட்டுமன்றி சந்தேகக் கண்கொண்டு நோக்குவதற்குத் தகுந்த காரணமும் இருந்தது. அவரைப் பனங்காம ஒற்றர்கள் இரவுபகல் என்றில்லாமல் தொடர்வதையும் அவரால் உணராமல் இருக்க முடியவில்லை. ஒரு காலத்தில் அரசமாளிகையில் - ஏன் அரச குடும்பத்தினது அந்தப்புறத்தில்கூடகொடிகட்டிப் பறந்த அவர் இன்று இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது அவருக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தைக் கரைத்துக் குடித்த மறையோதும் அந்தணராகிய தமது திட்டங்கள் அனைத்துமே தவிடு பொடியாகிவிட்டதை உணரத் தலைப்பட்டார்.

முள்ளியவளைக்கும் பனங்காமத்திற்கும் பகையை மூட்டிப் பிரிக்கத் திட்டமிட்டார். அந்தப் பாழாய்ப்போன பெண் பாலியார் அதனை முறியடித்து விட்டாள். இலங்கை நாராயண முதலியார் தந்தையின் மறைவுக்குப் பின் இலங்கை நாராயண வன்னியனாராகி முள்ளியவளை வன்னிமையை ஆளுகின்றார். விரைவிலே பாலி-இலங்கையன் திருமணம் நடந்தேறப் போகிறது. ஏன் இந்த இரண்டு அரசுகள் மட்டுமா? எல்லா வன்னியர்களுமே கயிலை வன்னியனது தலைமையை ஏற்றுவிட்டார்கள்.

படையெடுத்து வந்த மடையன் இளைய வான்கூன்ஸ் இரண்டொரு வன்னியரையாவது தீர்த்துக் கட்டினானா? அது தான் இல்லை. அவனை இந்த வன்னியர்கள் பேய்க்காட்டி அனுப்பி விட்டார்கள். புதிய அரசமாளிகை கட்டும் திட்டததை மன்னன் கைவிட்டுவிட்டான். சைவசித்தாந்தம் அவனுக்குக் கசக்கிறது. ஏமாந்த சோணகிரியாம் தீபங்குடிப் புலவன் எங்கோ தவறுதலாக வைத்துவிட்ட புறநானூற்று ஏட்டையும், திருக்குறள் பொருட்பாலையும் அட்சரம் தவறாமல் பயின்று விட்டான் கயிலை வன்னியன்.

சமீபத்தில் நடைபெற்ற சம்பவமொன்று கிரமவிட்டரைத் திகிலடையச் செய்துவிட்டது. அதுதான் அந்த உளறுவாயன் காஞ்சிரங்காயனின் கைது. அவன் என்னென்ன சொன்னானோ? நினைத்தாலே நெஞ்சம் பதறுகின்றது.

"நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது. போதாக் குறைக்குக் கண்டியரசனின் நட்பையும் பெற்று விட்டான் வன்னியன்" பலவாறு சிந்தித்தார் கிரமவிட்டர்.

"எப்படியும் என்னைப்பற்றி அந்தக் காஞ்சிரங்காயன் உளறி இருப்பான். அரசதீர்ப்பு எப்படி இருக்கும்? சந்தேக மென்ன சிரச் சேதந்தான்! அதற்குமுன்பு தற்கொலை செய்யலாம்; ஆனால் அதற்கேற்ற துணிவு இன்னும் பிறக்கவில்லையே! திரும்பவும் யாழ்ப்பாணத்திற்கு ஓடிவிடலாமா?" யாழ்ப்பாணத்திலே அந்தப்பறங்கி அவரை அவமானப் படுத்தியது நினைவுக்கு வரவே அந்த எண்ணத்தையும் கைவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வெயில் இதமாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுதோ கதிரவன் மெல்ல மெல்ல வானத்திரையின் உச்சி நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். வெயிலின் அகோரத்தைத் தணிக்க வேப்பமர நிழலில் இருந்தால் பாழாய்ப்போன காகம் எச்சமிடுகின்றது. பக்கத்திலே ஏதும் மரங்கள் நிற்குமோ? கொன்றை மரம் ஒன்று மஞ்சள் நிறப் பூக்களைத் தாங்கிக்கொண்டு நின்றது. சிவபெருமான் கொன்றை மாலையை அணிவாராம். சற்றுத் தூரத்திலே பார்த்தால் நீலநிறப் பூக்களைத் தாங்கிய காயாம்புதர் 'காயாம் பூ வொத்த கதிர்திரு மேனிப் பெருமான்' என மகாவிஷ்ணுவை யாரோ ஒரு புலவன் வர்ணித்தது நினைவுக்கு வந்தது. கொன்றையும் காயாவும் நிழல்தரும் மரங்களல்ல. அதோ மருதமரமொன்று நிற்கிறது அதன் குளிர் நிழலில் இளைப்பாறலாம் என நினைத்தார்.

மருத மரத்தின் நிழலிலே இருந்தபடியே பார்த்தார். கண்ணுக்கெட்டாத தூரம் வரையில் தங்க மணிகளைத் தாங்கிநிற்கும் நெற்கதிர்களின் அழகிலே மயங்கிப்போனார். ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடி அரிவி வெட்டிக் கொண்டிருந்தார்கள். விவசாயிகள்தானே வன்னிமையின் உயிர்நாடி.இதை அறிந்துகொண்ட கயிலை வன்னியன் வவுனிக்குளத்தை மட்டுமல்ல பதினொரு நடுத்தர அளவிலான குளங்களைத் திருத்தியமைத்து விவசாயத்துக்கு உகந்ததாக்கி விட்டான். ஐயன்குளம், தென்னியன்குளம், கோட்டை கட்டினகுளம், அம்பலப் பெருமாள் குளம், முறிகண்டிக்குளம், கல்விலான் குளம், மல்லாவிக் குளம், பனங்காமக் குளம், தேராங்கண்டல் குளம், கொல்லவிளாங்குளம், அப்பப்பா எத்தனை குளங்களைப் புதுப்பித்து வாய்க்கால்களை அமைத்து நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுத் திருக்கிறான். இதனால் இந்த விவசாயிகள் இருக்கிறார்களே இவர்கள் அரசனைத் தெய்வாக வல்லவா போற்றுகின்றார்கள்"

கிரம விட்டருக்கு ஒரு விசித்திரமான யோசனை தோன்றியது "இப்படியே பூ நூலை அறுத்துவிட்டு, குடுமியைச்சிரைத்துவிட்டு சாதாரண விவசாயிகளோடு சேர்ந்து வேலை செய்வோமா? நல்ல யோசனைதான் கழனியில் இறங்கிக் கலப்பை பிடிக்கத் தெரியுமா? அல்லது அரிவி வெட்டத் தெரியுமா? சூடடிக்கத் தெரியுமா? இந்த வயதிலே இவற்றை யெல்லாம் பழக முடியுமா? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி, வயிற்றைக் கிள்ளியது. "இடும்பைகூர் என்வயிறே உன்னோடு வாழ்தல் அரிது" என்று அவர் வாய் முணுமுணுத்தது. அந்தணர் வீதிக்குச் சென்றால் உணவு கிடைக்கும். ஏனோ அவர் அங்கு போக விரும்பவில்லை. "கயிலை வன்னியன் நல்லவன். இந்த மட்டில் என்னைப் பிடித்துப் பாதாளச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்யாமல் விட்டிருக்கிறானே!"

அந்தணர் வீதிக்கே போவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டார் விட்டர்.

"இப்பொழுதெல்லாம் மன்னரின் நடமாட்டங்கள் மிகவும் அந்தரங்கமாகவே இருக்கின்றன. திடீரென்று ஒரு நாள் மன்னரைக் காணவில்லை. கரிக்கட்டு மூலைக்கும், கருநாவல் பற்றுக்கும் போனதாகச் சொன்னார்கள்! பிறகு பார்த்தால் கண்டியிலே மன்னருக்குப் பெரிய வரவேற்பாம், உபசாரமாம், விருந்தாம், கேளிக்கையாம்! அரச விஷயங்கள் அலசப்பட்டதாம். அந்த நேரத்தில் கயிலை வன்னியன் இங்கு நின்றிருந்தால் பெரிய போரே மூண்டிருக்கும். வன்னியன் தலை உருண்டாலும் உருண்டிருக்கும். சுபக்கிரகங்களின் பார்வை அவனுக்கு இருக்கும் போது எல்லாம் சுபமாகவே நடக்கும். எனக்குத்தான் இப்பொழுது படுபட்சி."

மருதமர நிழலிலே துணியை விரித்துக்கொண்டு கையைத் தலையணையாக வைத்துக் கொண்டு படுத்தவர் சற்றுக் கண்ணயர்ந்து விட்டார்.

கண்விழித்துப் பார்த்தபோது விவசாயி ஒருவன் பக்கத்தில் நின்றான். "ஐயா, பசியோடிருக்கிறீர்களே! இதனை உண்டு பசியாறுங்கள்." என்று சிறிது அன்னம் பரிமாறினான். வெண்மையான சம்பா அரிசிச் சோறும் கட்டியான எருமைத் தயிரும் பொரித்த மோர் மிளகாயும்.

கிரமவிட்டர் அமுதம் உண்ட தேவர்களைப் போல் அந்த வெண் சாதத்தை உண்டார். "இதற்காகத்தான் இந்த உழவர்களை உலகமே போற்றுகின்றது. மன்னன் உயிர்த்தேமலர் தலையுலகம் என்பதை மாற்றி உழவன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்று கூறியிருக்கவேண்டும். என்னை யார் என்று தெரியாமலே குறிப்பறிந்து உணவு ஊட்டுகின்றான் இந்த உழவன். இதுதான் வன்னிமண்ணின் பண்பாடு" என்று எண்ணினார்.

பசியாறியதும் மீண்டும் அவருக்குப் பயம் தொட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்தநேரமும் மன்னனின் ஏவலர் வந்து என்னைக்கைது செய்யலாம்! அதோ கையிலே ஈட்டியும் கொண்டு ஒருவன் வருகிறான் மன்னனின் ஏவலனாகத்தான் இருக்கவேண்டும்; இனி மீட்சியில்லை இதோ கிட்ட வந்து விட்டான். யார்? இவனும் ஒரு விவசாயி; கையிலே வேல் அல்ல சூடு அடிக்கும் போது கதிர்கிளறப் பயன்படும் வேலைகாரன் கம்பு .... சிவபுரநாதா, நான் தானே மன்னனை ஊக்குவித்து உனது ஆலயத்தைப் புநருத்தாரணம் செய்வித்தேன். இப்பொழுது புதிய கோயிலிலே குசாலாக இருக்கிறாயா? இந்த ஏழைப் பிராமணனைக் காப்பாற்ற மாட்டாயா?" எனக் கூறிய விட்டர் மீண்டும் மரத்தின் கீழ் படுத்து உறங்கி விட்டார்.

❀ ❀ ❀

# 23

# கம்மாளர் தெருவில்

காலைக் கதிரவன் கிழக்கு வானத்தைச் சிவப்பாக்கிக் கொண்டிருந்தான். வவுனிக்குளம் சிவபுரநாதர் ஆலய மணியோசையால் துயிலெழுந்த மாந்தர் அவசரம் அவசரமாகத் தங்கள் காலைக் கடன்களை முடித்துவிட்டு வேலைத் தலங்களையும் பயிற்சிக் களங்களையும் நோக்கிப் புறப்படுகின்றனர். செந்நெல் கழனிகளில் அறுவடை முடிந்து நெற்குவியல் பட்டடையிலும் கொம்பறையிலும் நிறைந்து விட்டது. காடு வெட்டித் திருத்திச் சேனைப்பயிர்ச் செய்கையால் பெற்ற குரக்கன், சாமை, தினைபோன்ற தானியங்கள் வீட்டை நிறைத்துவிட்டன. சாதாரண நாள்களிலென்றால் வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஓய்வு காலம். ஓய்வு நேரத்திலே மக்கள் இசையிலும் கூத்திலும், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளிலும் ஈடுபட்டுத் தம் பொழுதைக் களிப்பர். ஆனால் இப்பொழுதோ அவர்கள் பிறந்து வளர்ந்து தவழ்ந்து நீரினில் ஆடி நிலவினில் பாடி மகிழ்ந்த மண்ணின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டிருக்கும் போது கூத்திலும் பாட்டிலும் தம்பொழுதைக் கழிக்க நேரமேது? குலமரபு பேதமின்றி எல்லோரும் கம்மாளர் சாலையிலே ஓய்வின்றி வேலை செய்கின்றார்கள். இது ஏதோ அரச கட்டளைக்காக வல்ல. மண்ணைக் காக்க மக்கள் தாமே உணர்ந்து ஆற்றும் பணி.

பணங்காம அரசின் தளபதி வெற்றிக்கடம்பனும் அவன் காதலி இளவரசி குஞ்சிநாச்சியாரும் கம்மாளர் வீதியிலே அமைந்த தொழிற் சாலையிலே துரிதகதியிலே நடைபெறும் வேலைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்தனர். பளபளத் தொளிரும் பட்டாக் கத்திகள், அரிவையரின் அழகு நயனத்தை யொத்த கூர்வேல்கள், எறிந்தால் பகைவரின் உயிரைக் குடிக்கும் ஈட்டிகள், குறுந்தூரத் தாக்குதலுக்கேற்ற குத்துவாள்கள், அந்நியரின் தலைகளை அரைக்கணத்தில் சீவவல்ல ஒளிவீசும் வாள்கள், மண்டையை உடைக்கவல்ல பாரிய கதைகள், இரும்பாலும் கரடித்தோலாலும், யானையுரியாலுமான மார்புக் கவசங்கள், எதிரிகளின் குண்டுகளைக் கூடத் தடுத்து நிறுத்தக்கூடிய கேடயங்கள், தானேவளைந்து பாயும் வளைவிற்பொறி - இப்படி எத்தனை எத்தனையோ வகையான படைக்கலங்களும் பாதுகாப்புக் கவசங்களும் உருவாகிக் கொண்டிருந்தன. குஞ்சிநாச்சியார் அங்கு உருவாக்கப்பட்டிருக்கும் ஒளிகாலும் போர்வாள் ஒன்றை எடுத்து அதன் கூர்மையை விரல் நுனியால் தடவிப் பார்த்தார். அதனை மேலே உயர்த்திப் பகைவரின் தலையைப் பதம் பார்க்கும் பாணியில் நின்றார்.

கடகடவெனச் சிரித்தான் வெற்றிக் கடம்பன் "குஞ்சி, நான் பயந்தே போய்விட்டேன். நீ வாளை உயர்த்தியதைப் பார்த்தால் என் தலையையே சீவிவிடப் போகிறாயாக்கும் என்று நினைத்தேன்"

"ஒத்திகை பார்த்தேன். ஒல்லாந்த கூலிப்படை வீரன் தலையை எப்படிச் சீவலாம் என்று, அவ்வளவுதான்" அவளின் பேச்சு காதுக்கினிய சங்கீதமாக ஒலித்தது கடம்பனுக்கு.

"துப்பாக்கிகளுக்கும், பீரங்கிகளுக்கும் முன்னிலையில் உனது வாள் எந்த மூலையில் நிற்கப்போகிறது?"

"இதோ இந்தக் கேடயம் இருக்கிறதே! இது எந்தக் குண்டையும் தாங்கிப்பிடிக்கும்; தவிர எத்தனையோ தற்காப்பு பயிற்சிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருக்கிறேன்"

"குருவை மிஞ்சிய சிஷ்யை ஆகிவிட்டாய்; மிகவும் மகிழ்ச்சி. அதோ அந்த வேலைப்பார் இதனால் யானையைக் கூடத் தாக்கலாம்."

இவர்களின் உரையாடல் எதனையும் சட்டை செய்யாமலே தொண்ணுற்று நான்கு வகையான போர்க்கருவிகள் உருவாகிக் கொண்டிருந்தன. தானே வளைந்து பாயும் வளைவிற்பொறி, கல்லுமிழ் கவண், எதிரியின் மூளையை அள்ளும் ஆண்டலை அடுப்பு, கைபெயர் ஊசி, கணையம், கோல், குந்தம் வேல், களிற்றுப் பொறி, கழுகுப் பொறி, தோமரம், கதை, தண்டம், நாராசம், கூன்வாள், சிறுவாள், கொடுவாள், அரிவாள், சூழல்படை, குறுந்தடி – இப்படி எத்தனையோ ஆயுதங்கள்.

ஒருபகுதியில் இரும்பைக் காய்ச்சிப் பாரிய சம்மட்டியால் அடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பகுதியில் அரத்தினால் வாளையும், வேலையும் கூர்மையாக்கிக் கொண்டிருந்தார்கள்; இன்னொரு பகுதியில் குத்துவாள்கள் கொதிக்கும் உலையிலிட்டுக் காய்ச்சி நீரிலே தோய்த்துக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பகுதியில் அரிவையர் கரடித்தோலாலும். கரியுரியாலும், மரைத்தோலாலும் கேடயங்கள் ஆக்கிக் கொண்டிருந்தார்கள். வேறொரு பகுதியில் கேடயங்களுக்கு இரும்புப் பிடியும் தோற்பிடியும் பொருத்திக் கொண்டிருந்தனர்.

பக்கத்தில் இருக்கும் பட்டாக் கத்தியைத் தூக்கினான் கடம்பன். தளபதியும் பெருவீரனுமான அவனால் கூட அதனை இலகுவாகச் சுமக்க முடியவில்லை.

"குஞ்சி, இதோ பார் இந்தப் பட்டாக் கத்தி, முதன் முறையாக வன்னியிலே பயன் படுத்தப்படுகின்றது.

"அப்படியா?" என வியப்புடன் பார்த்தாள் குஞ்சிநாச்சியார்.

"குஞ்சி, நாங்கள் மிகவும் புனிதமான கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஒல்லாந்தர் ஆனையிறவில் இரண்டு கோட்டைகளைக் கட்டிவிட்டார்களாம்!"

"எதற்காம் ஆனையிறவில் கோட்டைகள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வன்னியர் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்து விடுவார்களோ என்ற அச்சந்தான்!"

"வன்னியர்களைக் கிள்ளுக் கீரைகளாக நினைத்து கப்பம் கேட்கின்ற டச்சு நிர்வாகத்திற்கு இப்படி ஒரு பயமா?"

"படைநடத்தி வந்த வான்கூன்ஸ் ஏன் வன்னியைத் தாக்கவில்லை? ஏன் சமாதானப் பேச்சுடன் போய்விட்டான் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் வன்னியைப் பற்றி அந்நியர் கொண்டிருக்கும் அச்சத்தை ஒருவாறு ஊகிக்கலாம்"

"அப்படியென்றால் ஒல்லாந்தரை எதிர்த்துப் போரிட வேண்டிய சந்தர்ப்பமே வராது என்று சொல்கிறீர்களா?"

"தற்காப்புப்போர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. ஒல்லாந்துப் பிரதேச எல்லைக்கு எமது படைகளை நடத்திச் சென்று, பகைவனுக்குப் பாரிய அடியொன்று கொடுக்க வேண்டி ஏற்படலாம்! மண்ணைக் காப்பது கடமை; மாற்றான் வசமுள்ள மண்ணை ஆக்கிரமிப்பது திறமை".

"அத்தான், மன்னருக்குத் தேவையான எல்லா ஞானத்தையும், திறமையையும் தாங்கள் பூரணமாக அறிந்து கொண்டிருக்கிறீர்கள். பாராளும் வேந்தர்கள் தங்களிடம் படிக்கவேண்டிய பாடங்கள் பலவுண்டு"

"என்னை அதிகமாகப் புகழ்ந்தேத்த வேண்டாம். ஏதோ இந்த நாட்டின் மானமுள்ள பிரஜை என்ற வகையில் சில விஷயங்களை அனுபவத்தால் அறிந்து வைத்திருக்கிறேன்; அவ்வளவு தான்!"

"மதியூக மந்திரியாக இருந்த கிரம விட்டரை இந்தப் பக்கம் காணோமே!"

"மதியூக மந்திரியா? அவனை நம்பியதால்தான் இந்த நாட்டிற்கு இத்தனை கேடு. வான் கூன்ஸ் படை நடத்திவர இவன்தான் வழிகாட்டினானாம். ஒல்லாந்தப்படை வன்னியருடன் சமாதானம் செய்து கொண்டது இவனுக்குப் பெரிய ஏமாற்றம். இந்தப் படையெடுப்பால் வன்னியர்களின் தலை உருளும் என எதிர்பாத்தான் அந்தச் சூழ்ச்சிக்காரன். இப்போது தலைமறைவாகத் திரிகிறானாம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தான், நம்பிக்கெட்ட சமுதாயம் ஒன்று உண்டென்றால் அது இந்த வன்னித் தமிழ்ச் சமுதாயந்தான்! வெளுத்ததெல்லாம் பால் என்று என் தந்தை நம்பினார். இதனால் தான் அவனை மதியூக மந்திரியாக வைத்திருந்தார்."

"ஏன். ஒற்றர்படைத் தலைவன் காஞ்சிரங்காயனைக் கைது செய்து ஒப்படைத்தேன். அவன் இப்பொழுது சிறையிலே இருந்து சுகபோகங்களை அனுபவிக்கிறான். இப்படித்தான் நான் ஆரம்பத்தில் கவலை கொண்டேன். மனிதரின் மனிதாபிமான நடவடிக்கைகள் எதிரியை வசப்படுத்தும் தன்மையன.இதனால் பனங்காமத்துக்கு நன்மையேயன்றி என்றும் தீமை ஏற்படாது."

"சரியாகச் சொன்னீர்கள்; என் தந்தை நினைத்திருந்தால் கிரமவிட்டரைச் சிறை செய்திருக்க முடியும். சூழ்ச்சிக்காரன் அடுத்துக் கொடுப்பவன் என்று தெரிந்திருந்தும் விட்டரை இந்த நாட்டிலே உலவ விட்டிருக்கின்றார். அதற்கும் ஏதோ காரணம் இருக்கிறது."

"அவர்தான் பயந்து அந்தணர் வீதிக்கு வருவதில்லை"

"சுவாமி, தாங்கள் எனக்கு வாள் பயிற்சி மாத்திரம் அளித்தீர்கள் வேல் பயிற்சி தரவில்லையே"

"அதுவா? உன்வேல் விழிவேலினாலேயே பகைவரை விழுத்தக் கூடிய சாமர்த்தியம் இருக்கும் போது வேல்பயிற்சி எதற்கு?"

"உங்களுக்கு எதற்கெடுத்தாலும் கேலிதான். இந்த ஆயுதத்தால் உள்ளங்கவர்ந்த ஒருவரைக் கூட விழத்த முடியாமல் தத்தளிக்கிறேன், மற்றவரை விழுத்த வேல் விழியைப் பயன்படுத்த நான் ஒன்றும் விலைமாதல்ல" பொய்க்கோபம் அவள் பேச்சில் இழையோடியது.

"கண்ணே குஞ்சி, ஏதோ வேடிக்கைக்காகச் சொன்னேன். நீ என்னவோ என்றால் அட்சரத்துக்கு அட்சரம் பொருள்கண்டு என்னைக் கோபிக்கிறாய்!"

இருவரும் கம்மாளர் வீதியை விட்டு வணிகர் தெருவுக்குச் சென்றனர். அங்கே விதம் விதமான அரேபியக் குதிரைகள் கட்டப்பட்டிருந்தன.

"இந்தக் குதிரைகள் எத்தனையோ போர்க்களங்களைக் கண்டவை. வீராதி வீரர்களையும் சூராதி சூரர்களையும் தம் குளம்படியால் மிதித்துக் குருதிச் சேற்றிலே மிதக்க வைத்தவை" என விளக்கினான் கடம்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்தவாய் மூடாமல் குதிரைக் கூட்டத்தைப் பார்த்து மூக்கின்மேல் விரல்வைத்து வியப்படைந்தாள்.

பகலவன் வானவீதியின் முகட்டை அடைந்தான்; தன் உக்கிரமான வெப்பக் கிரணங்களால் பூமித்தாயைத் தாக்கிக் கொண்டிருந்தான்.

குஞ்சிநாச்சியார் தன் காதலனைப் பிரியமுடியாமல் பிரிந்து அரச மாளிகை நோக்கி நடந்தாள்.

❂❂❂

# 24

# ஆனையிறவுப் போர்...

அரசமாளிகையிலே உளவுப் படைத்தலைவன் காஞ்சிரங் காயன் மீது பூரண விசாரணை நடைபெற்று முடிவடைந்தது. அவன் தன் செயற்பாடுகள் முழுவதையும் ஒன்றும் மறையாமல் கூறிவிட்டான் கிரமவிட்டருடனான தொடர்பு, அவரின் இரகசியத் திட்டங்கள் அனைத்தையும் காஞ்சிரங்காயன் கூறிவிட்டான். இது வொன்றும் வியப்பான செய்தியில்லை. ஏற்கனவே வன்னியனார் அறிந்ததுதான். மன்னர் தன்னைப் பற்றியெல்லாம் அறிந்துவிட்டார் என்ற அச்சத்தினாலேயே விட்டர் தலைமறைவாகிவிட்டார். இப்பொழுது விட்டருக்கு ஊசிக் குடுமியும் பூநூலும் பஞ்சகச்சமும் இல்லையாம். தலையிலிருந்த ஐந்தாறு கேசங்களும் நாவிதனின் சேவையைப் பெற்றுவிட்டன. காவியுடை, தலைப்பாகை, காவித்துணியால் போர்வை கையிலே திருவோடு ~ இக்கோலத்துடன் செட்டிகுள வன்னிமையில் பிச்சை எடுக்கிறாராம்.

காஞ்சிரங்காயனிடம் டச்சு நிர்வாகத்தின் திட்டம் அனைத்தையும் மன்னர் அறிந்துகொண்டார்.

கயிலை வன்னியனார் திடீரென்று உத்தரவு பிறப்பித்தார். படைகளை உசார் நிலையில் வைத்திருக்கும்படி. யானைப் படை, குதிரைப் படை, காலாள் படை அனைத்தும் அணிவகுத்து நிறுத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை வன்னியனார் ஏனைய வன்னியர்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

முள்ளியவளை இலங்கை நாராயண வன்னியன் தனது படைகளை அணிவகுத்து பனங்காமத்துக்குக் கொண்டுவந்து விட்டான். தென்னன் மரபடி , கருநாவற் பற்று, கரிக்கட்டு மூலை, மேற்பற்றுப் படைகள் ஆலங்குளத்தில் நிறுத்தப்பட்டிருந்தன.

யாரோ ஒருவன் - கண்டித்தூதுவனாக இருக்கவேண்டும்- மன்னரிடம் வந்து ஏதோ சைகை செய்துவிட்டுச் சென்றான். அவன் சென்ற இரண்டு நாழிகையிலேயே மஹாநுவரப் படைகள் பனங்காமத்தைச் சேர்ந்து விட்டன. தளபதி தென்னக் கோன் கண்டிப் படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கினான்.

கயிலை வன்னியனார் போர்க்கோலம் பூண்டு நல்லஜாதி வெண் புரவியில் தாவி ஏறினார்.

யானையொன்றின் மீதிருந்த வள்ளுவன் போர்முரசைச் சப்தித்தான்.

கண்டிப்படையும் வன்னிப் படைகளும் கயிலை வன்னியனார் தலைமையிலே அணிவகுத்துச் சென்றன.

ஒரு படைப்பிரிவுக்குப் பொறுப்பாக வெற்றிக்கடம்பனும், இன்னொரு படைப்பிரிவுக்கு இலங்கை நாராயணனும், வேறொன்றிற்கு நல்லமாப்பாணரும் தலைமைதாங்கினர். போர்க்களத்திலே குஞ்சிநாச்சியாரும் மார்புக் கவசமணிந்து கேடயமும் வாளும் கொண்டு குதித்தார்.

எங்கும் குதிரைகளின் குளம்படியோசை, வீரமுரசின் ஒலி, சங்கோசை என்பவை வானைப் பிளக்க ஆனையிறவை நோக்கிக் கூட்டுப்படைகள் சென்றன. வன்னியின் காட்டுப் பிரதேசம் படையினரின் ஆர்ப்பரிப்பால் கிடுகிடுத்தது. கொடிய வன விலங்குகள் கூடப்பயந்து நடுங்கிக் காட்டுக் குகைகளில் தஞ்சம் புகுந்து விட்டன. மந்திகள் அச்சத்தால் அங்குமிங்கும் மரக்கிளையில் தாவின.

கயிலை வன்னியரது வைரம்பாய்ந்த உடலிலுள்ள நரம்புகள் எல்லாம் வில்லெனப் புடைத் தெழும்பி தசை தெறித்துப் போவதுபோல் விம்மி உயர்ந்தன. அவன் கண்கள் நெருப்புருண்டை போலச் சிவந்து வீரக்கனலைக் கக்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயிலை வன்னியனார் கூட்டுப் படைக்குத் தலைமைதாங்கி ஆனையிறவை நோக்கிவருகிறார் என்பதை அறிந்த கோட்டையிலிருந்த ஒல்லாந்தப்படை அச்சத்தால் நடுநடுங்கியது. எனினும் ஒல்லாந்தப் படைப் பிரிவின் துணைத் தளபதி அவசரம் அவசரமாக எதிர்த்தாக்குதலுக்கு ஆயத்தமானான். பீரங்கிகள் வெடிமருந்தினால் நிரப்பப்பட்டு நிறுத்தப்பட்டன. துப்பாக்கிகள் முழங்குவதற்கு ஆயத்தமாகின.

ஆனையிறவுக் கோட்டையைக் கூட்டுப்படை அண்மித்த வேளையிலே பீரங்கிக் குண்டுகளும், துப்பாக்கி வேட்டுக்களும். படையை நோக்கி ஏவப்பட்டன. வன்னி விரர் பலர் துப்பக்கிக் குண்டு துளைக்கப் பட்டுச் சரிந்து வீழ்ந்தனர். என்றாலும் படையின் முன்னேற்றம் தடைப்படவில்லை. வன்னிப்படையினர் வேலையும், ஈட்டியையும் வேகமாக ஒல்லாந்தப்படை மீது ஏவினர். எதிர்த்து வந்த டச்சுப் படையிர் தலைகள் சீவப்பட்டன.

துப்பாக்கி வேட்டொன்று குஞ்சிநாச்சியாரின் நெஞ்சுக்கு குறிபார்த்து ஏவப்பட்டது. குஞ்சி நாச்சியார் செய்த சமிக்கையால் அவள் ஆரோகணித்து வந்த குதிரை நிலத்திலே மண்டியிட்டது. குண்டு நாச்சியாரின் தலைக்கு மேலால் சென்றது. ஓயாமல் குண்டுமாரிகள் பொழியப்பட்டன. இத்தனை குண்டு வீச்சிற்கும் இலக்காகாமல் கூட்டுப்படை வீரர்கள் நிலத்தில் வீழ்ந்து படுத்திருந்து தப்பிக் கொண்டனர்.

சற்று நேரத்திற்கெல்லாம் குண்டுமாரி ஓய்ந்துவிட்டது. கூட்டுப் படை அணியிலிருந்து வீசப்பட்ட காட்டாரிகளும், வேல்களும், ஈட்டிகளும் ஒல்லாந்தப் படையினரை சரித்து வீழ்த்தின.

கல்லுமிழ் கவண்களிலிருந்து புறப்பட்ட கற்களால் ஒல்லாந்தப் படையினரின் மண்டைகள் உடைந்தன. எதிர்த்து நின்று போர் செய்ய முடியாமல் ஒல்லாந்தப்படை பின்வாங்கி யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றது. இவற்றைப் பின்தொடர்ந்து தாக்கியதால் நூற்றுக்கணக்கான படையினர் உயிர் துறந்தனர்.

"நிறுத்துங்கள்" என உத்தரவிட்டார் கயிலை வன்னியனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையிலே இருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பீரங்கிகளை வன்னி வீரர்கள் இழுத்துச் சென்றனர். வெடிமருந்து மட்டும் அங்கு சிறிதளவுதான் இருந்தது. எல்லாமே முடிந்துவிட்ட நிலையில்தான் ஒல்லாந்தப்படை பின்வாங்கியது என்ற விசயம் இப்பொழுதுதான் தெரியவந்தது. கோட்டையிலுள்ள சிறிய மண்டபத்தின் சுவரிலே பொருத்தியிருந்த V.O.C. என்ற ஒல்லாந்த வணிகக் கொம்பனியின் சின்னம் பொறித்த திரை கைப்பற்றப்பட்டது.

கோட்டைகள் இரண்டையும் இடித்து நீர்மூலமாக்கும் பணியிலே கண்டி-வன்னிய வீரர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். வன்னிப்படை வீரர்களின் அஞ்சா நெஞ்சங்களையும், போர் ஆற்றலையுங் கண்டு கண்டித் தளபதி தென்னக்கோன் அதிசயமடைந்தார்.

முப்பத்தாறு நாழிகையிலே கோட்டைகள் இரண்டும் நீர் மூலமாக்கப்பட்டன.

தினவெடுத்த தோளை நிமிர்த்தி யாழ்ப்பாணத்தை நோக்கி படை நடத்த ஆயத்தமான வெற்றிக்கடம்பனுக்கும், குஞ்சி நாச்சியாருக்கும் பெரும் ஏமாற்றமாகிப் போய்விட்டது. தாக்குதல் நிறுத்தப்பட்டிருப்பதாக கயிலை வன்னியனார் பிரகடனப்படுத்தி விட்டார்.

"நண்பர்களே, நீங்கள் அனைவரும் இன்றைய போரிலே உங்கள் உயிரைத் திரணமாக மதித்துப் போராடி வெற்றியீட்டியுள்ளீர்கள். உங்கள் அஞ்சா நெஞ்சம் உறுதியான கட்டுக் கோப்பான தாக்குதல் அனைத்தும் என்னை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அனைவருக்கும் உளம் நிறைந்த பாராட்டுக்கள். எமது அடுத்த திட்டம்... அது மிகவும் அந்தரங்கமானது. சமயம் வரும்போது அதனை அறிவிப்பேன்." என்று பெருமிதத்துடன் ஆர்ப்பரித்தார் வன்னியனார்.

வன்னி நாட்டுக்குத் திரும்பிச் சென்றபடை அங்கே வெற்றிக் களிப்பிலே சோம்பியிருக்கவில்லை. அடுத்து வரவிருக்கும் போருக்கான ஆயத்தங்களைச் செய்தனர்.

மஹநுவர என்னும் கண்டியிலும் பனங்காமத்தின் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் கொண்டாடப்பட்டன. குஞ்சி நாச்சியாரின் வீரத்தைப் பாராட்டாதவர் இல்லை. களத்திலே காரிகையொருத்தி இறங்கிக் காட்டிய வீரதீர சாகசத்தை கண்டு கண்டி வீரர்களே மூக்கின்மேல் கைவைத்து வியந்தனர்.

கண்டிப் படையினருக்குப் பிரமாதமான விருந்துபசாரங்கள் செய்யப்பட்டன. கோட்டையிலே பீரங்கிகளும், துப்பாக்கிகளும் மாத்திரமல்ல, வெளிநாட்டு பிறண்டி, விஸ்கிப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டன. வெளிநாட்டு மதுவை முதன்முறையாகச் சுவைத்து மகிழ்ந்தனர் வீரர்கள் அனைவரும்.

தளபதி தென்னக்கோன் தடக்கித் தடக்கித் தமிழ்பேசத் தொடங்கி விட்டார். அவருடைய சிங்கள உச்சரிப்புத் தமிழ்கூட இனிமையாகத் தான் இருந்தது.

இந்த விருந்துபசாரங்கள் வெற்றிக்கடம்பனுக்கு ஏனோ மகிழ்ச்சியைத் தரவில்லை. விருந்துபசாரத்தில் அதிகம் அக்கறை செலுத்தாத அவ்வீரனின் நெஞ்சிலே குஞ்சிநாச்சியார் நீக்கமற நிறைந்துவிட்டார்.

ooo

"அத்தான்" என நாணம் மேலிட அழைத்தாள் குஞ்சி நாச்சியார்

"கண்ணே குஞ்சி" என அவளை அணைத்துக் கொண்டான் வெற்றிக்கடம்பன். அணைத்த அணைப்பிலேயே முதன்முறையாகத் தன் உதடுகளால் மாம்பழக் கன்னத்திலே முத்தம் ஒன்றைப் பதித்தான். அவளின் மிருதுவான கரங்கள் வாளும் வேலும் தாங்கியதால் சிவந்து கன்றி இருந்ததை அவன் கவனித்தான்.

"கண்ணே எனக்கு நீ ஒரு உறுதி தரவேண்டும்!"

"என்ன உறுதிமொழி அத்தான்"

"களத்திலே இறங்கி உன் அஞ்சா நெஞ்சத்தின் உறுதியையும் போர்த்திறமையையும் நிரூபித்து விட்டாய். உன் பட்டுப் போன்ற கரங்கள் இன்று கன்றிக் காய்த்து முரட்டுத் தன்மையை எய்திவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எல்லோரும் இருக்கும் போது நீ ஏன் போரக்களம் புகவேண்டும். இனி மேலாகுதல் போருக்குப் போகப்போகிறேன் என்று அடம்பிடிக்கக் கூடாது."

"மன்னிக்கவேண்டும் சுவாமி, தாங்கள்தானே எனக்குப் போர்ப்பயிற்சியளித்தீர்கள். என்னைப் போர்க்களத்திற்குப் போகச் சொன்னதும் தாங்கள்தான், நீங்கள் மட்டும் போர்க்களம் புகுந்து போராட நான் எப்படி அரண்மனையிலே அறுசுவையுண்டி அருந்தி, பஞ்சணை மெத்தையிலே நிம்மதியாகத் தூங்கமுடியும்?. இன்னும் ஒரேயொரு முறையேனும் போர்க்களம் செல்ல என்னை அனுமதியுங்கள்."

வெற்றிக்கடம்பன் மிகவும் தயக்கத்துடனேயே தலையசைத்தான். இளவரசியின் வேண்டுகோளை ஏற்பது போலிருந்தது அந்த அசைவு.

"அத்தான், இனியும் எம் திருமணத்தை ஒத்திப் போடவேண்டுமா?" யாழையும் குழலையும் தோற்கடித்தன அவளது இனிமையான வார்த்தைகள்.

"தங்கள் அன்னையாரும், தந்தையாரும் சம்மதிக்க வேண்டுமே!"

"எங்கள் தூய்மையான காதல் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் தடை விதிக்கமாட்டார்கள் என்றே எண்ணுகின்றேன்"

"அப்படியென்றால் நாள் பார்க்க வேண்டியதுதான்!" அவளின் பட்டுக் கன்னத்திலே செல்லமாகக் கிள்ளினான்.

"அத்தான், என் ஆசை அத்தான்" என்று கூறிக்கொண்டே அவன் கன்னத்திலே மாறி மாறி முத்தமாரி பொழிந்தாள்.

"ஆனால் ஒன்று..."

"என்ன அத்தான் அது...?" திகைப்புடன் கேட்டாள் குஞ்சி.

சுபமுகூர்த்தம் பார்த்துச் சொல்வதற்குத்தான் அந்தண சிரேட்டரான கிரமவிட்டர் இல்லையே!" என்று விளையாட்டாக் சொன்னான்.

"பொல்லாத அத்தான், நான் என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன். அந்தச் சூழ்ச்சிக்காரன் தான் மாறுவேடத்தில் திரிகிறானாமே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுசரி, உன் சித்திபாலி நாச்சியாரின் திருமண விடயம் எந்த அளவில் இருக்கிறது"

"ஓகோ, உங்களிற்கு அவவின் திருமணத்தில் அவ்வளவு அக்கறையா? இருக்காதா பின்னே? ஒரு காலத்தில் சித்தி தங்கள் இல்லக் கிழத்தியாக வர இருந்தவர்தானே!" குஞ்சி நாச்சியாரின் முகத்தில் ஊடல் பளிச்சிட்டது.

"பார், பார் பொறாமையை, ஏன் தான் பெண்களுக்கு இந்தப் பொறாமையோ தெரியவில்லை? குஞ்சி, நான் உன்னவன் என்றும் நீ என்னவள் என்றும் ஆகிவட்ட பின்னும் நீ இப்படி சந்தேகம் கொள்ளலாமா?"

"சும்மா ஒரு கதைக்குச் சொன்னேன் அத்தான். இலங்கை நாராயணரின் தந்தையாரின் மரணத்தக்குப் பின் ஓராண்டுதான் பூர்த்தியாகியுள்ளது. தவிர இராச்சிய பாரத்தைச் சுமந்திருக்கும் அவருக்கு இப்பொழுது காதல், கல்யாணம், கத்தரிக்காய் பற்றி யெல்லாம் எண்ணிப் பார்க்கவே நேரமில்லையாம். சித்தி ஒருநாள் சொல்லிக் குறைப்பட்டுக் கொண்டாள்.

"ஆமாம், சமீபகாலம்வரை வன்னிமைகளின் நிலைமை திருமணங்கள் நடைபெற உகந்ததாக இல்லைத்தானே! தவிர திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்வார்கள்!"

"எமது திருமணம் மட்டும் போர்க்களத்தில் நிச்சயிக்கப்பட்டு விட்டது." கன்னம் சிவக்க நாணத்துடன் நிலத்தைப் பார்த்துக் கொண்டே கூறினாள் குஞ்சி நாச்சியார். அவள் கால் பெருவிரல் ஏனோ தரையை உழுது கொண்டிருந்தது.

"இதைச் சொல்ல இவ்வளனவு நாணமா? போர்க்களத்திலே சீறிப்பாய்ந்து வாளினால் எதிரிப்படையை வெட்டிச் சரித்தபோது நான் நினைத்தேன் பனங்காம இளவரசி குஞ்சி நாச்சியாருக்கு இனிமேல் காதல் உணர்வு மரத்துப் போயிருக்குமென்று"

"போங்கள் அத்தான், எங்கள் திருமணம் விரைவில் நடந்தேற வேண்டும். தவறினால் குஞ்சி நாச்சியாரின் உயிர்...."

"ஐயையோ வேண்டாம். நாச்சியாலின் உயிர் உடலிலேயே இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்!. எப்படியும் திருமணத்திற்கு ஒழுங்குகளைச் செய்துவிடுகிறேன் திருப்திதானே?"

குஞ்சி நாச்சியாரின் முகத்திலே திருப்தியும், மகிழ்சியும் பரடத் தொடங்கின.

"கண்ணே குஞ்சி, அடுத்த போருக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது யாழ்ப்பாணம் நோக்கிய படையெடுப்பாக இருக்கலாம். அல்லது பூநகரிப் போராக இருக்கலாம். கண்டி மன்னனுடனும் ஆலோசனை செய்த பின்புதான் அடுத்த நடவடிக்கை இருக்கும் என ஊகிக்கமுடிகின்றது. மன்னரின் அத்தியந்த நண்பரும் போர் வீரருமான சிலம்பன் மர்மமான முறையில் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றான் போலிருக்கிறது"

"ஆமாம், இப்பொழுதெல்லாம் சிலம்பனைப் பனங்காமப் பகுதியில் காணக் கிடைப்பது அரிதாகவே இருக்கிறது."

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

# பொதிமாட்டு வியாபாரி

ஆதவன் மேற்குவானில் சாய்வதற்கு மூன்று நாழிகைதான் இருந்தது. வானம் இருண்டு கறுத்திருந்தது. மழை சிறிது சிறிதாகத் தூறத் தொடங்கியது. பொதி மாட்டு வியாபாரி ஒருவன் மிக ஆறுதலாகவே பனங்காமம் செல்லும் ஒற்றையடிப் பாதையால் சென்று கொண்டிருந்தான். வானம் இருட்டியதையோ மழை தூறுவதையோ அவன் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

பொதிமாட்டு வியாபாரியைக் கண்ட மக்கள் சிலர் அவனை மறித்தனர். "மிளகு இருக்கிறதா?" எனக் கேட்டாள் ஒரு பெண். "வெற்றிலை இருக்கிறதா?" என வயோதிபர் ஒருவர் கேட்டார். "சிறிது மஞ்சள் தாருங்களேன்" என்று பேரிளம் பெண் ஒருத்தி வேண்டினாள். எல்லாவற்றிக்கும் 'இல்லை' 'இல்லை' என்ற பதிலே வந்தது.

"இவன் என்னதான் வைத்திருக்கிறானோ தெரியவில்லை, விசித்திரமான வியாபாரிதான்!" மக்கள் முணுமுணுத்தனர். வழக்கமான வியாபாரிபோல் குழைவும் கனிவும் இவன் வார்த்தையில் இல்லை. மிக அலட்சியமாக இருந்தன அவன் பதில்கள்.

"என்ன வைத்திருக்கிறானோ தெரியவில்லை!" வாலிபன் ஒருவன் ஏளனம் தொனிக்கக் கேட்டான்.

"உப்பு மட்டுந்தான்! இது சாதாரண உப்பல்ல, விலையுயர்ந்த யாழ்ப்பாண உப்பு. அரச மாளிகையிலே தான் உபயோகிப்பார்கள்.

கலகலவெனச் சிரித்தான் வாலிபன். "வன்னிப் பிரதேசத்தின் கடற்கரையிலே அபரிமிதமாகக் கிடைக்கும் உப்பை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வர வேண்டுமா? ஏதோ உயர்தர உப்பாம்! என்ன கதையிது?"

வாலிபன் சொன்னதை வியாபாரி காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. கையிலிருந்த துவரங் கம்பினால் அடித்து பொதி மாட்டை ஏவினான். அந்த மாடும் அவனைப் போலவே மந்த கதியிலேதான் நடந்தது.

"ஆனையிறவுப் போர் முடிந்து ஒரு வாரமாகிவிட்டது. இன்னும் சில தினங்களிலே பூநகரிப் போர் தொடங்கவிருக்கிறது. இடைவெளியை நீடித்தால் கொம்பனியார் பூநகரியைப் பலப்படுத்தி விடுவார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நினைத்துக் கொண்டே பொதி மாட்டு வியாபாரி நடந்து சென்றான்.

எவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் யாழ்ப்பாணம் சென்றான் அவன். எத்தனை கேள்விகளுக்கு அவன் பதில் சொல்ல வேண்டியிருந்தது. எப்படியோ வெற்றியுடன் திரும்பிவிட்டான் அவன்.

அரசமாளிகை அந்தப்புரத்திலே மான்விழி மாங்கையருக்கு இருப்புக் கொள்ளவில்லை. அடிக்கடி வெளியே சென்று பார்ப்பதும் உள்ளே செல்வதும், செவியைத் தீட்டி செய்தியேதும் வருகிறதா? என அறியத் துடிப்பதுமான இருந்தாள் அம்மங்கை. பேரனை மடியில் வைத்துக் கொஞ்சி விளையாடும் இந்த வயதிலும் அவளின் கட்டுக் குலையாத உடல் பார்த்தவர்களைப் போதை கொள்ளச் செய்யும். ஒரு பார்வையிலேயே எந்த ஆடவனையும் வீழ்த்தவல்ல கருவண்டு விழியும், செப்புக் குடங்களைப் போன்ற தனபாரமும் அவள் கொள்ளை அழகுக்கு அழகூட்டின.

இந்த வயதிலும் கயிலாய வன்னியனார் அவளைப் பள்ளியறைப் பாவையாகச் சுவைத்துச் சுவைத்து சொர்க்கலோக இன்பத்தை அனுபவித் திருக்கிறார்.

பதினாறு அகவையிலே கைமத்தர் என்னும் உன்மத்தரை மோகவலையில் சிக்கவைத்தது. மணந்து ஓராண்டுக்கு முன்னரே இளவரசரின் அன்புக்குப் பாத்திரமானது. அதன் சின்னமான சந்திர லாவன்யத்தைத் தோற்கடிக்கும் சௌந்தர்யமுடைய பெண் குழந்தையை ஈன்றெடுத்தது. அவள் பருவக்குமரியாகி இளவரசன் ஒருவனைக் கைப்பிடித்தது. இல்லறத்தின் பேறாக காசியனார் என்னும் கட்டழகு மதலையைப் பெற்றெடுத்தது – இவையெல்லாம் அவள் மனத்திரையில் தோன்றித் தோன்றி மறைந்தன.

வானம் இருண்டு முதற் சாமத்தின் முடிவிலே பொதிமாட்டு வியாபாரி அரசமாளிகையை அடைந்து விட்டான். மான்விழி துள்ளிக் குதித்து ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரியின் முகமே அவன் எடுத்த காரியத்தை முடித்திருக்கிறான் என்று காட்டியது. என்றாலும் அவன் வாயிலிருந்து அதனைப் பெறவே துடியாகத் துடித்தாள்.

"சிலம்பா? போனகாரியம் வெற்றிதானே?"

"வெற்றிக்குமேல் வெற்றி ....... அந்த டச்சுக் குரங்குகளின் கண்ணிலே மண்ணைத் தூவிவிட்டு வெடிமருந்துக் கிட்டங்கியில் நுழைந்தவிட்டான் ஒல்லாந்தர் சேவையிலிருக்கும் எனது ஆருயிர் நண்பன். பிறகென்ன எதிர்பார்த்ததை விடக் கூடுதலாகக் கிடைத்தது. இந்தப் பொதிமாடு சுமக்கமாட்டாமல் சுமந்து வந்தது இந்த உப்பை."

"என்ன இது உப்பா?"

"ஆமாம். தெருவிலே என்னை மறித்தவர்களுக்கு உப்பென்றுதான் சொன்னேன். 'அளம்பிலிலும் பொக்கணையிலும் அள்ளக்கூடிய உப்பை யாழ்ப்பாணத்திலிருந்தா கொண்டு வருகிறாய்' என்று என்னை எத்தனை பேர் கேலிசெய்தார்கள்."

"உண்மையிலெயே நீங்கள் ஒரு அசகாய சூரர்தான்! இந்தப் பனங்காம வன்னிபத்திற்கு எப்படியெல்லாம் உழைக்கிறீர்கள்!" என்று தன் குரலிலே தேனையும் சர்க்கரைப் பாகையும் குழைத்துக் கூறிக் கொண்டே அவன் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி ஆதரவாகத் தன் உதட்டைக் குவித்து முத்தம் இட்டாள்.

நல்லகாலமாக அருகிலே எவரும் இல்லை. யாராவது வந்து விட்டால் என்று எண்ணியவள் மெல்லிய குரலில், "கண்ணாளா, இனியும் இந்த வணிக உடை அவசியந்தானா? மழையிலே சற்று நனைந்துவிட்டிருக்கிறீர்கள். உடையை மாற்றுங்கள் ' தங்களை உல்லாசபுரிக்கு அழைத்துச் செல்கிறேன்."

"யாரங்கே" என்று கைதட்டிய ஓசை மங்க முன்பே எட்டுச் சேவகர்கள் அவள் முன்பு வந்து நின்றனர்.

"பொதிமாட்டிலிருந்து உப்பு மூட்டையை இறக்கிப் பத்திரமாக இரகசிய அறையில் வைத்துப் பூட்டுங்கள்" சேவகர் ஒருவரை ஒருவர் பார்த்து மலங்க மலங்க விழித்தபடியே உப்பு மூட்டையைக் காவிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றனர்.

"இந்த ஐயா அணிந்து கொள்ள மாற்றுடை கொண்டுவாருங்கள்" என்று உத்தரவிட்டாள்.

சிலம்பன் உடையை மாற்றிப் புத்தாடை அணிந்து கொண்டான் விதம் விதமான வாசனைப் பொடிகள் அவனின் முறுக்கேறிய மேனிக்கு நறுமணம் ஊட்டின. அன்று இரவு அவன் நடந்துவந்த நோவை ஒத்தணம் கொடுத்து மாற்றி விட்டாள் மான்விழி

விடியுமுன்னே மன்னருக்குச் செய்தி எட்டிவிட்டது. நாட்டுப் பற்றும் வீரமும் தீரமும் தியாக சிந்தையும் உடைய சிலம்பன் மாற்றார் கோட்டையுள் புகுந்து பீரங்கிகளுக்கு வேண்டிய வெடிமருந்துகளைக் கொண்டுவந்து விட்டான் என்பதே அந்த இனிப்பான செய்தி.

❄❄❄

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26

## பூநகரிச் சமர்

யாழ்ப்பாணத்தின் இன்னொரு நுழைவாயிலான பூநகரியை நோக்கி கண்டிய பனங்காமப் படைகள் சென்றன. ஒரு படைப் பிரிவுக்கு இளவரசி குஞ்சிநாச்சியார் தலைமை தாங்கினார். வில் இலச்சினை பொறிக்கப்பட்ட குதிரையிலே கெம்பீரமாக குஞ்சிநாச்சியார் ஆரோகணித்துச் செல்வதைப் பார்த்த பனங்காம மக்கள் பரவசமடைந்தனர். பளிச்சிடும் வீரவாளும், கூர்வேலும் கேடயமும் தாங்கிய வண்ணம் படைப்பிரிவொன்றை நடத்திச் சென்றார் இளவரசியார். முதலில் மன்னவர் இதற்கு இணங்கவில்லை. எவ்வளவு தடுத்தும் இளவரசி அடம்பிடித்து நின்றதால் மன்னர் தனது இணக்கத்தைத் தரவேண்டியிருந்தது. கூட்டுப்படைத் தலைமைப் பொறுப்பை இம்முறையும் கயிலைவன்னியனாரே ஏற்றுக் கொண்டார்.

ஆனையிறவில் ஒல்லாந்த சைனியம் தோற்றுப் பின்வாங்கிய பின்பு பூநகரியில் மேலுமொரு தாக்குதலை ஒல்லாந்த கொமாண்டர் எதிர்பாத்திருந்தார். இதனால் இரண்டாயிரம் படைவீரர்கள் பூநகரியில் குவிக்கப்பட்டிருந்தனர். கனரகப் பீரங்கிகளும் துப்பாக்கிகளும் தயார் நிலையில் இருந்தன. யாழ்ப்பாண தீபகற்பத்தையேனும் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்த டச்சு நிர்வாகம் எத்தகைய தாக்குதலுக்கும் தயாராகவே இருந்தது.

யானைப் படை, குதிரைப்படை, காலாள் படை என்னும் மூன்று பிரிவாகக் கண்டிய வன்னியப்படைகள் அணிவகுத்துச் சென்றன. முதலிலே முத்துக்குளிக்கும் இடமான அரிப்பையம் அங்குள்ள கோட்டையையும் கூட்டுப்படைகள் கைப்பற்றின.

சுதேச ஆயுதங்களுடனும் ஆனையிறவில் கைப்பற்றிய பீரங்கிகள், துப்பாக்கிகளுடனும் படைகள் சென்றன. சுழல்படை, குத்துவாள், கொடுவாள், கைப்பயர் ஊசி, சக்கரம், குறுந்தடி போன்ற படைக்கலங்களுடன் கூட்டுப்படை வெள்ளம்போல் திரண்டு வருவதைத் தூரத்திலே கண்ட டச்சு சிப்பாய்கள் பீரங்கிகளை முழங்கத் தொடங்கின. கூட்டுப் படையின் முன்னேற்றம் சிறிது நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தம்பித நிலையடைந்தது. வன்னிப் படைவீரர் பாதுகாப்பு நடவடிக் கையில் ஈடுபடுமாறு பணிக்கப் பட்டனர். ஐந்து நாழிகை நேரம் பீரங்கிகள் முழங்கின. இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. பின்னர் பீரங்கிச் சத்தம் குறையத் தொடங்கியது. கயிலை வன்னியனார் சைகை செய்ய வன்னிப் படைவீரர் பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர். பீரங்கி முழக்கத்தை எதிரிதரப்பில் கேட்ட ஒல்லாந்தப் படையணி கதிகலங்கிப் போய்விட்டது. என்றாலும் தொடந்து துப்பாக்கிகள் வெடித்தன.

ஒல்லாந்தப் படையின் துப்பாக்கி வேட்டுக்கு நூற்றுக்கணக்கான கூட்டுப்படை வீரர் பலியாகினார். வேலும் ஈட்டியும் தாக்கியதால் ஒல்லாந்தப்படை வீரர்கள் மரணத்ததைத் தழுவிக் கொண்டனர்.

மீண்டும் வன்னிப்படை விரரின் பீரங்கிகள் முழங்கத் தொடங்கின. எதிரிப்படையில் நூற்றுக்கணக்கானோர் பீரங்கிக் குண்டுகளுக்கு பலியாகினர். திரும்பவும் டச்சுப்பீரங்கிகளின் முழக்கம் வானைப் பிளந்தது. வன்னிப்படையினர் தாக்குதலை நிறுத்திப் பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

எங்கும் நிசப்தம் நிலவியது. கூட்டுப்படையினர் பின்வாங்குவது போல் நடித்தனர். எதிரிகள் தரப்பில் மகிழ்ச்சி ஆரவாரம். திடீரென்று முன்னேறிய கூட்டுப்படையினர் சுதேச ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை மேற்கொண்டனர். கைபெயர் ஊசி எதிரிப்படையின் காதைத் தழைத்தது. கல்லுமிழ் கவண்கள் ஒல்லாந்தப் படையினர் பலரைக் காயப்படுத்தின. எதிர்ப்பட்ட சிப்பாய்களின் தலைகளை குஞ்சிநாச்சியார் வாளால் துணித்தார். கூட்டுப்படையினரின் பிரங்கியால் கோட்டைளின் ஒருபுறம் இடிந்து தகர்ந்தது.

பீரங்கிக்கும் துப்பாக்கிக்கும் அஞ்சாத கூட்டுப்படையணி கோட்டையை நோக்கி முன்னேறியது. ஆயிரக்கணக்கான ஒல்லாந்த சிப்பாய்களின் சடலங்கள் குதிரைகளாலும் யானைகளாலும் மிதிபட்டன.

வெற்றிக்கடம்பன் எதிர்த்து வந்த சிப்பாய்களைக் கதை கொண்டு தாக்கினான். இலங்கை நாராயண வன்னியன் எறிந்த ஈட்டிகள் எண்ணுக் கணக்கில்லாதவர்களைக் காயப்படுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெற்றது. அலையலை யாகத் திரண்டு வந்த கூட்டுப்படையைக் கண்டு கலங்கிய டச்சுச் சைனியத்தில் ஒரு பகுதி பின்வாங்கத் தொடங்கியது. வெற்றிக்களிப்பிலே நின்ற வெற்றிக்கடம்பனின் மார்பிலே துப்பாக்கி ரவை யொன்று பாய்ந்தது. ரவை பட்ட நெஞ்சை ஒருகையால் பிடித்துக் கொண்டே வேலால் அந்நியப்படையைத் தாக்கினான். எஞ்சியோரும் ஓட்டமெடுத்தனர்.

மயங்கிய நிலையில் இருந்த வெற்றிக்கடம்பனை குதிரையில் ஏற்றிக் கொண்டு கூட்டுப்படையினர் திரும்பினர். திரும்புவதற்கு முன்பு பூநகரிக் கோட்டை தகர்க்கப்பட்டது. அதில் வில் கொடி வானளாவப் பறக்க விடப்பட்டது.

காலிலே துப்பாக்கிக் குண்டு பாய இரத்தவெள்ளத்தில் கிடந்த துணைத்தளபதி சிலம்பனும் காயப்பட்ட ஏனைய வீரர்களும் பனங்காமம் கொண்டுவரப்பட்டனர்.

நாட்டுப்பற்றும் வீரமும் துணிச்சலும் மிக்க வெற்றிக்கடம்பனுக்கு நேர்ந்த கதியைக்கண்டு அரசர் மாத்திரமல்ல அனைத்து மக்களும் துயரக்கடலில் மூழ்கினர். குஞ்சி நாச்சியார் துடிதுடித்துப் போனார். நினைவிழந்திருக்கும் அந்த மாவீரனைத் தன்மடியிலே கிடத்தி ஆதரவாகத் தடவிக் கொடுக்கக்கூடத் தனக்குக் கொடுத்து வைக்க வில்லையே என்ற துயரத்தால் உருகி உருகி அழுதாள். அவள் கன்னங்களில் பாலியாறு பெருக்கெடுத்து ஓடியது போன்றிருந்தது.

அரண்மனை வைத்தியர்கள் பச்சிலை மருந்துகளைத் தடவினர். ஆறாகப் பெருகிய இரத்த வெள்ளம் ஒருவாறு கட்டுப்படுத்தப்பட்டது. மார்பிலே பாய்ந்த குண்டு நல்ல காலமாக அவன் இதயத்தைத் தாக்கவில்லை என வைத்தியர் கூறினார்.

எப்படியும் உயிர் பிழைத்து விடுவான் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது.

பனங்காம வன்னிமைக்கு விசுவாசமாகப் பல ஆண்டுகளான ஒற்றனாக, தூதுவனாக, படைவீரனாக, துணைத்தளபதியாக தன்னலம் கருதாது அல்லும் பகலும் அயராதுழைத்த சிலம்பன் ஒரு காலை இழந்து உயிர்தப்பிரிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண பனங்காமப் பிரஜையாக இருந்த சிலம்பன் பனங்காம அரசைப் பொறுத்த அளவில் எத்தனையோ அசாதாரண சாதனைகளை நிகழ்த்தியவனல்லவா?

கயிலைவன்னியனார் இளவரசராக இருந்த போது மான்விழி மங்கையும் சிலம்பனுந்தானே கொடிய சதிகாரரின் சூழ்ச்சிவலையில் இருந்து அவரைத் தப்பவைத்தவர்கள்.

மான்விழி மங்கை அரசமாளிகையிலே அந்தப்புற சௌகரியங்களை யெல்லாம் அனுபவித்திருக்கிறாள். அவளின் பேரன் அரண்மனையிலே இளவரசனாகத் துள்ளித் திரிகிறான். ஆனால் சிலம்பனுக்குக் கிடைத்த பரிசென்ன? அவன் நாட்டுக்காகச் செய்த தியாகம் கொஞ்ச நஞ்சமா? காலை இழந்த நிலையிலும் அவன் உள்ளம் பூநகரி வெற்றியால் பூரிப்படைந்திருந்தது.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட படைவீரர் கொண்ட டச்சுச் சைனியத்தில் இருநூறு பேர் கூட உயிர்தப்பவில்லையாமே! மான்விழி மங்கையினதும் சிலம்பனினதும் மதியூகமும் இவ் வெற்றிக்கு மூலாதாரமாக இருந்ததை ஒரு சிலர் தான் அறிவர்.

தளபதி வெற்றிக் கடம்பனின் உயிர் நான்கு நாள் ஊசலாடியபின் மீளா உலகிற்கு பறந்து சென்றுவிட்டது. பனங்காமமே சோகக் கடலில் ஆழ்ந்தது. அரசனும் அரசியும் தம் சொந்த மகனைப் பறிகொடுத்தது போல் வாய்விட்டுக் கதறியழுதனர்.

கடம்பனின் காதலி குஞ்சிநாச்சியார் தலைவிரி கோலமாக கடம்பனின் பூதவுடலில் விழுந்து புரண்டு கதறினாள். விழுந்தவள் விழுந்தவள் தான் மீண்டும் எழும்பவேயில்லை. கடம்பனின் பிரிவால் ஏற்பட்ட அதிர்ச்சியால் அவளின் உயிரும் நீங்கியது.

கயிலை வன்னியனாரும் அரசியாரும் திக்பிரமை பிடித்தவர்கள் போல் ஆனார்கள். இடிக்கு மேல் வந்த இடியை அவர்களால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

களத்திலே மாற்றார் படையோடு அஞ்சாது பொருது தன் வாள் வீச்சினால் எத்தனை எதிரிகளைச் சாய்த்த அரும் பெறற் புதல்வியின் மறைவு அவர்களுக்கு ஆறாத் துயரத்தைக் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காமம் மாத்திரமன்றி கண்டி இராச்சியம் முழுவதுமே சோகமயமாகிவட்டது. கண்டி மன்னனாகிய இரண்டாம் இராசசிங்கன் பூநகரி வெற்றியைக் குறித்து வாழ்த்தோலை அனுப்பிய கையுடனே வன்னியனாரின் ஈடுசெய்ய முடியாத இழப்புக் குறித்து அனுதாபச் செய்தியை அனுப்பியிருந்தார்.

## 27
## காதலர் சந்திப்பு

பனங்காமம் துக்க சாகரத்தில் ஆழ்ந்திருந்தது. அதிலிருந்து விடுபட பலமாத இடைவெளி தேவைப்பட்டது. கயிலைவன்னியனார் ஈடுசெய்ய முடியாத இழப்பினால் உருக்குலைந்து படுத்த படுக்கையிலேயே இருந்தார்.

நீண்ட நாள் இடைவெளிக்குப்பின் இலங்கை நாராயண வன்னியன் பாலிநாச்சியாரைப் பனங்காம வீதியிலே தற்செயலாகச் சந்தித்தான். ஆனையிறவு - பூநகரிப்போர் முடிவடைந்த பின்னர் உடனேயே தனது வன்னிமைக்குச் சென்று இராச்சிய விடயங்களைக் கவனிக்க வேண்டியதாயிற்று.

முள்ளியவளையிலே வெற்றிவிழாவுக்குச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் இறுதியில் துக்கம் அனுஷ்டிக்கும் நிகழ்ச்சியாக மாறிவிட்டது. இளவரசியையும் பனங்காம அரசின் விசுவாசத்துக்குரிய மாவீரன் தளபதி வெற்றிக் கடம்பனையும் ஒருசேர இழந்த இழப்பு பனங்காமத்தில் மாத்திரமல்ல முள்ளியவளையிலும் பேரதிர்ச்சியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்துயரத்தையும் ஆக்கிவிட்டிருந்தது.

துன்பத்தின் மத்தியிலும் இலங்கை நாராயணன் ஆற்ற வேண்டிய சேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களையும் மறந்துவிடவில்லை. முக்கியமாகப் பாரிய நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இலங்கை நாராயண வன்னியன் ஈடுபட்டிருந்தான். தவிரப் பாழடைந்திருக்கும் பல குளங்களைப் புநருத்தாரணம் செய்யவேண்டும். பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்கப் பலதிட்டங்களை உருவாக்க வேண்டும். நாட்டு மக்களின் உடைத் தேவைகளுக்கான பருத்தி வன்னிமையிலேயே உற்பத்தியாக்க வேண்டும் என்னும் வன்னியனின் திட்டம் இப்பொழுது தான் ஆரம்ப நிலையில் இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தன் ஆருயிர்க காதலியை ஒரு முறை பார்த்துப் பேசவேண்டும் என்ற எண்ணம்.!

பனங்காமம் நோக்கிச் சென்ற இலங்கை நாராயண வன்னியன் எதிர்பாராத விதமாகப் பாலியாரைத் தோழிமார்களுடன் பனங்காமம் இராஜ பாட்டையில் சந்திக்க முடிந்தது.

சமயமறிந்து தோழிமார் அவ்விடத்தைவிட்டகலவே வன்னியன் பாலியை ஏறெடுத்துப் பார்த்தான். பாலி தலைகுனிந்து கொண்டு நின்றாள்.

சிறிது நேரம் நிசப்தமே நிலவியது. நிசப்தத்தைக் கலைப்பது போல இலங்கையனே பேசத் தொடங்கினான்.

"பாலி, என்மீது கோபமா?"

" பெண்ணாய்ப்பிறந்தவர்களின் கோபம் மன்னர்களை என்ன செய்துவிடும்? அவரவருக்கு அவரவர் ஜோலி. மன்னர் பதவியை ஏற்று விட்டால் அவர்களுடைய தனிப்பட்ட உணர்வுகள் எல்லாம் மங்கி மறைந்து போகின்றன." எரிந்து விழுந்தாள் பாலி. கோபமாய்ப் பேசிய வார்த்தைகள் கூட அவனுக்குத் தேனாய் இனித்தது.

"பாலி, எப்போதமே உன் நினைவாகத் தான் இருக்கிறேன். உன் மாமா உயிர்பிரியும் போது என்னைப்பற்றி என்ன சொன்னார் என்பது நினைவில் இருக்கிறதா? மன்னருக்குரிய பொறுப்புக்களையெல்லாம் சரிவரச் செய்வதற்கு நீதான் வழிகாட்ட வேண்டும் என்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமா சொன்னதெல்லாம் உண்மைதான். நானும் தங்களுக்கு எல்லாவித ஆலோசனைகளையும் வழங்கினேன். தாங்கள் இராச்சிய விவகாரங்களைப் பொறுப்புடன் ஆற்றுவதைக் கண்டு நானும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தேன். நீங்கள் இப்படி முற்று முழுதாக உணர்ச்சியற்ற மரக்கட்டையாக மாறி விடுவீர்கள் என்று நினைக்க வில்லை."

"பாலி, நீ நினைப்பது தவறு; போர்க்களத்திலும் சரி அரச மாளிகையிலும் சரி என்றுமே உன்னைப்பற்றிய சிந்தனைதான். இப் பொழுதுதான் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு வந்திருக்கிறேன். எங்கே சிரி பார்க்கலாம்."

"நான் சிரித்துக் கதைக் வேண்டும் என்ற ஆசைவேறு"

"ஆம் பாலி உன் வதனம் விகசிக்க வேண்டும்; முகத்திலே மகிழ்ச்சியின் சாயல் படரவேண்டும். அதைப் பார்த்து நான் ஆனந்தக் கடலில் குளிக்க வேண்டும். "

"சிரிப்பதெல்லாம் பிறகு வைத்துக் கொள்வோம். இன்றைக்கு முடிவாகத் தாங்கள் சொல்ல வேண்டும். எப்போது எங்கள் திருமணம்?"

"அதையா கேட்கிறாய்? நான் என்னவோ ஏதோ வென்று பயந்துவிட்டேன். அதுபற்றிப் பேசத்தான் இப்பொழுது வந்திருக்கிறேன் திருமணத்தை விரைவிலே முடித்து விடவேண்டும் என்று உனதுமாமியாரும் என்னை நச்சரிக்கிறார்.

பனங்காமத்து நிலைமைகளைப் பார்த்து வருமாறு அனுப்பியி ருக்கிறார் என்தாயார். அவர் இரண்டொரு தினங்களில் இங்கு வந்தவிடுவார். இனியென்ன சுபமுகூர்த்தம் ஒன்றைக் குறிப்பதுதானே!

"அத்தான்! "

"பாலி, என் கண்ணே" என்று ஆதரவுடன் அவளைத் தழவிக் கொண்டான். நடுத்தெருவிலே இப்படித் தழுவிக் கொண்டதை நினைக்க அவனுக்கு வெட்கமாகிவிட்டது. தூரத்திலே நின்ற தோழியர்கள் நாணத்தால் தலைகுனிந்து விட்டார்கள். "பாலி நான் போவதற்கு முன்பு உன்னைச் சந்தித்து திருமண ஏற்பாடுகள் பற்றி முடிவெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேற்பாடுகளைப் பெரியோர்கள் தானே செய்ய வேண்டும். அன்னையார் வந்து விட்டால் எல்லாமே துரிதகதியில் நடைபெறும்."

"அத்தான், என் ஆருயிரே, இந்தப் பேதை தங்கள் மீதுள்ள அளவற்ற பிரேமையால் ஏதும் பேசியிருந்தால்..........."

"அன்பே, இது எனக்குத் தெரியாதா? முள்ளியவளை வன்னிமையின் அரசியாக நீ அரியணை ஏறும் நாள் அதிக தூரத்தில் இல்லை." தோழிகள் வரவே பாலி நாச்சியார் அவர்களுடன் சேர்ந்து கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

❄❄❄

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

## இறுதி மூச்சு

**பூ**நகரிப் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. என்னதான் முயன்ற போதும் தன் அருமைப் புதல்வியை இழந்த ஆறாத்துயரத்திலிருந்து மீளக் கயிலை வன்னியனால் முடியவில்லை. உள்ளமும் உடலும் சோர்வடையத் தொடங்கிவிட்டன.

எனினும் வன்னியின் நிர்வாகத்தைச் சீர்செய்வதிலும், படை பலத்தைப் பெருக்குவதிலும் வீதிகள், குளங்கள் என்பவற்றைச் சீர்திருத்துவதிலும் மன்னர் பெருங்கவனம் செலுத்தினார். வளமும் பலமும் பொருந்திய ஒரு நாட்டிற்கு வீதிகள் அவசியம். 'வீதிகளை அமைப்பது மன்னனின் கடமையாகும்' என அர்த்த சாத்திரம் கூறுகின்றது.

கயிலைவன்னியன் இளமைத்துடிப்புடன் இருந்தபோது பெரும்பாலும் எல்லா நிர்வாகப் பிரிவுகளையும் நேரே கண்காணிக்கக் கூடியதாக இருந்தது. வயது ஏற ஏற உடல் நிலையில் தளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. அடிக்கடி நோய்வாய்ப் பட்டதால் ஓய்வு பெற்றாலும் இல்லாத பொல்லாத வதந்திகள் பரவத் தொடங்கும். கயிலை வன்னியனுக்குக் குஷ்டரோகம் என நீர்கொழும்பு முதலியார் ஒல்லாந்தருக்கு அறிக்கை சமர்ப்பித்தாராம்.

இராச்சிய பரிபாலனத்தில் பெரும்பகுதியை மாமனான நல்ல மாப்பாணருக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாலி – இலங்கையன் திருமணம் மிக எளிய முறையில் நடைபெற்றது. நல்லமாப்பாணரின் புதல்வி பாலிநாச்சியார் முள்ளியவளை இலங்கை நாராயணவன்னியனின் பட்டத்து இராணியாக முள்ளியவளை சென்று விட்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஒல்லாந்தர் பனங்காம வன்னிமைப் பக்கம் தலைவைத்தே படுக்க அஞ்சினர். பலமான அடி அவர்களை நிலை குலையச் செய்துவிட்டது. சூழ்ச்சிக்கார அந்தணன் கிரமவிட்டன் வவுனிக் குளத்தில் விழுந்து மரணத்தைத் தழுவிக் கொண்டான். கைமத்தரும் இயற்கை மரண மடைந்ததாக பேசிக் கொள்கிறார்கள். பூநகரிச் சமரின் பின் ஒல்லாந்த நிர்வாகத்திலும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. தேசாதிபதி வான் கூன்ஸின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அவர் மகன் இளைய வான்கூன்ஸ் தேசாதிபதியாகப் பதவி யேற்றார். யாழ்ப்பாணத்தின் புதிய கொமாண்டராக லோறன்ஸ் பில் நியமிக்கப்பட்டார். புதிய டச்சு நிர்வாகம் பனங்காமத்துடன் மேலும் பகைமையை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை.

கயிலை வன்னியனின் அபிலாசை நிறைவேறி விட்டது தென்றே கூறலாம். 'தனது ஆட்சிக்காலத்தில் பனங்காம வன்னிமை அந்நியரின் காலடியில் மிதிபடக் கூடாது' என்பது தான் அது.

இன்னொரு கவலை அவர் மனதைக் குடையத் தான் செய்தது. " எனக்குப் பின்னுள்ள நிலைமைகள் எப்படி இருக்கும்? வன்னிமை என்பது சுதந்திரமான இறைமையுடைய இராச்சியம் என்பதை டச்சு நிர்வாகம் எப்போதுமே ஏற்றுக்கொண்டதில்லை. 'வன்னியர்' என்னும் பதவி தங்களால் வழங்கப்படுவது என்றே கூறிவருகின்றனர். தமக்குப் பிடிக்காத வன்னியன் ஒருவனை நீக்கி வேறொரு வன்னியனைப் பதவியில் அமர்த்தவும் ஒருவன்னியன் மரணமடைந்தால் அந்த இடத்திற்கு இன்னொரு வன்னியனை நியமிக்கவும் தாம் உரிமை பெற்றிருப்பாதாக ஒல்லாந்தர் கூறினர். பனங்காமத்தைப் பொறுத்த அளவில் அப்படியொன்றும் இதுவரை நடைபெற்றதில்லை. எனது மறைவுக்குப் பின்னர் இந்த நிலைமை தொடர்ந்து இருக்குமா?" இப்படியான சிந்தனை சமீபகாலம் வரை கயிலை வன்னியன் மனத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

கயிலை வன்னியனார் கடுமையான நோய்வாய்ப்பட்டார். கடந்த ஒருமாத காலமாகப் படுத்த படுக்கையாகவே அவர் இருந்தார். அவரின் நோயை அரண்மனை சித்த வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. மஹாநுவரவிலிருந்தும் ஆயுர்வேத வைத்தியர் ஒருவரை மன்னன் இராசசிங்கன் அனுப்பியிருந்தான். சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் கொடுத்த எத்தனையோ விதமான மருந்துகளும் அவரைக் குணப்படுத்தவில்லை. மன்னனின் உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. அரசியாரும் சுற்றத்தவர்களும் இரவு பகலாகக் கண்விழித்து வேண்டிய சிசுருட்சைகளைச் செய்தனர். வைத்தியர்கள் மூன்று நாழிகைக் கொருமுறை கைநாடி பிடித்துப் பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னித் தலைவர்கள் அனைவருமே பனங்காமத்தக்கு வந்து சேர்ந்து விட்டனர்.
எவராலும் வெல்ல முடியாத வளமும் வலிமையும் கீர்த்தியும் பெற்ற அடங்காப்பற்று பனங்காம வன்னிமையின் காவலனும் ஒல்லாந்த எதிர்ப்பியக்கத் தலைவனுமான கயிலை வன்னியனின் வைரம் பாய்ந்த உடலிலிருந்து அவன் ஆத்மா பிரிந்து சென்றது. வன்னிநாடுகள், உறுதிப்பாடும் பீடிவாதமும் பலமும் கொண்ட ஒரு பெருந்தலைவனை இழந்து துயரக்கடலில் மூழ்கின.

டச்சு எதேச்சேதிகாரத்தால் பனங்காமத்தின் சுதந்திரத்தைப் பறிக்க முடியவில்லை. மக்களின் சுதந்திர உணர்ச்சியை மழுங்கடிக்க மடியவில்லை.

ஒல்லாந்த நிர்வாகத்தின் தலையீடு எதுவும் இன்றியே வன்னி மன்னர்கள் காசியனாரை பனங்காமத்தின் புதிய மன்னனாகத் தேர்ந் தெடுத்துவிட்டனர்.

**ON THE DEATH OF KAYLA VANNIYAN THE OTHER CHIEFTAINS HAD ELECTED A CHIEFTEN OF PANANKAMAM WITHOUT THE CONCENT OF THE DUTCH**

**-Schweitzer, a German in the service of Dutch has recorded in his diary - 1678.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் நூல்கள்

01. பண்டாரவன்னியன் (வரலாற்று நாடகம்) கலைக் கழகப் பரிசில் பெற்றது.

02. அரசிகள் அழுவதில்லை (சிறுகதைத் தொகுதி) சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது

03. மல்லிகைவனம் ( நாவல் - தென்னிந்திய சோமு புத்தகநிலைய வெளியீடு. வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில் பரிசு பெற்றது

04. ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை

05. நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை

06. காவத்தை நீலகாமம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல்

07. தமிழ்மொழிப் பயிற்சி. கா. பொ. த(சா/த) வகுப்பிற் குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள், அந்நிய ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துப் போரிட்ட ஈழத்தின் தமிழ் இராச்சியமான வன்னியின் கடைசித்தமிழ் மன்னனான பண்டார வன்னியனை நாடக மூலமாக தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகப் படுத்தியவர். அடங்காப்பற்று என்றழைக்கப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 03.05.1933இல் பிறந்த இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டம் பெற்றவர். மட்டக்களப்பு, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், இலக்கிய சமயக் கட்டுரைகள், இலக்கிய ஆய்வு, எனப் பல்வேறு துறைகளிலும் கால்பதித்து அழியாத முத்திரை பதித்த ஒரு முதிர்ந்த எழுத்தாளர்.

இவரது "பண்டார வன்னியன் " நாடகம் இலங்கைக் கலைக்கழகப் பரிசு பெற்றது. இரண்டு பதிப்புக்களைக் கண்டது. " அரசிகள் அழிவதில்லை" என்ற சிறுகதைத் தொகுப்பு தேசிய சாகித்திய மண்டலப்பரிசு பெற்றது. "மல்லிகை வனம்" நாவல் வீரகேசரிப் பத்திரிகை நடாத்திய பிரதேச நாவல் போட்டியில் பரிசு பெற்றது. தென்னிந்திய சோமுபுத்தக நிலையத்தால் வெளியிடப்பட்டது. வீரகேசரி வெண்பாப் போட்டியிலும் துறைநிலாவணை இலக்கியப் பேரவை நடாத்திய கவிதைப் போட்டியிலும் பரிசு பெற்ற இவர் இலங்கை வானொலியிலும், பொது மேடைகளிலும், நடைபெற்ற கவியரங்குகளில் முன்னணிக் கவிஞராக திகழ்ந்தவர். நாட்டார் பாடல் துறையில் ஈடுபாடுடைய இவரின் பன்னிரண்டு சொற்பொழிவுகள் "மக்கள் கலை" என்னும் தலைப்பில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.

"கலைஞர் திலகம் ". ' தமிழ் மணி ' முதலான பல பட்டங்களும் பெற்ற இவர் இந்து கலாசார அமைச்சினாலும், வடக்குக்கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சினாலும் பாராட்டிக் கௌரவிக்கபட்ட சிறந்த எழுத்தாளர்.

- அகளங்கன் -

பம்பைமடு. வவுனியா.

ISBN-955-8161-00-4

சுதன் அச்சகம் - வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org